# நல்லைக்குமரன் மலர்

இதழ் - 33




## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு

2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ
சிவமயம்



# நல்லைக்குமரன் மலர் - 33

## 2025

பதிப்பு
**மலர்க்குழு**

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

10723 (P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழு

## உறுப்பினர்கள் - 2025

**தலைவர்** : **திரு.ச.கிருஷ்னேந்திரன்**
மாநகர ஆணையாளர், யாழ். மாநகர சபை.

**செயலாளர்** : **திரு திரு.சோ.கணேசநாதன்**
பௌதீக திட்டமிடல் பகுதி, யாழ். மாநகர சபை.

**பொருளாளர்** : **திரு.க.குகானந்தன்**
வருமான பரிசோதகர், யாழ். மாநகர சபை.

**நிர்வாகசபை உறுப்பினர்கள்** : **திருமதி.நி.தவலோஜினி**
பிரதி ஆணையாளர், யாழ். மாநகர சபை.

**திருமதி.ம.கஜேந்தினி**
நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை.

**திரு.வா.கேதீஸ்வரன்**
மின்சாரப் பகுதி, யாழ். மாநகர சபை.

**திரு க.கேதீஸ்வரன்**
நீர்வேலைப் பகுதி, யாழ். மாநகர சபை.

**திரு.வே. சிவபாலன்**
ஆணையாளர் பகுதி, யாழ். மாநகர சபை.

**திரு.ம.வித்தியாதரன்**
முகாத்துவ சோலைவரிப்பகுதி, யாழ். மாநகரசபை

**திருமதி ந.நற்குணராஜா**
நிர்வாக உத்தியோகத்தர், வேலைப்பகுதி

**திரு.மா.சந்திரகுமார்**
பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். மாநகசபை

**திரு.இ.ஸ்ரீகாந்தன்**
பொறுப்பதிகாரி வாகனப்பகுதி, யாழ். மாநகர சபை

**திரு.இ.மதுஷன்**
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

**திரு.அ.ஜீவாகரன்**
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

**பதிப்பு** : **மலர்க் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ
சிவமயம்



# சமர்ப்பணம்

ஈழத்தமிழ் மக்களின் தனிப்பெரும் கடவுளாக நல்லைப்பதியில் வீற்றிருந்து எமையெல்லாம் ஆளும் நல்லைக்கந்தப் பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படும் 33 ஆவது மலர் இது.

33 ஆண்டுகள் தொடர்ச்சியாக நல்லைக்குமரன் மலர் வெளிவருகிறதெனில் அதற்கு நல்லூர் கந்தவேற் பெருமானின் பெருங் கருணையே மூலகாரணமாகும்.

ஈழத்தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வந்த போதெல்லாம் நல்லூரில் வீற்றிருக்கும் ஆறுமுகப் பெருமானையே தஞ்சமெனக் கொண்டு தமது துன்ப துயரங்களைக் கடந்து தங்களின் வாழ்வியலைச் செழுமை குன்றாமல் நகர்த்தி வந்தனர்.

காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மாற்றங்களும் மாறுதல்களும் சிக்கல்களும் தொடர்ந்து செல்கின்றன. காலம் புதிய புதிய கோலங்களை போட்டுக் செல்கிறது இவ்வேளையில் நாட்டினதும் நாட்டு அரசினதும் மக்கள் வாழ்வினதும் சிரத்தன்மை மேலும் வலுப்பெற்று உறுதிகொள்ள நல்லூரானின் இறையருளை இறைஞ்சி நிற்கிறோம்.

இந்நிலையில் யாழ் மாநகரசபையின் சைவசமய விவகார குழுவானது நல்லைக்குமரன் மலர் வெளியீட்டை வழமைபோல் வெளியீடு செய்வதற்கு ஆக்கங்கள் கோரப்பட்டு, ஆக்கங்களைத் தொகுத்து எடுத்த முயற்சியின் பயனாக இம்முறையும் 33ஆவது மலரினை வெளியீடு செய்வதில் மனமகிழ்வடைகின்றது. இவ் சமய, சமூக பணிக்கு உறுதுணையாக இருக்கும் இறையருளுக்கும், இம்மலர் வெளியீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

ஓம் சரவணபவ

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்.**

**மலர்க்குழு,**
**நல்லைக்குமரன் மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## மன்றக் கீதம்

ஈழத் தமிழர்தம் இணையிலா நகரம்
யாழ் நகர் நீடு வாழியவே
யாழ் நகராட்சி மன்றம் வாழ்க
எம் தமிழ் வாழ்க வாழியவே
(ஈழத் தமிழர் ...)

ஆதியில் தமிழர் ஆண்டதொல் நகரம்
ஆரியச் சக்கர வர்த்திகள் நகரம்
பூதலம் புகழும் சங்கிலி மன்னன்
பொருபகை வென்ற புகழ்பெறு நகரம்
(ஈழத் தமிழர் ...)

ஏழிசை வல்லோன் யாழிசை பாணன்
இனியநற் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணம்
ஆழிசூழ் உலகம் புகழ்கலைக் கூடம்
அறிஞர்கள் கலைஞர்கள் அவதார பீடம்
(ஈழத் தமிழர் ...)

தமிழர்கள் முஸ்லீம் மற்றுள பேரும்
தாயிவள் பேணும் சோதர ராவர்
நமதரும் பண்பும் கலை கலாசாரம்
நல்விருந் தோம்பிக் காப்பவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

கடலலை வீசும் மீன்வளம் பொங்கும்
கழனிகள் தோறும் கனிவளம் தங்கும்
மடல்வரி தென்னை கமுகுகள் வாழை
மண்வளஞ் சிந்திப் பொலிபவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

அழகிய வீதி கடைத்தெரு கல்வி
அளித்திடு கூடம் தொழில்நிலை யங்கள்
எழிலுறு கோட்டைக் கோபுரம் கோயில்
இனியநற் சோலை கொண்டவள் வாழ்க
(ஈழத் தமிழர் ...)

வேத மந்திரம் கீத மொலிக்கும்
விளங்கிடு குர்ஆன் நாதமொலிக்கும்
ஓதிடு பைபிள் போத மொலிக்கும்
ஓங்கிய கோபுர மணிகள் ஒலிக்கும்
(ஈழத் தமிழர் ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்


**சமர்ப்பணம்** பக்கம்

**ஆசிச்செய்தி**

**வாழ்த்துச் செய்தி**

**நல்லூரான் பாதம் நிதமம் நாடு** 01

கலாபூஷணம் கே.ஆர்.திருத்துவராஜா

**அரண் செய்** 2

த.ஜெயசீலன்

**கருணை முகம் காட்டி ஆதரிப்பாயே!** 3

கலாபூஷணம் கீழ்கரவை கி.குலசேகரன்

**வேல்கொண்டு வென்றெடுத்து தாராயோ** 04

வதிரி கண.எதிர்வீரசிங்கம்

**எழில் நல்லைக் கந்தவேளே!** 05-10

கலாபூஷணம் சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

**நல்லூரான் அருட்திருக்குறல் (திருக்குரல்)** 11-12

புலோலியூர் ஆ.வினாயகமூர்த்தி

**கல்லைக் கனியாக்குகின்ற நல்லைக்குமரனே** 13

புலோலியூர் த.உமாசுதன்

**நல்லை தன்னில் வீற்று இருக்கின்றேன்** 14

துரைராசா யோகேஸ்வரன்

**தரிசனம் தருகின்றான்** 15

திருமதி யோகேந்தினி துளசிதன்

**நல்லை முருகன் திருப்பள்ளி எழுச்சிப் பதிகம்** 16-18

பாரதி இளமுருகனார்

**இன்றைய நல்லூர்** 21-24

மலர் சின்னையா (செம்பியின் செல்வி)

**போய்ப்பார்த்தால் தான் தெரியும் நல்லூரானை** 25-31

Dr.S.N.தணிகாசலம்பிள்ளை

**நல்லையவன் அருளும் அழகும்** 32-34

மதியமுதன் பிரசாந்தி

**ஒரு ரூபாவில் கருவாகி திருவாகும் முருகன்** 35-36

கலாபூஷணம் கே.எஸ்.சிவஞான ராஜா

**முருகன் தமிழ்க்கடவுள்** 37-41

திருமதி பா.ஜெயச்சந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**பல்கலை அம்சங்கள் மிளிரும் யாழ்ப்பாணத்து முருகன் தேர்கள்** 42-51
சண்முகலிங்கம் சஜீலன்

**இணுவில் கந்தசாமி கோவிலின் உலகப் பெருமஞ்சம்** 52-55
சைவ சிந்தாந்த பண்டிதர் சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்

**நவீன உலகில் இந்துசமயம்** 56-61
பா.பிரசாந்தன்

**20ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாட்டில் தமிழ்மொழிமூலமான சைவசமய வழிபாட்டின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்** 62-69
திருமதி இன்பம் சியாமளா

**இந்துமதத்தை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்** 70-71
மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்

**"எமது சமூக வாழ்வியலில் ஒரு தத்துவ நூலாக கந்தபுராணம் விளங்குகிறது"** 72-77
மனோகரன் சசிகரன்

**சைவசித்தாந்த மெய்யியலில் ஆன்மா - ஒருநோக்கு** 78-86
பண்டிதர் வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்

**தமிழ் பக்தி இலக்கியங்களில் சைவசித்தாந்தம்** 87-90
சிவஸ்ரீ.கந்த ஜெயராமக் குருக்கள்

**ஆலய வழிபாட்டில் காவடி ஆடலின் வகைபாகம்** 91-94
கலாநிதி திருமதி அருட்செல்வி கிருபைராஜா

**நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் நம்சைவச் சொத்தாவார்** 95-9
பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா

**நால்வர் காட்டிய அன்பு நெறி** 100-103
சிவத்திரு.பத்மராசா பத்மநிருபன்

**அகப்பிரபஞ்சமும் புறப்பிரபஞ்சமும் பதிபசுபாசமும்** 104-106
மருத்துவர் சி.யமுனாந்தா

**யோகம் சுட்டும் வாழ்வியல் நெறி** 107-110
ஸ்ரீ நதிபரன்

**சொல்லும் செயல் திறனும்** 111-113
திரு.இ.சரவணபவன் கலாபூசணம்

**Soul Melting Nasigabhushani** 114-120
S.Gajahvathanan

**நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** 121
சொஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்


**நல்லைக்குமரன் மலர் இதழ் - 32 வெளியீடும் தலயாத்திரையும்** 122-126
திருமதி.சக்தி திவாகரன்

**2025ஆம் ஆண்டில் யாழ்.விருது பெறும் உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன்**
திரு.சோ.கணேசலிங்கம் 127-128


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media




நல்லூர் கோவிலின் தெற்குப் பக்க
நுழைவாயில் அலங்கார வளைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ

# நல்லைக்குமரன் மலர்
# 2025

## ஆசி, வாழ்த்துச் செய்திகள்

- **இராமகிருஷ்ண மிஷன்**

  சுவாமி அக்ஷராத்மானந்தா

- **வீணாகான குருபீடாதிபதி**

  வித்யாலாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்

- **ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

  செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன்

- **வடமாகாண ஆளுநர்**

  திரு.நாகலிங்கம் வேதநாயகன்

- **யாழ் மாவட்ட செயலாளர்**

  திரு.மருதலிங்கம் பிரதீபன்

- **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர்**

  பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா

- **யாழ் மாநகர முதல்வர்**

  திருமதி வி.மதிவதனி

- **யாழ் மாநகர ஆணையாளர்**

  திரு.ச.கிருஷ்னேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 2588253 & 5013805*
*Fax -2361438*
*Email - rkmcey@gmail.com*

# இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின்
## ஆசிச்செய்தி

இலங்கையிலுள்ள சைவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து வந்துள்ளது இந்த நல்லூர் கந்தசாமி கோவிலில் இங்கு நடைபெறும் வருடாந்த மகோற்சவ காலங்களில் அடியவர்கள் திரளாக வந்து திருவிழாக்களில் பங்கேற்பர். இத் திருவிழாக்கள் பல்வேறு பட்டவை, கொடியேற்றத்துடன் தொடங்கும் விழா நிகழ்ச்சிகள் சப்பரம், தேர், தீர்த்தம், பூங்காவனத்துடன் நிறைவுபெறும். பார்ப்பதற்கு கண்ணுக்கு விருந்தாக இருப்பதுடன், ஆன்மீகப் பசியையும் தீர்த்துவைக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

அத்துடன், கோவிலில் கொடித்தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை, யாக சாலை பூஜை என்று பல கிரியைகள் நிகழ்வது பக்தர்களுக்கு ஒரு புது அனுபவத்தைக் கொடுக்கிறது. மேலும் மேள வாத்தியம், வேத பாராயணம், திருமுறை ஓதல் போன்ற நிகழ்ச்சிகள் அடியவர்களின் மனத்தை ஒரு உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும்.

அப்படிபட்ட பிரபலமான கோவில் வருடாந்த மகோற்சவ காலங்களில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு நல்லைக்குமரன் என்ற பெயரில் மலர் ஒன்றைத் தொடர்ந்து 33 ஆண்டுகளாக வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரிய விஷயம். மலர் வெளியிடுவது என்பது மிகவும் கடினமான ஒரு வேலையாக இருக்கும் நேரத்தில் இந்த நல்ல காரியத்தை விடாது செய்து வருவது அவர்களின் தன்நலன் கருதாத மேலான எண்ணத்தைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

பாடசாலை மாணவர்களுக்கு இந்த மாதிரியான விழாமலர்களின் மூலமாகவும் அறிவைப் பெருக்கலாம். அதற்கேற்ப இந்தமலர் அமைவது ஒரு சிறப்பு இந்த மலரிலிருந்து பல விஷயங்களை மாணவர்கள் அறியலாம். மாணவர்களின் சமய அறிவையும் இறை பக்தியையும் ஒருங்கே வளர்க்க இம்மலர் உதவியாக இருக்கும் என எண்ணுகிறேன்.

பல்வேறு வண்ணப் படங்களுடன் கூடிய இம்மலர், இளைய தலைமுறையினரிடையில் மிகுந்த நல்விளைவுகளை ஏற்படுத்தும் என்று தான் எண்ணுகிறேன். நல்லைக் குமரன் மலர் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல நல்லைக்கந்தன் அருள்புரிவாராக.

**சுவாமி அக்ஷராத்மானந்த,**
**தலைவர்.**
**இராமகிருஷ்ண மிஷன்**

**இராமகிருஷ்ண மிஷன்**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ
சிவமயம்

# வீணாகான குருபீடம்
# VEENAGANA GURUPEEDAM

இந்து கலாசார வேத, ஆகம சாஸ்திர சடங்கு சம்பிரதாய ஆலோசனைக்கானதும்,
சமய சமூக நற்பணிகளுக்குமான குருமார் சந்நிதானம்

வண.சந்நிதாச்சாரியார்,
சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்,
அமைப்பாளர்,
குருமார் சந்நிதானம்,
சித்தன்கேணி,
யாழ்ப்பாணம்.

Mobile : 0777397926

Rev.Sannithachariyar
Sivasri.Saba.Vasudevakkurukkal
Organizer,
Veenakana Gurupeedam,
Gurumar Sannithanam,
Sithankerney, Jaffna.

# வீணாகான குருபீடாதிபதியின்
# ஆசிச்செய்தி

யாழ் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் வருடம்தோறும் வெளியிட்டுவரும் நல்லைக்குமரன் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இச்சந்தர்ப்பத்தில் கடந்தகால மலர் வெளியீட்டு நிகழ்வுகளிலும் யாழ் விருது வழங்கும் வைபவங்களிலும் சைவத்தமிழ் உலகிற்கும் குரு முதல்வராக அலங்கரித்து சிவானந்தப் பெருவாழ்வை அடைந்திருக்கும் நல்லை ஆதீன சுவாமிகளையும் நினைத்துக்கொண்டு ஆதீன சுவாமிகளது ஆத்மா என்றென்றும் சைவசமய விவகாரக்குழுவின் பணிகளுக்கு அருள்துணை நிற்கும் என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

சைவத்தமிழ் வரலாற்று ஆவணமாக நல்லைக்குமரன் மலர் தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றது. அத்தகைய காத்திரமான மலரினை வருடந்தோறும் தவறவிடாமல் நல்லைக்கந்தன் பெருந்திருவிழாவின்போது வெளியிட்டு வருவது பாராட்டத்தக்க விடயமாகும். இந்த வருடம் முப்பத்து மூன்றாவது மலர் வெளிவருகின்றது. காலத்தின் தேவைகளை அறிந்து அறிஞர்களது கருத்து மலரில் வருவது சிறப்பம்சமாகும்.

இன்றைய காலத்தில் மக்களுக்கு சமய விழிப்புணர்வு சார்ந்தவையாகவும் கலை கலாசார விழுமியங்களில் பற்று ஏற்படுகின்ற கருத்துக்களாகவும் சிறப்பாக நல்லொழுக்க கருத்துக்களோடு மலர் பல வடிவில் வெளிவருது அனைவருக்கும் பெரு விருப்பமாக அமைகின்றது. நல்லைக்குமரன் மலரானது எமது நாட்டில் மட்டுமல்லாமல் தென்னிந்திய ஆதீனங்கள் மடங்களுக்கும் வழங்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான் ஈழத்திருநாட்டின் பல செய்திகள் தமிழ் நாட்டிற்கும் ஆதாரமாகச் சென்றடைவதற்கு வழிவகுக்கும் எனலாம்.

நூல் வெளியீடும் விருது வழங்கும் வைபவமும் சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல கலைத்தாயாம் சரஸ்வதி தேவியின் திருவருளை வேண்டி அனைவருக்கும் நல்லாசிகளைத் தெரிவித்து நிறைவுசெய்து கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்**
**குருமுதல்வர்**
**வீணாகானகுருபீடம் - சித்தன்கேணி**
**ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் - சண்டிலிப்பாய்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

T.P No : 021 - 3213151

E.Mail:- Thurkaiammantemple@gmail.com

Face Book:- tellidurga@gmail.com

திகதி: 02/06/2018

Fax:- 021 2241909

தலைவர்:

செஞ்சொற் செல்வர்

கலாநிதி. ஆறு திருமுருகன்

Dr. ARUTHIRUMURUGAN

E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511


## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரின் ஆசிச் செய்தி

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ் குடாநாடு பக்தி எழுச்சி கொள்வது வழக்கம். நல்லூர்த் திருவிழா சைவத் தமிழர்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பாதுகாக்கும் பெருவிழா எனலாம். இத்திருவிழாக் காலத்தில் சீரிய பணியாற்றும் நிறுவனமாக யாழ் மாநகரசபை விளங்குகிறது. இச்சபையின் சைவசமய விவகாரக்குழு 1993ஆம் ஆண்டுமுதல் வருடந்தோறும் நல்லைக்குமரன் என்ற பெயரில் சிறப்புமலரை வெளியிட்டு வருவதை அனைவரும் அறிவர்.

நல்லைக்குமரன் முப்பத்திமூன்றாவது மலர் 2025ஆம் ஆண்டு நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளிவர இருப்பதை அறிந்து ஆனந்தமடைகிறேன். சைவசமய விவகாரக் குழுவின் செயற்திறனால் தங்கு தடையின்றி ஆண்டுதோறும் மலர் வெளிவருகிறது. சிறந்த வரலாற்று ஆவணமலராக நல்லைக்குமரன் மலர் கற்ற சமூகத்தால் பாராட்டுப் பெற்றுள்ளது. மலரின் சிறப்பைப் பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வரை நன்கு உணர்வர்.

நல்லைக்குமரன் மலர் நிறைந்த விடயதானங்களோடு சிறப்பாக வெளிவர எனது இதயபூர்வமான நல்லாசிகளையும் வாழ்த்தையும் தெரிவித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை,**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை,**
**உபதலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No: 182

அலுவலகம்
කාර්යාලය
Office
021 221 9375/76

தொலைநகல்
ෆැක්ස්
Fax
021 221 9374

இணையதளம்
වෙබ් අඩවිය
Website
www.np.gov.lk

மின்னஞ்சல்
විද්‍යුත් තැපෑල
E-mail
governornp@gmail.com

எனது இல
මගේ අංකය
My No
G/NPC/ PRO/24/Greetings/2025

நாகலிங்கம் வேதநாயகன்
නාගලිංගම් වේදනායගන්
Nagalingam Vethanayahan

ஆளுநர், வட மாகாணம்
ආණ්ඩුකාරවර, උතුරු පළාත
Governor, Northern Province

ஆளுநர் செயலகம்
ආණ්ඩුකාරවර, කාර්යාලය
Governor's Secretariat

பழைய பூங்கா, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், இலங்கை.
පැරණි උද්‍යානය, නුවර පාර,
චුණ්ඩිකුලි, යාපනය, ශ්‍රී ලංකාව.
Old Park, Kandy Road,
Chundikuli, Jaffna, Sri Lanka.

திகதி
දිනය
Date
25/07/2025

# வட மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

"அஞ்சு முகந் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ் சமரில் அஞ்சலென வேல் தோன்றும் – நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா வென்றோதுவார் முன்"

யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நல்லைக்கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில், சைவத்தின் அருமை பெருமைகளைப் பறைசாற்றும் வகையிலும், இளைய தலைமுறையினரிடையே சைவ சமய அறிவினையும், இறைபக்தியினையும், ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்யும் வகையிலும் ஆண்டு தோறும் அறிஞர் பெருமக்களின் ஆக்கங்களுடன் வெளிவரும் "நல்லைக் குமரன்" மலரின் 33 ஆவது மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்குக் கிடைத்த இச் சந்தர்ப்பத்திற்காக நல்லூர் முருகனை உள்ளத்தில் நிறுத்தி உவகை கொள்கின்றேன்.

முருகப்பெருமானின் பெருமைகளை உணர்த்தும் புராதன நூல்களாக கந்த புராணம், திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தர் அநுபூதி, கந்த சஷ்டி கவசம், கந்தகுரு கவசம், கந்தர் கலிவெண்பா போன்ற இன்னும் பல அரிய நூல்கள் காணப்படுகின்றன. அந்த வகையில் எம்பெருமான் நல்லைக் கந்தனின் புகழ்பாடும் "நல்லைக்குமரன்" மலரும் நல்லூர்க் கந்தப்பெருமானின் மகோற்சவ காலத்தில் வெளிவருவது மிகவும் பொருத்தமான தேயாகும்.

முருகப்பெருமானை அதிகமாக வழிபடுபவர்கள் தமிழர்களே. அதனால் கந்தப் பெருமானைத் தமிழ்க் கடவுள் என்றும் அழைப்பர் என புராதன நூல்கள் கூறுகின்றன. இவ் வாறு போற்றப்படும் தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான், நல்லூர் பதியிலே அலங்காரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தனாக வீற்றிருந்து அடியவர்க்கு அருள்பாலித்து வருகின்றமை அடியவர்கள் செய்த தவப்பேறாகும்.

பக்தியின் அடிப்படையில் எழுந்த மொழி விழிப்புணர்வாகத் தமிழரின் தொன்மையை ஆராயும் வகையிலும், கந்தக்கடவுளின் பெருமையை எடுத்துரைக்கும் வகையில் "நல்லைக் குமரன்" நூலுக்கு ஆக்கங்களை அள்ளித்தந்திருக்கும் அறிஞர் பெருமக்களும், யாழ் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழுவும் தொடர்ந்தும் இப்பணியில் ஈடுபட்டு சைவமும் தமிழும் செழித்தோங்கச் செயற்பட வேண்டும் என வேண்டிக்கொண்டு நூல் வெளியீட்டு விழா சிறப்பாக அமையப் பிரார்த்திப்பதுடன், அனைவரும் நல்லைநகர் அலங்காரக் கந்தனின் அருளைப்பெற்று இன்புற்று வாழ எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நாகலிங்கம் வேதநாயகன்**
**ஆளுநர்,**
**வடக்கு மாகாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය
தொலைபேசி } 021-222 2235
Telephone

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax
E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 2233
General Telephone } 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண்
My No. } Message from GA

ඔබේ අංකය
உமது எண்
Your No. }

දිනය
திகதி
Date }

# யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் திருநாட்டின் முடியாகத் திகழ்கின்ற யாழ்ப்பாண இளைய தலைமுறையினரிடையே சைவசமய அறிவினையும், இறைபக்தியையும் ஆன்மீக உணர்வினையும் மேலோங்கச் செய்வதையே தனது தலையாய குறிக்கோளாகக் கொண்டு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பணியாற்றி வரும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினது இறைபணியின் ஓர் அங்கமாக வெளிவருகின்ற நல்லைக்குமரன் 33 ஆவது மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

பிரதிபலன் எதனையும் பாராது நல்லன எல்லாம் செய்துவரும் யாழ்ப்பாண மாநக ராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவானது சைவ சமயத்தின் மகிமையையும், தொன்மை யையும் நல்லூர் கந்தனின் பெருமைகளையும் தாங்கி வெளிவருகின்ற நல்லைக்குமரன் மலரினை நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் வெளியிடுகின்றமை சாலப் பொருத்தமானதாகும்.

இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமல்லாது எதிர்கால சந்ததியினருக்கும் மிகவும் பயன்மிக்கதாக நல்லைக்குமரன் மலர் அமைந்துள்ளமை வரவேற்கத்தக்கது. சைவப் புலவர்களும், நம் முன்னோர்களும் போற்றிப்பாடி நிற்கின்ற மிகப் பழைமை வாய்ந்த அலங்காரக் கந்தனின் அற்புதங்களைக்கான நல்லூர் மகோற்சவ காலத்தில் இலங்கை வாழ் மக்கள் மட்டுமல்லாது உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நல்லைக்குமரன் மலர் உலகெங்கும் வாழும் அனைத்து மக்களுக்கும் நம் எதிர்கால சந்ததியினருக்கும் பயன் மிக்க ஓர் அரிய பொக்கிஷமாக அமையும் என்றால் அது மிகையாகாது.

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் வெளியிடப்படு கின்ற நல்லைக்குமரன் மலர் சிறப்புடன் வெளிவர சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய மலர்க்குழுவினருக்கும், நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மருதலிங்கம் பிரதீபன்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
යාපනය විශ්වවිද්‍යාලය, ශ්‍රී ලංකාව
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

மெய்ப்பொருள் காண்பது அறிவு

*Professor. S. Srisatkunarajah*
*Vice Chancellor*
B.Sc(Hons) Jaffna, PGDE(Merit) OUSL, Ph.D Heriot-Watt,
Professor in Mathematics

எமது இல. / මගේ අංකය / My Number

உமது இல. / ඔබේ අංකය / Your Number

Date :

# யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெரும் புகழ் வார்த்தைகளால் வடிக்கப்பட முடியாதது. ஈழத் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க – தனித்துவமிக்க அடையாளங்களில் முதன்மையானதாகத் திகழும் நல்லூர் கந்தன் யாழ்ப்பாணத்தவர்களுக்கு மட்டும் உரித்துடையவனல்ல. ஈழத்துச் சைவர்களுக்குமல்லாமல், உலகெங்கணும் பரந்து வாழும் சைவப்பெருமக்களின் கண்கண்ட தெய்வமாக நின்று அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான்.

நல்லூரானுக்குக் கொடி என்றால் நாடெங்கும் கொண்டாட்டம் என்னுமளவுக்கு இந்த ஒரு மாத காலமும் பக் தி பூர்வமான காலமாகக் கடந்து போவது வழமை.

பொதுவாக முருகப் பெருமானை நினைத்தாலே போதும், சகல சௌபாக்கியங்களும் அருள்வான் என்று பல நூல்களின் வாயில் களாக நாங்கள் அறிந்து கொள்கிறோம்.

முருகப் பெருமானின் பெருமை சொல்லும் நூல்களுக்கு மேலாக, நல்லைக் குமரனுக்கு என்று பல தனித்துவமான பாடல்களும், பதிகங்களும் உண்டு. "கந்தபுராண கலாசார மையம்" என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாண மண்ணின் - நல்லையம்பதியில் எழுந் தருளியிருக்கும் கந்தப் பெருமானின் மீது பாடப்பட்ட பாடல்களுள் "திருநல்லூர்த் திருப் பள்ளி எழுச்சி", "நல்லைக் கந்தர் திருவூஞ்சல்" மற்றும் "நல்லூர்த் திருப்புகழ்" என்பன மகிமை மிக்கன.

வருடத்தில் முழுநாளும் அதிகாலை வேளையில் கந்தப் பெருமானைத் துயிலெழுப்புவதற்காகப் பாடப்படும் "திருநல்லூர்த் திருப்பள்ளி எழுச்சி"யின் பெருமையை அதிகாலைப் பள்ளியறைப் பூஜைக்குச் செல்லும் அடியவர்கள் அறிவார்கள். அதேபோலத் தினமும் மாலையில் கந்தப்பெருமானைத் துயிலுறச் செய்வதற்காகப் பாடப்படும் "நல்லைக் கந்தர் திருவூஞ்சல்" பெருமை மிக்கது. இவற்றுள் "நல்லைக் கந்தர் திருவூஞ்சல்" தேர்த் திருவிழாவின் போதும், திருக்கல்யாண நிகழ்வின் போதும் பாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைப் பொருளுணர்ந்து படிக்கும் போதும், பாடப்படும் நேரத்தில் கேட்டுணரும் போதும் முருகப்பெருமானை மிக அருகாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

அலங்காரனாக அமர்ந்திருந்து அருளாட்சி புரிகின்ற நல்லூரானின் புகழைப் பரப்பும் பணியில் யாழ்ப்பாண மாநகர சபைக்கும் பெரும் பங்குண்டு. வருடாந்த மகோற்சவ காலத்தில் - அதனையொட்டி மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் "நல்லைக்குமரன்" மலரும் நல்லூர் கந்தனின் புகழ் பரப்பும் பணியைச் செவ்வனே செய்து வருகிறது. காலந் தவறாமல் வெளிவரும் "நல்லைக்குமரன்" மலரைத் தொகுத்து, அதனை நூலாக்கிப் பதிப்பித்து வெளியிடும் தெய்வீகப் பணியில் இணைந்திருக்கும் சகலருக்கும் எல்லாம் வல்ல நல்லையம் பதியான் அருள் செய்ய வேண்டிப் பிரார்த்திக்கிறேன் .

அன்புபொருந் தடியவர்கள் வாழி வாழி
அழகியநல் லைச்சனங்கள் வாழி வாழி
பொன்புரளு மஞ் ஞைகுக் குடமும் வாழி
புகழ்தெய்வ குஞ் சரியும் குறமின் வாழி
துன்புதவிர் வீரவேல் வாழி வாழி
சொல் லுமற் று மாயுதங்கள் வாழி வாழி
நன்குதரும் நல் லைநகர் க் கந்தர் வாழி
நாதாந்த வேலவரேந் நாளும் வாழி
சர்வம் சண்முகார் ப்பணம் !

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**
**துணைவேந்தர் - கணிதப் பேராசிரியர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ் மாநகர முதல்வரின்

## வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் "சைவ சமய விவகாரக் குழுவால்" வெளி யிடப்படும் "நல்லைகுமரன் மலர்" இவ்வாண்டில் 33வது மலரை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

அருள் மிகு நல்லூர் கந்தசுவாமி கோவிலின் திருவிழாவையொட்டி, சைவ சமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் 33வது மலருக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் ஆன்மீகக் கட்டுரைகள், கவிதைகள், சைவ தத்துவக் கருத்துக்கள் போன்ற பல்வேறு சைவமதம் சார்ந்த பயனுள்ள உள்ளடக்கங்களை கொண்டுள்ளது என்பது மகிழ்ச்சியளிக்கக்கூடிய விடயமாகும். எமது பாரம்பரியத்தைப் பேணித் தழுவும் இந்நூல், சமய விழிப்புணர்வை ஊட்டும் பணியில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுள்ளமை உறுதி.

யாழ்ப்பாண சைவ சமய மக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் இந்நூலின் வழியாக சைவ சமயத்தின் மகத்துவத்தையும், கலாசாரத்தின் அழகையும் உணர்ந்து, வாழ்வில் தர்மப் பாதையை கடைப்பிடிப்பதற்கான ஊக்கத்தைப் பெறுவார்கள் என நம்பு கிறேன்.

இத்தகைய பணியை மேற்கொள்ளும் சைவ சமய விவகாரக் குழுவுக்கும், மலரக் குழுவுக்கும் இதற்கான ஆக்கங்களை வழங்கிய அன்பர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களையும், எதிர்கால செயல்களில் வெற்றியும் சால்பு நிறைந்த வாழ்த்துக்களை யும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி.வி.மதிவதனி**
**மாநகர முதல்வர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
# JAFFNA MUNICIPAL COUNCIL

## யாழ் மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் ஆண்டு தோறும் நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படும் "நல்லைக்குமரன்" மலருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் பாரம்பரியத்தின் அடையாளமாக, உலகெங்கிலும் பரவி வாழும் தமிழ் மக்களின் உள்ளங்களில் திலகமாய் வீற்றிருக்கும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழா, எம்நாட்டுமக்கள் மத்தியில் ஆன்மிக ஒற்றுமையை நிலைநாட்டும் மிக முக்கிய மான நிகழ்வாகக் காணப்படுகிறது.

மறைந்துவரும் பண்பாட்டு ஆக்கங்களைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வுடன் செயலாற்றும் தன்னார்வலர்கள், சைவசித்தாந்தம், தமிழியக்கக் கலை, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் பங்களித்துவரும் மேதைமிகு ஆளுமைகள், இம்மலருக்கு தரும் ஆக்கங்கள் வழியாக, நம் பண்பாட்டுச் செல்வங்களை வருங்காலத் தலைமுறைகளுக்குக் கொண்டு செல்லும் பாலமாக இம்மலர் விளங்குகின்றது.

33வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள "நல்லைக்குமரன்" மலரின் வெளி யீட்டை வரவேற்கின்றேன். இந்த சிறப்புப் பயணத்தில் தனது ஆக்கங்களால் வளமளித்த அனைவருக்கும், அயராது உழைத்த மலர்குழுவினருக்கும் எனது உளமார்ந்த நன்றி யையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சமயச் செயல்பாடுகள் மற்றும் சமூகநலப்பணிகளில் தங்களை அர்ப்பணித்த ஆளுமைகளை "யாழ் விருது" மூலம் கௌரவிப்பதும்,நல்லூர் திருவிழாவின் ஒரு பண் பாட்டு அடையாளமாகப் பதியப்பட்டுள்ளது. இந்த பாரம்பரியம் தொடரட்டும் என்பதே என் பேரார்வமாகும். இவ்வாண்டு மலர் வெளியீட்டுவிழாவும் சிறப்புற நடைபெற, சைவசமய விவகாரக் குழுவின் பணிகள் மேலும் விரிவடைந்து வளர்ந்து நலமுடன் பயணிக்க, உங்களது தொடர்ந்த ஆதரவு, ஊக்கம், ஒத்துழைப்பு ஆகியவற்றை அன்போடு எதிர்பார்க்கின்றேன்.

**ச.கிருஷ்னேந்திரன்,**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லைக்குமரன் மலர்

# 2025

## கவிதைகள்

- நல்லூரான் பாதம் நிதமம் நாடு
- அரண் செய்
- கருணை முகம் காட்டி ஆதரிப்பாயே !
- வேல்கொண்டு வென்றெடுத்து தாராயோ
- எழில் நல்லைக் கந்தவேளே!
- நல்லூரான் அருட்திருக்குறல் (திருக்குரல்)
- கல்லைக் கனியாக்குகின்ற நல்லைக்குமரனே
- நல்லை தன்னில் வீற்று இருக்கின்றேன்
- தரிசனம் தருகின்றான்
- நல்லை முருகன் திருப்பள்ளி எழுச்சி பதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நல்லூரரான் பாதம் நிதமம் நாடு

கலாபூஷணம்
கே.ஆர்.திருத்துவராஜா

பல்லவி :- நல்லைக் குமரனின் நிழல்தனை நாடுவோம்
நிதம் மலர்நூறு நாம்கொண்டு சூடுவோம்
- நல்லைக் குமரன்...

அனுபல்லவி :- எல்லையிலா அருள்தரும் தங்கமயில் வாகனனே
என்றுமுன் நாமக் கூறும் என்மனமே
- நல்லைக் குமரன்...

சரணம் :- ஆவணியில் ஆனந்தமாய் நல்லூரான் கொடியேறும்
ஆயிரமாய் அடியவரின் இருகரமும் குவியும்
காவடிகள் ஆலயத்தை அருளோடு ஆடிவரும்
கந்தனிடம் வேண்டிய நேர்த்தி கடன்தீரும்
- நல்லைக் குமரன்...

கானமயில் வாகனனே கந்தப் பெருமானே
கரமிரண்டும் கூப்பியுனை கண்ணீர் சிந்தினோமே
தேனமுது படைத்து தேவாரம் பாடி
துணைநீயே ஒன்றுனையே தேடி வந்தோமே
- நல்லூர்க் குமரன்...

வேட்டுக்கள் ஓய்ந்து வாழ்வோர் தலைநிமிர
வியப்புடன் சமூகமது வீறுநடை போட
ஆட்பட்ட இளைஞர் ஆடலும் பாடலும்
வருமாறும் பாதைதனை ஒருகணம் பார் முருகா
- நல்லைக் குமரன்...

நூலோடு இருப்பவரே சாதனைகள் புரிவர்
நிலைபெற சாதித்தோர் நூலினுள் இருப்பர்
வேலோடு வேலவா வளரும் மாணவர்க்கு
வல்லமை அருளாலே வளம்பெற செய்வாயே.
- நல்லைக் குமரன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரண் செய்

த.ஜெயசீலன்

திருநல் லையதன் திருநாள் களிலே
திசைகள் அளந்து தினம் சுற்றிவரும்
கருணைச் சுடரே கதியற் றுழல்வோர்
கவலை களைநீ களைவாய் களையாய்!

எழிலின் ஒளியே அறிவின் வெளியே
இயங்கும் இருசக் திகளும் துணையாய்
எழும்ஞா னச்சுடர் வடிவேல் முருகே!
இடறும் தடைகள் சுடுவாய் உடனே!

கடலாய் அடியர் கழலில் தொழவும்
கருதா தினியும் நகரல் முறையோ?
“விடைசொல்” எனவே விழும்அன் பர்களின்
விழுநீர் துடைநெஞ் சிடிதீர்த் துதவு!

விதியின் வடிவே! வினைஉன் செயலே!
விருதும், பழியும் தருகின் றவனே!
உதிரா தெமையும் உயிர்ப்பித் தருளும்
உறவே உயிர்கொண் டுலவும் பொருளே!


மனதில் தொடரும் மயக்கங், குழப்பம்,
வலிகள், தமைநீ வடிகட் டிடுவாய்!
நனவில் மமதை தனில் ஆடுகிற
நலிவைத் தடு மும் மலச்சீழ் துடைவா!

எவரும் சிறியர் எனஎண் ணியவர்
இதயம் தனைநொந் திடச்செய் திடும்சொல்,
“அவர்கள் அசடர்” எனயா வரையும்
அளக்கும் மமதை, அழிமாற் றுஎமை!


மரணம் எனுமோர் மருமம் தொடர்ந்தே
வரும் நின் வடிவே லதனால் அரண்செய்!
இருந்தான் அடநேற் றிலை இன்று- எனும்
இயல்புள் ளபுவி இதுள்ஆண் டிடவை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கருணை முகம் காட்டி ஆதரிப்பாயே !

**கலாபூஷணம் கீழ்கரவை கி.குலசேகரன்**
ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர் இலங்கை வங்கி, அப்புத்தளை.

அற்புதங்கள் செய்து, அடியவர்கள் குறை தீர்த்து
ஆனந்த வாழ்வளிக்கும் குமரா ! நினது,
பொற்பதங்கள் தஞ்சமெனப் போற்றிப் பணிக்கின்றோம்
புகழ் பூத்த நாயகனே வாரும் ஐயா!
நற்றமிழ்க் கடவுளென நாங்களெலாம் வாழ்த்துகின்ற,
நாயகனே நல்லூரில் குடிகொண்ட காவலனே !
பற்றோடு நாளுமுனைப் பாடித் துதிக்கின்றோம்,
பலவினைகள் போக்கி அருள் புரிவாய் ஐயா!

நிலையில்லா வாழ்வினிலே நீயே துணையென்று
நினைத்துருகி நின் திருத்தலத்தை நாடி, ஆங்கு
குலையாத அன்போடு கும்பிட்டு மன்றாடி
குகனே நின் திருப்புகழைப் பாடியாடிக்
அலையலையாய் வந்து தொழும் பக்தர்க்கெல்லாம்
ஆடு மயில்மீது வந்து காட்சி தந்திடவே
கலையம்சம் பொருந்திய கோவில் தனிலே
காட்சி தந்தே ஆட்சி செய்வாய் ஐயா!

தேவர்கள் குறை தீர்த்த தெய்வமே!, பக்தியோடு
தேடி வருவோர்க்கருளும் அலங்காரக் கந்தனே!
பாவ வினைகளை அறுப்பவனே ! நினைப்
பணிந்தவர்க்கு அருள்மாரி பொழிபவனே !
ஆவலோடு நினைத்தொழவே வந்தோமையா !
அருள் ஒளியை காட்டி எமை ஆளுமையா !
சேவற்கொடியோனே ! சிங்கார வேலவனே !
சிந்தை கனிந்து வரம் தாருமையா !

உலகெங்கும் இருந்துவரும் அடியார் கூட்டம்
உன் கோவில் வலம் வந்து உனை நினைந்து
பலவிதமாய் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி,
பண்ணோடு நினை பாடிப் பரவி நிற்க,
புலவர்களும் உனைப் போற்றிப் புகழ்ந்து பாட
புண்ணியனே ! மலர்தூவி வாழ்த்துரைக்க
நிலவுலக வாழ்வினிலே நிம்மதியைத் தருபவனே !
நின்கருணை முகம் காட்டி ஆதரிப்பாயே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேல்கொண்டு வென்றெடுத்து தாராயோ"

கலாபூஷணம்
வதிரி கண.எதிர்வீரசிங்கம்

**எடுப்பு**

ஆதிசக்தி மடிதவழ்ந்த நல்லைக் கந்தா ! - நாங்கள்
ஆதிதமிழ் குடிகளிங்கு அறிவாயோ ! கடம்பா !
....ஆதிசத்தி....

**தொடுப்பு**

நாதியற்ற இனமென்று பெரும்பான்மை கூறலாமோ !
நீதியின்றி வாழுதல்தான் மனுதர்மம் என்கலாமோ!
. ....ஆதிசத்தி....

**முடிப்பு**

யார்வந்து ஆண்டாலும் நியாயங்கள் தவறலாமோ ! உன்னடியில்
அகிம்சையில் போராடிய இளந்தளிரும் சருகாகலாமோ !
அமைதிக்காய் வந்தவர்கள் அடிதடியால் மாறலாமோ ! நாளும்
அழுத்தங்கள் எம்மீது திணிப்பதுதான் மனித நேயமோ !
....ஆதிசத்தி....

அம்மையப்பன் மடிமீது நீ செல்லப் பிள்ளையடா ! உனது
தலம் சுற்றி தினம் தினம் வளரும் தொல்லையடா !
பாரெங்கும் அவலங்கள் போரொலிகள் தொடருதையா ! -மீண்டும்
மயிலேறி உலகளந்து மானிடத்தை காத்திடையா !
....ஆதிசத்தி....

சொல்வதெல்லாம் சரியென்று உலகரங்கில் வாதாடலாமோ! தமிழ்
மொழிதனின் மகத்துவத் தொன்மைகளும் மறையலாமோ!
உய்யவழி தேடிநிதம் போராட வாராயோ ! எம்
உரிமைகளை வேல்கொண்டு வென்றெடுத்து தாராயோ!
....ஆதிசத்தி....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழில் நல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம்
சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

01. வானிலும் மண்ணிலும் வருமண்டம் யாவிலும்
வளமுடன் கலந்ததிருவே!
ஞானமும் மோனமும் நற்றமிழ்க் கானமும்
நண்ணவே யெண்ணுங்குருவே!
நானென்று நீநின்று ஒளிவீச நாற்றிசையும்
நல்லூரன் கொடியு மேற
ஈனமதை யோட்டுவான் இன்னிசையை மீட்டுவான்
எழில்நல்லைக் கந்தவேளே!

02. அந்தமு மாதியும் மற்றவன் நல்லூரின்
ஆனந்த மானவுருவே!
விந்தைகள் புரிந்தெங்கள் சிந்தையி லுறைந்தவா
வேந்தனே ஞானகுருவே!
சிந்தனைக் குள்ளேயும் செறிந்தோங்கி நிற்கின்ற
தெய்வீக மானகருவே!
வந்தனை செய்திங்கு வருவோற்கு நற்கதியை
வார்நல்லைக் கந்தவேளே!

03. மனைதோறும் வழிபாடு மனதாரப் புரிகின்ற
மாந்தர்கள் வாழுமண்ணில்
உனையன்றி வேறில்லை யுலகமே நீயென்று
உருவமே தோன்றுங்கண்ணில்
வினையாகும் வினையாவும் விரட்டவே விழைந்தாலும்
விரைந்தெம்மைக் காக்கும் வேலே!
நினைக்கின்ற கணத்திலே நின்கருணை நல்கின்ற
நேர்நல்லைக் கந்தவேளே!

04. வேலனே! யுன்னையே வேண்டிடு மடியாற்கு
வேண்டுவன யாவுமருள்வாய்
காலனே வந்தாலும் கதிகலங் காவண்ணம்
காக்கவே நோக்கியெழுவாய்
பாலனாய்த் தோன்றியே பார்க்கின்ற பொருளெலாம்
பரவியே தெரிய விரிவாய்
சாலவே யுனைப்போற்றிச் சாற்றவே மொழியேது
சதுர்நல்லைக் கந்தவேளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. நித்தமுந் தெளிவோடு நினைநினைந் துருகுவோர்
நெஞ்சிலே துஞ்சியருள்வாய்
சித்தமு முனையன்றி வேறொன்று மில்லையே
சிந்தனையில் விஞ்சியெழுவாய்
அத்தனே முத்தனே சித்தனே யுனையன்றி
ஆரெமைக் காக்கவல்லார்
அத்தனை மேன்மைகொள் ளானந்த சொரூபனே
அருநல்லைக் கந்தவேளே!

06. பொற்பதந் தன்னையே போற்றுகின் றோமுனது
பொன்னருள் பூக்கவேண்டும்
கற்பனைக் கெட்டாத நற்பதந் தன்னையே
காணவெமை நோக்கவேண்டும்
சொற்பதத் தாற்கவிதை சூட்டவே யொளிவீசிச்
சொல்லுதமிழ் வெல்லவேண்டும்
நற்பரா தற்பரா பற்றேது மற்றவா
நனிநல்லைக் கந்தவேளே!

07. உயிராகி உடலாகி உணர்வோடு உறவாடி
உலகாளும் மாயலீலை
பயிராகி மரமாகிப் பழமாகி வளமாகி
பரந்தாளு முனதுவேலை
நயமாகி வயமாகி நீராகி நெருப்பாகி
நானிலம் முற்றுமாகி
தயவாகி யெமையெலாந் தாங்கிடும் தெய்வமே
தருநல்லைக் கந்தவேளே!

08. தாயாகித் தந்தையுந் தானாகிக் கோனாகி
தளர்விலாச் சத்தியாகி
நோயாகி நோய்த்தீர்க்கும் மருந்தாகி விருந்தாகி
நுண்நுழை புலமுமாகி
தேயாது தெவிட்டாது செகமெலா மோயாது
தித்திக்கும் முத்தியாகி
ஆயா! வுன் அருள்மேன்மை அணையாத தீபமே
அருநல்லைக் கந்தவேளே!

09. ஆறுபடை வீட்டிலும் அலங்கார மாகவே
ஆனந்தக் காட்சிதருவாய்
ஆறுமுக மானவுரு அஞ்சுதலை நீக்கிப்பெரு
அருமருந் தாட்சிசெய்வாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறுமடி யார்மனதிற் குடியிருந்தே காணுங்
குறைதீர்த்து மாட்சிசெய்வாய்
ஏறுமயில் வாகனா! எழிலாடும் மோகனா!
எம்நல்லைக் கந்தவேளே!

10. சித்திக்கு வித்தான சித்தனே முத்தனே
தெள்ளுதமி ளானபொருளே!
எத்திக்கும் தித்திக்கு மெழிலான வித்தகா
இறைவனுக் இறையானவா!
சத்தியுமை பாலனே சர்வவேஸ் வரன்குரு
சர்வமு முனதுமயமே
நித்தமு மெமையாளும் நேசனே வாசனே
நிறைநல்லைக் கந்தவேளே!

11. மாடுமனை கூடும்வடி வானவெழில் மாநகரில்
வானுயர வந்தபொருளே!
கூடுமடி யார்கள்தொழும் பீடுபதி மீதினிலே
கோலோச்சும் ஞானவருளே!
வாடுவினை யோட்டிவிளை யாடும்வடி வேலவனே
வந்துவருள் சிந்தியருள்வாய்
ஆடுமயில் மீதிலுறை யருவுருவக் காட்சிநிறை
அருநல்லைக் கந்தவேளே!

12. ஆதியிலை அந்தமிலை யருவமிலை யுருவமிலை
அளந்துசொல வுவமையிலையே
பாதிமதி யார்சிவனின் படருவிழிப் பொறியுதித்து
பரமகுரு வானமறையே!
ஏதமில்லைப் பேதமில்லை யெங்கும் விரிமூலமென
இலங்கிடு மின்பவிறையே
நாதவடி வானதொரு வேதமதில் சேர்ந்ததிரு
நதிநல்லைக் கந்தவேளே!

13. கார்த்திகைப் பெண்களின் கனிவான வன்பிலே
கலந்துமோர் குழந்தையானாய்
பார்புகழ்ந் தேற்றவே பாவாணர் போற்றவே
பைந்தமிழ்த் தலைவனாய்
கார்மேவும் குன்றெலாம் குன்றாம லோங்கியே
கோலவடி வைக்காட்டினாய்
சீர்மேவுங் கலைநிறை யாழ்ப்பாண மீதிலுறை
சேர்நல்லைக் கந்தவேளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

14. ஆணவங் கொண்டன்று அகந்தையி லாடிய
ஐயனாம் பிரமாவையும்
வேண்டு மென்றே"ஓமின்" பிரணவக் கருத்தையே
வேண்டியே நின்றபோது
நாணவே கோணவே நின்றபிர மாவையே
நலியவிட் டறிவூட்டினாய்
காணவே நீதிநெறி நிலைநாட்டும் கொற்றவா
கா!நல்லைக் கந்தவேளே!

15. பைந்தமிழ் தந்திடும் பாவலர்கள் யாவற்கும்
பாடுபொரு ளாகநிற்பாய்
செந்தமிழ்க் குன்றமே செப்பிடுங் கவியெலாம்
தேன்சிந்தும் சந்தமருள்வாய்
எந்தையே வுந்தனை இறுகவே பற்றுவோர்
இடர்களைய வாருமையா
மந்தநிலை மாற்றவே மாநிலமு மேற்றவே
வருநல்லைக் கந்தவேளே!

16. பேசாத ஊமையாம் குமரகுரு பரருக்கு
பேற்றுடன் ஆற்றலீந்து
கூசாது கவிபாடிச் சந்தமது முந்திவரக்
குலவியே அணைத்தாண்டவா
வீசாத காற்றாக விம்மியமு திட்டதவர்
மேன்மைக்கு மெருகேற்றினாய்
மாசான மனங்களை மாற்றியரு ளூற்றிடும்
மாநல்லைக் கந்தவேளே!

17. பாட்டியா மவ்வையின் பல்துறைப் புலமையை
பாருக் குணர்த்தவெண்ணி
பாட்டாலே சோதனை செய்தனவை யாவுமே
பட்டறிவு வித்தகங்கள்
கேட்டாலே யென்றுமே தித்திக்கும் முத்தாகி
கீர்த்தியாய் தோன்றுஞ்ஞானம்
காட்டவே வைத்தவன் காசினியி லுய்த்தவன்
கலைநல்லைக் கந்தவேளே!

18. அன்புடன் பூசித்த அருணகிரி நாதற்கு
அளைந்தபா வங்கள்நீக்கி
இன்பமுற வேலினால் "ஓம்" மெழுதி நாவிலே
ஓங்குதமி ழோசைபெருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்றுமே யழியாது வேற்றதிருப் புகழினை
இங்கித மாக்கிமகிழ்ந்தாய்
நன்றினிது செய்தெங்கள் புன்வினைகள் போக்குவாய்
நவநல்லைக் கந்தவேளே!

19. சூரனின் கொடுமையால் சொல்லொணாத் துயருற்ற
தேவரைக் காக்கவென்றே
வீரனாய் வந்தங்கு வேலெடுத் தாடியே
வெற்பினைப் பிளந்துவீழ்த்தித்
தீரம் மிகுந்திட்ட சூர்குலம் யாவையும்
தீரவே வேரறுத்து
ஆரமாய் வெற்றியை நாட்டியே யீட்டினாய்
அருநல்லைக் கந்தவேளே!

20. வள்ளிமட மாதுசெய் மாதவப் பேற்றினால்
மணம்புரிய வெண்ணிவந்து
கள்ளமாய் செய்திட்ட லீலைகள் யாவுமே
கணக்கில் லடங்காததே
உள்ளத்தி லொன்றியே யோங்குகுற மாதையும்
உடனேற்றுக் கொண்டகோவே!
பள்ளத்தில் வீழ்ந்திங்கு பதறிடும் பத்தரையும்
பார்நல்லைக் கந்தவேளே!

21. குன்றத்தில் மேவியே குவலயம் யாவையும்
கோணாமற் பேணுமாட்சி
நின்றுநீ செய்வதால் நின்கருணை பெய்வதால்
நேராது இங்குவீழ்ச்சி
அன்றுமுதல் இன்றுமே யகிலஞ் செழிக்கவே
ஆற்றுமுன் னழகுமாட்சி
என்றுமே தேயாது வெப்போது மோயாது
எழுநல்லைக் கந்தவேளே!

22. நீங்காமற் றுதிசெய்து நின்பதம் பற்றியே
நினைக்குமடி யார்களுக்கு
தீங்கான வொன்றுமே திடமாக வாராது
திண்மையாய்க் காக்கும்வேலே
பாங்காய்மெய் யடியார்கள் பாடியே பரவினால்
பைந்தமிழில் முந்திவருவாய்
ஓங்கார மாயோங்கி ரீங்காரம் புரிகின்ற
ஓம்நல்லைக் கந்தவேளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

23. நீர்க்குமிழி வாழ்க்கையில் மூழ்கியே யாழ்ந்திடில்
நிலைக்காது எந்தசுகமும்
சீர்மேவும் மனமொன்றிச் சிங்கார வேலவனை
சிந்திக்க மலருமகமும்
ஆரெம்மை யணைப்பார்கள் அவனின்றி வேறில்லை
அறிந்தவர் அறிவார்களே!
ஆர்த்தெழும் பிறவியை அறுத்தெம்மை யாள்பவன்
அருநல்லைக் கந்தவேளே!

24. நினைப்பதுவும் ஒன்றாகும் நிகழ்வதுவே றொன்றாகும்
நிம்மதியும் என்னாகுமோ!
முனைவதுவும் ஒன்றாகும் முடிவதுவே றொன்றாகும்
முருகனே யுனதுலீலை
மனதினிலே தோன்றுவது, கூடுவதும் மோடுவதும்
மனிதவியல் பானநிகழ்வே
தினந்தோறு மடியார்கள் திறனாய்ந்து பலனீயும்
திருநல்லைக் கந்தவேளே!

25. என்செயலி னாலாவ தொன்றில்லை யெல்லாமும்
உன்செயல் என்றுணர்ந்தேன்
முன்செய்த வூழ்வினை பின்வந்து பாய்வதை
முற்றாய்ப் புரிந்துகொண்டேன்
என்செய்த போதிலும் எதிர்செய்த போதிலும்
எல்லாமு முனதுவசமே
நன்றென்று நீநின்று நலமின்று காட்டுவாய்
நயநல்லைக் கந்தவேளே!

26. அரும்புலவர் நாயனார் அகத்திலே யுனைப்போற்றி
அளித்திட்ட செய்யுளமுதம்
கரும்பென்று சுவையூறும் கவிக்கடற் பெருக்கினைக்
கரையிலே நின்றுபார்த்தேன்
விருப்புடன் கவிபாட விழைந்திட்ட நாயேனும்
வேல்முருகன் காலில்வீழ்ந்தேன்
தருகின்ற கவியெலாம் எழுதியது வென்கரம்
தந்ததென் கந்தவேளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் அருட்திருக்குறல் (திருக்குரல்)

ஆ.விநாயகமூர்த்தி
புலோலியூர்

1. "நல்லோரி னுள்ளத்தி லிருந்தருளும் பெருமானாம்
நல்லூரான் பாதந் துணையே"
2. "நல்லூரான் திருக்கோயில் நாடிவரு வாய்தினமும்
தொல்லைதுயர் பிணிதொலைய வே"
3. "செல்லப்பாச் சித்தர் சாமியோகற் கேயருளும்
நல்லப்பன் நல்லூர்க் கந்தன்"
4. "நாவலரும் வாழ்ந்த நல்லூரான் பெரும்புகழைப்
பாவரைந்தும் பாடிப் பணி"
5. "நல்லூரான் தன்னை நாளும் தொழுதேத்தி
தொல்லைதவிர்த் தேயினிது வாழ்"
6. "பன்னிரு கையானைப் பாரெங்கு முள்ளானை
உன்னுளத்தி லேயே யிருந்து"
7. பட்டினத்துப் பிள்ளை யாரவரின் தம்பியையுன்
கிட்டவர வழைப்பா யினி
8. "சூரசுரன் தனையழித்த சுடர்நெடுவேற் கையனவன்
பேரழகன் நல்லூர்ப் பிரான்"
9. "ஆறுமுகத் தானிருகா லழகுமயி லதன்மேலே
ஏறிவரு வானருள வே"
10. "ஆவணியி லேவந்து பாரழகன் கோயிலினைத்
தேவவுல கந்தோற்கு மே"
11. "வெள்ளிமயில் மீதே வருமழகு வேல்முருகன்
உள்ளுறையுங் கோயிலிது வாம்"
12. "ஊரெங்குங் தேடி யுனைக்கண்டேன் நல்லூரிற்
பாரென்னைக் கண்பன் னிரண்டால்"
13. "வெள்ளி மயிலேறி வரும்வேல னைக்கண்டே
வள்ளலருட் பாதம் பணி"
14. "பாராளும் வேந்தர் பல்லோரின் நல்லூரில்
ஊராளு கின்ற னவன்"
15. "செங்கோலைத் தாங்கித் திருவீதி யுலாவந்தான்
இங்கேவா ழுருள்வே லவன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. "செல்வச் சீரானைத் திருநல்லைப் பதியானை
பல்வகையாய்ப் பாடிப் பணி"

17. "பாலமுரு கன்னுருவைப் பணிந்தபடி யேயிருந்தபார்
காலனணு காதருளு வான்"

18. "ஆறு திருமுருகன் அவனே அருவுருவன்
பேறுதரு வான்பணிய வே"

19. "மாங்கனிக்கா யேங்கி மலை மீ தமர்ந்தவனை
தீங்கறவே நம்பித் தொழு"

20. "குன்றிலிருப் பான்குமரன் குமரகுரு நல்லூரில்
என்றுமிருந் தேயருளு வான்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லைக் கனியாக்குகின்ற நல்லைக்குமரனே

த.உமாசுதன்
புலோலியூர்

வள்ளி தெய்வயானையுடன் வந்து மயில் மீது அமர்ந்த
வள்ளல் பெருமான் நினை தினம் மனம் தொழுவேனே
மெல்ல தமிழ் தந்தெனது உள்ளம் உனை நினைந்துருக
சொல்லில் வந்தெனை ஆள வேண்டும் பெரியோனே

அல்லல் வினையாவும் அறுத்து பிள்ளை மனம் போல் நடித்து
வள்ளி தினைக் காவல் சென்ற கிழவோனே
துள்ளி மயில் மீது அமர்ந்து தொல்லை வினையாவும் களைந்து
நல்ல தமிழ் பாடல் தந்த கந்தப் பெருமானே

எந்தன் மன வேதனையை கொல்லும் ஓம் மந்திரத்தை
தந்து எனை ஆட்சி செய்யும் அழகோனே
கந்தன் என்று நாடும் பக்தர் சொல்லித் துயர் போக்கும் அன்பர்
வந்த போது வரம் அளிக்கும் பால முருகனே

நல்லைப் பதி நீயுறைந்து நாடும் பக்தர் வாழ்வுயர
அள்ளிக் கொடை வரம் கொடுக்கும் இளையோனே
நல்ல தமிழ்ப் பாடல் தந்து நாமும் வளம் பெற வைக்கும்
கல்லைக் கனியாக்குகின்ற நல்லைக்குமரனே

10723



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை தன்னில் வீற்று இருக்கின்றேன்

**துரைராசா யோகேஸ்வரன்**
**வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு.**

நல்லூரான் பாதங்களை நாள்தோறும் வணங்கினால்
நலமுடன் நாம் உயிருடன் வாழ்கின்றோம்
பசி என்று எனக்கு வந்தால்
பலமுறை முருகா என்றே கூவ உனை
பல விதமான உணவுகளை அள்ளி அள்ளித் தருவாய் தருவாய்
இன்பத்திலும் துன்பத்திலும் எனக்கு
உதவி புரிவீரே முருகா முருகா
என்றும் என் மனதில் குடியிருப்பாரே முருகா முருகா
காலையில் என்னை எழுந்திரு என்பான்
கடமைகளை சரியாக செய்யச் சொல்வான்
முருகா முருகா முருகா

தந்தை தாய் தான் உலகம் என்பாரே
தரணியை பார்த்து நீ பயந்து கொள்ளதே
நல்லைக் கந்தன் நான் இருக்கிறேன்
அவன் இல்லையே சத்தி இல்லையே
சக்தி இல்லையே சிவன் இல்லையே
முத்தமிழ் கூறிய சிவன் பிள்ளை முருகா
முக்கனி அடைய சிவசத்தி வலம் கொண்டு
மயிலேறி பார் சுற்றி வந்த வடிவேலே
கணபதி சுற்றுவது உலக வலம்மாயின்
முருகா உன்னை சுற்றுவது சூரிய வலமாகும்

முருகா என்று உன்னை பாடி தொழ அருள் கூடுமே
உன் வேலே வினை பாடி தொழ அருள் கூடுமே
உன் வேலே வினை அறுக்கும் என்விதி வெல்ல
என் விதியே உன் திருயாகக் கொள்ள
எப்போதும் அப்போதும் நான் உன் சஷ்டி பாட
வைத்தாயே என்னை கவசமாக காக்க
பன்னிரு விழிகள் உன் பார்வை எனப்பட்டால்
உன் பக்கர்களுக்கு உயிர் ஒளி பரவுதே
உலகளாவாக உலகளவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் தருகின்றான்

**திருமதி யோகேந்தினி துளசிதன்**
**உப அதிபர், வ / சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா.**

அழகொழுகும் நல்லையிலே அடியவர்கள் புடைசூழ
ஆறுமுகன் தேரேறி வருகிறான் ! - அவன்
கழல்களையே தஞ்சமெனக் கருதி வணங்குவோர்க்கு
காட்சி தந்து ஆட்சியினைப் புரிகிறான் !

அலையலையாய்ப் பக்தர்கள் அவன் தலத்தில் சூழ்ந்து வர
அலங்காரத் தேரேறி வருகிறான் ! மிகத்
தொலைவில் இருந்து வரும் காவடிகளும் தொடர,
தோகை மயில் மீதேறி வருகிறான் !

பக்தியோடு பக்தர்களும், தேரின் வடம் பிடிக்கப்
பைந்தமிழ்க் கடவுள் அங்கு வருகிறான் ! - தன்
சக்தியர்கள் இருவருடன் சஞ்சலங்கள் போக்கிடவே
சரவணனும் தேரேறி வருகிறான் !

நேர்த்திக் கடன்களினை நிறைவேற்றப் பக்தர்களும்
நெஞ்சுருகிப் பாடி அங்கு வருகிறார் ! - தன்
கூர் வேலினை ஏந்திக் கொடுமைகளைத் தீர்ப்பதற்கு
குமரன் அவன் தேரேறி வருகிறான் !

மங்கள நாதம் முழங்க, மலர் தூவி வாழ்த்துரைக்க
மால் மருகனும் மகிழ்ந்தே வருகின்றான் ! - இங்கு
செங்கமலத்தில் உதித்த சேவற் கொடியழகன்
சித்திரத் தேரேறி வருகிறான் !

வள்ளலென வந்தருளை வாரி வழங்கிடவே
வண்ணப் பொற் தேரேறி வருகிறான் ! - உயர்
தெள்ளுதமிழ்க் கடவுள் எங்கள் தீவினைகள் போக்கிடவே
தெருவீதி வழி வந்து தரிசனம் தருகிறான் !



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லை முருகன் திருப்பள்ளி எழுச்சிப் பதிகம்

**சபாரதி இளமுருகனார் (வாழ்நாள் சாதனையாளர்)**
**'சிவஞானச் சுடர்' பல்வைத்திய கலாநிதி**

**காப்பு**

மலையெல்லாம் மகிழ்ந்தினிய வள்ளி யோடு
மகிழ்வானைத் தெய்வயானை வரித்த கோனை
நிலையில்லா நிலைகொண்டே உழலும் பத்தர்
நினைந்தேத்தும் வழிபாட்டை நெகிழ்ந்தே ஏற்று
விலையெழுத முடியாநற் பதத்தை நல்கும்
விமலனுமை முருகனுக்கேர் பதிகம் பாடக்
கலையெழுதக் கொம்பொடித்த கருணை ஞானக்
கற்பகத்தின் பொற்கமலம் காப்ப தாமே.

**நூல்**

விரிசுடர்ப் பரிதியும் கீழ்த்திசை உதித்தான்
விண்டிடும் மலர்கண்(டு) ஆர்த்தன வண்டு
வரிக்குயில் கூவிடக் கூவின சேவல்
வையகம் புலர்ந்திட அகன்றது திமிரம்
கரிமுக ஐங்கரன் - துணைவனே வேலா!
கார்முகில் மாலவன் மருகனே தேவா!
தரிசனம் தந்தெமக்(கு) அஞ்சலென் றருளும்
தமிழ்முரு காபள்ளி எழுந்தரு ளாயே!

வடிதமிழ் கொண்டுனை வைதாலுஞ் சிந்தை
மகிழ்ந்தே நுகர்ந்துநல் வரந்தருந் தேவா!
கடிகமழ் கடம்பணி கந்தவேல் முருகா!
கதிர்மணி மரகத மஞ்ஞையின் தலைவ!
மிடியிடர் அணுகிடா வாழ்வெமக் கருளி
மேதினி காத்திடும் வீரவேற் குமரா!
படிவுயர் நல்லையம் பதிதனில் உறையும்
பரம்பொரு ளேபள்ளி எழுந்தரு ளாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திடும் கருணைகூர் ஆறிரு விழியும்
கதிரொளி காலிடும் மூவிரு முகமும்
ஏத்திடும் இளநகை முறுவலின் பொற்பும்
இரந்திட வரந்தரும் பன்னிரு கரமும்
தோற்றிடுந் திருவருள் பொலிவுறு கோலம்
தொழுபவர் தோத்திரம் எடுப்பவர் கண்டாய்
கூத்துகந் தாடிடும் குழகனின் குமரா
குருபர னேபள்ளி எழுந்தரு ளாயே!

அணைத்தெமைஅஞ்சலென்(று) அபயம் அளித்து
அழிந்திடா ஆசை வெகுளிசிற் றின்பம்
பிணைத்திடும் பிறவிகள் அறுத்தறி வுறுத்திப்
பிஞ்ஞகா உனதிரு விரைகழல் சேர்க்கும்
மணிக்குங் குமத்தட வடிவேல் முருகா!
மரகதச் சித்திர மஞ்ஞையின் தேவா!
பணிந்துனைத் துதித்திட நல்லையம் பதியமர்
பராபர னேபள்ளி எழுந்தரு ளாயே!

மருளற மந்திரம் அறைகுநர் ஒருபால்!
மனதினால் மாமறை ஓதுநர் ஒருபால்!
தெருள்மிகத் தோத்திரம் பாடுநர் ஒருபால்!
சிரமதிற் காவடி தொடுப்பவர் ஒருபால்!
அருள்மலர் ஆறிரு விழியொளி காண
ஆடுவர் கூடிநின்(று) ஆர்ப்பவர் ஒருபால்!
திரளெனத் திரண்டனர் உனதெழில் காணச்
சிவசுத னேபள்ளி எழுந்தரு ளாயே!

கந்தனுன் சேவலும் திருப்புகழ் கூவும்!
கவின்மிகு மயூரமும் திருமறை அகவும்!
சேந்தனுன் கிண்கிணி ஓங்காரம் இசைக்கும்!
தேசொளி வைவேலுன் ஏவலுக் கிரங்கும்!
செந்தா மரைப்பதஞ் சிந்திடும் அழகைச்
சிந்தையால் மாந்திடத் திரண்டனர் தொண்டர்
எந்தையாய் ஆதரித்(து) அபயம் அளிக்கும்
எழில்வேல வாபள்ளி எழுந்தரு ளாயே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரனிடம் பிரணவம் உரைத்தமை பாடி
அயனவன் ஆணவம் தீர்த்தமை பாடி
வரந்தரு அறுமுகத் தத்துவம் பாடி
வள்ளியைக் கரந்த கதையெலாம் பாடி
தரம்மிகு தமிழுக்(கு) அவ்வையை நாடித்
தயாபரன் சுவைக்கனி ஈய்ந்தமை பாடி
இரந்திடும் அடியவர் படுந்துயர் தீர்க்கும்
ஈசிதனே பள்ளி எழுந்தரு ளாயே!

எழுமையுந் தொடர்ந்திடு தீதறு கல்வி
ஏத்திடப் பலன்தரு சிவநெறி உணர்வு
விழுமிய செந்தமிழ் மொழியிநற் புலமை
விரைமலர்த் திருவடி தொழுதிடும் இதயம்
தழுவியே மன்பதை நலந்தரும் அன்பு
தந்திவை எம்மிடை தங்கவை முருகா!
செழுமலர்க் குன்றுதோ றாடிடும் குமரா
சிவக்கொழுந் தேபள்ளி எழுந்தரு ளாயே!

சுகமிகக் கல்விசந் தானமோ டின்பம்
சுந்தரா தேசுடன் திருமிகு கீர்த்தி
இகமதிற் தந்திட இல்லறம் ஓம்பி
என்னுளே உனைக்கண் டிறையருள் பெருக்கி
அகமதில் ஒளிவிளக் கென்றுமே கால
அப்பனே சத்திநி பாதமும் கூட்டாய்
திகம்பரி பெற்றவெம் தேவனே தேவா
திருமுரு காபள்ளி எழுந்தரு ளாயே!

வானுறை இந்திரன் மாதவத் தேவர்
மாலயன் ஐங்கரன் பங்கயத் திருவர்
ஈனமில் இறைபணி இயற்றுமெய் அடியார்
இணையிலாக் கைலையங் கிரியுமை சிவனார்
தேனெனப் பாமழை பொழிதமிழ்ப் புலவோர்
திருவடி திரளருள் பகுத்துணப் புகுந்தார்
நானிலம் காத்திட நல்லையம் பதியமர்
நாயக னேபள்ளி எழுந்தரு ளாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்குமரன் மலர் 2025

## கட்டுரைகள்


- இன்றைய நல்லூர்
- போய்ப்பார்த்தால் தான் தெரியும் நல்லூரானை
- நல்லையவன் அருளும் அழகும்
- ஒரு ரூபாவில் கருவாகி திருவாகும் முருகன்
- முருகன் தமிழ்க்கடவுள்
- பல்கலை அம்சங்கள் மிளிரும்
- இணுவில் கந்தசாமி கோவிலின் உலகப் பெருமஞ்சம்
- நவீன உலகில் இந்துசமயம்
- 20ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாட்டில் தமிழ்மொழிமூலமான சைவசமய வழிபாட்டின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்
- இந்துமதத்தை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்
- எமது சமூக வாழ்வியலில் ஒரு தத்துவ நூலாக கந்தபுராணம் விளங்குகிறது
- சைவசித்தாந்த மெய்யியலில் ஆன்மா - ஒருநோக்கு
- தமிழ் பக்தி இலக்கியங்களில் சைவசித்தாந்தம்
- ஆலய வழிபாட்டில் காவடி ஆடலின் வகைபாகம்
- நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் நம்சைவச் சொத்தாவார்
- நால்வர் காட்டிய அன்பு நெறி
- அகப்பிரபஞ்சமும் புறப்பிரபஞ்சமும் பதிபசுபாசமும்
- யோகம் சுட்டும் வாழ்வியல் நெறி
- சொல்லும் செயல் திறனும்
- Soul Melting Nasigabhushani
- நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
- நல்லைக்குமரன் மலர் இதழ் - 32 வெளியீடும் தலயாத்திரையும்
- 2025ஆம் ஆண்டில் யாழ்.விருது பெறும் உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இன்றைய நல்லூர்

**மலர் சின்னையா (செம்பியின் செல்வி)**
**முன்னாள் அதிபர் யாழ் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை**

தமிழோடும் இறையோடும் இணைந்த திருநாமமே நல்லூர். நல்லூர் என்ற திரு நாமத்தை உலகின் எந்தப்பாகத்தில் உச் சரித்தாலும் அது இலங்கையின் வடபுலத் திலுள்ள நல்லூரையே விதைந்து சுட்டி நிற்கும். நல்லூர் என்பது ஊரின் பெயர் புறப்பட்டு நின் றாலும் நல்லூர் என்பது நல்லூரில் அமைந் துள்ள கந்தனையே கோலோட்சி நிற்கும். உலகின் எந்தப்பாகத்தில் இருப்போரும் நல் லூருக்குப் போகிறோம் என்றால் நல்லூரில் அமைந்துள்ள முருகன் ஆலயத்தில் அருள் பாலித்துக்கொண்டிருக்கும் முருகனிடம் போகின்றோம் என்றே பொருள் கொள்ளப் படுகிறது.

நல்லூர் ஆலயத்தின் ஆரம்பம் தொட்டு அதன் மகிமையும் வரலாறுகளும் அற்புதங் களும் சித்தர்கள் வரலாறும் எழுதப்பட்டும் உரைக்கப்பட்டும் வருவது வழமை. அவற்றை இக்கட்டுரை தொட்டுநிற்காமல் இன்றைய 2025 ஆம் ஆண்டில் நல்லூர் ஆலய செயற் பாட்டு அம்சங்களையே இக்கட்டுரை முடிந்த வரை தொட்டுக்காட்டுகின்றது.

அந்தவகையில் இன்றைய நிலை யில் ஆலயத்தில் உள்ளகக் கட்டமைப்பு அதன் தூய்மை வழிபாடு பூசைகள் வெளிப்புற அமைப்பு திருவிழாக்கால செயற்பாடுகள் வீதி உலா அம்சங்கள் பக்தர்களுக்கான பணி, நேரம் தவறாமை, மணியோசை, அயல் புற செயற் பாடுகள், ஆலயத்தூய்மை, அமைதி, பணி செய் தொண்டர்கள் அலங்காரங்கங்கள் அங்கப் பிரதட்சனை காட்சிகள் பக்திப் பாடல்கள் பஜனைகள் போன்றவற்றை இக் கட்டுரை யில் ஓரளவேனும் தொட்டுக்காட்டுகின்றது.

அந்தவகையில் ஆலயத்தின் உள்ள கம் இன்றைய நிலையில் மிகமிக உன்னத நிலையில் கோயிலுக்குரிய அம்சங்களுடன் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளக வீதிகள் நான்கும் மேற்தளமிடப்பட்டு வெயிலோ, மழையோ, பூசைகளுக்கோ, ஆலய வழிபாட் டுக்கோ தடங்கள் ஏற்படுத்தாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தூண்கள் எல்லாம் தூண்களுக்குரிய அம்சங்களுடன் பொன் நிறவர்ணம் பூசப்பட்டு சொர்க்கத்தை நினை வூட்டும் இடம்போல் காட்சி தருகின்றது. முரு கனின் அற்புதங்கள் குறித்து தீட்டப்பட்ட ஓவியங்களால் சுவர் அழகுபடுத்தப் பட்டிருந் தது. வடமேற்குப்புற சுவரில் நடராசர் சிலை மிக மிக உயிரோட்டமாக வரையப்பட்டுள்ளது.

மூல தெய்வமாக கருவறையில் வேல் அமர்ந்திருந்தது. கருவறையின் தென்சுவர் முதல்வாசலில் முத்துக்குமரன் வள்ளி தெய் வானையுடன் ஆறுமுகக் கந்தன் சிலைவடி வில் காட்சிதருகின்றார்கள். தென்மேற்கு திசையில் பழனி முருகனுக்கென்றே அமைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட உயர்ந்த பீடத்தில் கோவணத்துடனும் மொட்டை தலையுடனும் சிலை வடிவில் முருகன் பழனி ஆண்டவராக காட்சி தருகிறார். பழனி ஆண்டவருக்கு முன் நகர்ந்து வரும் போது மூலஸ்தானத்துக்கு பின்புறமாக பிள்ளையாரும் வள்ளி தெய்வானையும் அருகருகே நிற்கும் சிலைகளும் அருகே பள்ளி அறையும், அருகே விஸ்ணுவும் அம்மனும் தனித்தனியே சிலையாக காட்சி தருகின்றனர்.

வடகிழக்கு மூலையில் வைரவர் தனி இருப்பிடத்தில் நாயுடனும் சூலாயுதத்துடனும் காட்சி அளிக்கின்றார். வைரவரின் வெளிப்புற வெளிச்சுவரில் தட்சணாமூர்த்தி வடிவில் சீடர்களுக்கு போதிக்கும் சிவனின் காட்சியும் ஓவியமாக வரையப்பட்டுள்ளது. வைரவரால் வரும் போது யாகசாலையும் அதன் அருகே சூரிய பகவான் தேவியருடன் சிலை வடிவில் காட்சி அளிக்கின்றார். அருகே ஐயப்பன் ஓவியமும் வரையப்பட்டுள்ளது.

ஆறுமுக சுவாமியின் உள்ளக வெளி முற்றத்தில் மயிலுடன் கொடித்தம்பம் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் இடப்புறத்தில் இருக்கும் மாமரம் பூசைக்குரிய மரமாகவும் வழிபாட்டுக்குரிய மரமாகவும் பேணப்பட்டு வணங்கப்படுகின்றது. கருவறைக்கு தென்புறமாக ஆலயத்திற்குரிய தீர்த்தக்கேணி அமைந்துள்ளது. அதன்தூய்மை பேணும் நோக்கத்துடன் கேணியை சுற்றி உயரமான வேல் வடிவில் இரும்புக்கம்பிகள் நிறுத்தப்பட்டு இரும்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. சுவாமி தீர்த்தம் ஆடப்போகும் நேரத்தில் மட்டும் பூசகர்களும் குறிப்பிட்ட தொண்டர்களும் கேணிக்குள் இறங்கி தீப ஆராதனைகளும் பூசைகளும் செய்வார். ஆறு அகல்விளக்குகள் ஏற்றி நீரில் மிதக்க விடுவர். ஆறுமுக சுவாமி வாசலுக்கு நேரில் உள்ள கொடித்தம்பத்திற்கு நேரில் சுவாமி வந்து தீர்த்த கேணியில் நீராடுவார். சுவாமி நீராடியவுடன் கேணியை சுற்றி நீர்த்தரகை மூலம் நீர் பிசிரி அடிக்கப்படும். அதில் மக்கள் அனைவரும் பக்தி சிரத்தையோடு நீராடுவர்.

ஆறுமுக சுவாமி வாசலில் முன்னே உயர்ந்த சிறு கோபுரம் உண்டு. ஆறுமுக சுவாமி இருக்கும் அறையின் மேற்கூரை தங்கத்தட்டினால் மூடப்பட்டுள்ளது. அதன் மேல் தங்கத்திலான கலசங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதன் அழகை கருவறையை சுற்றி வடமேற்கு கருவறையை மூலையுடன் இணைந்த உள் வீதியை சுற்றி வரும் போது அவ் அழகைக்காணலாம்.

ஆலய கருவறையைக்காட்டி நிற்கும் முகப்புக்கோபுரத்தில் வேல் ஒன்றும் ஓம் முருகா என்னும் நாமமும் நேரம் காட்டும் மணிக்கூடும் காட்சி தருகின்றது. நுழையும் கோபுர வாசலின் முகப்பில் "அலங்கார நல்லூரா" எனும் வசனம் எழுதப்பட்டுள்ளது. இக் கோயிலுக்குள் நுழையும் பக்தர்கள் அவ்வசனத்தை பார்த்து சொல்லியபடியே உள் நுழைய வைக்கின்றது. அக்கோபுரத்திற்கு இடதுபுறமும் வலதுபுறமும் பிரத்தியேக வாசல்கள் இருக்கின்றன. தேவைக் கேற்ப இவ்வாசல்கள் பயன்படுத்தப்படுகின்றன. வலப்புற வாசலை அண்டிய வலதுபுறத்தில் கோவிலுக்குரிய பண்டகசாலை அமைந்துள்ளது. அதை நிர்வாகிகளே கையாளுவார். நேர் தெற்கு எல்லையில் பெரிய நுழைவாயில் அமைக்கப்பட்டுள்ளது.

கோவிலின் கருவறைக்கும் நுழைவாயிலுக்கும் இடையிலும் வசந்த மண்டபத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கும் தென் நுழைவாசலின் இடையிலும் ஆலயத்தின் நடுப்பகுதியில் கொடித்தம்ப மும் மயிலும் பலிபீடமும் அமைந்துள்ளது. இந்த பிரதான கொடி தம்பம் திருவிழாக்காலத் தின் கொடியேற்றத்தினத்தன்றே உயர்ந்து நிற்கும். திருவிழா காலம் முழுவதும் கொடித் தம்பத்திற்கு பூசை நடைபெறுவது வழக்கம். அதன் பின்னரே வசந்த மண்டபத்தில் இருந்து வீதி உலாவுக்கு சுவாமி புறப்படும்.

வசந்த மண்டபம் உள்ளக வட கிழக்கு மூலையில் வைரவர் அறைக்குப்பின்னால் அமைந்திருக்கிக்கிறது. இது வடகிழக்கு பகுதியில் இருந்து ஆலய நடுப்பகுதியை கடந்து தென் எல்லை சுவர் வரை நீண் டுள்ளது. இட நெருக்கடி நேரத்தில் பக்தர் கள் உள்ளக தெற்கு மேற்கு வீதிகளிலும் ஆறுமுகசுவாமியின் முன் முற்றத்திலும் முன் வெளி வீதியிலும் நின்றபடி வணங்கி நிற்பர்.

ஆலயத்தின் வட எல்லைசுவரோடு கருவறைக்கு இடப்பக்கத்தில்' பிரம்மாண்ட மான கோபுரம் வெளிப்புறமாக அமைந்துள் ளது. ஆலயத்தின் வட எல்லைக்கும் உள் ளக ஆலய சுவர் இடையிலும் சிறிய கோபுரம் அமைந்துள்ளது. இக் கோபுரத்திற்கு முன்னும் பெருங்கோபுரத்திற்கு பின்னுள்ள நிலப்பகுதியில் பூங்காவனமும் மயில்கள் தங்குவதற்கான இடமும் தாமரை தடாக மும் அமைக்கப்பட்டு இருக்கிறது.கருவறை அதன் வலப்பக்க தெற்கு எல்லை சுவர் அண்டி கேணிக்கு வலப்புறமாக தென் திசையில் பிரம்மாண்டமாக ராஜ கோபுரம் (108 அடி) அமைக்கப்பட்டுள்ளது. அந்த கோபுரத்தின் வாசல் தேவைக்கேற்ப திறக்கப்படும்.அக் கோபுரத்தின் நடுப்பகுதியில் அழகிய கிளி ஒன்று அமைந்திருக்கிறது அக் கிளி வீதி யைக் கடந்து அமைக்கப்பட்டுள்ள அருண கிரிநாதர் சிலையை பார்த்தபடி அமர்ந்திருக் கிறது. அருணகிரிநாதருக்கு தென் வெளி வீதி நிலப்பகுதியில் சிற்றாலயம் அமைத்து அவருக்கு பூசைகள் செய்கின்றனர். அருண கிரிநாதருக்கு நேரில் தெற்கு வாசல் கோபுர மும் அப்பால் தீர்த்தக்கேணியும் அப்பால் ஆறுமுகசுவாமியின் இருப்பிடமும் அப்பால் கருவறையும் அதற்கு அப்பால் வடதிசை பெருங்கோபுரமும் ஏறத்தாழ ஒரே நேர் கோட்டில் உள்ளது எனலாம்.

ஆலயத்தின் வடகிழக்குப்பகுதி அதாவது வைரவர் கோயிலுக்கு வடகிழக் குப் பகுதியில் ஆலயத்திற்குரிய வாகனங் கள் தரித்து நிற்கும் பகுதியாக அமைந்துள் ளது. தேர் முட்டிக்கு கிழக்கேயுள்ள மதில் எல்லை கொண்ட உள்ளக அறை ஆலயத் திற்கு அவ்வப்போது தேவைப்படும் மரங்கள் கம்பிகள் சப்பர தளபாடங்கள் போன்ற இதர பொருட்களின் வைப்பகமாக உள்ளது. கோயி லின் தேர் இருப்பிடம் கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் முன் மண்டபம் பக்தர் களின் ஓய்வு மண்டபம் தேவாரம் திருவாச கம் பாடும் பக்தர்களின் மண்டபமாகவும் விளங்குகின்றது. ஆலயத்தின் வெளி வீதிகள் என்றைக்கும் நல்லூரானை நினைவுறுத்திக் கொண்டே இருக்கும் எந்த காலத்திலும் எந்த நேரத்திலும் துாய் மையை அனைவரும் பேணுவார். திருவிழாக் காலங்களில் 30 நாட்களுக்கு கோயிலை அண்டிய பகுதிகளில் வீதிகளுக்கு வாகனப் போக்குவரத்து தடை விதிக்கப்பட்டிருக் கும். திருவிழா காலம் தொடங்குவதற்கு இரண்டு மூன்று கிழமைக்கு முன்னரே வீதியில் இருக்கும் மணல் வெளியே எடுக் கப்படும் புதிதாக வெள்ளை மணல் பறிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

கப்பட்டு அம்மணல்கள் அரித்து சுத்தமாக் கப்பட்ட பின் வீதிகளில் பரப்பப்படும்.

நல்லூர் ஆடி ஆவணி மாத எல்லைக் குள் வருடாவருடம் திருவிழா 25 நாட்கள் நடை பெறும். அந் நாட்கள் நல்லூர் முருகன் பக்தர் களிற்கு மிகவும் ஆனந்தமான நாட்கள். இந் நாட்களைக் கண்டுகளிப் பதற்கு வெளிநாடு களில் இருக்கும் நம்ம வரும் வெளிநாட்டு இனத்தவரும்நல்லூரானை நாடி வருவர்.

திருவிழாக்காலத்தில் அதிகாலை 03 மணிக்கு அங்கபிரதட்சனை செய்யும் பக் தர்கள் கூடி நிற்பர் உள் வீதிகளில் பெரும் பாலும் பெண்கள் அடி அளித்து வலம் வருவர். வெளி வீதிகளிலும் அடி அளிப்பர். வெளி வீதி களில் அந் நேரத்தில் ஆண்களில் பெரும் பாலானோர் அங்கபிரதட்சனை செய்வார்கள் இந்த காட்சி மெய்சிலிர்க்க வைக்கும் அவர் கள் முருகனை நினைத்து வேண்டி அழைக் கும் ஓசை கேட்போர் மனதை முருகன் பால் இழுத்துச்செல்லும். செப்பனிடப்பட்ட வீதிகள் அங்கபிரதட்சனை செய்வோரை மகிழ்ச்சி யாகவும் விரைவாகவும் தம் நேர்த்தி கடனை செய்து முடிக்க ஆற்றுப்படுத்தி நிற்கின்றது.

வீதிகள் எல்லாம் அடிக்கடி நீர்ந் தெளித்த வண்ணம் இருப்பதனால் வெப்பம் தனிக்கப்படுகின்றது. இதனால் வீதி உலா வரும்போது பாதத்தின் நிலக்குளிர்ச்சியும் காற்றின் குளிர்ச்சியும் குறிஞ்சி குமரனை நினைக்கவைக்கின்றது. முருகன் வீதி உலா வருகையில் பக்தர்கள் சுவாமிக்கு முன் சென்று பாதத்தை பின் வைத்து.

முருகனை பார்த்தபடி முன்னகர்வர் வெளிவீதி தென் வாசலில் நிற்கும் போது தேவாரம் திருவாசகம் மற்றும் பாடல்களை பாடிய மெய்யடியார்களை மெய்மறக்கச் செய்வர். தீபம் காட்டியபின் பின் நகர்வர் வடக்கு ஈசான மூலையில் வந்ததும் வாத்தியங்கள் இசைக்கப்படும் அப்போது திருவாசகம் கந்தபுராணம் போன்றவற்றை பண்ணோடு பாடியபடி ஆலய முற்றத்தில் ஊர்வலம் வந்து நிற்கும் இசை ஆராதனை செய்பவர்கள் சாமியைச் சுற்றி வந்த பின் தீபம் காட்டி சாமியை வசந்த மண்டபத்துக்கு எடுத்துச் செல்வார்கள்.

முருகன் அழகன் அழகனுக்கு அழகு செய்வதில் நல்லூர் ஆலயம் சிறப்பிடம் பெறு கிறது முருகனுக்கும் தேவியார்களுக்கும் முக ஒப்பனைகள் உடைகள் நகைகள் மாலை கள் குடைகள் வாகனங்கள் ஒத்த கலராய் தினமும் தேர்வு செய்து அலங்கரிப்பர் முரு கனுக்கு பூசை செய்யும் அந்தனர்களும் அதே கலரில் உடைகள் அணிந்தும் பணி செய்யும் தொண்டர்கள் சிவப்பு நிற சால்வையை மேல் உடுத்தியும் பணிசெய்வர் இத் தொண்டர்கள் தாமாகவே விரும்பி வந்து சேர்வார்கள். முருகன் அடியார்களாக மாறுவார்கள்.

நல்லூரின் மாபெரும் சிறப்பு ஒரு ரூபாய்க்கு அட்சணை செய்யும் முறமை இம் முறமை தொண்டு தொட்டு இங்கு நிலவி வரு கின்றது. இது சகலரும் சமம் என்ற வகையில் எடுத்துரைக்கின்றது. ஆதியில் சின்னஞ் சிறு ஆலயமாக இருந்த இவ் ஆலயம் இன்றைய நிலைக்கு வருவதற்கு முதலாலி குடும்பத் தினரே மூலகர்த்தா ஆகின்றனர் இன்றைய முதலாலிகள் கட்டிடம் அமைப்பின் சகல காரியங்களையும் அம்சங்களையும் அம்சங் களையும் வடிவமைத்து கொடுப்பவர்கள். குறைந்த தொழிலாலர்களை கொண்டு அழகும் நேர்த்தியும் நிறையப்பெற்றற கட்டிடத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள் இவரின் குடும்பத்தினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய்ப்பார்த்தால் தான் தெரியும் நல்லூரானை "வெள்ளிக்கிழமை அடியார்கள்"

Dr.S.N.தணிகாசலம்பிள்ளை
B.A.M.A, PhD.LLB

பக்தர் ஒருவர் உடுக்கை தட்டி, தட்டி இப்பாடலை தீர்த்தோற்சவத்தன்று நல்லூரில் வேப்பமர நிழலில் நின்று கொண்டு பாடிக் கொண்டிருந்தார். தொடர்ந்து பாடியவர் போய்ப்பார்த்தால் தான் தெரியும் சன்னதியானை எனவும் பாடினார் பக்திப் பரவசமாய் வரகவிபோல் இயற்றிப் பாடிக் கொண்டிருந்தார். நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் வேண்டும் என வலம்புரியில் படிக்க ஒருமுறை வெள்ளிக்கிழமை அடியார்களுடன் தொடர்புபடுத்த எழுத குமரன் முடிவெடுக்க வைத்தார்.

நாம் குமரன் அடியார்கள். ஒவ் வொரு வெள்ளியும், முதியவர்கள், இளையவர்கள், சாதாரண பெண்கள், பெண்குழந்தைகள், திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களுடன் இணைவர். முருகனுக்கென தன் குரலை பொருள் வளத்துடன் இணைத்து அவர் பாடல்கள் ஒலிப்பதிவாக ஒலிக்கும். முருகனுக்கென தன் குரல்வளத்தால் பள்ளி எழுந்தருள்வாய் என பாட தியானத்தில் வரிசை வரிசையாக இருந்து தியானிப்பார்கள். என்னே அமைதி அவனது சிந்தனை உள்ளத்தே காட்சியாகும்.

**திருநல்லூர்த் திருப்பள்ளியழுச்சி**
**(எண்சீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)**

**செங்கதிர்ச் செல்வனும் குணதிசை எழுந்தான்**
**செறியிருள் அகன்றது சிறந்தது வானம்**
**பொங்கருள் நான்மறை அந்தணர் புகன்றார்**
**புள்ளினம் ஆர்த்தன போந்தனர் அடியார்**
**திங்களின் பிறையணி சிவன்தருஞ் செல்வா**
**திருநல் லூருறை திருமுரு கோனே**
**எங்களை ஆட்கொளும் இன்னருட் கடலே**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!**

**செந்தமிழ் இசையெனச் சேவல்கள் கூவும்**
**தேமலர் சோலையில் தீங்குயில் பாடும்**
**மந்திர கீதங்கள் வந்தலை மோதும்**
**மங்கலச் சங்கொலி வானுல கேகும்**
**சிந்தையில் இனியவர் செம்பொருள் காணும்**
**திருநல் லூருறை திருமுரு கோனே**
**எந்தைநின் திருவடி இறைஞ்சிட விழைந்தோம்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!**

**மூவரின் முந்திய முழுமுதற் பொருளே**
**முனிவர்கள் காட்சியில் மூண்டெழுஞ் சுடரே**
**ஆவலின் அழுதனர் தொழுதனர் அடியார்**
**ஆண்டருள் புரியென அழைத்தனர் கேளாய்**
**தேவரிற் செம்மைகொள் துறவிகள் சேரும்**
**திருநல் லூருறை திருமுரு கோனே**
**ஏவரும் ஏத்திடும் பேறெமக் கருள்வாய்**
**எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!**

**கூடினர் ஆடினர் குழைந்தனர் பணிந்தார்**
**கோவிலின் மண்டபங் குவிந்தனர் தொண்டர்**
**வாடினர் வந்துநின் மலரடி காணார்**
**வழிவழி அடியவர் யாமென வாழ்த்தித்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடினர் ஓடினர் திகைத்தனர் நின்றார்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏடியல் மலர்நிகர் இணையடி தொழுகோம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

பொங்கெழின் மாலையர் பூவினர் ஒருபால்
போற்றிசெய் அருச்சனைப் பொருளினர் ஒருபால்
தங்கொலி முழவினர் குழலினர் ஒருபால்
தமிழ்மறை யாழுடன் சாற்றினர் ஒருபால்
தெங்கிளங் கமுகுடன் செறிந்திடும் பொழிலார்
திருநல் லூருறை திருமுரு கோனே
எங்களை ஏற்றருள் ஈந்திடுந் தலைவா
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

பிறந்திடும் பெரும்பயன் பெற்றிட விழைந்தோம்
பேணிநின் திருவடிப் போதினைப் புகழ்ந்தோம்
அறம்பொருள் இன்பமும் வீடெனும் பேறும்
ஐயநின் ஆரருள் ஆட்சியென் றறிந்தோம்
சிறந்திடும் சிவநெறி தெளிந்தவர் போற்றும்
திருநல் லூருறை திருமுரு கோனே
இறந்திடும் பிணிகெட இன்னருள் புரிவாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

விழித்திடும் நுதலினன் வீறொளிர் விருந்தே
விண்ணவர் போற்றிடும் விளங்கொளிப் பிளம்பே
கொழித்திடுந் தேன்சுவைக் கொழுந்தமிழ்ப் புலவா
குறமகள் காதலிற் குழைந்திடுங் குகனே
செழித்திடும் செந்நெலும் செல்வமும் ஓங்கும்
திருநல் லூருறை திருமுரு கோனே
இழித்திடும் பிறப்பினை ஒழித்தெமை ஆள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

ஐம்பெரும் பூதமும் அறந்தரும் பயனும்
அறிவரும் ஐந்தொழில் ஆற்றிடும் முதலும்
உம்பரில் சுழல்தரு கோள்களின் ஒளியும்
உயரருள் வீட்டினை உதவிடுஞ் சிவமும்
செம்புலச் செல்வர்கள் நீயெனத் தெளிந்தார்
திருநல் லூருறை திருமுரு கோனே
இம்பரில் யாம்பெறும் இன்சுவை அமுதே
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

புலவரின் நாமிசைப் பொருந்திடும் பொருளே
புதுமையும் பழமையும் பொலிந்திடும் புகலே
நிலவிய பேரின்ப வீட்டினின் நிறைவே
நிகழ்வுடன் இறப்பெதிர் நீங்கிய நிலையே
செலவுடன் வரவையும் புணர்வையுங் கடந்தோய்
திருநல் லூருறை திருமுரு கோனே
இலகொளி ஈந்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

பாற்கடற் பாயலிற் பள்ளிகொள் வோனும்
பயன்கொழு நான்மறை பகர்ந்தருள் வோனும்
மாற்றரும் மறலியும் வானவர் வோனும்
மாதவச் செல்வரும் வாழ்ந்திடும் அரசே
சேற்றினிற் சேல்புரள் கழனிகள் ஓங்கும்
திருநல் லூருறை திருமுரு கோனே
ஏற்றெமைப் புரந்துயர் வீட்டுல கருள்வாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே!

தியானத்தில் தியானித்துக் கொண்டு வரிசை வரிசையாக அமர்ந்து தியானிப்பார்கள். என்னே அமைதி, நிசப்தம். அவன் அடியார்களைக் காண முன்கூட்டியே எழுந்து ஓடோடி வந்து அமர்ந்து விடுவார்கள். பிள்ளையார் அருகில் கோவிந்தன் அருகில் நடுவே தரிசனம் கொடுக்க அறைக்கதவு சாத்தி இருக்க உறங்கி, பாடல் பள்ளி எழுந்தருளாயோ என்ற இறுதிப்பாடலுடன் முருகன் குழந்தையாய் பள்ளிஎழுந்தருள்வார். கற்பூர ஒளி கொண்டு ஒளிரும் குழந்தை முகத்தை தரிசித்த வண்ணம் சிறு இரதத்தில் எழுந்தருளும் காட்சி அப்பக்தர்களுக்கென அமைந்த காட்சி அல்லவா?.

குழந்தைக்கு தொட்டில் போல முருகன் எழுந்தருள சின்னரதம். இரு அடியார்கள் சாமரை வீச, ஐயா மணி அடித்துச் செல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அடியார்கள் இரதத்தை தொட பின்னுக்கு இருந்து சிலர் அந்த இரதத்தை தொட்டு தள்ள, முருகனைப் பார்த்த வண்ணம் அவன் தாள் வணங்கி பின்னுக்கு நடந்து செல்லும் காட்சி அதுவும் இருகை கூப்பிச் செல்வர்.

அதன்பின் ஐயா அப்பனை இரு கையாலும் அணைத்து தூக்கிச் செல்வார். வரிசையாக அடியார்கள் நின்று வணங்கு வார்கள். கற்பூர தீபத்தை பார்த்து ஆதிமூல வேல்முருகன் கற்பூர தீபத்தை முடித்துக் கொண்டு பிள்ளையாருக்கு காட்டும் கற்பூர தீபம் அதனையும் பார்த்து முருகன் தீர்த்தம் அருந்த வெளியே ஓடோடி சென்று அவன் தீர்த் தத்தை ஒரு முருகன் அடியார் ஒவ்வொரு வருக்கும் வழங்க வாங்கி அருந்துவார்கள். அதே வெள்ளிக்கிழமை அடியார் கூட்டம் பிள்ளையாரை தியானித்தும், வரிசையாக இருந்தும் பிள்ளையாரது அடுக்குத்தீபம், ஒற்றைத்தீபம், ஒற்றை கற்பூரத் தீபம், அடுக்கு கற்பூரத்தீபத்தைப் பார்த்து பிள்ளையார் பூசையை முடிப்பார்கள். அதனை அடுத்து வேல்முருகனின் அடுக்குத்தீபம், ஒற்றைத் தீபம், ஒற்றை கற்பூரத்தீபம், அடுக்கு கற் பூரத்தீபப் பூசையை மனதில் கண்கொள் ளாக் காட்சியாக இருத்துவர். அதே ஒழுங் கில் ஆறுதிருமுருகன் பூசை, முத்துக்குமரன் பூசையை முடித்து காவல் தெய்வம் வயிரவர் பூசையை கண்டு முடிக்க ஓடோடிச் செல்வர். இறுதியாக ஓடோடி வந்த ஆதிமூல வட கிழக்கு முருகன் பூசையை ஐயா கற்பூர ஒளியைக் காட்ட, அவரே மூன்று முறை கைதட்ட அடியார்களும் சேர்ந்து கைதட்டு வார்கள். பூசையை முடித்து விபூதிப் பிர சாதம் வாங்கிக் கொள்வார்கள்.

முருகனுக்கு பால், பழம், எண்ணெய், தேங்காய் தட்டுடன் அர்ச்சனை செய்வோர் அர்ச்சனை செய்விப்பார்கள். அர்ச்சிப்பார் கள். தமது குடும்பம், தாம் வாழ வேண்டி அர்ச்சனைத் துண்டு கொடுத்து குடும்ப அர்ச் சனையை பேர் சொல்லி முடித்துக் கொள்வார் கள். அவ் அர்ச்சனை வீபூதி, வெற்றிலை வாங்குபவர்கள் அக்கிழமை முழுவதும் பூசை அறையில் வைத்த முருகனை நினைத்து, தாம் நினைக்கின்ற காரியங்கள் முருகன் அருளால் நிறைவேற்றுவார்கள். அவ் முருகன் அருள், கருணை, வீபூதிப்பிரசாதம் அடுத்த வெள்ளிக்கிழமை வரும்வரை அவர்களுக்கு தற்செய்யும். அப்பேற்றை அவ் "வெள்ளிக் கிழமை அடியார்கள்" பெற்ற பேறும், பெற்றும் கொள்வார்கள்.

அதிகாலை வெள்ளிக்கிழமை இறை வன் சிந்தனையுடன் வியாழக்கிழமை எவ் வளவு பிந்தி உறக்கத்துக்குச் சென்றாலும் காலை 3-4 மணிக்கிடையில் எழுந்து புறப் பாட்டுக்கு ஆயத்தமாகி விடுவார்கள். அந்த எழுதல், எழுப்புதல், எழும் தன்மை ஓர் அற்புதம் எல்லாம் முருக சிந்தனையே. அது அவன் ஆட்கொண்ட அற்புதத் தன்மையே. சொல்லி வடிக்க முடியாது. அங்கு நல்லூரான் திருத்தலத்தில் கால் பதித்ததும் எங்களை அறியாத ஓர் அற்புத ஆட்டுவிப்பு. ஓடோடி அடியார்கள் பூசையை தரிசிக்கும் நிகழ்வு ஒரு திருப்பொழுதில் நடந்து முடிந்து விடும்.

அது அற்புத வேலனின், குமரனின் ஆட்டுவிப்பு. யோகர் சுவாமிகள் சொன்ன மாதிரி "எப்பவோ முடிந்த (முடித்த) காரியம்". அது அவனின் குமரனின் குன்றுதோறும் குமராட்டத்தின் ஓர் முனைப்பு அறியும் தன்மை யின் நல்லூரானின் களமாடல் ஆகும்.

நல்லூரான் தேர் வலம் வரும் அற்புதக் காட்சியை அடியார்கள் இடர் நெருங்கிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கினாலும் உன் பாதத்தை வணங்கி ஓடோடி உலகம் எல்லாம் புலம் பெயர்ந்தவர்கள் உட்பட, யாவருமே ஓடோடி வருவார்கள். அன்று நல்லூர் களம் ஓர் நெரிசல் களம் தான்.

அற்புதமான அவனது இரத பொன் வடத்தை ஏதோ ஒரு விதத்தில் வடம் பிடித்து இரதத்தை ஓட்டும் காட்சியை உலக பக்தர்களும் காணத் தவறுவதில்லை. எந்த நாட்டில் இருந்தாலும் தொலைக்காட்சி காட்டி விடும். அவன் இரதத்தில் வரும் காட்சி அற்புதக் காட்சிதான். நெருசல், நெருக்கத்திற்குள் இடிபட்டு, இடர்ப்பட்டு, அவன் காட்சி கொடுக்கும் அலங்காரக் கந்தனின் காட்சியைக் காண அடியார்கள் தவறமாட்டார்கள்.

இரதோற்சவத்தை அடுத்து அவனது பச்சை குத்திக் காட்டும் பச்சை காட்சியும் முருகனது அற்புதக் காட்சி. அவனை அடியார்கள் யாம் யார்க்கும் குடியல்லோம் உனக்கே குடியாவோம் என்று அன்பாக, ஆனந்தமாக, பக்திப்பரவசமாக வணங்கும் தன்மை அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் ஆனந்தமே. சிந்தை மகிழ சிவபுராணம் தன்னை படித்து மகிழ்வார்கள். இவ்வடிப்பில் இல்லாத ஒன்றை கற்பனையாகக்கூறத்தேவையில்லை.

வாழ்வியல் இல்லாத, அத்தனை துன்பங்களையும் அனுபவித்த அருணகிரியார் முருகனிடம் திருப்புகழ் பாடி, திருமுருகனை தஞ்சம் என அடைந்து அற்புத அருளாட்சி தான் அது. அதனால் தான் போய்ப் பார்த்தால் தான் தெரியும் என அவ்வரகவி பாடிக் கொண்டிருந்தான்.

இரத ஓட்டத்தை பார்த்து அருளைப் பெற்று உய்த்த அடியார்கள் அவனது அருகே உள்ள துர்க்கா மணி மண்டபம், பின் பழம் மண்டபம், அருகே உள்ள முன் இராஜேஸ்வரி மண்டபங்களில் மூடை மூடையாக அவித்து பரிமாறும் அன்னதானத்தை முண்டி அடித்து, வரிசையில் நின்று, வரிசை, வரிசையாக ஒழுங்கை கடைப்பிடித்து அன்னதானம் உண்ணும் உணவும், பரிமாறும் தன்மையும் அற்புதமே. இரதம் பிடித்து, பார்த்து, இணைந்து, களைத்து வந்த அடியார்கள் இல்லத்தில் சமைத்து சாப்பிடாமல் அன்னக் கந்தனிடம் அடிகொண்டு உலாவ நோற்றவர்கள், உண்டு விரதத்தை துறப்பார்கள். அடுத்த நாள் தீர்த்தோற்சவம் நேர ஒழுங்கின்படி காலையிலேயே தொடங்கிவிடுவார்கள். முருகன் சந்நிதி தான். அந்தத் திருக்காட்சியை காண்பதே பக்தர்கள் கொண்ட பக்தி வலம் தான். தாமாக தம்மை கட்டுப்படுத்த முடியாமல் முண்டி அடிக்கும் அடியார்களை கட்டுப் படுத்தி காட்சியைக் காண சுற்றிவர வேல் கொண்டு வேல்முருகன் கூடு அடித்து தீர்த்தோற்சவத்தை காட்சி ஆக்குவார்கள்.

மறைந்த எமது நல்லூர் ஆதீன முதல்வரது பக்திப்பாடல்கள் அவரது தலைமையில் ஒலிக்கும், அவரது முருகையா பாடல் அடியார்கள் காதில் ஒலிக்கும். பிரசன்னா ஐயாவின் பக்தியுடன் படிக்கும் பாடல்களும் தெய்வீக இசை கதைகளும் இதமாக இருக்க ஆறுமுகத்தான் அடியார்களுக்கு தீர்த்தோற்சவக் காட்சியை தனது திருமுழுக்குடன் முடித்துக் கொள்வார்கள். இவை தான் போய்ப்பார்த்தால் தான் தெரியும் அவ் அடியார் பாடல் ஒலித்த அரும்பெரும் அர்த்தமுள்ள வரகவியாகும்.

தியானத்தில் தியானித்துக் கொண்டு வரிசை வரிசையாக அமர்ந்து தியானிப்பார்கள். என்னே அமைதி, நிசப்தம். அவன் அடியார்களைக் காண முன்கூட்டியே எழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

ஓடோடி வந்து அமர்ந்து விடுவார்கள். பிள்ளையார் அருகில் கோவிந்தன் அருகில் நடுவே தரிசனம் கொடுக்க அறைக்கதவு சாத்தி இருக்க உறங்கி, பாடல் பள்ளி எழுந்தருளாயோ என்ற இறுதிப்பாடலுடன் முருகன் குழந்தையாய் பள்ளி எழுந்தருள்வார். கற்பூர ஒளி கொண்டு ஒளிரும் குழந்தை முகத்தை தரிசித்த வண்ணம் சிறு இரதத்தில் எழுந்தருளும் காட்சி அப்பக்தர்களுக்கென அமைந்த காட்சி அல்லவா?.

குழந்தைக்கு தொட்டில் போல முருகன் எழுந்தருள சின்னரதம். இரு அடியார்கள் சாமரை வீச, ஐயா மணி அடித்துச் செல்ல சில அடியார்கள் இரதத்தை தொட பின்னுக்கு இருந்து சிலர் அந்த இரதத்தை தொட்டு தள்ள, முருகனைப் பார்த்த வண்ணம் அவன் தாள் வணங்கி பின்னுக்கு நடந்து செல்லும் காட்சி அதுவும் இருகை கூப்பிச் செல்வர்.

அதன்பின் ஐயா அப்பனை இரு கையாலும் அணைத்து தூக்கிச் செல்வார். வரிசையாக அடியார்கள் நின்று வணங்குவார்கள். கற்பூர தீபத்தை பார்த்து ஆதிமூல வேல்முருகன் கற்பூர தீபத்தை முடித்துக் கொண்டு பிள்ளையாருக்கு காட்டும் கற்பூர தீபம் அதனையும் பார்த்து முருகன் தீர்த்தம் அருந்த வெளியே ஓடோடி சென்று அவன் தீர்த்தத்தை ஒரு முருகன் அடியார் ஒவ்வொருவருக்கும் வழங்க வாங்கி அருந்துவார்கள்.

அதே வெள்ளிக்கிழமை அடியார் கூட்டம் பிள்ளையாரை தியானித்தும், வரிசையாக இருந்தும் பிள்ளையாரது அடுக்குத் தீபம், ஒற்றைத்தீபம், ஒற்றை கற்பூரத் தீபம், அடுக்கு கற்பூரத்தீபத்தைப் பார்த்து பிள்ளையார் பூசையை முடிப்பார்கள். அதனை அடுத்து வேல்முருகனின் அடுக்குத்தீபம், ஒற்றைத் தீபம், ஒற்றை கற்பூரத்தீபம், அடுக்கு கற்பூரத் தீபப் பூசையை மனதில் கண்கொள்ளாக் காட்சியாக இருத்துவர். அதே ஒழுங்கில் ஆறுதிருமுருகன் பூசை, முத்துக்குமரன் பூசையை முடித்து காவல் தெய்வம் வயிரவர் பூசையை கண்டு முடிக்க ஓடோடிச் செல்வர். இறுதியாக ஓடோடி வந்த ஆதிமூல வட கிழக்கு முருகன் பூசையை ஐயா கற்பூர ஒளியைக் காட்ட, அவரே மூன்று முறை கைதட்ட அடியார்களும் சேர்ந்து கைதட்டுவார்கள். பூசையை முடித்து விபூதிப் பிரசாதம் வாங்கிக் கொள்வார்கள்.

முருகனுக்கு பால், பழம், எண்ணெய், தேங்காய் தட்டுடன் அர்ச்சனை செய்வோர் அர்ச்சனை செய்விப்பார்கள். அர்ச்சிப்பார்கள். தமது குடும்பம், தாம் வாழ வேண்டி அர்ச்சனைத் துண்டு கொடுத்து குடும்ப அர்ச்சனையை பேர் சொல்லி முடித்துக் கொள்வார்கள். அவ் அர்ச்சனை வீபூதி, வெற்றிலை வாங்குபவர்கள் அக்கிழமை முழுவதும் பூசை அறையில் வைத்த முருகனை நினைத்து, தாம் நினைக்கின்ற காரியங்கள் முருகன் அருளால் நிறைவேற்றுவார்கள். அவ் முருகன் அருள், கருணை, வீபூதிப்பிரசாதம் அடுத்த வெள்ளிக்கிழமை வரும்வரை அவர்களுக்கு தற்செய்யும். அப்பேற்றை அவ் "வெள்ளிக் கிழமை அடியார்கள்" பெற்ற பேறும், பெற்றும் கொள்வார்கள்.

அதிகாலை வெள்ளிக்கிழமை இறைவன் சிந்தனையுடன் வியாழக்கிழமை எவ்வளவு பிந்தி உறக்கத்துக்குச் சென்றாலும் காலை 3-4 மணிக்கிடையில் எழுந்து புறப்பாட்டுக்கு ஆயத்தமாகி விடுவார்கள். அந்த எழுதல், எழுப்புதல், எழும் தன்மை ஓர் அற்புதம் எல்லாம் முருக சிந்தனையே. அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆட்கொண்ட அற்புதத் தன்மையே. சொல்லி வடிக்க முடியாது. அங்கு நல்லூரான் திருத்தலத்தில் கால் பதித்ததும் எங்களை அறியாத ஓர் அற்புத ஆட்டுவிப்பு. ஓடோடி அடியார்கள் பூசையை தரிசிக்கும் நிகழ்வு ஒரு திருப்பொழுதில் நடந்து முடிந்து விடும்.

அது அற்புத வேலனின், குமரனின் ஆட்டுவிப்பு. யோகர் சுவாமிகள் சொன்ன மாதிரி "எப்பவோ முடிந்த (முடித்த) காரியம்". அது அவனின் குமரனின் குன்றுதோறும் குமராட்டத்தின் ஓர் முனைப்பு அறியும் தன் மையின் நல்லூரானின் களமாடல் ஆகும்.

நல்லூரான் தேர் வலம் வரும் அற் புதக் காட்சியை அடியார்கள் இடர் நெருங் கிலும் நெருக்கினாலும் உன் பாதத்தை வணங்கி ஓடோடி உலகம் எல்லாம் புலம் பெயர்ந்தவர்கள் உட்பட, யாவருமே ஓடோடி வருவார்கள். அன்று நல்லூர் களம் ஓர் நெரி சல் களம் தான்.

அற்புதமான அவனது இரத பொன் வடத்தை ஏதோ ஒரு விதத்தில் வடம் பிடித்து இரதத்தை ஓட்டும் காட்சியை உலக பக்தர் களும் காணத் தவறுவதில்லை. எந்த நாட் டில் இருந்தாலும் தொலைக்காட்சி காட்டி விடும். அவன் இரதத்தில் வரும் காட்சி அற் புதக் காட்சிதான். நெருசல், நெருக்கத்திற் குள் இடிபட்டு, இடர்ப்பட்டு, அவன் காட்சி கொடுக் கும் அலங்காரக் கந்தனின் காட்சியைக் காண அடியார்கள் தவறமாட்டார்கள்.

இரதோற்சவத்தை அடுத்து அவனது பச்சை குத்திக் காட்டும் பச்சை காட்சியும் முருகனது அற்புதக் காட்சி. அவனை அடி யார்கள் யாம் யார்க்கும் குடியல்லோம் உனக்கே குடியாவோம் என்று அன்பாக, ஆனந்தமாக, பக்திப்பரவசமாக வணங்கும் தன்மை அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் ஆனந்தமே. சிந்தை மகிழ சிவ புராணம் தன்னை படித்து மகிழ்வார்கள். இவ்வடிப்பில் இல்லாத ஒன்றை கற்பனை யாகக் கூறத் தேவையில்லை.

வாழ்வியல் இல்லாத, அத்தனை துன் பங்களையும் அனுபவித்த அருணகிரியார் முருகனிடம் திருப்புகழ் பாடி, திருமுருகனை தஞ்சம் என அடைந்து அற்புத அருளாட்சி தான் அது. அதனால் தான் போய்ப் பார்த் தால் தான் தெரியும் என அவ்வரகவி பாடிக் கொண்டிருந்தான்.

இரத ஓட்டத்தை பார்த்து அருளைப் பெற்று உய்த்த அடியார்கள் அவனது அருகே உள்ள துர்க்கா மணி மண்டபம், பின் பழம் மண்டபம், அருகே உள்ள முன் இராஜேஸ் வரி மண்டபங்களில் மூடை மூடையாக அவித்து பரிமாறும் அன்னதானத்தை முண்டி அடித்து, வரிசையில் நின்று, வரிசை, வரிசை யாக ஒழுங்கை கடைப்பிடித்து அன்னதானம் உண்ணும் உணவும், பரிமாறும் தன்மையும் அற்புதமே. இரதம் பிடித்து, பார்த்து, இணைந்து, களைத்து வந்த அடியார்கள் இல்லத்தில் சமைத்து சாப்பிடாமல் அன்னக்கந்தனிடம் அடிகொண்டு உலாவ நோற்றவர்கள், உண்டு விரதத்தை துறப்பார்கள். அடுத்தநாள் தீர்த் தோற்சவம் நேர ஒழுங்கின்படி காலையி லேயே தொடங்கிவிடுவார்கள். முருகன் சந்நிதி தான். அந்தத் திருக்காட்சியை காண்பதே பக்தர்கள் கொண்ட பக்தி வலம்தான். தாமாக தம்மை கட்டுப்படுத்த முடியாமல் முண்டி அடிக்கும் அடியார்களை கட்டுப்படுத்தி காட் சியைக் காண சுற்றிவர வேல் கொண்டு வேல்முருகன் கூடு அடித்து தீர்த்தோற்ச வத்தை காட்சி ஆக்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

மறைந்த எமது நல்லூர் ஆதீன முதல்வரது பக்திப்பாடல்கள் அவரது தலைமையில் ஒலிக்கும். அவரது முருகையா பாடல் அடியார்கள் காதில் ஒலிக்கும். பிரசன்னா ஐயாவின் பக்தியுடன் படிக்கும் பாடல்களும் தெய்வீக இசை கதைகளும் இதமாக இருக்க ஆறுமுகத்தான் அடியார்களுக்கு தீர்த்தோற்சவக் காட்சியை தனது திருமுழுக்குடன் முடித்துக் கொள்வார்கள். இவை தான் போய்ப்பார்த்தால் தான் தெரியும் அவ் அடியார் பாடல் ஒலித்த அரும்பெரும் அர்த்தமுள்ள வரகவியாகும்.

## யாழ்.விருது பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | வைத்தியகலாநிதி இ.தெய்வேந்திரன்<br>(சைவசமய விவகாரக்குழுவின் ஆரம்பகர்த்தா) | 2006 |
| 2. | உயர்திரு வே.பொ.பாலசிங்கம் (முன்னாள் ஆணையாளர், யா.மா.ச) | 2007 |
| 3. | வைத்திய நிபுணர் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி<br>(யாழ் போதனா வைத்தியசாலை) | 2008 |
| 4. | உயர்திரு க.கணேஸ் (முன்னாள் அரச அதிபர், யாழ் மாவட்டம்) | 2009 |
| 5. | சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி (தேகாந்தநிலை) | 2010 |
| 6. | வைத்தியநிபுணர் ந.ஜெயக்குமார்<br>(புற்றுநோயியல் வைத்திய நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை) | 2011 |
| 7. | நயினாதீவு நாகபூஷணி அம்மன்<br>அமுதசுரபி அன்னதானசபை | 2012 |
| 8. | அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார்<br>(அமைப்பாளர், திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்) | 2013 |
| 9. | வித்யாசாகரம் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்<br>(தலைவர், சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்) | 2014 |
| 10. | பேராசிரியர் க.தேவராஜா | 2015 |
| 11. | உயர்திரு.திருநாவுக்கரசு இராசநாயகம்<br>(ஓய்வுநிலை அரச அதிபர்) | 2016 |
| 12. | கலாநிதி. ஆறுதிருமுருகன்<br>(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை) | 2017 |
| 13. | சிவத்திரு.செந்தில்வேல் மோகனதாஸ் சுவாமிகள்<br>(சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமனாறு) | 2018 |
| 14. | வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை | 2019 |
| 15. | கவிஞர் சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன் (சோ.ப) | 2020 |
| 16. | திரு.ஆ.இரவீந்திரன் (சமாதான நீதவான்)<br>(வாழ்வக தலைவர்) | 2021 |
| 17. | திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை | 2022 |
| 18. | சிவஸ்ரீ தா.மஹா தேவக்குருக்கள்<br>(தர்மசாஸ்தா குருகுல பீட அதிபர்) | 2023 |
| 19 | மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவா | 2024 |
| 20. | உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் | 2025 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லையவன் அருளும் அழகும்

**மதியமுதன் பிரசாந்தி**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

நல்லூர் கந்தசுவாமி கோவில் - ஒரு ஆன்மிக வரலாற்றுச் சின்னம். இது ஆன்மிகம், கலை, உணர்ச்சி மற்றும் வாழ்க்கை பாணியில் நல்லூர் கந்தசுவாமி பெருமானின் முக்கியத்துவம் சிறந்ததே.

நல்லூர் கந்தசுவாமி பெருமான், யாழ்ப்பாணத் தமிழர்களின் ஆன்மீக நம்பிக்கையின் உயிர்த்தொண்டு. அவர் எமக்கு மட்டும் அல்லாமல் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுக்கும் வாழ்வின் வழிகாட்டியாக இருக்கிறார்.

நல்லூரானின் சந்நிதியில் நின்று ஒரு நிமிடம் கண்ணை மூடினாலே, உள்ளத்திலே ஓர் அமைதி தோன்றுகிறது. பக்தனின் வேண்டுதல்களை அவர் கேட்டுக்கொள்கிறார் எனும் நம்பிக்கை நம்மை உற்சாகமடையச் செய்கிறது. தாயின் கருணை, தந்தையின் பாதுகாப்பு, நண்பனின் அருகாமை - இவை அனைத்தும் ஒரே நேரத்தில் அவரது அருளில் உணர முடிகிறது.

அவரது அருள் நோய்கள் தீர்க்கும், குடும்பத் தில் ஒற்றுமை வர, கல்வி, தொழில், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வழி வகுக்கும் என நல்லூரில் வாழும் மக்கள் பலரும் சொல்வார்கள்:

**"நல்லூர் சாமி பார்த்தாச்சு, இனி பயமே இல்லை!"**

என்றளவிற்கு நல்லூரானின் தரிசனம் சாலவும் சிறக்கும்.

அவரின் தங்கத்தால் ஆன அணிகலன்கள், வெள்ளியால் ஆன ஆடைகள், மஞ்சள் நிற மேனியும், சிவந்த உதடுகளும், வெண்ணிற பல்லும் ஒரு கவிஞனின் கனவுபோல் ஜொலிக்கின்றன. நல்லூர் முருகன் என்பது வெறும் சிலை அல்ல, அது ஒரு உயிருள்ள அழகு பல்லக்கு உற்சவம், அழகும் அருளும் கலந்த ஆனந்த உருவம்.

சிலர் அங்கே நின்று அழுகிறார்களே! ஏன்? முருகன் முகத்தில் கருணை மழை பொழிகிறது. அந்த விழிகளில் அவர்கள் தங்கள் துக்கத்துக்கான தீர்வையும், வாழ்க்கைக்கு புதிய சக்தியையும் காண்கிறார்கள். ஒரு முறை நல்லூரைச் சேர்ந்தவுடன், அவரை நம்பியவுடன், மனத்தில் தோன்றும் தன்மை

**"என்னைக் காப்பது என் கந்தசுவாமி!"**

இப்படி ஒரு உறுதியும் அமைதியும் நல்லூர் முருகனின் அருளால் ஏற்படுகிறது. அவரை அணுக ஒரு பெரிய பொருளோ, வழிபாட்டு முறையோ தேவையில்லை. ஒரு எளிய சிந்தனையுடன்,

**"கந்தா! என்னை காக்கவேண்டும்!"**

என்று மனதிலே நினைத்தாலே போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது அழகு பக்தனை தெய்வீக உணர்வில் வைத்திருக்கும். அவரது அருள் பக்தனை வாழ்க்கையின் போராட்டங்களில் தாழாமல், தாங்கி நிறுத்தும். பலர் நல்லூர் முருகனைப் பார்த்தவுடன் நிகழும் மாற்றங் களை பகிர்ந்துள்ளனர்.

**"முதலில் பார்த்தபோது, அவரைப் பார்த்து அழுதேன்."**

**"என் குடும்பம் குழப்பத்தில் இருந்தது. நான் 3 நாட்கள் நேர்த்திக்கடன் எடுத்தேன். இன்று என் வீட்டில் அமைதி, நிம்மதி."**

இது வெறும் மனநம்பிக்கையா? அல்ல! இது மெய்யான ஆன்மீக அனுபவம். தெருவில் சென்றபோதும், கோவில் வெளி யில் நின்றபோதும் கூட, அவர் கோபுரத்தைப் பார்த்தால் உள்ளத்தில் ஒரு அமைதி உரு வாகிறது. ஏனென்றால் அவை கோவில் மட்டும் அல்ல - அவர் அருள் நிறைந்த வீடு.

நல்லூர் கந்தசுவாமி என்பது வெறும் ஒரு கடவுள் அல்ல அவர் நம் அன்பு, நம் பிக்கை, எதிர்பார்ப்பு, பாதுகாப்பு, ஆன்மிகம் ஆகிய அனைத்தையும் பிரதிபலிக்கும் பிம்பம்.

அவரது அருளும் அழகும், நம் வாழ் வின் ஒவ்வொரு நிலைக்கும் ஒளி வீசும் இரட்டை ஒளிக்கதிர்களாகும். அவற்றால் நம்முடைய உள்ளம் நிம்மதியாகி, வாழ்க்கை மென்மையாகிறது.

இவ்வனைத்தையும் தன்னகத்தே கொண்ட நல்லூர் கந்தசுவாமி கோவில் இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ளது. இது தமிழர்களின் முக்கியமான முருகன் கோவில்களில் ஒன் றாகும்.

இக் கோவிலானது 13ம் நூற்றாண் டில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரிய சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது அரசனான கூழங்கை சக்கரவத்தியால் கட் டப்பட்டது என யாழ்ப்பாண வைபவ மாலை கூறி நிற்கின்றது. ஆயினும் 15ம் நூற்றாண் டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட 7ம் புவனேக பாகு என அழைக்கப்பட்ட கோட்டை அரசன் சண்முகப் பெருமாள் என்பவரால் கட்டப் பட்டதாகவும் வேறு வரலாற்றுச் சான்றுகள் கூறி நிற்கின்றன.

இது யாழ்ப்பாணத்தின் நல்லூர் பகுதி யில் அமைந்துள்ளது என்பதால் "நல்லூர் கோவில்" என அழைக்கப்படுகிறது. இந்த கோவில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல், உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் ஆன் மிகத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக் கிறது

நல்லூர் கோவில் தரிசனக்கோணத் தில் தெற்காசிய திராவிடக் கட்டிடக்கலை யின் சிறந்த எடுத்துக்காட்டாகக் காணப்படு கிறது. கோவில் கோபுரம் மிக உயரமாகவும் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக் கின்றது. முக்கிய கோபுரம் சுமார் 100 அடி உயரமுள்ளதுடன், தங்க நிறத்தில் ஜொலிக் கின்றது.

கோவிலின் உள்ளமைப்பில் பல மண்டபங்கள், ஆலயங்கள், கொட்டகைகள் மற்றும் தேர் வீதி உள்ளடக்கியவை. இதன் ஒவ்வொரு பகுதியும் ஆன்மீக நோக்கத் துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. நந்தி, பல் லக்கு மண்டபம், யாகசாலை போன்றவை இந்தக் கோவிலின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

நல்லூர் முருகன் கோவில், பக்தர் களுக்கு ஆன்மிக ஒளிவிழிப்பை வழங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித இடமாகக் கருதப்படுகிறது. இங்கே பிரதான தெய்வமாக முருகப் பெருமானின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது, அவர் வேல் ஏந்திய வீரமூர்த்தியாகக் காணப்படுகிறார்.

முருக பக்தர்கள் சபரிமலை, பழனி, திருச்செந்தூர் போன்ற புனித தலங்களுக்கு செல்வதுபோல, நல்லூர் கோவிலுக்கும் ஒவ் வொரு வருடமும் லட்சக்கணக்கானோர் வருகை தருகின்றனர். அந்த அளவிற்கு பக்தி உணர்வை ஏற்படுத்தும் இடமாக இது உள்ளது.

நல்லூர் திருவிழா என்பது ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் மிகப்பெரிய பண்டிகையாகும். இது 25 நாட் கள் நீளமாக நடைபெறும். திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் வேல் வியாகரணம், தேர் திருவிழா, சாந்தி குடம், தீப்பறி, தங் கத் தேரில் உற்சவம் ஆகியவை அடங்கும்.

தேர் விழா நாள் மிகவும் பரப்பாக கொண்டாடப் படுகிறது. பக்தர்கள் சாமியை தேரில் பவனி எடுத்துச் செல்வதற்காக பல மைல்கள் நடந்து வந்து கலந்து கொள்கின் றனர். பக்தி, ஒற்றுமை, கலாசார ஒலியுடன் நிறைந்த திருவிழா நாட்கள் யாழ்ப்பாணத் தின் அடையாளமாக விளங்குகின்றன.

நல்லூர் கோவில், யாழ்ப்பாணத் தமிழர் களின் சமூகவியல் மரபையும் ஒட்டிய ஒன்று. இந்த கோவிலில் திருமணங்கள், வைபவங்கள், வழிபாடுகள் போன்றவை நடைபெறுவதால் சமூக உறவுகளை வலுப் படுத்தும் இடமாகவும் இது பார்க்கப்படுகிறது.

மேலும், நல்லூர் கோவிலின் திருவிழா யாழ்ப்பாணத்தில் மட்டும் அல்லாது உல களாவிய தமிழர்களிடையே ஒன்று சேரும் ஒரு அரிய சந்திப்பாகவும் உள்ளது. தொலை தூர நாடுகளில் வாழும் தமிழர்கள் கூட இந்த விழாவுக்காக நாடு திரும்பி வருவது வழக்கம்.

நல்லூர் கோவில் இலங்கையில் உள்ள முக்கிய சுற்றுலா இடங்களில் ஒன் றாகவும், கண்ணியமாக நிற்கிறது. இந்தியா, மலேசியா, கனடா, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடு களிலிருந்து வருடந்தோறும் ஆயிரக்கணக் கானோர் வருகை தருகின்றனர்.

இந்த கோவில் சுத்தம், ஒழுங்கு, பராமரிப்பு, முறையான தரிசன நேரம் போன்ற வற்றில் சிறப்பாக உள்ளது. இது பாரம்பரி யத்தின் பெருமையை மிக அழகாக எடுத் துரைக்கும் இடமாகவும் கருதப்படுகின்றது

நல்லூர் கந்தசுவாமி கோவில் என்பது ஆன்மீகம், வரலாறு, கலாசாரம், சமூக ஒற் றுமை ஆகிய அனைத்தையும் ஒருங் கிணைக்கும் புனித தலமாகத் திகழ்கிறது. இது ஒரு கோவில் மட்டுமல்ல் ஈழத் தமிழர் களின் அடையாளம், வாழ்வியலின் ஓர் அங் கம், கடந்த எதிர்காலத்தையும் இணைக் கும் பாலமாகும்.

**“நல்லூர் கந்தனை காதல் செய்யா தோரும் உண்டோ...**
**அவர் அழகில் மயங்கிடும் பேதைகள் பலர்..........**
**அதில் ஒருத்தியாய் நானும் ஒரமாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ரூபாவில் கருவாகி திருவாகும் முருகன்

**கலாபூஷணம்**
**கே.எஸ்.சிவஞான ராஜா**

இன மத மொழி கடந்த இனிக்கும் ஆலயம் ஈடிலா அருள்சுரக்கும் ஈர்க்கும் ஆலயம் இது. ஒரு ரூபாவில் குடிகொண்டு உலகை ஆள்கின்ற குரு வடிவில் எழுந் தருளும் குமரா நல்லூரா. கோடி நமஸ்காரம் ஐயா.

மாப்பாண முதலியார்கள் மாதவம் புரிந்து காப்பாக இன்றுவரை காதலிக்கும் ஆலயம். தோப்பாக உயர்ந்து தோற்காத ஆலயம் கட்டுக்கோப்பாக ஒளிர்கின்ற கந்தகோட்டமே அது. யாவரும் சமன் என்ற யாழ் மண்ணின் சுருதியெனதேவரும் துதிக்க வரும்தேன் சொட்டும் ஆலயம்.

நா-எழும் போதெல்லாம் நல்லூ ரானைக் கூவிடும் பூமழை நெஞ்சம் சொரியும் புண்ணியம் பூப்பது எப்போது? நல்லூரை வலம் வந்து நாளும் வணங்கினால் நாட்டி லுள்ள பஞ்சம் பசிபட்டினி எல்லாமே நம்மை விட்டு ஓடும் என்று நல்லூரான் காட்சி தருவான். மது மாது மாமிசம் இன்னம் மாடி மனை கோடி என மட்டற்ற சுகம் தேடுவோரும் அது பற்றி இனி யோசியாது அடக்கி ஆளும் நல்ல பதி அழகன் முருகன் ஆட்சி புரியும் நல்லூராமே. எங்கும் இலாபம் எதிலும் இலாபம் எனத் தங்கும் வாழ்வை வியாபாரமாக்கும் தலை தெறிக்கு நிலையை விரட்டும்.

பொங்கு படை வல்ல முருகன்பூ விழி யால் பதம் பார்ப்பான் அங்கிங் கெனாதபடி ஆட்சி தருவான் அழகொழுகு முருகபதம் அகிலமெங்கும் ஒலிக்குமே. பஞ்சமாபாத கங்கள் தலைவிரித்தாடும்.

**பாருக்குள் நெஞ்சமெலாம் குளிரும்படி நீதி தருவான்**
**அஞ்ச அஞ்ச ஓட விரட்டும் அடுத்த யுகம் தருவான்**

நெஞ்சமதில் நீள நினைக்கின்ற தஞ்சம் நீள் நிலத்தில் இருக்குமாயின். சஞ்சலம் எமக்கில்லை சமாதானமும் தருவான். கருவி லிருந்து குழந்தைகள் சிறுவர்கள் வரைகணம் கணம் அழுகுரல் கேட்கிறதே முருகா பெரு மெடுப்பில் வாழப்பேராசை கொள்கின்றோம்.

பெருந் துன்பத்தையே பிச்சையாக வாங்குகின்றோம். அருமந்த பிள்ளைகளுக்கு ஆறுதல் இல்லை முருகாதருகின்ற வரங் களைத் தண்டிப்பதற்காய் ஒதுக்கு முருகா. தாழாமல் நாம் வாழதயைபுரிவாய்.

தக்கதாய் ஒரு புதுவிதிகொண்டு வா தரணி தலை நிமிர்ந்து வாழ வேண்டும் அடிமை வாழ்விலே சிக்கி ஆழ்ந்த துயரில் அகப்பட்டு விட்டோம் அனைவரும் சமன் என்ற மந்திரம் ஆட்சியில் உயிர் பெற அத்தனை யையும் ஆற்றிடு முருகா மடிந்த உயிர்கள் மறு பிறப்பு எடுத்து உன்மண்ணில் தவழ்ந்து புரள வேண்டும் மணிக்கணக்காக உழைக் கும் மலையகம் மாண்புடன் வாழ வேண்டும். மருவும் நல்லூர் முருக அருள்மண்ணில் நல்ல வண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலம் எங்கும் பரவவேண்டும். படிபடி என்று சதா நச்சரித்து உழலும் பிஞ்சுக் குழந்தைகட்கு பக்கத்தில் இருந்து நீ பாதுகாப் புத் தர வேண்டும் பாரெல்லாம் அவர்கள் கொடியேறிப் பதவி நிலை பெற வேண்டும் முருகா. பயபக்தியோடு உன் தரிசனம் போற்ற வேண்டும். யோகர் சுவாமிகளும் செல்லப்பா சுவாமிகளும் நல்லூர் முருகனும் தேக நிலை கொண்டு தேரடியில் திருவிளையாடல் புரிந்த இடம் நல்லூராகும்.

ஏகன் அனேகனாப் எக்கணமும் காட்சி தருவான் தாகமுடைய பக்தர்க்கு தாலாட் டில் மகிழ்வான் தோகை மயிலேறித் தேரடியில் தேடி வருவான் ஆகையால் தாகமுடன் ஆடிப் பாடி. தலை பணிந்து வாழ்த்துங்கள் தரணியில் தமிழ் தித்திக்க வேண்டும் தமிழ் சமநிலை பெறவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் தமிழ்க்கடவுள்

**திருமதி பா.ஜெயச்சந்திரன்**
**விஞ்ஞான ஆசிரியர் (ஓய்வு நிலை)**
**சைவசித்தாந்தம் (MA)**

**"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"**
**- கந்தபுராணம் -**

கிறிஸ்துவுக்கு முன் ஏறக்குறைய 2000ம் ஆண்டளவில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பெருங்கற்பண்பாடு நிலவியமைக்கு ஆதாரமாக தென்னிந்தியாவின் ஆதிச்சநல்லூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சி நிகழ்த்தியவர்கள் மிகப் பழமையான தொல்பொருட் சின்னங்கள் பலவற்றை கண்டுபிடித்தார்கள். அவற்றுள் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஈமத்தாழிகள் குறிப்பிடத்தக்கவை. இவை இறந்தோரின் அஸ்தியைப் புதைக்கப் பயன்படுத்திய மட்பாண்டங்களாகும். இவை ஆதிக்குடிகள் பயன்படுத்தியவை. கி.மு. 2000 ஆண்டுகள் பழமை கொண்டவை. 1955ம் ஆண்டு இலங்கையில் புத்தளம் பகுதியில் நிகழ்த்தப்பட்ட புதைபொருள் ஆய்விலும் அவ்வாறான ஈமத்தாழிகள் கிடைத்தன. மற்றும் பொம்பரிப்பு (மேல் கரையோரம்), வளவகங்கைப் பள்ளத்தாக்கு (தென் கரையோரம்), வல்லிபுரம் - வரணி (வட கரையோரம்), கதிரவெளி (கீழ்க் கரையோரம்), மாதோட்டம் (மாந்தை), கந்தரோடை ஆகிய இடங்களில்நிகழ்த்திய ஆய்வுகளின் போதும் ஆதிச்சநல்லூரில் கிடைத்தது போன்று ஈமத்தாழிகளும், அவற்றுடன் வேலாயுதங்களும், சேவற்சிலைகளும், காவடிச் செடில்களும் கண்டெடுக்கப்பட்டன எனவே முருக வழிபாடு தமிழகத்தைப் போலவே இலங்கையிலும் அன்று வாழ்ந்த பழந்தமிழ் மக்களால் கைக்கொள்ளப் பட்டுள்ளமை புலனாகின்றது.

மேலும் தமிழ்நாட்டில் மிக அண்மையில் சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி என்னும் ஊரில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சியிலும் முருக வழிபாடு தொடர்பான சான்றுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளது. குறிப்பாக இரும்பாலான வேலாயுதங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே முருக வழிபாடு மிகவும் பழமையானது எனவும் (கி.மு. 5ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது) தமிழகத்தைப் போலவே இலங்கையிலும் அன்று வாழ்ந்த பழந்தமிழ் மக்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தமையும் புலனாகின்றது. முருகன் தமிழ்க்கடவுள்! தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் பழந்தமிழ் இலக்கியமாகிய தொல்காப்பியமே இதற்குச் சான்றாகும்.

தமிழர் இலக்கியங்களில் எல்லாம் முருக வழிபாடு பரவிக் காணப்படுகிறது. திருவிளையாடற்புராணம், திருப்புகழ், கந்தபுராணம் போன்ற நூல்கள் முருகனின் பெருமையைக் கூறுகின்றன. சங்கத்தமிழ்ப் புலவர் நக்கீரரின் திருமுருகாற்றுப்படை முருகனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பாடும் நூலாகும். பண்டைத் தமிழர் மரபான போர், வீரம், காதலைப் பிரதிபலிக்கும் தெய்வமாக முருகன் வணங்கப்படுகிறான்.

முருகன் என்ற பெயரிலுள்ள முதலாவது எழுத்திலுள்ள மகர ஒற்றும், இரண்டாவது எழுத்திலுள்ள உகரமும், மூன்றாவது எழுத்திலுள்ள அகரமும் அ, உ, ம் என்றே அமைகின்றன. அதன் சுருக்கம் பிரணவ மந்திரமாகும். ஓங்காரத்தின் உருவம் பிரணவ வடிவமான பிள்ளையாராக அமைந்தது போல அதன் உட்பொருளாக முருகன் உறைகின்றான்.

**மகர மெய்யில் உகர உயிர் ஏறி "மு"**
**ரகர மெய்யில் உகர உயிர் ஏறி "ரு"**
**ககர மெய்யில் உகர உயிர் ஏறி "கு"**

"முருகு" என்ற மூன்றெழுத்துக்களிலும் காத்தற்குரிய உகரமே ஊடுருவி நின்று இம்முருக மந்திரமே அகில உலகங்களைக் காத்தருளும் திருநாமம் என உணர்த்துகிறது. "முருகா" என்று ஓதுவார் மும்மை நலங்களும் பெற்று உயர்வு பெறுவார்கள்.

"முருகு" என்ற சொல்லுக்கு "அழகு" என்று பொருள். அழகின் வடிவம், அழகின் இலக்கணம் முருகன். முருகனே தமிழ். தமிழை உருவாக்கித்தந்த தனிக்கடவுள் முருகன் என்று தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. முருகனின் திருத்தோள்கள் பன்னிரண்டு. தமிழிலுள்ள உயிரெழுத்துக்களும் பன்னிரண்டு. முருகனின் திருக்கண்கள் பதினெட்டு. (முகத்திற்கு மூன்று கண்கள் வீதம் ஆறு முகத்திற்கும் பதினெட்டு). தமிழில் உயிரெழுத்துக்கள் பதினெட்டு. முருகப்பெருமானின் திருமுகங்கள் ஆறு. தமிழ் இனவெழுத்துக்கள் ஆறு. வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடையினம் ஆறு. திருமுருகனின் ஆயுதம் வேல். தமிழில் தனிநிலை எழுத்து ஆயுத எழுத்து.

முருகன் செவ்வாய்க் கிரகத்திற்கு உரியவன். செந்நிறமானவன், வண்ண மயிலில் உலாவருபவன், இச்சாசக்தியாகிய வள்ளி நாயகியையும், கிரியாசக்தியாகிய தேவயானையையும், ஞானசக்தியாகிய வேலையும் தாங்கி நிற்கும் தோற்றம் கொண்டவன். சேவற் கொடியோன். அழகு விளையாடும் மலைப்பகுதிகள் எல்லாம் முருகன் உறைவிடம். குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் உறையுமிடம்.

**"முதலும் நீதான்! மூலமும் நீதான்! முத்தமிழும் நீதான்!**
**அருந்தமிழை அகத்தியனுக்குச் சொன்னவன் நீ!**
**பெற்ற தந்தை தெய்வ நாயகனுக்கே**
**பிரணவ மந்திரத்தைத் தமிழில் சொன்ன**
**ஈஸ்வரன் பிள்ளை நீ!"**
**"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச்**
**செஞ்சுடர் வேல் வேந்தனை**
**செந்தமிழ் நூல் விரித்தோனை"**

என்று தமிழ் பரப்பிய தமிழ்த் தெய்வம் முருகனே என்று கந்தரலங்காரம் கூறுகின்றது. முத்தமிழால் வைதவரையும் வாழவைக்கும் தெய்வமான முருகன் ஒளவையாரின் தமிழைக் கேட்பதற்காக சிறுவனாக மரத்தில் தோன்றி சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? எனக் கேட்டு ஒளவையின் தமிழோடு விளையாடினான்.

பொதுவாகவே இந்து சமயத்தில் தெய்வங்கள் மனித வாழ்வுக்குத் தொடர்பற்ற நிலையில் வைத்து எண்ணப்படுவது இல்லை. தெய்வத்திற்கு இணையாக எதையும் சொல்லக்கூடாது எனக் கட்டளை போட்டது இல்லை. தெய்வங்கள் மனித வடிவில் இயங்கி மனித வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைகளிலும், கூறுகளிலும் தன்னைச் சம்பந்தப்படுத்திக்கொள்ளும் செயல்களை நாம் காணலாம். அதனால்தான் இறைவனை தாயாக, தந்தையாக, தோழனாக, காதலனாக, குழந்தையாக வழிபடும் மரபு தமிழர்களிடையே காணப்படுகின்றது. பிரம்மச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய படிமுறைகளூடாக இறைவனை அடையும் வழிமுறைகளை இந்து தர்மம் போதிக்கின்றது. இல்வாழ்க்கைக்கு ஓர் உயர்ந்த இடம் இந்துசமயத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

"ஆதியும் அந்தமும் இல்லாத உருவமில்லாத அந்தப் பரம்பொருளுக்கு" உருவம் கொடுத்து வழிபடும் மரபு இந்து தர்மத்திற்குரியது. அடிப்படையில் சிவன் வேறு முருகன் வேறு அல்ல. இருவரும் ஒருவரே! இதனைச் சிவபெருமான் உமாதேவி யாருக்கு கந்தபுராணத்தில் "ஆதலின் நமது சக்தி ஆறுமுகன்! அவனும் யானும் பேதகம் அன்றால்! நம் போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்! ஏதமில் குழவி போல்வான்! யாவையும் உணர்ந்தவன்! சீரும் போதமில் அழிவில் வீடும் போற்றினார் அருள வல்லான்!" என்று அருளியுள்ளார். ஆகவே சிவனைப் போலவே வீடுபேற்றை நல்குபவன் முருகன்.

நம் உள்ளத்தில் ஏதேனும் அச்சம் தோன்றுவதாயின் உடன் நமக்கு ஆறுதல் வழங்கிக் காப்பாற்ற முருகனின் ஆறுமுகம் தோன்றும். நீதிக்காகக் கொடிய போரில் நாம் ஈடுபட்டுவிட்டால் அஞ்சாதே! இதோ! நான் இருக்கிறேன் என்று வேல் தோன்றும்.

**"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகந்தோன்றும்**
**வெஞ்சமரி லஞ்சலென வேல் தோன்றும் - நெஞ்சில்**
**ஒருகால் நினைக்கில் இருகாலுந்தோன்றும்**
**முருகாவென் றோதுவார் முன்."**

அகத்தியனுக்குத் தமிழைத் தந்தவன் முருகன். குமரகுருபரருக்கு பேசும் திறனைத் தந்தான். அருணகிரிநாதருக்கு சந்தத் தமிழைத் தந்தான். முத்துசாமி தீட்சி தருக்கு பாடும் வல்லமையை அருளினான்.

உலகிலேயே மக்கள் முதன் முதலில் தோன்றிய இடம் குமரிக்கண்டம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்ட தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முருகக் கடவுளைக் குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகக் கூறுகின்றது. கச்சியப்ப சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட கந்த புராணம் முருகனின் தோற்றம் பற்றிக் கூறுகின்றது.

"ஒருதிருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய" சைவ சித்தாந்தப் பொருளை உணர்த்தும் கந்தபுராணம் எழுந்த கதை மிகவும் அற்புதம் வாய்ந்ததாகும். குமரக்கோட்ட நாயகனான முருகக் கடவுளையே நெஞ்சார வழிபடும் கச்சியப்ப சிவாச்சாரியாரின் கனவில் ஒருநாள் முருகக் கடவுள் தோன்றி "அன்பனே! வடமொழிக் கந்தபுராணத்தில் உள்ள எனது சரித்திரத்தை தமிழிற் பெருங் காப்பியமாகப் பாடுக" எனக் கட்டளை இட்டு "திகடச் சக்கர செம்முகமைந்துளான்" என்ற அடியையும் எடுத்துக்கொடுத்து மறைந்தருளினார். கனவிலிருந்து விழித்த கச்சியப்பர் முருகப் பெருமானின் அருளை நினைத்து நெஞ்சுருகி கண்ணீர் மல்கி அவன்தாள் வணங்கி ஒருநன்னாளில் அம் மாபெரும் புராணத்தை அவரெடுத்துக் கொடுத்த அடியையே முதலடியாகக் கொண்டு பாடத் தொடங்கினார்.

நாள்தோறும் தான் பாடிய பாடல்களை முருகன் பாதங்களில் சமர்ப்பித்து இரவுப் பூஜை முடித்து கதவைத் திருக்காப்பிட்டுச் செல்வார். மறுநாள் காலையில் இறைவழிபாட்டை முடித்து பாடல்களைப் பார்வையிடும்போது பாடல்களில் ஆங்காங்கே திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதை கண்டு அதிசயித்து ஆண்டவனின் அருளை எண்ணி உருகுவார். கந்தப் பெருமானே தன்புராணத்தைத் தமிழிற்பாட இவருக்குக் கட்டளையிட்டு அடியும் எடுத்துக் கொடுத்து பாடல்களைச் சரிபார்த்து திருத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமும் மேற்கொள்கின்றார் என்றால் கச்சியப்பரின் தெய்வப்பற்றோடு தமிழ்ப்பற்றையும் அல்லவா அங்கீகாரம் செய்கின்றார். இவ்வாறே ஆறு காண்டங்களையும் சொற்சுவை, பொருட்சுவை, பக்திச்சுவை சொட்டப் பாடி முடித்து குமரக்கோட்டக் கோயில் வளாகத்தில் அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தார். கந்தன் திருக்கதை கேட்டு அருள்பெற கூட்டம் அலை மோதியது. கச்சியப்பர் "திகடச்சக்கர செம் முக மைந்துளான்" என்ற பாடலைக் கூறி பொருளை விளக்கத் தொடங்கினார். பேரவையில் கூடியிருந்த புலவர்களுள் ஒருவர் எழுந்து "திகழ்தசக்கரம்" என்பதை "திகடச்சக்கரம்" என்று இயற்றுவதற்கு விதி எங்குள்ளது? என வினாவினார். கச்சியப்பரோ மிக அமைதியாக "அது கந்தவேள் என் கனவில் தோன்றிக் கூறிய திருவாக்காகும்" என்றார். புலவரோ விதிக்கு மாறாகப் புனைந்தது இறைவன் என்றாலும் அது நியாயம் இல்லைத்தானே! எனவே உங்கள் பாட்டிற்குச் சரியான இலக்கண விதியைக் கூறியே யாகவேண்டும் என்றார்.

சுவாமிகள் நெஞ்சில் கலக்கத்தைச் சுமந்தபடி "இந்த வினாவிற்குப் பாட்டுடைத் தலைவன் நாளை நேரில் விடை தருவான்" என்று கூறி அரங்கேற்றத்தை அத்துடன் நிறுத்திவிட்டுச் சென்றார். சுவாமிகள் நேரே முருகப் பெருமானிடம் சென்று தன் வேதனையை நீக்குமாறு வேண்டி மிகக் கவலையுடன் கோயில் திருச்சந்நிதி முன்பாகக் கிடந்து தூங்கலானார். முருகன் கனவில் தோன்றி "அன்பனே! வருந்த வேண்டாம். நான் எடுத்துக் கொடுத்த முதல் அடிக்கு இலக்கணம் உண்டு. சோழ நாட்டிலே வசிக்கும் ஒரு புலவன் நாளை அவ்விடம் வருவான். அவனிடத்தில் "வீரசோழியம்" என்ற இலக்கண நூலில் சந்திப்படலத்தில் பதினெட்டாம் செய்யுளில் "திகடம்" எனப் புனைவதற்கு விதியுள்ளது". என்று திருவாய் மலர்ந்தருளினார். சுவாமிகள் விழித்தெழுந்து உள்ளம் உவந்து கந்தவேளின் கருணையை நினைத்து அளவிலா ஆனந்தம் கொண்டார். முதல் நாள் நிகழ்வின் சந்தேகத்தைப் போக்க இறைவனே நேரில்வந்து சந்தேகத்தைப் போக்கிவைப்பார் எனக் கச்சிசயப்பர் சொல்லியிருந்ததால் அந்த அதிசயக் காட்சியைக் காண மண்டபம் நிறைந்து வழிந்தது. எதிர்பார்த்தபடியே முன்பு அறிமுகமில்லாத நிலையில் கையில் ஒரு புத்தகத்தோடு ஒரு புலவர் அவையில் நுழைந்தார். முதல் நாள் சந்தேகம் எழுப்பிய அதே புலவர் அவரை விசாரித்த போது "யான் சோழ நாட்டைச் சேர்ந்தவன் இந்தக் கந்தபுராண அரங்கேற்றத்தைக் காண வந்தேன். என் கையில் இருப்பது வீர சோழியம்" எனக் கூறினார். சந்தேகப் புலவரும் அந்நூலைப் பெற்று புத்தகத்தைப் புரட்டி விதியிருப்பதைக் கண்டார். வந்த புலவரும் "சபையோரே உங்கள் ஐயம் நீங்கிற்றா?" எனக்கேட்டார். அடுத்தகணம் அவ்விடத்தே "பளிச்" என்று மின்னல் பரவ புலவர் மறைந்துவிட்டார். சபையில் பரபரப்பு அதிகமாகியது. கச்சியப்பருக்கு அருள்புரிய வந்தது செந்தமிழ்க்குமரனே என மக்கள் கூட்டம் அதிசயித்தது. கச்சியப்பரின் தெய்வப் பற்றையும் பெருமையையும் மேலாக கந்தவேளின் கருணையையும் எண்ணிப் பலவாறாக புகழ்ந்து கொண்டாடி கச்சியப்பரின் பாதங்களில் வீழ்ந்து பணிந்தனர். அதன் பின்பு தடையின்றி புராண அரங்கேற்றம் தொடர்ந்தது.

கந்தபுராணம் முருகனின் அற்புதத் திருவிளையாடல்களை மட்டுமன்றிக் கணக்கிலங்காத நீதியம்சங்களையும் உபதேசிக்கின்றது எனக் காஞ்சிப்பெரியார் கூறியுள்ளார். "நன்றி மறப்பது நன்றன்று" என்றார் வள்ளுவர். இறைவனிடம் ஏராளமான வரங்களைப் பெற்ற சூரபன்மன் இறைவன் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியை மறந்து தீமைகள் பல புரிந்தான். மேலும் மனிதனின் நற்குணங்களில் நனி சிறந்து விளங்குவது அடக்கம் என்பதே யாகும். சூரபன்மனின் அழிவுக்கு அவன் ஆணவம் காரணமாயிற்று. அற்புதக் காவிய மான கந்தபுராணத்தை தமிழில் பாடுவதற் காக பிள்ளையில்லாத முருக பக்தனான காளத்தியப்பருக்குக் குழந்தையாக கச்சி யப்பரைக் கொடுத்து அவர்மூலம் தன் புராணத்தை தமிழில் காவியமாகப் பாட அடி யெடுத்துக் கொடுத்த முருகனின் திருவருளை என்னவென்று சொல்வது? கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே தோன்றிய மூத்த மொழி உலகிற்கெல்லாம் தாய்மொழி யாகிய தமிழை உலகிற்களித்து காத்து வரும் கந்தக் கடவுளின் கருணைதான் என்ன! என்றும் தமிழ் காக்கப்படும் கந்தன் அருளாலே! வாழ்க தமிழ்மொழி! வளர்க எம் செம்மொழி.

## இதுவரை வெளிவந்த நல்லைக்குமரன் மலர்களின் பின்னட்டையில் இடம்பெற்ற ஈழத்து சித்தர்கள்

| | |
|---|---|
| 1996 | யோகர் சுவாமிகள் |
| 2007 | செல்லப்பா சுவாமிகள் |
| 2008 | கடையிற் சுவாமிகள் |
| 2009 | குடைச் சுவாமிகள் |
| 2010 | தவத்திரு மகாதேவ சுவாமிகள் |
| 2011 | இணுவில் பெரிய சன்னியாசியார் |
| 2014 | தவத்திரு சடையம்மா ஞானியார் |
| 2015 | தவத்திரு வடிவேற் சுவாமிகள் |
| 2016 | நயினை ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகள் |
| 2017 | யோகர் சுவாமிகள் |
| 2018 | தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள் |
| 2019 | தவத்திரு குழந்தைவேல் சுவாமிகள் |
| 2020 | தவத்திரு நல்லூர் சடையம்மா சுவாமிகள் |
| 2021 | வேதாந்தப் பாட்டியார் சின்னக்குட்டி அம்மையார் |
| 2022 | கௌரிபாலகிரி சுவாமிகள் (ஜேர்மன் சுவாமிகள்) |
| 2023 | சித்தானைக்குட்டி சுவாமிகள் |
| 2024 | பெரிய சந்நியாசிரியார் |
| 2025 | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை அம்சங்கள் மிளிரும் யாழ்ப்பாணத்து முருகன் தேர்கள்

**சண்முகலிங்கம் சஜீலன்**
**காங்கேசன்துறை**

**அறிமுகம்**

யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்களின் கலாசாரப் பண்பாடு திருக்கோயில் பண்பாடாகவே தொன்று தொட்டு நிலவி வந்திருக்கின்றது. இத்திருக்கோயிற் பண்பாட்டின் நிலைக்களனாக ஆலயங்கள் திகழ்ந்து வருகின்றன.

ஆலயங்களில் ஆகமம் சார்ந்த திருக்கோயில் கிரியை நெறிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்திருக்கோயில் கிரியை நெறிகளில் மகோற்சவம் என்றழைக்கப்படும் திருவிழாக்களிற்கு மிகுந்த முக்கியத்துவமுண்டு. மகோற்சவத்தின் தலையாய திருவிழாவாக அமைவது இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழாவாகும். பொதுவாக யாழ்ப்பாணத்து திருக்கோயில்களில் தேர்த்திருவிழா பல்வகை பக்தர்களின் சங்கமாக மிக அதீத பக்தி பூர்வமான உற்சவமாகவே நடைபெறும். தேரில் ஆரோகணித்து வரும் இறைவனை கண்ணாரக் கண்டு வழிபட வேண்டுமென்பதே பக்தர்கள் அனைவரினதும் அவாவாக அமையும். தேரிற்கு எழுந்தருளும் சுவாமியின் சோடசஇராஜ உபசாரங்களும் தேரின் அழகிய பிரமாண்ட கம்பீரத்தோற்றமும் பக்த தெய்வ உறவு நிலையில் ஈர்ப்பினை ஏற்படுத்துவனவாகும். இவ்வாறாக ஈர்ப்பினை ஏற்படுத்துவதில் தேரின் நிர்மாணிப்பு முறையும் முக்கிய பங்கு வகிக்கின்றது. தேர் ஓர் இறைவன் ஆரோகணித்து வரும் ஊர்தியாக அமைவதால் அதன் நிர்மாணத்தில் பலவித கலையம்சங்களும் இணைவதை அவதானிக்கலாம். இவ்விதம்பல கலையம்சங்களையும் இணைத்து நுட்பமாக அழகியதொரு தேரினை உருவாக்கும் பணியில் பல தேர்க்கலைஞர்களும் அவர்களது குழுவினரும் ஈடுபடுவர். இவ்வாறு பல தேர் கலைஞர்களாலும் குழுக்களாலும் உருவாக்கப்பட்ட கலையம்சம் மிக்க பல தேர்கள் யாழ்ப்பாணத்து ஆலயங்களில் இன்றும் வீதிவலம் வருவதனை அவதானிக்கலாம்.

இவ்விதம் நிர்மாணிக்கப்பட்டு பலவித கலையம்சங்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் யாழ்ப்பாணத்து முருகனாலயத் தேர்களைப் பற்றியதாகவே இக்கட்டுரை அமைகிறது.

**யாழ்ப்பாணத்து தேர்க்கலை வரலாறு**

யாழ்ப்பாணத்தின் தேர்க்கலைக்கு நீண்டகால வரலாற்றுப்பாரம்பரியம் ஒன்று உண்டு. தேர் இலக்கணம். தேர்தத்துவம் தேர் அமைப்பு, தேர்வகை பற்றிய செய்திகள் வேதங்கள், ஆகம நூல்கள் புராண இதிகாசக் கதைகள். இலக்கியங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. எனினும் ஈழத்தின் தேர்க் கலை வரலாறு பற்றிய ஆதாரபூர்வமான குறிப்புகளை கைலாயமாலை, யாழ்ப்பாண


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவமாலை ஆகிய நூல்களில் பார்க்க முடிகிறது. யாழ்ப்பாணத்தை ஆரியச்சக்கர வர்த்தி மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் அவர்களால் ஆலயங்கள் பலவும் நிர் மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப் பட்டதாகவும் சுவாமி வீதி வலம் வருவதற் கும் தேரோடுவதற்கும் என கோவில்களில் இரண்டு அல்லது மூன்று வீதிகள் அமைக் கப்பட்டதாகவும் கூறப்படும் குறிப்புகள் உண்டு. சிங்கையாரிய மன்னனால் கைலாசநாதர் ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிசேகம் நடைபெற்ற பின் தேரில் கைலாசநாதர் வீதி வலம் வந்தார் என கைலாயமாலையும் தேரோடும் வீதி அமைக்கப்பட்டதாக யாழ்ப் பாண வைபவமாலையும் கூறுகின்றன. இதே காலத்தில் கோயில் நிர்மாணம், தேர் நிர் மாணம் மன்னர்களுக்கான மாட மாளிகை கள், கூட கோபுரங்கள், குடியிருப்புகள் முடி, செங்கோல் ஆபரணங்கள் மற்றும் பிற பொருட் கள் இயற்றிக்கொடுப்பதற்கென தமிழகத் திலிருந்து நிர்மாணக் கலைஞர்களும் கட்டு மான கலைஞர்களும், தொழிலாளர்களும் வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் உள்ள ஊர்கள் சிலவற்றில் குடியிருத்தப்பட்டதாக அறிஞர்களின் யாழ்ப்பாண சரித்திரக் குறிப்பு கள் கூறுகின்றன.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத் தில் அவர்களின் கலையழிவுக் கொள்கைக்கு பல ஆலயங்கள் உட்பட்ட போது மரத்தேர் களும் செப்பு, பவளத்தேர்களும் அழிக்கப் பட்டதாகக் கூறப்படும் குறிப்புகளும் காணப் படுகின்றன. தென்னிலங்கையில் இருந்த சிவாலயமான சந்திரசேகரன் ஆலயம் அழிக் கப்பட்ட போது அங்கிருந்த மரத் தேரினை யும் தாம் தீவைத்து அழித்ததாக போர்த் துக்கேயத் தளபதியான கியூதோ (Couto) வின் ஆவணக்குறிப்புகள் விபரிக்கின்றன. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் அழிக்கப்பட்ட போது அங்கிருந்த செப்புத் தேர்களும் பவளத்தேர்களும் கடலில் தள்ளி அழிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

பின்னர் கோயில்கள் மறுமலர்ச்சி யுறும் காலகட்டமாக 18ம் நூற்றாண்டின் பிற் பகுதி அமைகின்றது. ஒல்லாந்தர் ஆட்சியில் மத சுதந்திரம் வழங்கப்பட்டபின் யாழ்ப் பாணத்தில் பல கோயில்களும் மறுமலர்ச்சி பெற்றன. ஆகம முறையில் சிற்ப சாஸ்திர விதிகளுக்கு அமைய பல ஆலயங்களும் நிர்மாணிக்கப்பட்டன. பரிவாரக் கோயில் கள் எழுப்பப்பட்டன. ஆகம முறையில் அமைந்த பூசைக்கிரியை நெறிகளுடன் விசேட உற் சவங்களும், மகோற்சவ திருவிழாக்களும் இவ்வாலயங்களில் முக்கியத்துவம் பெற்ற துடன் பிரபலமும் பெற்றன. பொருளாதார நிதி வசதிகளிலும் சொத்துக்களிலும் உயர்வு பெற்று விளங்கின. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் பிற் பகுதியில் (கி.பி 1770- 1790) மறுமலர்ச்சி பெற்ற ஆலயங்களாக மாவிட்ட புரம் கந்தசுவாமி ஆலயம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன்ஆலயம்,நயினாதீவுநாகபூசணி அம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களைக் குறிப்பிட முடியும். இவ்வாலயங்களிலெல் லாம் மூலவருடன் பரிவாரத் தெய்வங்களும் வீதிவலம் வருவதற்கென பல தேர்களும் நிர்மாணிக்கப்பட்டன. தேரோட்ட நிலையில் இது முத்தேர்ப்பவனி, பஞ்சரதபவனி என அழைக்கப்பட்டது. இக் காலகட்டத்தில் ஆலயங்களில் ஆரம்பகால தேர் நிர்மாணத் தினை திறன்வாய்ந்த உள்ளூர்ப் பாரம்பரிய நிர்மாணக்கலைஞர்களே மேற்கொண்ட னர். இதனையடுத்த காலங்களில் தமிழகத் திலிருந்து புகழ்பெற்ற தேர்நிர்மாணக் கலைஞர்களும், சிற்பக்கலைஞர்களும் வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழைக்கப்பட்டு தேர்ச்சிற்ப இலக்கணங் களுடன் கூடிய தேர்கள் நிர்மாணிக்கப்பட்டன. 19ம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதி வரை இந்நிலையே நீடித்தது. 20ம் நூற்றாண்டின் தொடக்ககாலப்பகுதிகளில் உள்ளூர்க் கலை ஞர்களின் தேர்நிர்மாணப் பணி தொடர்ந்த துடன் தமிழகத்தின் புகழ் பெற்ற தலைநகரி லிருந்து தேர்நிர்மாணக் கலைஞர்களும் அவர் களின் குழுவினரும் வருகைதந்து தேர் நிர் மாணத்தினை மேற்கொண்டனர். இக் காலத் தில் அலங்காரச் சிற்பங்களுடன் கூடிய கலை யம்சம் மிக்க தேர்கள் நிர்மாணம் பெற்றன. இக் காலத்தில் தேர்நிர்மாணத்தில் தமிழக நிர் மாணக் கலைஞர்களுடன் இணைந்து யாழ்ப் பாண உள்ளூர்க்கலைஞர்களும் ஈடுபட்டனர்.

பின்வரும் 20ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியே யாழ்ப்பாணத் தேர்க்கலை வரலாற்றில் எழுச்சிக்குரிய காலமாக அமை கிறது. இக் காலப்பகுதியில் பல கலையம்சங் களையும் இணைத்து புதிய உத்திகள் நுட் பங்களுடன்நிர்மாணிக்கப்பட்ட சிற்பச்செழுமை மிக்க பல தேர்களையும் யாழ்ப்பாணத்து தேர்க்கலைப் பாரம்பரியம் கண்டது. இக் காலத்தில் கலையம்சம் மிக்க தேர் சிற்ப இலக்கணத்துடன் கூடிய தேர்களை நிர் மாணிக்கக் கூடிய அளவில் திறன் பெற்ற உள்ளூர் யாழ்ப்பாணத்து தேர் நிர்மாணக் கலைஞர் குழுக்கள் எழுச்சி பெற்று விளங் கினர். அத்துடன் தமிழகத்தின் புகழ்பெற்ற தேர் நிர்மாணக் கலைஞர்களும் அவர்களது குழுவினரும் யாழ்ப்பாணம் வந்து கலைத் திறன் மிக்க பல தேர்களை உருவாக்கிய துடன் சிற்பச்செதுக்குதிறன் கூடிய உரு வகத்திரட்சி மிக்க அழகிய சிற்பங்களை யும் யாழ்ப்பாணத்து தேர்க்கலைப் பாரம்பரி யத்திற்கு வழங்கினர்.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கலைப்பாணி தமிழக கலைப்பாணி என அடை யாளப்படுத்த கூடிய வகையில் இரு கலைப் பாணித் தேர்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகி வளர்ச்சி பெற்றன. இதனால் 20 ஆம் நூற்றாண் டின் மத்திய காலப்பகுதி (1940 - 1984) யாழ்ப் பாணத்து தேர்க்கலை வரலாற்றில் பொற்கால மாக அமைகிறது. இதன்பின் வந்த மூன்று தசாப்தகாலம் (1985 - 2010) யாழ்ப்பாணத்தில் போர்ச்சூழல் நிலவியதால் ஆலயங்களுக் களுக்கான தேர் நிர்மாணம் மந்த கதியடைந் ததுடன் தமிழகக் கலைஞர்களின் வருகை யும் அற்று போனது. இக்காலத்தில் யாழ்ப் பாணத்தில் திறன் பெற்று விளங்கிய அனு பவம் மிக்க தேர்நிர்மாண ஸ்தபதிகள் கலை ஞர் குழுக்கள் தேர் நிர்மாணப்பணியில் ஈடு பட்டதுடன் புதிய உத்திகள் நுட்பங்களுடன் கூடிய சில தேர்களை யாழ்ப்பாணத்து தேர்க் கலைப் பாரம்பரியத்திற்கு வழங்கினர். இதன் பின் வந்த தசாப்தங்களில் (2019 - 2024) இன்று வரை யாழ்ப்பாணத்தில் உருவாகி வளர்ச்சி பெற்றுள்ள சிற்பாலயங்களின் ஊடாக யாழ்ப் பாணத்தில் உள்ள அனேகமான ஆலயங் களுக்கான தேர்கள் நிர்மாணிக்கப்படுகின் றன. இதில் யாழ்ப்பாணத்து தேர்நிர்மாண கட்டுமான கலைஞர் குழுவினர் ஈடுபடுவது டன் அலங்கார விக்கிரக சிற்ப வடிவமைப்புக் கென தமிழக சிற்பிகள் இக்குழுவில் இணைந்து பணியாற்றுகின்றனர். தேர் நிர்மாணிப்பிற் கான பெரும்பாலான நிதிப்பங்களிப்பினை புலம்பெயர் தமிழ் மக்கள் வழங்க அதற்கான அனுசரணையை கோயில் நிர்வாகத்தினர் அறங்காவலர்கள் ஆதீன கர்த்தாக்கள் வழங்கு கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**கலையம்சம் மிக்க சில தேர்கள்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி தேர் ஐந்து தேர்கள் பவனிவந்த மாவிட்டபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசுவாமி கோவிலில் மூலவரான ஆறுமுக சுவாமி பவனிவந்த தேர் கோவில்கள் மறு மலர்ச்சி பெற்ற காலத்தில் உருவாகிய தேர் களில் ஒன்றாகும். பின்னர் இத்தேர்கள் காலத் திற்கு காலம் திருத்தப்பட்டு புதிதாகவும் அமைக்கப்பட்டது. 1782 ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்ட முதலாவது தேர் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த உள்ளூர் சிற்பக் கலைஞர் களால் உருவாக்கப்பட்டதாகும். இத்தேரின் பீடத்திற்கு மேல் தடிகளாலும் சிலாகை களாலும் கட்டப்பட்டு வர்ண சீலைகளாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்ட இயற் தேராக அமைந்தது. பின்னர் புதிதாக அமைக் கப்பட்ட தேர் 1789இல் தமிழகத்தைச் சேர்ந்த ஸ்தபதியினாலும் சிற்பக் கலைஞர்களாலும் ஆகம விதிகளுக்கு அமைய ஆலய கட்டு மானங்களுக்கு ஏற்ற அளவில் மிக நுட்பமாக நிர்மாணிக்கப்பட்டதாகும். இத்தேரே தேர்க் கலை வரலாற்றில் ஈழத்தில் தமிழக கலைப் பாணி மரபில் உருவாக்கப்பட்ட முதலாவது மகோத்தர மகாரத சிற்பத்தேராகும். இது இயற்தேர் ஆகவும் அமைந்தது. இத்தேரின் தளப்பகுதியில் உருவாக்கப்பட்ட விக்கிரக வியல் சிற்பங்கள் அழகியல் அம்சங்கள் நிறைந்ததாக மிகுந்த சிற்பச் செழுமை யுடன் அமைக்கப்பட்டது. இத்தேர் மீண்டும் 1954 இல் தமிழகத்தின் இராமநாதபுரம் மாலை கண்டான் சோமசுந்தரம் ஸ்தபதி குழுவின ரால் புனர்நிர்மாணம் செய்யப் பட்டது. இதன் பின்னர் ஈழ யுத்தம் ஆரம்பித்த ஆரம்ப காலங் களில் யுத்த சூழலுக்குள் ஆலயம் அகப்பட்டு சேதமுற்ற போது இத்தேரும் மிகுந்த சேத முற்றதால் கைவிடப்பட்டது. தற்போது மகோற் சவகாலத்தில் பவனி வரும் புதிய சண்முகர் தேர் 2019 இல் உருவாகி வெள்ளோட்டம் கண்ட தேராகும். சுமார் 45 அடி உயரத்தில் முகோத்தர மகாரதமாக உருவாக்கப்பட்ட இத்தேரை ஸ்தபதி இளங்கோவன் தலை மையிலான குழுவினர் நிர்மாணித்திருந்தனர். இருதள விக்கிரகச் சிற்பங்களைக் கொண் டுள்ள இத்தேரில் பாவவிமோசனம் பெற்ற இளவரசி மாருதப்புரவீகவல்லி மாவைக் கந்தனுக்கு ஆலயம் சமைப்பித்த வரலாறு பௌராணிக கலை வடிவ சிற்பங்களாக அமைந்துள்ளமை ஓர் சிறப்பம்சமாகும்.

**கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் தேர் (1939)**

தேர்க்கலை சிற்ப இலக்கணம் பொருந் திய பெருந்தேர் வகையைச் சார்ந்த தேர் இதுவாகும். தமிழக கலைப்பாணியில் அடித் தளத்திலிருந்து விமானம் வரை நாகரமுக பத்திர மரபில் அமைக்கப்பட்டதாகும். முதன் முதலில் மேல்விமானம் நிரந்தரமாக இணைக் கப்பட்ட முருகன் தேர்களில் இதுவும் ஒன்றா கும். 1939 இல் உருவாகி வெள்ளோட்டம் கண்ட இத்தேர் இன்றுவரை மகோற்சவ காலங்களில் பவனி வரும் சிறப்பினைக் கொண்டுள்ளது. அலங்கார மற்றும் விக்கிரக சிற்பங்களில் சிற்பச்செழுமையுடனும் அழகியலுடனும் அமைந்துள்ள இத்தேர் தமிழகத்தின் திரு விடைமருதூர் சீ.சுப்பிரமணியம் ஸ்தபதியினால் நிர்மாணிக்கப்பட்டதாகும். தேரில் புராண இதிகாசக் கதைகள் தெய்வ வடிவங்கள் என்பன சிற்பங்களாக அமைந்துள்ளன. இத் தேரின் விக்கிரக சிற்பங்களை உருவாக்கிய வர் பிற்காலத்தில் ஸ்தபதியாக அமர்ந்து யாழ்ப்பாணத்தில் கலையம் சம் மிக்க தேர்களை உருவாக்கிய இரா.கோவிந்தராஜா என்னும் சிற்பக் கலைஞர் ஆவார்.

**நல்லூர் கந்தசுவாமி தேர் (1964)**

நல்லூர் கந்தசுவாமிக்கு உருவாக் கப்பட்ட புதிய சித்திரத்தேர் 1964 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாகும். இது இதற்கு முதல் பாவனையில் இருந்த பழைய தேரின் மாதிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டதாகும். பழைய தேரின் மாதிரி பருப் பொருள் எச்சங்களை இன்றும் ஆலய முன் மண்டபத்தில் காணலாம். பழைய தேரின் மாதிரியாகவே புதிய தேரும் அமைக்கப்பட வேண்டுமென்பது நல்லூர் கந்தசுவாமி ஆலய அறங்காவலர் குகஸ்ரீ சண்முகதாஸ் மாப்பாண முதலியாரின் கொள்கையாக விருந்தது. அதன்படி புதிய தேர் உருவாக்கப்பட்டது. எண்கோண திராவிட மரபுத் தேரான இத் தேர் விமானம் நிரந்தரமாக இணைக்கப் பட்டதாகும். அலங்கார சிற்பங்களில் செழு மையுடையதாக இத்தேர் அமைக்கப்பட்டுள் ளது. அலங்கார சிற்பங்களுடன் விலங்குருவ அலங்கார சிற்பங்கள் தேரில் இடம்பெறு கின்றன. தேரின் கீழ்ப்பீடத்தில் நான்கு கோணங்களிலும் பூத உருவங்கள் அமைந் துள்ளன. விக்கிரகவியல் சிற்பங்கள் எதுவும் இத்தேரில் இடம்பெறவில்லை. முகப்புக் குதிரைகளுடன் கூடிய பிரம்மா என்ற சாரத் திய அம்சமும் இத்தேரில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தேரின் ஒட்டு மொத்த உருவாம்ச நிலையில் ஆகம மரபு சாராத மடாலய முருகனுக்குரிய தேராக அமைகிறது. எனினும் தேரின் இதய பாக மாகிய தேவாசனமும் ஆறுமுகசுவாமி எழுந் தருளும் சிம்மாசனமும் விதிமுறைகளுக் கமைய ஆகம முறைப்படி அமைக்கப்பட்டுள் ளன. இதனால் ஆகம மரபின் இணைவினை இத்தேர் கொண்டுள்ளமையை அவதானிக் கலாம். தேரின் மேல்விமானம் மூன்று தளமுடையது. அதற்கு மேலுள்ள சிகரம் கர்ணக் குடமாக அமைகிறது. விமானத்தின் முதற்தளத்தில் முருகனின் கொடியாகிய சேவலும், வாகனமாகிய மயிலும் பெரிய அள விலான முழுச்சிற்பங்களாக அமைந்துள் ளமை புதியதொரு மரபினைத் தோற்றுவிக் கிறது. விமானப் பண்டிகையின் தளங்களாக அமையும் கொடுங்கை எனும் எழுதகவரி சட்டங்கள் மஞ்சள் நிற ஒளித்தெறிப்புள்ள பித்தளைத் தகடுகளால் வேயப்பட்டுள்ளமை தேரின் கலைத் திறனை அதிகரிக்கின்றது.

யாழ்ப்பாணத் தேர்கலை வரலாற் றில் அதிக அழகியல் கவர்திறன் கொண்ட தாக அமைக்கப்பட்டுள்ள முருகன் தேர் இது வாகும். தேர் பவனி வரும்போது பக்தி பரவச நிலையில் அதீத கவனயீர்ப்பை இத்தேர் பெறுகிறது. இந்நிலையை அறிஞர் ஒருவர் இவ்வாறு கூறுகிறார். "நல்லூரிலே ஆறுமுகப் பெருமான் தேரிலமர்ந்து வீதிவலம் வரும் காட்சியை அழகுக்கெல்லாம் அழகு என்று கூட கூறலாம். அந்தக் காட்சியைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற எவரும் வைத்த கண் எடுக்க விரும்புவதுமில்லை பார்த்தது போது மென மனம் நிறைந்து திரும்புவது மில்லை. அத்தகைய கவர்ச்சி உண்டு அத்தேருக்கும் அத்தேரில் எழுந்தருளி வீதி வலம் வரும் ஆறுமுகப்பெருமானுக்கும்". ஒட்டுமொத்தத் தில் அதிக அழகியல் அம்சங்களுடன் கவர் திறன் கொண்டதாகவும் ஆகம மரபுசாராத (பிறழ்ந்த) ஆகம மரபு சார்ந்த இரு மரபுகளின் இணைவுடன் கூடிய சங்கமமாகவும் நல்லூர் கந்தசுவாமி தேர் விளங்குகின்றது. இத் தேரினை நிர்மாணித்தவர் தமிழகத்தின் திருவிடை மருதூரைச் சேர்ந்த புகழ்பெற்ற தேர்நிர்மாண கலைஞரான இரா. கோவிந்தராஜீ (பி 1918) எனும் ஸ்தபதியாவார் என்பது குறிப் பிடத்தக்கது.

### நல்லூர் முருகன் பழைய தேர்

கோயில்கள் மறுமலர்ச்சி பெற்ற ஒல்லாந்தர் காலப் பிற்பகுதியில் உருவாகிய தேர்களில் இத்தேரும் ஒன்றாகும். மேல்வி மானம் நிரந்தரமாக இணைக்கப்பட்ட முரு கனுக்குரிய முதலாவது தேர் இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்கோண திராவிட மரபுத் தேராகவும் அமைகிறது. குதிரை, யாழி, குதிரையும் வீரரும் போன்ற அலங்கார சிற்ப உருவங்கள் அமைந்திருந்தன. விக்கிரகச் சிற்பங்கள் ஏதும் இத் தேரில் அமையப் பெறவில்லை என்பதுடன் சிற்பாகம மரபில் இத்தேர் அமைய வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் உருவாம்சத்தில் அழகியல் தன்மையுடன் இத்தேர் விளங்கியது. இத் தேர் பற்றிய ஐதீகக்கதை ஒன்று வழங்கப்பெற்று வருகிறது. வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு உருவாக்கப் பட்ட இத்தேர் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இழுத்து வரப்படும் போது நல்லூர் முருகன் கோவிலுக்கு முன்பாக வந்ததும் இத்தேர் தானாக நின்று விட்டதாகவும் அப்பால் ஓரடி கூட நகரவில்லை என்றும் இத னால் இத்தேர் நல்லூர் முருகன் கோயிலுக்கு உரித்தாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்துவதற்கான போதிய ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் சப்பரம் உருவாகிய போது நடைபெற்ற சம்பவங்கள் பிற்காலத்தில் தேர் உருவாக்க நிகழ்ச்சியுடன் சம்பந்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய அறங்காவலர்கள் யாழ்ப்பாணத்து தேர்க்கலை வரலாற்றாய்வாளர் ஒருவருக்கு நேரடியாக எடுத்துக் கூறிய செய்தி ஒன்று பதிவு பெற்றுள்ளது. அத்துடன் இத்தேர் பவனி வரும்போது சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தேரின் முன் நடனமும் பிரதிஷ்டையும் நடைபெற்றது என்று இலங்கை அமெரிக்கமிஷனரியைச் சேர்ந்த திருமதி மிரன் வின்ஸ்லோ அம்மையாரின் நினைவுக்குறிப்பு கூறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. 1960 ஆம் ஆண்டு அளவில் இத்தேர் சிதைவுக்குள்ளாகிய நிலையில் 1964 இல் தற்போதைய புதிய சித்திரத்தேர் உருவாகியமை குறிப்பிடத்தக்கது.

### உசன் கந்தசுவாமி தேர் (1964)

நான்கு சில்லுகளுடனும் மூன்று தள விமானத்துடனும் கூடிய எண் கோண திராவிட மரபுத்தேராகும். மேல் சிகரம் கர்ணக் குடமாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணக் கலைப்பாணியில் 1964 இல் உருவாகிய இத் தேரில் தமிழக கலைப்பாணியில் அமைந்த ஏகதள விக்கிரகச் சிற்பங்கள் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும். இதனால் இத்தேர் இருகலை மரபுகளின் சங்கமமாக விளங்குகின்றது. இத்தேரில் அலங்கார சிற்பங்களாக பறக்கும் குதிரை, யாழி, அன்னம், செடியலங்காரங்களும், பாயும் குதிரையும், நான்கு குந்து பூதம் என்பவற்றுடன் சிறு வகை அலங்கார சிற்பங்களாக யானை, சிங்கம் என்பன அமைந்துள்ளன. ஆதாரத்தில் கூர்மமும் (ஆமை) சக்தியாகிய பூமாதேவி உருவமும் அமைந்து விளங்குகின்றன. விக்கிரகவியல் சிற்ப வரிசையில் தெய்வங்களின் தோற்ற வடிவங்கள் குறிப்பாக மூக்ஷிகவிநாயகர், பாலமுருகன், பழனியாண்டவர், இலட்சுமி, சரஸ்வதி, சிவன் பார்வதி, திருமால், வைரவர், தட்சிணாமூர்த்தி, சிவகாமி சமேத நடராசர், வள்ளி தெய்வானை, சமேத ஆறுமுகசுவாமி ஆகிய சிற்பங்களும், புராண இதிகாச கதைகள் குறிப்பாக கந்த புராண கதைகளுடன் தொடர்புபட்ட காட்சிகளான சரவணப் பொய்கையில் உமையம்மை ஆறு குழந்தைகளையும் கட்டியணைத்தல், சிவபெருமானுக்கு முருகன் ஞான நிலையில் நின்று பிரணவப் பொருளுரைத்தல், முருகன் உமையம்மையிடம் வேல் வாங்குதல், முருகன் ஔவையாருக்கு சுட்ட பழம் போடுதல், தாரகனுடனான முருகனின் போர், சிங்கமுகாசூரனுடனான முருகனின் போர் சூரபதுமனுடனான முருகனின் போர், மாமரமாக நிற்கும் சூரனைச் சங்காரம் செய்தல், தெய்வயானை முருகன் திருமணம், யானை துரத்த வள்ளி கிழவேதியரை சரணடைதல், வள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் திருமணம், மகிசாசுரமர்த்தினி, ஆஞ்சநேயர் சிரஞ்சீவி மலையை எடுத்துச் செல்லுதல் போன்ற சிற்பங்கள் அமைந்துள் ளன. உசன் கந்தசுவாமி தேரின் நிர்மாண ஸ்தபதியாக விளங்கியவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியை சேர்ந்த செல்லையா கந்தசாமி (1920- 1998) ஆவார். இத் தேரின் அலங்காரச் சிற்பங்களில் சிலவற்றையும், விக்கிர சிற்பங்கள் அனைத்தையும் வடி வமைத்து வழங்கியவர் தமிழகத்தின் திரு விடை மருதூரைச் சேர்ந்த இரா.கோவிந்தராஜா எனும் சிற்பியாவார். இவர் இதே காலப் பகுதி யில் ஸ்தபதி நிலையில் நின்று கலையம்சம் மிக்க தேர்களை யாழ்ப்பாணத்து ஆலயங் களில் நிர்மாணித்தவராவார்.

**(கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி தேர் -1967)**

யாழ்பாணத்தில்தேர்கலை மரபொன்று எழுச்சி பெற்று வந்து ஆரம்பகாலப் பகுதியில் உருவாகிய தேர்களில் கோப்பாய் சித்திர வேலாயுத சுவாமி கோவில் தேரும் ஒன்றாகும். திருநெல்வேலியை சேர்ந்த வி.ஆறுமுகம் ஸ்தபதி குழுவினரால் நல்லூர் வீரமாகாளி யம்மன் கோவில் தேர் நிர்மாணத்தினை தொடர்ந்து நிர்மாணப்பணிகள் ஆரம்பிக் கப்பட்ட தேர்ப்பணி இதுவாகும். பின்னர் அவரது புதல்வர்கள் குழுவினரால் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட இத்தேர் 1967 இல் வெள் ளோட்டம் கண்டது. ஆறு சில்லுகளுடன் கூடிய மேல் விமானம் நிரந்தரமாக இணைக் கப்பட்ட இத்தேர் சிற்ப இலக்கணப்படி பெருந் தேர் வகையை சார்ந்ததாகும். மூன்று தள விமானத்தையும் சிகர அமைப்பில் கர்ணக் குடத்தையும் கொண்டுள்ள இத்தேர் எண் கோண திராவிட மரபுத் தேராகவும் அமை கிறது. சிறந்த சித்திரிப்பு திறன் கொண்ட அலங்கார சிற்பங்களையும் ஏகதள விக் கிரக சிற்பங்களையும் இத் தேர் கொண்டுள் ளது. அலங்காரச் சிற்பங்களாக குதிரை பறக்கும் குதிரை, யாழி, அன்னம் ஆகியன அமைந்துள்ளன.

விக்கிரக சிற்பங்களாக தெய்வ வடி வங்களான மூக்ஷிகவிநாயகர் வள்ளி தெய் வானை சமேத ஆறுமுகப்பெருமான் மயில் வாகனத்தில் காட்சியளித்தல், பழனியாண் டவர் திருக்கோலம், இடபாரூரராக சிவன் காட்சியளித்தல், குழலூதும் கண்ணன், நாய் வாகனத்தில் வைரவர் காட்சியளித்தல் மற்றும் முனிவர்கள், துவாரபாலகர்கள் சிற் பங்கள் அமைந்துள்ளன. கந்தபுராணத்துடன் தொடர்புபட்ட காட்சிகளாக தாரகன் சிங்க முகாசுரனுடனான முருகனின் போர், இந்திர மயிலில் முருகன் சூரபத்மனுடன் போர் புரிதல், சிவபெருமானுக்கு முருகன் உபதேசம் செய் தல் பிரமனை தலையில் குட்டுதல், தினைப் புனத்தில் முருகன் வள்ளி உரையாடல், விநாயகர் யானை உருவில் துரத்த வள்ளி வேதியரை சரணடைதல் ஆகிய சிற்பங்கள் அமைந்துள்ளன. சித்தூர் மட்டவிக்கிரக சிற்பங்கள் ஒப்பீட்டு ரீதியாக பெரிய அளவி லான சிற்பங்களாக அமைந்துள்ளன. ஆலய மூலஸ்தானத்தில் வேல் அமைந்துள்ளதால் தேரின் பல இடங்களில் வேலுடன் கூடிய இரு மயில்கள் என்ற அலங்காரச்சிற்பங்கள் அமைந் துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**(கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிதேர் 1983)**

ஆறு சில்லுகளுடன் கூடிய பெருந் தேர் வகையைச்சார்ந்து அமையும் இத்தேர் மூன்றுதள விமானத்துடன் கூடியதாகும். சிற்ப இலக்கண முறையில் அறுகோணமாக அமையும் இத் தேர் ஈழத்தின் முதலாவது அந்திர மரபு தேராகும். யாழ்ப்பாண கலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாணியில் உருவாகிய இத் தேரினை கலா கேசரி ஆ.தம்பித்துரை (1932 - 1994) ஸ்தபதி 1983ல் நிர்மாணித்திருந்தார் மிகச் சிறந்த செதுக்கு திறன் கொண்ட அலங்கார சிற்பங் கள் தேரில் அமைந்துள்ளன. விக்கிரக சிற் பங்கள் இரு தளங்களில் அமையும் சிறப்புக் குரியது. இத்தேரின் மணிமண்டப பகுதியில் பிரதான வாசல்கள் ஆறாகவும் ஒவ்வொரு கோணத்திலும் இடம் வலம் எனும் பகுதி களை இணைத்து உபவாசல்கள் ஆறாக வும் வரும் வகையில் பவளக்கால் தூண்கள் அமைக்கப்பட்டு சுவாமியேறும் வாசல் தோற்று விக்கப்பட்டமை ஒரு சிறப்பம்சமாகும். இவ் வகையில் அந்திரமரபை அடியொற்றி பிற் காலத்தில் அறுகோணத் தேர்கள் சில யாழ்ப் பாணத்தில் உருவாகியது குறிப்பிடத்தக்கது.

**(செல்வச் சந்நிதி முருகன் சிற்பப் பெருந் தேர் 1984)**

தொண்டைமானாற்றங்கரை செல் வச்சந்நிதி முருகன் கோயிலின் வேற்பெருமான் பவனி வருவதற்கு என 1984 இல் உருவாக் கப்பட்ட இச்சித்திரப் பெருந்தேர் இரு வருடங் களே மகோற்சவத்தில் பவனி வந்தது. 1986 ஆம் ஆண்டு ஈழப் போர் சூழலில் எரியூட்டி அழைக்கப்பட்டு தற்போது இல்லாது போய் விட்ட இத் தேர் அது காலவரையில் இலங் கையில் உருவாகிய மிகப் பிரம்மாண்டமான சிற்பப் பெருந் தேராக விளங்கியது. சுமார் 44 அடி உயர முடையதாக விளங்கிய இத்தேர் நாகரமுகபத்திர மரபில் அமைந்தது. அத் துடன் அடிப்படை வடிவமைப்பு, முகபத்திர மடக்கை மீட்பு, அடுக்குமானச் சிறப்பு, உறுதியான கட்டுமானம், சிற்பச்செழுமை மிகுந்த தளத்தோற்றம், செதுக்குத்திறன் மிகுந்த சிற்பங்கள், ஆலய பௌராணிகவி யல் வெளிப்பாட்டுச் சிற்பங்கள், உயிரோட்டம் நிறைந்த பெரிய முகப்புக் குதிரை பிரம்மா என்ற சாரத்திய அம்சம், தேரோவியம் ஆகியவற்றில் உயர்கலைத் திறனுடன் உருவாக்கப்பட்டதாகும். தேரின் தளமான அடிப்பாகத்திலிருந்து தேவாசனம் மற்றும் சிம்மாசனம் வரையுள்ள பகுதி தமிழக கலைப்பாணியில் உருவாகியதுடன் தேரின் மணிமண்டபம் விமானம் ஆகிய பகுதிகள் யாழ்ப்பாண கலைப்பாணியில் உருவாக் கப்பட்ட அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இரு கலைப்பாணிகளின் இணை வுடன் கூடிய கலைச்சங்கமமாக இத்தேர் திகழ்ந்தது. தேரின் தளப் பகுதியினை தமிழகத்தின் இராமநாதபுரம் மாலைகண்டான் எனும் ஊரைச் சேர்ந்த சோம லட்சுமணன் தலைமையிலான குழுவினர் உருவாக்கி இருந்தனர். தேரின் சிற்பங்களை வடிவமைத் தவர் சிறந்த சிற்ப வல்லுனரான ச.ஏகாம்பரம் எனும் சிற்பி ஆவார். தேரின் மேல் மண்டப விமானத்தின் தோற்றத்தினை வடிவமைத் தவராக மயிலிட்டியைச் சேர்ந்த சரவணமுத்து ஜெயராசா எனும் ஸ்தபதி விளங்குகின்றார். ஆலய பௌராணிக கலை வடிவில் உச்ச வெளிப்பாட்டுத்திறனை இத்தேர் கொண்டி ருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது ஆலய வரலாறு கூறும் புராணச் செய்திகளை யும் ஐதீகக் கதைகளையும் பௌராணிகக் கலை வடிவ சிற்பங்களாக தேரில் அமைக் கும் போக்கு யாழ்ப்பாணத்தில் நிலவியிருந் தது. அப்போக்கின் உச்ச வெளிப்பாட்டுத் திறனை இத்தேர் வெளிப்படுத்தி இருந்தமை யாழ்ப்பாணத் தேர்கலை வரலாற்றின் முக்கிய சிறப்பம்சமாக அமைகிறது. வீர பாகுதேவர் பூவரச மர நிழலில் வேல் வைத்து சந்தி கால பூஜை செய்தல், ஐராவசு கதிர்காமத்தில் சிகண்டி முனிவரை சந்தித்தல் தொண்டை மானாற்றங்கரை பூவரச மர நிழலில் ஐராவசு வின் தவ இருக்கை, வலை வீசி மீன்பிடிக்கும் மருதர் கதிர்காமரை முருகச்சிறுவன் மறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைக்கு வருமாறு அழைத்தல், மருதர் கதிர் காமர் முருகன் உரையாடல், முருகன் கதிர் காமரை கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்று பூசை முறைகளை காண்பித்தல், முருகன் கதிர்காமருக்கு வேல் கொடுத்தல், 65 ஆலம் இலைகளில் அமுது படைத்தல் ஆகிய பௌராணிக கலை வடிவ சிற்பங்கள் இத் தேரில் அமைந்திருந்தன. பின்னர் 2004இல் சந்நிதி வேற் பெருமான் பவனி வருவதற்கு என உருவாக்கப்பட்ட புதிய சிற்பக்கலைத் தேரிலும் இச் சிற்பங்கள் மீள உருவகிக்கப் பட்டமை சிறந்த வெளிப்பாட்டு அம்சமாகும்.

## செல்வச் சந்நிதி முருகன் கலைத்தேர் (2004)

ஆறு சில்லுகளுடனும் மூன்று தளச் சிற்பங்களுடனும் கூடிய இத்தேர் சுமார் 32 அடி உயரம் உடையதாகும். மூன்று தள விமானமும் மேற் சிகரமும் அமைந்துள்ளது. விமானத்தில்கந்தர்வர்கள் சிற்பங்கள் அமைந் துள்ளன. யாழ்கலைப் பாணியில் அமைந்த இத்தேரினை சரவணமுத்து ஜெயகாந்தன் எனும் ஸ்தபதி 2004 இல் நிர்மாணித்திருந் தார். எண்கோண திராவிட மரபில் இத்தேர் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 1984 இல் உரு வாக்கப்பட்ட சிற்பப் பெருந்தேரில் அமைக் கப்பட்டிருந்த ஆலய வரலாற்றியல் சிற்பங் களான பௌராணிக கலை வடிவச் சிற்பங் கள் இத்தேரில் மீள உருவகிக்கப்பட்டுள் ளமை சிறப்பு அம்சமாக உள்ளது.

## பல்கலை அம்சங்களின் சங்கமமாக முருகன் தேர்கள்

யாழ்ப்பாணத்தில் ஆலயங்கள் மறு மலர்ச்சி பெற்ற ஒல்லாந்தர் காலப்பிற்பகுதி யில் அமைக்கப்பட்ட தேர்களாக விளங்கு பவை நல்லூர் கந்த சுவாமி பழையதேரும் (1787) மாவிட்டபுரம் கந்தசுவாமி பழைய தேரும் (1789) ஆகும். இதில் நல்லூர் கந்தசுவாமி தேர் எண்கோண திராவிட மரபில் அமைய மாவிட்டபுரம் கந்தசுவாமி தேர் நாகர மரபில் தமிழக கலைப் பாணியில் அமைந்ததாகும். இத்தேரே முகோத்தர மகாரதம் எனும் நிலையில் அமைந்த முதல் இயற்தேராகும். பின்னர் 19 ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பட்ட தேர்களாக சுழிபுரம் ஈசுர விநாயகர் சுப்ரமணிய சுவாமியாகிய இரு மூலவரும் பவனி வந்த சிற்ப தேரும் (1840) மாதகல் நுணசை முருகமூர்த்தி பழைய தேரும் அமைகிறது. இவ்விரு தேரும் நாகர மரபில் அமைந்தவை. பின்னர் 20ஆம் நூற்றாண்டு காலம் முழுவதும் யாழ்ப்பாண தேர்கலை வரலாற்றில் பல கலை அம்சம் மிக்க தேர் கள் நிர்மாணிக்கப்பட்ட காலமாக அமை கிறது. 1939இல் உருவாக்கப்பட்ட கொக்கு வில் மஞ்சவனப்பதி முருகன் தேரே மேல் விமானம் நிரந்தரமாக இணைக்கப்பட்ட முத லாவது நாகர மரபுத் தேராகும். தமிழக கலைப் பாணியில் அமைந்த இத்தேர் இன்றும் மகோற்சவத்தில் பவனிவரும் சிறப்புக்குரி யது. காரைநகர் கருங்காலி போசுட்டி முருக மூர்த்தி தேர் 1940 களில் நிர்மாணம் ஆரம் பிக்கப்பட்டு தேர்தளத்தின் அரைவாசி பகுதி வேலைகள் நிறைவடைந்த நிலையில் இடை நிறுத்தப்பட்டிருந்தது இத்தேர் உருவாக்கப் பணியில் ஈடுபட்டவர் தமிழகத்தின் திருவிடை மருதூர் எனும் ஊரை சேர்ந்த சீ. சுப்பிரமணியம் எனும் ஸ்தபதி ஆவார். இவரே கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் தேர் நல்லூர் கந்தசுவாமி மஞ்சம் (1930) வட்டுக்கோட்டை அடைக்கலத்தோட்டம் கந்தசுவாமி மஞ்சம் (1960) ஆகியவற்றினையும் நிர்மாணித்தவ ராவார். நல்லூர் முருகன் பழைய தேரே மேல் விமானம் நிரந்தரமாக இணைக்கப்பட்ட முதற்தேராகும் என்பது குறிப்பிடத்தக்கது. 1964 இல் உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர் ஆகம மரபு சாராத மாடாலய முருகனுக் குரிய தேராகவும் ஆறுமுகசுவாமியின் இருப் பிடமான தேவாசனத்துடன் கூடிய சிம்மாசனம் ஆகம முறையில் அமைந்த தேராகவும் விளங்கு வது குறிப்பிடத்தக்கது. இப்புதிய சித்திரத் தேரே யாழ்ப்பாணத்து ஆலயங்களில் மகோற் சவ காலத்தில் நடைபெறும் தேரோட்டம் அல்லது தேர்ப்பவனி எனும் நிலையில் அழகி யலுடன் கூடிய கவர்திறன் வாய்ந்ததாகவும் பக்த தெய்வாம்ச உறவு நிலையில் அதிக ஈர்ப்பு திறன் வாய்ந்ததாகவும் விளங்கும் முருகன் தேராகும். யாழ்ப்பாணக் கலைப் பாணியில் அமைக்கப்பட்ட தேரில் தமிழக கலைப்பாணி மரபில் அமைக்கப்பட்ட விக் கிரகவியல் சிற்பங்கள் இணைந்துள்ளமையை உசன் கந்தசாமி தேர் நீர்வேலி கந்தசுவாமி தேர், சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி தேர் ஆகியவற்றில் காணலாம். இதில் உசன் கந்தசுவாமி தேர், நீர்வேலி கந்தசுவாமி தேர். சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி தேர் ஆகிய மூன்றிலும் மிகுந்த சிற்பச் செதுக்கு திறனும் உருவகத்திரட்சியும் கொண்ட சிற்பங்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் உருவாகிய பல தேர்களிலும் இவ்விரு கலை மரபுகளின் இணைவினை அவதானிக்கலாம். தமிழக கலைப்பாணி யாழ்ப்பாண கலைப்பாணி என்னும் இருகலைப்பாணி மரபினையும் இணைத்து அமைக்கப்பட்ட தேராக தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் சிற்பப் தேர் பெருந் தேர் (1984) அமைந்திருந்தது. தேரின் தளப் பகுதி தமிழக கலைப்பாணி மரபிலும் மணி மண்டபம் மேல் விமானம் என்பன யாழ்ப்பாண கலைப்பாணி மரபிலும் அமைக்கப்பட்டது. இரு கலைப்பாணி மரபுகளின் கலைச் சங்க மத்தினை இத்தேர் கொண்டு விளங்கியிருந் தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பௌ ராணிக கலை வடிவ சிற்பங்களின் உச்ச வெளிப்பாட்டுத் திறனையும் இச்சிற்பப் பெருந்தேர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக் கது. கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி தேரே ஈழத்தில் முதன்முதல் அமைக் கப்பட்ட சிற்ப இலக்கணம் கூறும் அறுகோண மாக அமையும் அந்திரமரபுத் தேராகும். பிற் காலத்தில் இம்மரபினை அடியொற்றி சில தேர் கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறு அந்திரமரபில் அறு கோணமாக அமை யும் இன்னொரு தேராக அராலி வடக்கு மயி லியற்புலம் கந்தசுவாமி தேர் (2008) விளங்கு கிறது. ஆறு சில்லுகளுடன் கூடிய விமானத் தில் கந்தர்வர்கள் அமைந்த முதலாவது யாழ் கலைப்பாணித் தேராக 2004 இல் நிர் மாணிக் கப்பட்ட செல்வச் சந்நிதி முருகன் கலைத் தேர் விளங்குகின்றது. இவ்வாறு யாழ்ப்பாணக் கலை வரலாற்றில் பல்கலை அம்சங்களும் மிளிரும் தேர்களாகவும் பல்கலை அம்சங் களும் இணைந்து கலைச் சங்கமமாக விளங் கும் தேர்களாகவும் பல முருகன் ஆலயத் தேர்கள் விளங்குகின்றமை கலைப் பாரம் பரியத்தின் பெருமையையும் வலிமையை யும் பறை சாற்றுவதாக அமைகிறது.

### உசாத்துணைப்பட்டியல்



1. அம்பிகைபாகன் வே.கலாகேசரி ஆ.தம்பித்துரை, காங்கேயன் கலைக் கோட்டம், உடுப்பிட்டி யாழ்ப்பாணம் 2000.
2. அம்பிகைபாகன் வே.மகாஸ்தபதி கோவிந்தரஜீபன் தேர்த்திறன் தென்னிந் திய சமூக விஞ்ஞான நிதியம் இணைந்து காங்கேயன் கலைக் கோட்டம் உடுப் பிட்டி யாழ்ப்பாணம் 2009.
3. அம்பிகைபாகன் வே.செல்வச்சந்நிதி முருகன் கலைத்தேர், சிவன் பவுண்டே சன் யாழ்ப்பாணம் 2015.
4. நேரடி கள ஆய்வுத்தகவல்கள் 2025.
5. அறிஞர்கள் தேர்நிர்மாணக் கலைஞர்கள் ஆகியோரின் வாய் மொழிமூலத் தகவல் கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசாமி கோவிலின் உலகப் பெருமஞ்சம்

**சைவப்புலவர் சைவ சிந்தாந்த பண்டிதர்**
**சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன்**
(BA, MA, MED, PGDE, PGDEM, SLEAS)
ஓய்வு நிலை திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர், இணுவில், யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதியில் 7 கி.மீற்றர் தூரத்தில் இணுவில் பெரும்பதி அமைந்துள்ளது விவசாயம், கல்வி, கலைகள், ஆலயங்கள், குடிசைக் கைத்தொழில், நெல் அரிசி ஆலைகள், பிரபல்யமான இராமநாதன் மகளிர் கல்லூரி உட்பட்ட பல பாடசாலைகள் புகழ் பெற்ற மெக்லியோட் வைத்தியசாலை (1950 - 1980 களில் சிறந்த மகப்பேற்று மருத்துவமனை), புகையிரதப் பாதை, புகையிரத நிலையம், வளமான மண், தரைக்கீழ் நீர்ச்சிறப்பு, ஞானியர், சித்தர்கள் வளம்படுத்திய பெருமை களைக் கொண்டமைந்தமையால் வரலாற் றுக் காலம் முதல் யாழ்ப்பாண மன்னர்கள் ஆட்சி செய்த காலத்திலும் இன்று வரையும் பல சிறப்புக்களைக் கொண்டதுடன் காலத் திற்கேற்றவகையில் பல படிநிலை வளர்ச்சி களையும்கடந்துபெருமையுடன்திகழ்கின்றது.

இவ்வாறான பெருமைகளுள் இணு விலின் மத்தியாகக் கொள்ளக்கூடிய நிலை யத்தில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், செகராச சேகரப் பிள்ளையர் கோயிலுக்கு நடுவே அமைந்திருப்பது இணுவில் கந்த சாமி கோவிலாகும் யாழ்ப்பாணம் காங் கேசந்துறை வீதியில் கோயில் வாசல் எனும் பஸ் தரிப்பிடம் கந்தசாமி கோவில் வாசல் என்ற பெருமைக்குரியதாக விளங்குகிறது.

14 ஆம் நூற்றாண்டில் இணுவில் கந்தசாமி கோயில் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது தமிழ்மன்னர்கள் ஆட்சிக்காலத் தில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த கனகராச முதலி என்பவர் ஆலயம் அமைப்பதற்கு ஆவன செய்ததாக கர்ண பரம்பரைக்கதை கள் கூறுகின்றன.

இணுவில் சிவனடியாரான குழந்தை யர் வேலாயுதர் அருணாசலம் என்பவர் இக் கோயில் அமைவிற்கு உதவினார் என்று மா.பொ.செல்வரத்தினம் என்பவர் வரலாற்றில் இணுவில் மஞ்சம் எனும் நூலில் குறிப்பிடு கிறார். இவர் 1983 களில் யாழ்ப்பாணப் பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பொருள் துறை அதிகாரியாக இருந் தவர்.

இறைவன் முருகனே நொச்சி மரம் அடையாளமாக இருக்கும் இடத்தில் கோயி லமைக்குமாறு பக்தர் ஒருவரின் கனவில் தோன்றிக் கூறியதாக அறிய முடிகிறது. இவ் வாலயத்தில் நொச்சிமரம் தல விருட்சமாக அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். ஆரம்பத்தில் குடிசையாக அமைக்கப்பட்டுப் பின்நாட்களில் படிப்படியாக வளர்ச்சியடைந்து, இன்றைய நிலையை அடைந்திருப்பதை நாம் காண்கின்றோம்.

ஆனி அமாவாசையைத் தீர்த்தத் திருவிழாவாகக் கொண்டு இருபத்தைந்து தினங்கள் மகோற்சவம் வருடம் தோறும் நடைபெறுகிறது. பகல் இரவுத் திருவிழாக் கள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. உள்வீதிவலம், விசாலமான வெளிவீதியில் இரவுத் திருவிழா வீதிவலம் வரும் காட்சி மிகச் சிறப்பாக அமைந்திருக்கும். ஆலயச் சூழலிலே சோடச உபசரணைகள் செய்வோர். தவில், நாதஸ்வரக் கலைஞர்கள், தேவார திருவாசகங்கள் புராணங்கள் படிப்போர் இருப் பதால் அவர்களது செயற்பாடுகள் அர்ப்பணிப் புகள் படிப்புக்கள் ஆலயத்தில் மிகச் சிறப் பாக அமைந்திருக்கும். திருவிழாக் காலங் களில் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. மிக நீண்ட காலமாக இப்பணி நடைபெறுகிறது. அந் தணச் சிவாச்சாரியார்களால் பூசைகள் திரு விழாக்கள் மிகவும் சிறப்பாகச் செய்யப்படு கின்றன.

இவ்வாலயத்தின் சிறப்பை மேலும் பெருமைப்படுத்துவது இவ்வாலயத்தின் பெரு மஞ்சமாகும் ஆலயம் மிகப்பழமையானது எனினும் 1900 ஆண்டுகளில் இங்கு மஞ்சம் உருவானது இணுவில் அரசோலையில் வாழ்ந்த கந்தர் தெய்வானை தம்பதியின ருக்கு பெற்றோர் தவப்பயனாக அவதரித் தவர் சுப்பிரமணியம் எனும் இயற்பெயரைக் கொண்டு விளங்கிய சித்தர் பெருமையைக் கொண்டு விளங்கிய பெரிய சந்நியாசியார் (1860-1917)



விவசாயத்துக்கு உகந்த நிலமாக இணுவில் மண் அமைந்தமையால் 90% மானோர் விவசாய செய்கையில் ஈடுபடுவது அக்காலத்து நடைமுறையாக இருந்தது. அந்த மரபில் பெரிய சந்தியாசியார் இளமைக் காலத்தில் இணுவில் கிழக்கு காரைக்காலில் மாடுகளை மேய்ப்பது இவரின் அன்றாட பணியாக அமைந்தது. இவரின் தாயார் எந்த நாளும் அவருக்கு மதிய உணவு கொண்டு வந்து கொடுப்பார். ஒருநாள் தாயார் வரப்பிந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தியது மாரியம்மன் தாய் போன்று வந்து உண வளித்ததாகக் கதைகள் மூலம் அறிகிறோம். பின்னர் தாயார்வந்து பார்த்து இந்நிகழ் வினைப் பெரும் பேறாக எண்ணி மகிழ்வடைந் தார். இச்சம்பவத்தினால் சுப்பிரமணியம் எனும் இயற் பெயரைக் கொண்ட சந்நியாசியார் ஞானம் பெற்று மிக மகிழ்வடைந்து ஆடினார், பாடினார், களிப்படைந்தார். தாயும், மகனும் சேர்ந்து மாரியம்மனின் அற்புதத்தை அறிந்து மாரியம்மனைப் போற்றித்துதித்து சந்நியாச நிலையிலிருந்து தம்மிடம் வருபவர்களுக்கு விபூதி கொடுத்து உடல், உள நோய்களை இறையருளாள் தீர்த்து வைத்த பெருமைக் குரியவராக வாழ்ந்தார்.

சித்தராக விளங்கிச் சித்தமருத் துவம் மூலம் வைத்திய சேவையை வழங் கினார். சமய சமூக பணிகள் செய்து வந்தார். காரைக்கால் சிவன் கோயிலைக் கட்டுவித்து காரைக்கால் முதல் மஞ்சத்தடி ஊடாகக் இணுவில் கந்தசாமி கோவில் வரை பெரு வீதி அமைத்தார். முருகப் பெருமான் சந்நி யாசியாரின் கனவில் தோன்றி மஞ்சமைக்குமாறு பணித் தமையால் மஞ்சம் செய்வதற்கான செயற் பாடுகள் ஆரம்பித்தன. 1902 இல் மஞ்சம் செய் வதற்கு தேவையான பொருத்தமான மரங் கள் ஊர்மக்களின் உதவியுடன் வெட்டப் பட்டு, பெரிய சந்நியாசியாரின் இல்லத் திற்கு அண்மையில் வைக்கப்பட்டன. இந்தியாவி லிருந்து இறை அநுகிரகத்தினால் சிற்பிகள் சிற்பாசாரியார்கள் கடற்பயணமாக வந்து சேர்ந் தமையால் 40 அடி உயரமுடைய மஞ்சம் மிக வும் சிறந்த முறையில் சாத்திர விதிமுறை களுக்கு அமைவாக செய்யப் பட்டது.

இம் மஞ்சத்தில் உயரம் மட்டுமல்ல, அகலம், அமைப்புமுறை, அடியில் உயர்ந்த சக்கரங்கள், ஆழமான கீழ்ப்பகுதி, அகல மான பீடப்பகுதி, உயரமான கோபுரம் போன்ற தோற்றம்கொண்ட உச்சிப்பகுதி மிகப்பிரமாண்ட மான முறையில் செய்யப்பட்டுப் பராமரிக்கப் பட்டு வருகிறது. மஞ்சத்திலே சிற்ப வேலைப் பாடுகளையும் சிற்பிகள் தம்மை அர்ப்பணித்து சிற்பக்கலை வல்லுநர்களாக அவர்கள் விளங் கியமையால் உயிரோட்டமான சிற்பங்களை நாம் காண முடிகிறது கீழ்ப்பகுதியை தெய் வீகக் காட்சிகள் அலங்கரிக்கின்றன.

புராண இதிகாசக் கதைகள் சிற்பங் களாக செதுக்கப்பட்டுள்ளன. பிரமா, விஸ்ணு, இந்திரன், விநாயகர் உருவங்கள் அவர் களுக்குரிய இலட்சண விதிகளுக்கமைவாக செய்யப்பட்டுள்ளன. பாயும் குதிரைகள் மஞ் சத்தை இழுத்துச் செல்லும் பாங்கில் வடி வமைக்கப்பட்டுள்ளன.

மஞ்சத்தின் மேற்பகுதியில் சேவல், மயில், கிளி, வனஜீவராசிகள், ஆறுபடைவீடு கள், இறைவன் திருவிளையாடல், காட்சிகள் காணப்படுகின்றன. விமானப்பகுதியில் முருகப் பெருமானின் திருவிளையாடல்கள், முருகப் பெருமானைத் தரிசிக்க வந்த தேவர்கள் மலர் தூவி மாலையிட்டு வணங்கும் காட்சி கள் வாய்வார்த்தைகளால் விபரிக்க முடியாத அம்சங்களாக விளங்குகின்றன. வெள்ளைச் சேவலொன்று காலைக் கதிரவன் வருகை யைக் காட்டும் வகையில் கூவும் காட்சியானது அனைவரையும் பிரமிக்க வைக்கிறது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தேவையானபொருட்கள் சிற்பாசாரியர்கள், ஆர்வமுள்ள பணியாளர்கள் ஒன்றிணைந்து இணுவைக்கந்தன் அருளால் பெரிய சந்நி யாசியார் மிகச் சிறந்த மஞ்சமொன்றைப் பல்வேறு சிறப்புக்களும் விளங்கும் வண்ணம் இன்று வரை உலகப்பெருமஞ்சமாக அமைத்து இணுவிலுக்கும் இணுவைக்கந்தப் பெரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுக்கும் இணுவை மக்களுக்கும் சித்தராக விளங்கிய பெரிய சந்நியாசியார் தனக்கும் பெரும் பேறாக காலத்தின் வெளிப்பாடாக இப் பெருமஞ்சத்தினை அமைத்தார். 1906 இல் வெள்ளோட்டம் கண்டு அதே வருடம் தைப் பூசத்தினத்தில் இப் பெருமஞ்சம் வீதி வலம் வந்ததென்று கூறப்படுகிறது. இன்றும் இப் பெரு மஞ்சம் தைப்பூசத் திருநாளன்றும் வருடாந்த மகோற்சவ விழாவில் 12 ஆம் நாளிலும் வீதி வலம் வரும் காட்சி மிக அற்புதமானது 1960 களில் இம்மஞ்சம் ஓட முடியாத நிலையில் இருந்தமை கண்டு இவ்வூர் முருக அடியாரும் கல்கி நிறுவன உரிமையாளருமான திரு. சி.சின்னத்துரை அவர்களும், ஊர்ப்பெரிய வர்களும் சேர்ந்து புனருத்தாரணம் செய்து மீண்டும் வீதியுலா வந்தது. மிக அண்மைக் காலங்களில் மேலும் மெருகூட்டப்பட்டு, வர்ணங்கள் பூசப்பட்டு, மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு முருகப்பெருமான் வலம் வரும் காட்சி மிக அற்புதமானது. இணுவில் மக்கள் மட்டுமல்லாது அயலூர்கள், குடா நாட்டின் பல பாகங்களிலுமிருந்து அடியார் கள் மஞ்சம் காண வருவது சிறப்பானது.

மஞ்சம் உருவாகிய காலத்திலிருந்து அகல வீதிகள் காணப்படுகின்றன. மஞ்சமும் வீதிகளும் காலத்துக்கு காலம் முருகன் அருளால் முருகனடியார்களால் புது மெரு கூட்டப்பட்டு மிகச் சிறப்பான காட்சியாக அமையும் தைப்பூசதினத்திலும் மகோற்சவ 12 ஆம் திருவிழாவன்றும் இரவில் மஞ்சம் இழுக்கப்படுகிறது. வழமையை விட மஞ்சத் திருவிழா மஞ்ச வீதியுலாவிற்குப் பெருந் தொகையான அடியார்கள் வந்து முருகன் அருள் பெற்றுச் செல்வதனை நாம் காண் கிறோம். இந்த அரும்பெரும் செயலைச் செய்த பெரிய சந்நியாசியாரின் திருவுருவம் ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ளது. மஞ்சத் திலே 1008 மணிகள் பூட்டப்பட்டுள்ளன மஞ்சம் அசைந்து வரும் போது மஞ்சத்தின் விமான, பீட அசைவுகளின் போது ஒலித்துக் கொண் டிருக்கும் மணிகள் மிகவும் அற்புதமான காட்சி யாகும். பிற மாவட்ட மக்கள், வெளி நாட்டவர் கள், சுற்றுலா வருபவர்கள் மஞ்ச நாட்களில் வந்து ஆலய தரிசனம் செய்வர்.

வீதிவலம் வரும் போது தவில் நாதஸ் வர கலைஞர்கள் தமது கச்சேரியை நடத்து வர். சாம்பிராணி, அகில், புகை நறுமணங்கமழ, பக்தர்களின் அரோகரா கோசங்கள், கற்பூரச் சட்டி எடுப்பவர்கள் மஞ்சத்தின் முன்னாலும், பின்னாலும் வரும் காட்சி அற்புதமானது.

நாம் வாழும் காலத்தில் காணக் கூடிய இப் பெருமஞ்சக்காட்சி எம் மெல்லோர்க் கும் நிறைவைக் தருகிறது. இந்தக் கலைப் பொக்கிசமான மஞ்சம் மேலும் ஆராய்ச்சி செய்யப்பட்டு இதில் உள்ள பல விடயங்கள் அறிந்து கொள்ள வேண்டும். இப் பெருமஞ்சம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். உலகப் பெரு மஞ்சத்தைப் போற்றுவோம் வணங்கு வோம் நாமும் பிறரும் மண்ணில் நல்ல வண் ணம் வாழ்வோம்.

**உசாத்துணை நூல்கள்**

1. சிவலிங்கம் மு கலாபூசணம், இணையிலி, ஈஸ்வர் பிரிண்டேர்ஸ் திரு நெல்வேலி 2013
2. சிவலிங்கம் மு கலாபூசணம், இறையருட் சித்தினால் செயற்கரிய சேவையை நிலைநாட்டிய சான்றோர் கள், சுடர்நிலவு கிறபிக்ஸ் இணுவில் 2023
3. செல்வரட்ணம் ம.பொ, வரலாற்றில் இணு வில் மஞ்சம் கையேடு 1983



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உலகில் இந்துசமயம்

**பா.பிரசாந்தன்**

உனது ஆன்மாவை விட உனக்கு வேறு ஆன்மீக ஆசான் தேவையில்லை" என்பது சுவாமி விவேகானந்தரின் கருத்து. இதனையே ஒவ்வொரு மனிதனின் உள்ளேயும் கடவுளைக் காணலாம் என இந்துசமயம் கூறுகிறது. அதன்படி மனித வாழ்க்கை முறை, மனித நடத்தை, ஒழுக்கம் மனித செயல் இவை யாவும் நன்நோக்கத்துடன் திரிகரண சுத்தியோடு சிறப்பாக இருக்குமிடத்து மனிதனாக வாழ்பவன் கடவுளை கண்டறிய முடியும். மேலே சொல்லப்பட்டவாறு வாழ்ந்த இந்துமார்க்கத்தை சேர்ந்த ஞானிகள், சமய குரவர்கள், சித்தர்கள், முனிவர்கள் மற்றும் சமய வழிப்படுத்துநர்கள் எனப் பலரை எமது இந்து சமயம் கொண்டு விளங்குகின்றது. சமயநெறி முறையுடனான வாழ்க்கையை தான் மகான்களும், ஞானிகளும் வாழ்ந்து காட்டினார்கள். சிந்துவெளி நாகரீகத்தில் கண்டறியப்பட்டதும் தனியொருவரால் உருவாக்கப்பட்டதுமல்லாத மிக தொன்மை வாய்ந்த இந்து சமயத்தில் ஆன்மீகம், தத்துவங்கள், வாழ்வியல், விஞ்ஞானம், கலை, கலாச்சாரம், மருத்துவம் , சுகாதாரம், அன்பு, கருணை, மனித உரிமைகள் எனப் பலதரப்பட்ட விடயங்கள் பொதிந்திருப்பதனை காண முடிகின்றது.

மனித வாழ்க்கைக்கு சமய நம்பிக்கை ஒரு பற்றுக்கோடாக அமைகின்றது. அந்த வகையில் சமய மார்க்கங்கள் பலதாயினும் இறைவனடி சேர்ந்து ஆன்ம ஈடேற்றம் அடைவதே ஒரே நோக்காக எல்லா சமய மாரக்கங்களும் அவற்றை பின்பற்றுநர்களுக்கு எடுத்துக் கூறிகின்றன என்றாலும் தொன்மையானதும் சிறப்புமிக்கதுமானதுமான இந்து சமயமானது காலங்கள் கடந்தும் எக்காலத்திற்கும் பொருந்துவனவான விடயங்களை தன்னகத்தே கொண்டுள்ளது என்றால் அது இந்து சமயத்திற்கு மட்டுமே உரித்தான சிறப்பம்சம் எனலாம். அந்தவகையில் இயற்கையை விஞ்சி விஞ்ஞான தொழில் நுட்பங்களின் அபரீதமான வளர்ச்சியில் மூழ்கியிருக்கின்ற தற்கால நவீன வாழ்க்கை முறையிலும் மனித வாழ்விற்கு அவசியமான பல்வேறு அம்சங்களை இந்து சமயம் கொண்டுள்ளதனை நாம் அவதானிக்க முடிகின்றது.

**மீளுருவாக்கம் மற்றும் மறுசீரமைப்பு**

நூற்றாண்டுகளைத் தாண்டியும் காலச்சார பின்பற்றுதல் மற்றும் தத்துவங்கள் வாயிலாக தன் சமயத்தவர்களை நல்வழி நடத்துகின்ற இந்து சமயமானது 19ஆம் , 20 அம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட சமூக பிரச்சனைகளைத் தீர்க்கும் மற்றும் ஆன்மீக வளர்ச்சி ஆகிவற்றினைத் தூண்டும் பல இந்து சீரமைப்பு இயக்கங்ளைக் கொண்டிருந்தது. அந்தவகையில் சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி, அரவிந்தர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

ராஜாராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி போன்றோரின் வழிப்படுத்தல்களினால் இந்து சமயத்தவர் மத்தியில் புரை யோடிக் கிடந்த பல ஆன்மீகம்சார்ந்த, கலாச்சாரம் சார்ந்த, சமுதாயம் சார்ந்த மற்றும் கல்வி சார்ந்த தடைகள் நீக்கப்பட்டது. இதன்படி மேலைத்தேய கலாச்சார, சமய ஈடுபாட்டி னால் கட்டுண்ட மக்களை மீளுருவாக்கம் செய்யவும் இந்து சமயத்தை மறுசீரமைப்பு செய்வதற்கும் பல்வேறுபட்ட செய்றபாடுகள் முன்னெடுக்கப்பட்டது. இந்தவகையில் இந்த சமய மீளுருவாக்கப் பணியில் இலங் கையில் ஆறுமுகநாவலர், சுவாமி விபுலானந் தர் போன்றோரின் பங்களிப்பும் கவனிக்க தவற முடியாதவையாகும்.

**மதங்கள் இடையான தொடர்பாடல்**

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து ஞானியர், அடியார்கள், பக்தர்கள் உள்ளம் உருகி ஆற்றிய வழிபாடுகளும் பூசைகளும் ஆராதனைகளும் புரிந்த இடங்கள் திருக் கோயில்களாகும். ஏவ்வாறாயினும் நவீன காலத்தில் இந்து சமயத்தில் திருக்கோயில் வழிபாட்டினை தவிர இறை பக்தியை அடிப் படையாகக் கொண்டு பல ஆன்மீக நிறு வனங்கள், சங்கங்கள் இயங்கிவருகின்ற தோடு அவற்றிற்கு உலகளாவிய கிளை களும் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக சின்மயா மிஷன், இராமகிருஸ்ண மிஷன், பகவான் சத்தியசாய் பாபா சமித்தி, பிரம்மகுமாரிகள் ஆசிரமம், எனப்பல நிறு வனங்கள் ஆன்மீக விருத்தி செயல்பாட்டில் ஈடுபடுகின்றன. இந்நிறுவனங்கள் இந்து சமயத்தின் வேத இதிகாசங்கள் மற்றும் இலக்கியங்களில் கூறப்பட்ட கட்டமைக்கப் பட்ட வழிபாட்டு முறைகளைத் தவிர்த்து தியானம், சேவை செய்தல், சற்சங்கம் நடாத் தல், பஜனை, நாமஸ்மரணை போன்ற செற்பாடுகளினால் மக்களை நல்வழிப்படுத் தும் முயற்சியில் இறங்கியுள்ளன. இவ்வா றான ஆன்மீக செய்ற்பாடுகளில் சமயம், இனம் என்பவற்றைக் கடந்து இணைந்து கொள்ள மேற்படி நிறுவனங்கள் வழி அமைத்துக் கொடுக் கின்றன. இதன் வாயிலாக உலகில் வாழ்கின்ற எல்லா சமயத்தவரும் எத்தகைய தடைகளும் இன்றி இந்து சமய தத்துவங்களை அறிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. தற்கால நவீன யுகத்தில் மேற்கத்தய கலாச்சாரத்தை சேர்ந்தவர் களும் கத்தோலிக் சமயத்தை பின்பற்று பவர்களும் ஆன்ம ஈடேற்றம் வேண்டி மேற் சொன்ன ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டு வரு கின்றமையையும் பாரத தேசத்திற்கு யாத் திரை மேற்கொள்கின்றமையையும் காண முடிகின்றது. அத்துடன் இந்து சமயத்தில் பிறப்பால் வேற்று மதத்தவரான பல துறவி கள் ஆன்மீக சேவை செய்து வருகின்றனர்.

இவை தவிர மிகப்புராதன காலத்தில் பாரத தேசத்தையும் தாண்டி இந்து சமயம் மிகக்குறைந்தளவில் பின்பற்றப்படுகின்ற நாடுகளில் அக்கால மன்னர்களால் அமைக் கப்பட்ட இந்து கோயில்கள் இன்றும் அந் நாடுகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றமை யானது இந்து சமயத்தின் தொன்மையை மட்டுமல்லாது இந்து சமயத்திற்கு வேற்று மத நாடுகளில் காணப்படுகின்ற மகத்துவத் தினையும் எடுத்துக்காட்டுகின்றது. அந்த வகையில் ஆசியா, தென்கிழக்காசியா, ஐரோப்பா மட்டுமன்றி இஸ்லாமிய சமய மக் கள் வாழ்கின்ற அரேபிய நாடுகளிலும் இந்து மதம் செழிப்புற்று இருப்பதனை அந்தந்த பிரதேசங்களில் பிரமாண்டமாக அமையப் பெற்றுள்ள இந்துக் கோயில்களையும் இந்து சமயம்சார் ஆன்மிக வழிகாட்டும் நிறுவனங் களையும் ஆதாரமாகக்கொண்டு கண்டுணர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. இதற்கு மகுடம் சூட்டும்வகையில் மிக அண்மையில் அபுதாபி நாட்டில் இந்துக்கோயில் அமைப்பதற்கு இடமளிக்கப்பட்டமையானது இந்து சமயம் ஏனைய சமய மார்க்கங்களுடனான சிறப்பான தொடர் பாடலைக் கொண்டிருக்கின்றமையே காரணம் எனலாம். இதேபோல ஓமான் நாட்டில் கிருஸ்ணர் மற்றும் சிவன் கோயில்கள் இருப்பதும் பகரேன் நாட்டில் குருவாயூரப்பன் கோயில் அமைந்திருப்பதும் மேற்சொன்ன விடயத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பனவையாகவுள்ளன. இத்தகைய சமயம் சார் விடயப் பரம்பலானது இந்துசமயம் பல்வேறு மதங்களுக்கு இடையிலே புரிந்து கொள்ளல் மற்றும் ஒத்துழைப்பினை வளர்த்துள்ளது என்பது ஏற்க்ககூடியதாகும். எனவே இந்து சமயம் தற்கால நவீன யுக்தில் ஏனைய மதங்களுடன் தொடர்பாடல்களை மிக வலுவாகக் கொண்டுள்ளது என்பது கண்கூடு.

### இந்துக்குடியேற்றம்

தற்காலத்தில் திரைகடலோடியும் திரவியந்தேடும் என்ற கருத்திற்கமைய இந்துக்கள் குறிப்பாக இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த இந்துக்கள் தமது தாய் நாட்டை விட்டு தனியாகவும் குடும்பமாகவும் வாழுந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான இந்துக்களின் உலகளாவிய பரம்பலானது இந்து மதத்தின் பரம்பலுக்கு வழியமைத்தமைக்குப்பிரதான காரணமாகும். அதாவது தாம் வாழ்கின்ற பிரதேசங்களில் கோயில்களை அமைத்து வழிபாட்டுகளையும் சடங்குகளையும் மேற்கொள்வதனால் இந்துகலாசாரம் மற்றும் பாரம்பரியங்களையும் பரப்புவதற்கு உபயோகமாயுள்ளது. அந்த வகையில் ஐரோப்பிய நாடுகளானாலும் சரி அவுஸ்ரேலியாக் கண்டத்தினாலும் சரி இந்துக் கோயில்கள் பல நிறுவப்பட்டு நித்திய கிரியைகள் நடாத்தப்படுவதும், வருடாந்த திருவிழாக்கள் நடாத்தப்படுவதும் தேர் இழுத்து பால்குடம் ஏந்தி காவடி எடுத்து இந்து சமயம், கலாச்சாரம் என்பன பேணப்படுவதும் மற்றும் குறித்த கோயில் களில் தைப்பூசம், ஆடிப்பூரம், ஆடிப்பிறப்பு, நவராத்திரி விழா போன்ற விசேட தினங்கள் அனுஸ்டிக்கப்படுதலும் நவீன காலத்தில் இந்துக்களின் உலகளாவிய குடியேற்றங்களால் ஏற்பட்டதாகும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் பண்டைய காலம் தொட்டு இந்துக்கள் வாழ்ந்து வருகின்ற இந்தோனேசியா, மலேசியா, மொரீசியஸ் தீவு போன்ற நாடுகளில் இந்து சமயம் பின்பற்றப்பட்டு வந்திருந்தாலும் ஒப்பீட்டளவில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் எங்கும் பரவி வாழ்கின்ற இந்திய நாட்டு இந்துக்கள் மற்றும் இலங்கையைச் சேர்ந்த இந்துக்கள் இந்துக் கோயில்களை நிறுவி இந்து சமயம் செழிப்பாக வளர்ப்பது நவீன காலத்திலாகும்.

### இந்துக்களின் வாழ்க்கை முறைமை

இந்து சமயத்தவர்க்கென்று தனித்துவமான வாழக்கை முறைகள் இருப்பது எல்லோரும் அறிந்தததே. குறிப்பாக சமயம் சார்ந்த விழுமியங்களோடு பின்னிப் பிணைந்ததாக இந்துக்களின் வாழ்கை முறைமை காணப்படுகின்றது. வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பதிலும் இந்துக்களின் வாழ்வில் சமயம் என்பது தவிரக்க முடியாததாக அமைந்துள்ளது. குழந்தை பிறப்பு முதல் பருவமடைதல், கல்வி கற்றல், திருமணம், புதுமனை புகுதல், புதிய வியாபாரம் ஆரம்பித்தல், முதியோரைப் பேணல் மற்றும் அவர்களின் ஆசீர்வாதம் பெறுதல் இறுதியாக இறப்பு என வாழ்வின் எல்லா காலத்திலும் இந்துக்களின் வாழ்வில் சமயம் பின்னிப்பிணைந்துள்ளது. இதில் சிறப்பம்சம் என்னவெனில் இத்தகைய சமய வாழ்க்கை முறையினை காலாதி காலமாக இந்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றி வருகின்றமையாகும். தேசத்திற்குத் தேசம் சமய சடங்கு முறைகள், வழிபாட்டு முறைகள் வேறுபட்டிருந்தாலும் இந்துக்கள் தமது கடவுளர்களை முதன் மைப்படுத்தி வாழ்க்கையினைக் கொண்டு நடாத்தி வருகின்றமையும் தமது பரம்பரைக்கும் குறித்த சிறப்பு மிக்க வாழ்க்கை முறையினை கடத்தி வருகின்றமையையும் இன்று வரை கண்டு கொள்ள முடிகின்றது.

இந்தவகையில் நோக்குகின்ற போது தமது தாய் நாட்டை விட்டு பிற தேசத்தில் வாழ்கின்ற இந்துக்கள் தற்கால நவீன விஞ்ஞான உலகிலும் தமது சமயம் சார் வாழ்க்கை முறையினையும் சடங்குகளையும் தவிர்ப்பது கிடையாது என்பது சிறப்பித்துக் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது குழந்தை பிறப்பின் பின் துடக்கு கழித்தல் தொடக்கம் பூப்புனித நீராட்டு விழா நடாத்துதல் உட்பட மரணச் சடங்குகள் முப்தொராம் நாள் பூசை செய்தல், பிதிர்கடன்கள் மேற்கொள்ளல் எனப் பல்வேறு சமயம் சார் சடங்குகளை புலம்பெயர்ந்து வாழ்கின்ற இந்து சமயிகள் பின்பற்றுகின்றார்கள். இவற்றிற்கு இணையாக இந்திய இந்துக்களும் தாம் வாழும் தேசங்களில் தமது கலாச்சாரத்திற்கிணங்க சமயச் சடங்குகளை தமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் செய்வதனைத் தவிர்ப்பதில்லை. அந்தவகையில் தசரா விழா, ஹோலிப் பண்டிகை போன்ற விழாக்கள் மேற்கத்தய நாடுகளில் கொண்டாடப் படுவதும் அவற்றின் தொடர்ச்சியாக தீபாவளித் திருநாள் குறித்த நாடுகளின் அரச நிகழ்வாக கொண்டாடப்படுவதும் நவீன காலத்தில் இந்துசமயத்தின் இருப்பிற்கும், தனித்துவத்திற்கும், மகோன்னதமான வளர்ச்சிக்கும் சிறப்புமிக்க எடுத்தக்காட்டுக்கள் என்றால் அது மிகையாகாது.

**தியானம், யோகாசனம் - உலகளாவிய செல்வாக்கு**

இன்று இந்துசமயம் உலகம் முழுவதும் வியாபித்திருப்பது யாவரும் அறிந்ததாகும். இந்துசமயிகளின் வாழ்வினை மேம்படுத்தவதற்கு இந்துசமயத்தின் முனிவர்களும், சந்நியாசிகளும், சமய குரவர்கள், ஆழ்வார்கள், யோகிகள் போன்றோர் பற்பல வியடங்களை தமது வாழ்க்கை நடபடியிலும் இலக்கியங்கள் வாயிலாகவும் எடுத்தியம்பியுள்ளனர். அந்தவகையிலே மனித உடலை ஒழுங்குமுறையில் பேணவும் ஆரோக்கியமான வாழ்விற்காக முன்னைய காலத்தில் வாழ்ந்த ஞானிகள் ரிஷிகள் எமக்கு தந்து உதவியவை தியானம்யோகாசனம்செய்தலும் குறிப்பிடத்தக்கவை. இந்துக்களால் மட்டும் முன்னர் பின்பற்றப்பட்டு வந்த யோகக் கலையும் தியானப் பயிற்சியும் இன்று உலகம் முழுவதும் பரவியிருப்பதனை யோகசன பயிற்சி நிலையங்கள் மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் நிலையங்கள் சான்று தருகின்றன. உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த யோகக் கலையினை தற்காலத்தில் இனம், மதம், பால், வயது வேறுபாடின்றி அனைவரும் பின்பற்றி வருகின்றமை சிறப்புமிக்கதாகும். அதேபோல தியானம் இருக்குமிடத்து எமது சக்திகள் யாவும் இறைவன் மீது மட்டும் தான் பதிகின்றன எனவும் இவை அறிவுக்குச் சாதனமாக விளங்குகின்றன எனவும் இந்து சமயம் எடுத்துக்கூறகின்ற வேளையில் உளநல விருத்திக்கும் மன அமைதிக்கும் சிறந்த நிவாரணமாக தியானம் செய்தலை நவீன உலகில் மருத்துவர்கள் வரவேற்கின்றனர். இந்து சமயத்தின் விளைநிலமான பாரத தேசத்தில்யோகிகளும் ஞானிகளும் தியானம் செய்து நிஷ்டையில் இருப்பதை முற்காலத்தில் அறிந்த நாம் நவீன காலத்தில் சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களும் தியானத்திலிருப்பதனை கோயில்களிலும் ஆன்மீக நிறுவனங்களிலும் கண்டு கொள்ள முடிகின்றது. இந்து சமயத்தின் தியானப் பயிற்சிக்காக பல மதங்களை சேர்ந்த மேற்கத்தய நாட்டவர்கள் இந்திய நாட்டிற்கு வருகை தருவதும் அவர்களில் பலர் காவியுடையுடன் நடமாடுவதனையும் தற்காலத்தில் எமது கண்களில் இருந்து தப்புவதில்லை. அதேபோல நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம் என்கின்ற நம் முதாதையரின் வாக்கிற்கமைய மருந்துகளால் குணப்படுத்த முடியாத பல தொற்றா நோய்களை யோகாசன பயிற்சி மூலமாக சுகப்படுத்த முடிகின்றது எனவும் நவீன மருத்துவம் ஏற்றுக்கொள்கின்றுது. எனவே இந்து சமயத்தின் அரும்பெரும் கண்டுபிடிப்பான யோகாசனமும் தியானமும் நவீன உலகில் பலருக்கு நிவாரணங்களாகவும் நோய்தீர்க்கும் மருந்துகளாகவும் இருப்பது விதந்து போற்றப்பட வேண்டியவையே ஆகும்.

**சமூக சேவை - உலகளாவிய செல்வாக்கு**

இந்துசமயத்தின் அறிவுறைகளில் ஒன்று சேவை செய்தல் ஆகும் ஆன்மாக்களுக்கு சேவை செய்வதன் மூலம், தானங்கள் செய்வதன் வாயிலாக சமயிகள் புண்ணியங்களை ஈட்ட முடியும்என இந்து சமய பெரியார்களின் வார்த்தைகள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. இவை தவிர இந்து சமய இலக்கியங்களிலும் ஞானிகள் மற்றும் குரவர்களின் வாழ்விலும் சேவைகள் செய்தல் பற்றிக் கண்டு கொள்ள முடிகின்றது. அதாவது மனிதன் தான் வாழ்கின்ற சமுதாயத்திற்கு ஏதாவது நற்காரியங்களை மேற்கொள்ளல் வேண்டும் என்பதனை இந்து சமயம் வலியுறுத்துகின்றது. இதனை அடியொற்றி நவீன கால மனிதனுக்கு சேவையின் மகத்துவத்தினைப் பற்றி சுவாமி விவேகானந்தர், பகவான் சத்தியசாயி பாபா, ரமண ரிஷி, கிருபானந்த வாரியார் போன்ற இந்துசமய காப்பாளர்கள் தமது பிரசங்கங்கள் மற்றும் போதனைகள் வாயிலாக எடுத்துக்கூறியுள்ளனர். அந்தவகையில் தற்காலத்தில் இந்து சமய நிறுவனங்கள் பேரிடர் காலங்களிலும், பாரிய நோய்தொற்று காலங்களிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன மத பேதமின்றி உணவழித்தல், குடிநீர் சேவை வழங்கல், உடைகள் வழங்கல் போன்ற சேவைகளைத் தேவைநிமித்தம் மேற்கொண்டு வருகின்றமையைக் காண முடிகின்றது. அத்துடன் கல்விக் கூடங்கள், சமய போதனை நிலையங்கள் போன்றனவும் இத்தகைய சேவைகளில் அடங்கு பவையாகும். அவை தவிர கோயில் உற்சவ காலங்களில் தாக சாந்தி நிலையங்கள், அன்னதான மடங்கள் அமைத்தல் என்பன பசித்தோர்க்கு மேற்கொள்ளும் சேவையினுள் அடங்கும். இத்தகைய சேவைகள் மற்றும் தொண்டுகள் இந்துக்கள் பரவி வாழ்கின்ற தேசங்கள் தோறும் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறான தொண்டுகளினால் நவீன யுகத்தில் இந்து சமயத்தின் மனிதநேயப் பண்பினை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்கு இந்து சமய நிறுவனங்கள் பின்நிற்கவில்லை எனக்கூறுவது சாலச்சிறந்தது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு போராட்டம்**

தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் மனித வாழ்விற்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது. அதாவது சுற்றாடல் மாசடைதல் செயற்பாடு, மிருக வதைகள், மனித உரிமைகளை பாதிக்கும் செயற்பாடுகள், பொருத்தமற்ற இடங்களில் மதுபான நிலையங்கள் அமைத்தல் போன்ற இன்னோரன்ன அநாகரிகமற்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றமையை ஊடகங்கள் வாயி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக அறிய முடிகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக அதாவது மனித வாழ்வினை மேம்படுத்துவதற்கு வசதியளிக்கும் முகமாக இந்து சமய நிறுவனங்கள் போர்க்கொடிகளைத் தூக்கி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதனை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் மற்றும் இந்து சமய பேரவை போன்ற நிறுவனங்கள் சுமூகமான மனித வாழ்விற்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளையும் எதிர்க்கவும், சமய மற்றும் ஆன்மீக நிலையங்களுக்கு அண்மையில் நடைபெறும் அநாகரிக நடவடிக்கைகளை ஒழிப்பதற்காகவும் போராட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடாத்துவதனையும், அவதானிக்க முடிகின்றது. இதேபோல உலகெங்கெனும் நடைபெறும் மேற்சொன்ன மனிதனுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை கண்டித்து அந்தந்த தேசங்களில் இயங்கி வருகின்ற இந்து சமய அமைப்புக்கள் செயற்படுகின்றமையை நாம் கண்டுகொள்ள முடியும்.

**மீடியா மற்றும் தொழில்நுட்பம்**

இன்று உலகின் சகல மனிதர்களும், சகல துறைகளும் தகவல் தொழில்நுட்ப துறையினால் கட்டுண்டு உள்ளது. இதற்கு சமயமார்க்கங்களும் விதிவிலக்கல்ல. அந்த வகையில் பாரத தேசத்தில் அமைந்துள்ள புராதன மற்றும் புகழ்பெற்ற இந்து ஆலயங்களின் வரலாற்றினையும், பூஜை நேரங்களையும் அக்கோயில்களின் முகநூல் பக்கங்களிலும், வலைப்பக்கங்களிலும் கண்டு கொள்ள முடிகின்றது. தற்போது திருப்பதி ஏழுமலையான் தலத்தின் தரிசனத்திற்கும் நிகழ்நிலையில் முன்பதிவு செய்யும் முறை பின்பற்றப்படுகின்றன. இவ்வாறு தரிசனங்கள், பக்தி செயற்பாடுகள், இந்துக்கற்றல் செயற்பாடுகள் போன்ற பல விடயங்களை செயலிகள், நிகழ்நிலை தளங்கள் மூலமாக மேற்கொள்வது பல இலகுபடுத்தல்களை ஏற்படுத்துகின்றன. இதன்படி வயதான பக்தர்கள் வீட்டிலிருந்தபடியே ஆலயங்களின் பூசைகளை கண்டுகொள்வதற்கும், தரிசன நேரங்களை அறிந்து கொள்வதற்கும், ஆன் மீக உள்ளடக்கங்களை அணுகுவதற்கும், ஆன்மீக நூல்களின் விபரங்களை அறிந்து கொள்வதற்கும் மிகவும் வாய்ப்பாக அமைகின்றன. எனவே நவீன உலகில் மேற்சொன்ன தொழில்நுட்ப மாற்றத்தினை இந்து சமயம் உள்வாங்கி அதற்கேற்றவகையில் ஆன்மீக சேவையினை வழங்கிவருகின்றது எனக் கூறுவது பொருத்தமானதாகும்.

எனவே உலகில் பின்பற்றப்பட்டு வருகின்ற சமய மார்க்கங்களில் மிகத் தொன்மையான இந்து சமயமானது எக்காலத்திற்கும் பொருந்துவனவான பலதரப்பட்ட விடயங்களை, பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டிருப்பதோடு நவீன உலகில் மனித வாழ்வினை மேம்படுத்தும் வகையிலான பிரயோக ரீதியான பல விடயங்களை செயற்படுத்திவருவதனை கண்டுகொள்ள முடிகின்றது. இத்தகைய பயன்மிக்க வினைத்திறனான செயற்பாடுகளினால் இந்து சமயமானது மிகத்துரிதமாக வளர்ந்து வருகின்ற தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான வளரச்சிமிக்க உலகிற்கேற்ப ஆன்மீக வளர்ச்சியையும் மக்களிடையே ஏற்படுத்தி வீறுநடைபோடும் என்பதில் சந்தேகமில்லை.

**உசாத்துணை**


(1) திருமதி. ஞானசேகரஜயர். ஞா (2005), இந்துமதம் என்ன சொல்கிறது, மணிமேகலை பிரசுரம்

(2) கவியரசர் கண்ணதாசன், அர்த்த முள்ள இந்துமதம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாட்டில் தமிழ்மொழிமூலமான சைவசமய வழிபாட்டின் தோற்றமும் அதன் வளர்ச்சியும்

**திருமதி இன்பம் சியாமளா**
**கலைமாணி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பொதுநிர்வாகம்,**
**சிறியெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், கொழும்பு.**

தாயகத்தில் இருந்து அதாவது ஈழ வளநாட்டில் இருந்து அங்கு நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக பலர் இருபதாம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் ஏதிலிகளாகத் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்கள் தாம் வாழுகின்ற நாடுகளில் தமது கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களைப் இன்றுவரை பாதுகாத்துக்கொண்டு வருகின்றனர். இவ்வாறு இருக்கையில் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான சுவிற்சர்லாந்து தேசத்தில் தமிழ் மொழி மூலமான சைவசமயவழிபாட்டு நெறியின் தோற்றுவாயும் அதன் வளர்ச்சிப் போக்கும் பற்றி இந்தக்கட்டுரையில் பார்க்கலாம்.

ஐரோப்பிய நாடுகளில் மலைகள், ஏரிகள், காடுகள் என இயற்கை அழகுடன் மிடுக்குடன் எழுந்து நிற்கும் நாடு சுவிற்சர்லாந்து. ஐரோப்பிய நாடுகளின் வரைபடத்தில் ஓர் இதயம் போல் சிறிதாகக்காட்சியளிக்கும் இந்நாடு 41,285 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவைக்கொண்டமைந்துள்ளது. சிறிய நாடாக இருந்தபோதும், இது வலுவான பொருளாதார நிலையைக் கொண்டுள்ளதுடன் ஒரு நடுநிலைமை நாடாகவும் சர்வதேச அமைப்புக்களுக்குப் பெயர்பெற்ற ஒரு நாடாகவும் விளங்குவதுடன் இயற்கை அனர்த்தங்களாலோ அல்லது போர் நடவடிக்கைகளாலோ பாதிக்கப்பட்டு ஏதிலிகளாக வருபவர்களுக்குத் தஞ்சமளிக்கும் நாடாகவும் விளங்குகின்றது. அதனால் இங்கே பல இனம், மொழி, மதம் சார்ந்த மக்கள் வாழ்கிறார்கள். இங்கு பல மொழிகள் பேசுகின்ற மக்கள் வாழ்ந்தாலும் யேர்மன்மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலியன் மொழி மற்றும் உரோமானியன் மொழி என நான்குமொழிகள் அதிகாரபூர்வ மொழிகளாக உள்ளன. ஏதிலிகளாகத் தஞ்சமடைந்த மக்கள் தமது இனம், மொழி, மதம் சார் உணர்வுகளைச் சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கும் தமது பண்பாட்டு விழுமியங்களை இந்நாட்டு சட்டநடைமுறைகளுக்கு இணங்க பேணிப்பாதுகாப்பதற்கும் இந்நாட்டு அரசு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அழகிய அமைதி நிறைந்த சுவிற்சர்லாந்து நாட்டிற்கு இற்றைக்கு ஐம்பத்து நான்கு (54) ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது ஆயிரத்துத் தொள்ளா யிரத்து எழுபத்து ஓராம் ஆண்டு (1971) இலங் கையில் இருந்து முதல் நபர் ஏதிலியாக வந்து குடியேறினார். அதனைத் தொடர்ந்து எம் தாயகமான ஈழத்தில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக தமது உயிரைப் பாதுகாத்து தமது குடும்பங்களின் பொருளாதார இடர் பாடுகளை நிறைவு செய்வதற்காகவும் விரும் பியோ விரும்பாமலோ எம்மவர்கள் புலம் பெயர்ந்து செல்ல வேண்டிய தேவைப்பாட் டில் பலர் சுவிற்சர்லாந்து நாட்டிற்கு வந்து ஏதிலிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறு வந்து குடியேறிய மக் களுக்கு சுவிற்சர்லாந்து தேசம் வாழ்வதற் கும், பொருள் ஈட்டுவதற்கும் மடிகொடுத் தாலும் இங்கு வாழ்ந்த ஏனைய மக்களின் மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள் வேறு பட்டதாகவே காணப்பட்டது. எனவே இவர் களுடன் உடனடியாகக் கூடிவாழ முடியாத சூழலில் இருந்தாலும், தாம் பட்டுவந்த துன்ப துயரங்களை மனதில் நிறுத்தி புதிய சூழலை சகித்துவாழத் தொடங்கினர் எமது உறவு கள். ஆனாலும் தமது சமய தொன்மரபுகளை விட்டு விலகிவாழ அவர்களால் முடியவில்லை. வாழ்வதற்கான ஓர் இடம் கிடைத்தாலும் மன நிறைவைத் தரக்கூடிய ஓர் இடம், அனை வரும் ஒன்றிணையக்கூடிய ஒரு இடம் கிடைக்கவில்லை. இதனை வழங்கக்கூடிய ஒரே ஒரு இடம் கோயில் என்பதை உணர்ந்து கொண்டார்கள். அது மட்டுமல்ல தாய்மொழி யான தமது மொழி, கலை, பண்பாடு, பழக்க வழக்கங்களைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய இடமாகவும் கோயில் அமையும் என் பதனை நன்கு அறிந்த இவர்கள் ஆயிரத் துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஓராம் (1991ம்) ஆண்டு **"வாணி கோயில்"** ஒன்றை "ஓல்ற்றன்" எனும் இடத்தில் தொடக்கினர். இதுவே இன்று ஓல்ற்றன் சிறீ மனோன்மணி அம்பாள் கோயிலாகத் தலை நிமிர்ந்து நிற் கின்றது. இதுவே சுவிற்சர்லாந்தில் உரு வாக்கப்பட்ட முதலாவது இந்துசமயக் கோயிலாகும்.

இவ்வாறிருக்கையில், சிறுவர்களாக அவர்களது 14,15 மற்றும் 21 வயதுகளிற்குள் சுவிற்சர்லாந்து நாட்டிற்கு ஏதிலிகளாக வந்து சேர்ந்த தாயகத்தைச் சேர்ந்த ஐந்துபேர் ஒன்று சேர்ந்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்காம் ஆண்டு (1994) சுவிற்சர்லாந்தின் தலைநகரான பேர்ன் மாநிலத்தில் இலங்காசா எனும் இடத்தில் நாற்பத்து நான்கு எனும் இலக்க இரண்டாம் மாடியில் ஓர் சிறிய அறையில் தமிழ் மொழி மூலமான வழிபாடாற்றும் மன்றம் ஒன்றினை தொடங்கினர். இந்த மன்றமானது எந்த வொரு பொருளாதாரப் பின்னணியோ மரபு வழி வந்த அமைப்புகளினுடைய பிற்புலமோ இன்றி தொடங்கப்பட்ட ஒன்றாகும். தொடங் கப்பட்ட காலப்பகுதியில் இதே இடத்தில் வேறு ஒரு இடத்தில் இடமாற்றப்பட்டபோது, மணிச்சத்தம், சங்கு ஓசை என்பன அயலவர் களிற்கு இடையூறாக இருப்பதாக அறிவிக் கப்பட்டதனால் ஒரு மாதக் காலப்பகுதிக் குள் மீண்டும் முதலில் ஆரம்பித்த அதே இடத் திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு பல்வேறு சிக்கல்கள் வந்தபோதும் அவற்றை யெல்லாம் தாண்டியே இம் மன்றமானது எழுந்துவந்துள்ளது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணம் அன்று பல்லவர் காலத்தில் நாயன் மார்கள் எவ்வாறு பிறமதங்களிடம் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயத்தைக் காப்பாற்ற உருவாகினார்களோ அதே போன்றதாகவே அமையப்பெற்றது என்றுகூடக் குறிப்பிடலாம்.

வெளித்தோற்றத்தில் பொருளாதார மட்டத்திலும் இயற்கை வனப்பிலும் மகிழ்ச்சியாக இருந்தாலும் மனதளவில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு இடர்பாடுகளில் ஆட்பட்டவர்களாகவே எமது மக்கள் இருந்தனர். உறவுகளை, சொந்த இடங்களைப் பிரிந்து வந்த துக்கம் ஒருபுறம். போர்ச்சூழலில் யார் யார் மிகுதியாக இருப்பார்கள்? அவர்களை எப்போது நாம் சென்று சந்திப்போம் என்கின்ற ஏக்கம் மறுபுறம். அதனைவிட வேறுபட்ட மொழிச்சூழலில் எவருடைய ஆதரவுமின்றி வாழ்கின்ற வேற்றுமை உணர்வு அவர்களை வதைவதைத்துக் கொண்டிருந்த காலம். இந் நேரத்தில் மக்களின் எண்ண ஓட்டங்களை அறிந்த வேற்று மதத்தவர்கள் சில சலுகைகளைக் காட்டியும் தமது மதப்பரப்புரைகளாலும் மக்களை தம்வசப் படுத்துவதற்கு எத்தனித்துக் கொண்டிருந்த பல நிகழ்வுகளைக் கண்டுற்ற இவ் இளையவர்களுக்கு, தம்முள் எழுந்த விழிப்புணர்வு எமது மக்களை நாம் ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதே. இந்தச் சிந்தனையின் உருமலர்ச்சி வளர்ச்சியே இம் மன்றம் உருவாக முதற்காரணமாக அமைந்திருந்தது.

மேலும், அவர்களுக்குள் இருந்த தேடலும், முயற்சியும் அதற்கு மேலாக திருவருளும் முன்னின்று வழிநடத்த இவர்கள் அதன்பாதையில் சென்றார்கள். இந்த மன்றமானது இன்று "**சைவநெறிக் கூடம்**" என்ற பெயரில் இயங்கிவருகிறது. "**தமிழா வழிபடு, தமிழில் வழிபடு, தமிழ்வழிப்படு**" என்பதே இவர்களது வாசகமாக இருக்கிறது.

இவ்வாறு தொடங்கிய மன்றத்தினருக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் முப்பாட்டன் இராவணால் வைத்து வணங்கப்பட்டதாகச் சொல்லப்படும் படிக இலிங்கம் ஒன்றினை இலங்கை மௌனாசிரமத்தைச் சேர்ந்த சத்குரு உமாசக்கர் அவர்கள் கையளித்திருந்தார். இந்தப் படிக இலிங்கத்தையும் இதனுடன் இணைத்து அம்பிகையின் படிமத்தையும் வைத்து வழிபாடு செய்ய ஆரம்பித்தார்கள். ஒரு அறையில் எந்த ஒரு வசதியும் அற்ற இடத்தில் வைத்து வழிபாடு ஆற்றிய இவர்களுக்கு, இறைதிருவருள் கைகூடிவர இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டு (2007) அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலை புதிய இடத்தில் தொடங்குவதற்கான சந்தர்ப்பம் உருவாகியது. இவ்வாறு தொடக்கி வைத்தாலும் எம்மவர்கள் பலர் பிராமணவர்க்க வழிபாட்டு நெறிமுறைகளுக்குப் பழக்கப்பட்டவர்களாக அதிலே ஊறியவர்களாகக் காணப்பட்டனர். அதனால் தமிழ்மொழி மூலவழிபாட்டு நெறியை உடனடியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவநிலையில் குறைந்தவர்களாகவே அடியவர்கள் ஆரம்பத்தில் காணப்பட்டனர்.

இதனால் "தமிழ்மொழியில் இறைவனை வழிபாடுசெய்கின்ற தமிழ்வழிபாட்டு நெறித் திருக்கோவில் ஒன்று பேர்ன் மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, ஒருமுறை இங்கு வந்து பாருங்கள்." என்று பல மக்களிற்கு தொலைபேசி மூலமாகவும், காணுகின்ற இடங்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையை உடைய அடியவர்களும் ஆலயத்தில் பூசைகளைச் செய்யும் அர்ச்சனையர்களும் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். இதன் தொடர்ச்சியாக பேர்ன் வள்ளுவன் பள்ளி மாணவர்கள் முதன் முதலில் இத் திருக்கோயிலில் நிகழ்வுகளை வழங்கினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். இதுவே முதல் ஒத்துழைப்பு வழங்கிய பிற அமைப்பாக இருந்தது. இதனைத் தொடர்ந்து பேர்ன் திருக்கோணேசுவரா நடனப்பள்ளி மாணவர்களும் கலை நிகழ்வு களுடன் இணைந்துகொண்டனர்.

இவ்வாறு, சிறிது சிறிதாக அறியப் பட்ட விடயம், இறை திருவருளால் கொஞ்சம் கொஞ்சமாக எல்லா இடங்களிற்கும் பரவத் தொடங்கியது. இதைக்கேள்வியுற்றவர்கள் வந்து ஞானாம்பிகையுடனாய ஞானலிங்கப் பெருமானின் திருவருளைப் பெற்றுக்கொள் வதுடன், ஒருவித மன அமைதியையும் இங்கு அனுபவிக்கத் தொடங்கினர். அது உலக மெல்லாம் பரவத்தொடங்கியது. அடியவர் கள் அதிகளவில் வருகைதரத்தொடங்கினர். அதிக மக்கள் வந்து வழிபடுவதற்கான இட வசதி போதாத அளவிற்கு எழுச்சி கண்டது இத் தமிழ்வழிபாடு.

எனவே இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு (2010) பத்துநாட்கள் திருவிழா நடை பெறும் கோயிலாக வளர்ச்சிகண்டது. இரண் டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு சுவிற்சர் லாந்தின் தலைநகர் பேர்னில் "ஐரோப்பாத் திடல்" எனும் இடத்தில் திருக்கோபுரத்துடன் அமைந்த கோயிலாக, நிலையான இடத்தில் செயற்படத்தொடங்கியது. இற்றைக்கு பத்து வருடங்களாக அதே இடத்தில் இருந்து பல் லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு அருள் பாலிக்கும் ஞானம்பிகையுடனாய ஞான லிங்கேச்சுரராக, குவலயம்போற்றும் ஞான லிங்கப்பெருமானாக அருளாட்சி செய்து வருகிறார். அருள்ஞானமிகு ஞானலிங்கேச் சுரர் திருக்கோயிலே ஐரோப்பாவில் உரு வான முதலாவது தமிழில் வழிபாடுசெய்யும் திருக்கோயில் எனும் சிறப்பிற்குரியது.



**ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக் கோயிலின் புதிய உட்புறத் தோற்றம்**

அதுமட்டுமல்ல எட்டு சமயங்கள் ஒரே கூரையின் கீழ் இயங்குகின்ற உலகினு டைய முதலாவது சமாதானத்திட்டமாகிய பல்சமய பீடத்தில் ஞானலிங்கப் பெருமான் நடுநாயகமாக வீற்றிருக்கின்றார். சுவிற்சர் லாந்து அரசியல் அமைப்பு விதிகளிற்கு அமைவாக, காலத்திற்குக் காலம் மாற்ற மடையும் சுவிசினுடைய நடுவண் அரசு மற் றும் மாநில அரசினையார் பொறுப் பேற்றுக் கொண்டாலும் அவர்கள் முதலில் நேரடியாக வந்து பார்வையிடுகின்ற இடமாகவும் கலந் துரையாடுகின்ற இடமாகவும் இவ்விடம் அமையப்பெற்றுள்ளது. அதேபோல இந் நாட்டின் அரசவிருந்தினர்கள் இந்த நாட்டிற்கு வருகைதருகின்ற வெளிநாட்டு அரச விருந் தினர்கள் நடுவண், மாநில அரசுகளால் இங்கு அழைத்துவரப்படுவதுடன் அவர்கள் இதனைப் பார்வையிட்டு மனமகிழ்வடைந்து மன நிறை வுடன் செல்கின்ற நிலையையும் அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமல்ல அனைத்து சுவிற் சர்லாந்து வாழ் சைவத்தமிழ் மக்களையும் பல்சமயபீடத்தில் சைவநெறிக்கூடம் பிரதி நிதித்துவப்படுத்தி நிற்கின்றது.

இத் திருக்கோயிலானது சைவ சமயம் பற்றிய பயிலரங்கு வகுப்புகளை 1995ஆம் ஆண்டு தமிழ் மாணவர்களுக்கு நடத்தத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. தற்பொழுதும் இப்பயிலரங்கு வகுப்புக்களிற்கு வேற்றுநாட்டவர்கள், வேற்று மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட, சுவிற்சர்லாந்தில் வாழுகின்ற காவல்துறையினர், மருத்துவர்கள் போன்ற அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனக் குறைந்தது நூற்று இருபதிற்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொருநாளும் கலந்துகொள்கின்றனர். இப் பயிலரங்கானது யேர்மன் மொழி, பிரெஞ்சு மொழி மற்றும் இத்தாலியன் மொழிகளிலும் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



இத் திருக்கோவிலில் வேழமுகத்தான் முன்னிருக்க, ஞானலிங்கேச்சுரப் பெருமானும் அருகே ஞானாம்பிகைத்தாயும், ஞானலிங்கபாலன் ஞானவடி வேலனும் வீற்றிருக்க இவர்களுடன் ஐயப்ப சுவாமி, சரசுவதி தேவி கூடவே நாகபூசணி அம்மன், ஆஞ்சநேயர், பைரவர் என அனைவரும் இணைந்து அருள்மழை பொழிந்தவண்ணம் இருக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல சித்தர்களும் ஞானிகளும் எமது காவல் தெய்வங்களும் கூடவே இருந்து வருபவர்களுக்கெல்லாம் அருள் அள்ளிக் கொடுத்த வண்ணம் இருக்கிறார்கள்.



தற்பொழுது இவ்வாலயத்தில் வருடமொன்றிற்கு பெரும் திருவிழா மூன்று முறை நடைபெறும். ஞானலிங்கப் பெருமானுக்கான பெருந்திருவிழா மடங்கல் திங்களிலும் (ஆவணி மாதத்தில்) ஞானாம்பிகைத் தாய்க்கான பெருந்திருவிழா ஒன்பானிரவுத் திருவிழாவாக (நவராத்திரி) கன்னித் திங்களிலும் (புரட்டாதி மாதத்தில்) ஞானலிங்க பாலன் ஞானவடிவேலனுக்கான திருவிழா துலைத் திங்களிலும் (ஐப்பசி மாதத்தில்) பெருவிழாவாக கொடியேற்றத்துடன் நடைபெறும். இவை தவிர திருவெம்பாவை நோன்பு, பிள்ளையார் கதை நோன்பு, பெரும் சிவனிரவு என்பன ஆயிரக்கணக்கான அடியவர்கள் ஒன்றுகூடச் சிறப்புற நடைபெறும். ஞானலிங்கப் பெருமானுக்கான பெருந் திருவிழாவில் தேர்த்திருவிழா அன்று சுவிற்சர்லாந்து நாட்டில் இருந்து மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பெருமளவான மக்கள் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் திருவருள் பெற்றுச்செல்வார்கள். ஒவ்வொரு வருடமும் தேர்த்திருவிழாவின் போது ஏறக்குறைய பத்தாயிரம் அடியவர் களுக்கு மேல் வருகைதருகிறார்கள்.

ஒவ்வொரு மாதமும் வருகின்ற கழுவாய் வழிபாடு (பிரதோசம்), முழுமதி சிறப்பு வழிபாடு (பூரணைநாள்), மறைமதி சிறப்பு வழிபாடு (அமாவாசை), ஏகாதசி வழிபாடு, கரிமுகன் நான்மை (விநாயகர் சதுர்த்தி) போன்றன வும் சிறப்பாக இடம்பெறும்.

அதேபோல ஆண்டுக்கான தமிழர் சிறப்பு வழிபாடுகளான தமிழ்ப்புத்தாண்டுப் பொங்கல், திருவள்ளுவர் குருபூசை, நாயன் மார் குருபூசை, ஆடவை உத்தரம் (ஆனி உத்தரம்), கடகப்பிறப்பு (ஆடிப்பிறப்பு), மடங் கற்கணை (ஆடிப்பூரம்), திருமகள் நோன்பு (வரலட்சுமி விரதம்), மடங்கற்குருகு (ஆவணி மூலம்) மடங்கல் முக்கோவல் (ஆவணி ஓணம்), நளித்தீபம் (திருக்கார்த் திகைத் தீபம்), விண்



ணுலக திருவாசல் வழிபாடு (சுவர்க்க வாசல்), பொதுப்புத்தாண்டு வழிபாடு என்பனவும் சிறப்பாக இடம்பெறும்.

இக்கோவிலானது ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை அடியவர்களின் வழிபாட்டிற்காகத் திறந் திருக்கும். சிறப்பு நாள்களைத் தவிர ஏனைய நாள்களில் மாலை 7.00 மணிக்கு திருப்பூசை கள் நடைபெறும். இந்தக் கோயிலுக்கு எந் நேரமும் அடியவர்கள் வந்துசென்று கொண் டிருப்பார்கள். சிறப்பு வழிபாட்டு தினங்களில் கோயிலுக்கு வருகின்ற அடியவர்களுக்கு அருளமுது வழங்கப்பட்டுவருகிறது.

இந்தத் திருக்கோயிலில் தொண் டாற்றுகின்ற தொண்டர்களாயினும் சரி திருச் சடங்குகள் ஆற்றுகின்ற செந்தமிழ் அருட் சுனையர்களும் சரி ஊதியம் எதுவுமே இத் திருக்கோவிலில் இருந்து பெற்றுக்கொள்வ தில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்வாதாரத்திற்கு உரிய ஊதியத்துடனான வேலையினை வேறு தொழில் நிறுவனங் களில் ஏனைய அடியவர்களைப்போல மேற் கொண்டுவருகின்றனர். அந்த வேலைப் பழுக் களுக்கு மத்தியிலும் நேரத்தினை ஒதுக்கி ஞானலிங்கேச்சுரப் பெருமானின் திருப்பணி களையும் தமது கடமையாக எண்ணி செய்து வருகின்றார்கள்.

இவர்கள் இணுவிலில் வாழ்ந்த பெரி யண்ணா சாமியார் அவர்களை குருவாக ஏற்று வாழ்பவர்கள். அதனால் பெரியண்ணா சாமி யார் அவர்கள் சொன்ன திருமொழியான "**பெருமான் அளிப்பதே திருக்கூலி**" என்பதற் கமைவாக, பெருமான் அவர்கள் வாழ்வில் வழங்கிக் கொண்டிருக்கும் திருக் கூலியைப் பெற்று வாழ்வில் பெருவாழ்வு வாழ்ந்து வரு கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சைவநெறிக்கூடமானது பேர்னில் உருவாக்கிய முதலாவது அருள் ஞான மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலைத் தொடர்ந்து,

இரண்டாவது திருக்கோவிலாக இரண்டாயிரத்துப் பதினைந்தாம் ஆண்டு சுவிற்சர்லாந்தின் வலே மாநிலத்தில் மர்த்தினி அருள் ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலையும், (புதிதாக கட்டப்பட்டது)

மூன்றாவது திருக்கோவிலாக இங்கிலாந்து நாட்டில் கைவிக்கம் அருள்ஞான மிகு உச்சிமுருகன் திருக்கோவிலையும் (தமிழ் வழிபாட்டுக்கோயிலாக உள்வாங்கப்பட்டது)

நான்காவது திருக்கோவிலாக இலங்கையில் வட மாகாணத்தில் இணுவில் அருள் ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக் கோவிலையும், (புதிதாகக் கட்டப்பட்டது)

ஐந்தாவது திருக்கோவிலாக இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, பளவெளி - வளத்தாப்பிட்டி அருள்ஞானமிகு ஆதிசக்தி உடனாய ஆதிசிவன் திருக்கோவிலையும் (பராமரிப்பின்றி இருந்த ஆதிசிவன்கோவில் அங்குள்ள அடியவர்களின் கோரிக்கைக்கு அமைவாகப் புதுப்பிக்கப்பட்டது)

ஆறாவது திருக்கோயிலாக இலங்கையில் பம்பரக்கலை, விந்துல, தலவாக்கலை அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலையும் (ஶ்ரீ ராஜராஜேஷ்வரர் ஆலயம் - முறையான பராமரிப்பின்றி பாழடைந்த நிலையில் இருந்த கோவில் மக்களின் வேண்டுதலுக்கு அமைவாக புதுப்பிக்கப்படுகிறது)

ஏழாவது திருக்கோயிலாக இலண்டன் "சௌத்தென்ட்" அருள்மிகு கோணேச்சுரர் திருக்கோவிலினையும் அந்தத் திருக்கோயில் நிர்வாகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 11.05.2025 இல் திருக்குட நன்னீராட்டு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏழுத்திருக்கோயில்களும் இணைக்கப்பட்டு, இந்த மன்றத்தின் அடிப்படைக் கொள்கைகள் சட்ட அமைப்புக்களுக்குள் உள்வாங்கப்பட்டு செயற்படும் திருக்கோயில்களாகச் செயற்பட்டுவருகின்றன.

இவ் அனைத்து திருக்கோயில்களும் தமிழ் மொழியில் நாயன்மார்கள்கள் அருளிய தேவார திருவாசங்களாலும் எமது வழிபாட்டை எமக்குத் தெரிந்த தமிழ்மொழியால் இறைவனை ஏற்றிப் போற்றி வழிபாடாற்றவும் வழிவகுத்துள்ளன என்பது உண்மையில் வியப்பூட்டும் செயலாகப் பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் இருந்தாலும், அதனுடன் பயணிப்பவர்களுக்கும் அதன் அடியவர்களுக்கும் "**அவனின்றி அணுவும் அசையாது, அவனால் முடியாதது ஒன்றுமில்லை**" என்ற உணர்வு மேலோங்கிச் செல்கின்றது.

மேலும் சைவநெறிக்கூடமானது தனியெனவே வழிபாட்டு இடங்களை உருவாக்குவதும் புதுப்பிப்பதுமே நோக்காகக் கொண்டமைந்தது ஒன்றல்ல. இது,

திருத்தொண்டர் சபை
சிவஞானசித்தர்பீடம்
சிவபணிநிலையம்
பிறநாட்டவர்களுக்கான தமிழ்வழிபாட்டு நெறிதொடர்பான பயிலரங்குகள்
தமிழ் வழிபாட்டு அர்ச்சனையர்கள் பயிற்சிக்கூடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கழறி (நூலகம், அருங்காட்சியகம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது)

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களை புத்தகங்களை வெளியீடு செய்தும் அறிமுகப்படுத்தியும் வருகிறது. அதனை விட சுவிற்சர்லாந்து நாட்டில் பிறந்து வளர்ந்துவரும் எமது அடுத்த தலைமுறையினரின் தமிழ், சமய, கலை, இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொடுப்பதுடன், அதற்கான ஊக்கத்தையும் கொடுத்து வருகிறது. வருடா வருடம் சைவமும் தமிழும் எனும் போட்டி நிகழ்வினையும் மாநிலங்கள் தோறும் நடாத்தி வருகின்றது.

தமிழ்மொழி பேசுகின்ற சுவிற்சர் லாந்தில் வேலை செய்து ஓய்வூதியத்தைப் பெற்றுவருகின்ற முதியவர்களின் நலன் கருதி "தமிழ்க்குடில்" எனும் பெயரில் முதியோர் ஓய்வு நிலையம் ஒன்றினையும் 2027ம் ஆண்டில் திறந்துவைக்கவுள்ளது. இது முதியவர்கள் தமது ஓய்வு காலங்களில் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வழிவகுக்கும்.

சிறிய ஒரு மன்றமாக ஆரம்பித்த சைவநெறிக்கூடமானது இன்று பல்வேறு பரிணாமங்களில் வளர்ச்சிகண்டு ஓர் ஆல மரம் போல் கிளைபரப்பி விழுதுகள் ஊன்றி வருகின்றது என்றால் மிகையாகாது.

இவ்வாறு புலம்பெயர் தேசங்களிலும் எமது தாயகத்திலும் தனது சேவையினை சைவத்திற்கான, தமிழுக்கான சேவையென்று இல்லாது சைவமும் தமிழும் இணைந்து அனைவருக்குமான சேவையாக வாழ்வாதாரத் திட்டங்கள், மருத்துவ முறையிலான திட்டங்கள், புலம்பெயர் தேசங்களில் பிறந்து வளர்ந்துவரும் இளைய தலை முறையினரையும் தாயகத்தில் தற்பொழுது பிறந்து வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரையும் ஒன்றிணைக்கும் உறவுப்பாலமாகவும் தனது சேவையை வழங்கிவரும் ஒரு மன்றமாகப் உருமலர்ச்சி கண்டுள்ளது பேர்ன் சைவ நெறிக் கூடம். இம்மன்றத்தின் செயற்பாடுகளையும் அதன் வளர்ச்சிப்போக்கையும் ஆழமாக அவதானித்தால் ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியாக பார்ப்போமானால் பலவிடயங்கள் கேட்பவர்களை மெய்சிலிர்க்க வைப்பனவாக அமையப்பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. இதன் வளர்ச்சிப் போக்கினைக் கண்கூடாகப் பார்க்கமுடிவதுபோல இதன் ஆன்மீக சக்தியை அனுபவிப்பவர்களால் மட்டுமே உய்த்து உணரமுடியும் இது அழப் பெரியது. இதனை வார்த்தைகளால் விபரிக்க முடியாது எழுத்துக்களால் எழுதி வரைப் படுத்தமுடியாது.

தமிழ்மொழி மூல வழிபாட்டின் வளர்ச்சிப்போக்கு ஐரோப்பிய நாட்டில் புத்துருவாக்கம் பெற்றாலும் தாயகம் தாண்டி உலகம் முழுவதும் கிளைபரப்பி தமிழ் வழிப்படுத்துவதுடன் பல்வேறு தொண்டுகள் ஆற்றி ஆற்றுப்படுத்துகின்ற மையங்களாகவும் செயற்பட்டுவருகின்றமை சிறப்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்

செந்நாப் புலவர் வர்ணனைக்கலாநிதி
மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்
(M.A.) (சைவசித்தாந்த பண்டிதர்)

**மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்**

இந்து மதம் இவ்வுலகில் நிலவும் மதங்கள்அனைத்திற்கும்ஆதியானதுஏனைய மதங்கள் போன்று தீர்க்க தரிசிகளால் இது நிறுவப் படவில்லை பிற மதங்கள் தோன்றிய காலத்தைக்கணக்கிட முடியும். ஆனால்இந்து மதத்தில்சமயவெளிஎன்பதுகிடையாது.

**இந்து மதத்தின் பெருமை**

சனாதன தர்மம் அல்லது நிலையாய மதம் என்று இந்து மதம் தெரிவிக்கப்படுகிறது வேத மதம் என்பதால் வைதீக தர்மம் என் றும் அதை கூறுவர் இந்து மதத்தின் அடிப் படை நூல்கள் வேதங்கள் ஆதிகால ரிஷி முனிவர்கள் தங்கள் ஆத்மீக அனுபவங் களை உபநிடதங்களின் மூலம் தெரிவித் துள்ளார்கள் அவர்களின் அனுபவங்கள் நேராகப் பெறப்பட்டவை இவ்வரிய அனு பவங்களையே அதன் பிரமாணமாக இந்து மதம் கருதுகிறது எண்ணற்ற வருடங்களாக இந்து ரிஷி முனிவர்கள் கண்டு பிடித்துள்ள விலை மதிக்க முடியாத பொக்கிஷங்களே இந்து மதத்தின் பெருமைக்கு காரணமாக அமைந்துள்ளன.

**பிற மதங்களையும் போற்றும் இந்து மதம்**

ஏனைய மதங்களைப் போன்று தனது மதத்தை மட்டும் போற்றுவதானாலேயே ஒருவன் மோட்சம் அடைய முடியும் என்று இந்து மதம் கூறுவதில்லை பிற மதங்களைப் போற்றுவதால் ஒருவன் இறைநிலையைப் பெறமுடியாது என்று மற்ற மதங்கள் கூறுவது போன்று அது செய்வதில்லை லட்சியத்தை அடைவிக்கும் பாதைகளுள் அதுவும் ஒன்று என்பதையே அது வலியுறுத்துகிறது இறுதி லட்சியத்தை அடைவிக்கும் ஏனைய வழி முறைகளையும் அது ஒப்புக் கொள்கிறது.

**இந்து மதம் ஒரு சுதத்திர மதம்**

மனிதனின் பகுத்தறிவு செயல்பட இந்து மதம் பரிபூரண சுதந்திரம் அளிக் கிறது இச்சா சக்தியை அது கட்டுப்படுத்து வதில்லை சிந்தனை வளருவதற்கு அது தடயாக நிற்பதில்லை இந்து மதம் ஒரு சுதந் திர மதம். இறைநிலை, ஆத்மாவின் தன்மை, படைப்பின் விசேஷம், வழிபாட்டு முறை, வாழ்க்கையின் இலட்சியம் ஆகியவற்றை குறித்த வினாக்கள் சம்பந்தமாக இந்து மதம் மனித சிந்தனைக்கு பூரண சுதந்திரம் அளிக்கிறது.

இந்து மதம் எல்லா மதங்களையும் மதிக்கிறது ஏனைய மதங்களை இது தூஷிப் பதில்லை எங்கிருந்து வந்தாலும் எந்த உரு வில் வந்தாலும் இந்து மதம் உண்மையை மதித்துப் போற்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்து மதம் ஒரு சமயப் பேரவை**

வேதாந்தம சைவம், சாக்தம, வைணவம் முதலிய பல்வேறு சமயக் கோட்பாடுகளை இந்து மதம் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பிட்டதோர் கொள்கையுடைய தனிமதம் என்பதை விட இந்து மதம் ஒரு சமயப் பேரவை என்றால் சாலப் பொருந்தும். எல்லா விதமான மக்களுக்கும் பொருந்தும் முறையில் இந்து மதம் அமைகிறது இது தான் இந்து மதத்தின் பேரழகு

**ஒழுக்கக் கட்டுப்பாட்டை வெகுவாக வற்புறுத்துகிறது இந்து மதம்**

இந்து மதத்தில் ஒழுக்கவியல் சிறப்புடையதாக அமைந்துள்ளது. ஒழுக்கக் கட்டுப்பாட்டை இந்துமதம் வெகுவாக வற்புறுத்துகிறது. யோக வேதாந்தத்தின் அடித் தளங்களாக யம நியமங்கள் அமைகின்றன.

ஒழுக்க அடிப்படையின்றி ஆத்மீக முன்னேற் றம் அசாத்தியமானது. ஆத்மீக சாதகன் ஒழுக்கத்தை கொண்டு நிற்க வேண்டும். அவன் சித்தனை, சொல், செயலில் உண்மையாகவும் தூய்மையுள்ளவனாகவும் அமைய வேண்டும். அவன் நன்னடத்தையில் சிகரமாத் திகழ வேண்டும் எந்த ஜீவப் பிராணியையும் அவன் நற்சிந்தனை, நற்பேச்சு, நன்னத்தை ஆகியவற்றை உறுதியுடன் ஆனுஷ்டிக்க வேண்டும்.

**இந்து மதத்தை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்**

மாபெரும் யோகிகள், மேன்மை வாய்ந்த மகாத்மாக்கள் சிறந்த தீர்க்க தர்சிகள், புகழ்மிகு தேச பக்தர்கள், வியத்தகு கற்புக்கரசிகள், ரிஷிகள் ஆகியோரைக் கணக்கில் அடங்காத முறையில் இந்து மதம் தோற்றுவித்துள்ளது எனவே இந்து மதத்தின் பெருமையை நீங்கள் எவளவுக்கு அறிவீர்களோ அவளவு அதைப் போற்றி நேசிப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எமது சமூக வாழ்வியலில் ஒரு தத்துவ நூலாக கந்தபுராணம் விளங்குகிறது"

**மனோகரன் சசிகரன்**
**இரசாயனவியல்துறை, விஞ்ஞானபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

கந்தபுராணம் அல்லது ஸ்கந்த புராணம் எனப்படும் மகாபுராணமானது வடமொழிப் புராணங்கள் பதினெட்டில் பதின்மூன்றாவது இடத்திலமைகின்றது. கந்தபுராண காலம் பற்றிய கருத்துக்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் மு. அருணாசலம் அவர்கள் தனது ஆய்வின் மூலம் பொது ஊழ் 14 ஆம் நூற்றாண்டு என கூறியுள்ளார். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக விளங்குவது சோழர் காலத்திலே வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியாரால் எழுதப்பட்டது என்பதே ஆகும். தமிழகத்தின் காஞ்சியில், குமரகோட்டம் முருகன் ஆலய அர்ச்சகராகத் திகழ்ந்தவர் கச்சியப்ப சிவாச்சாரியார். முருகனே "திகட சக்கர" என்று முதல் அடியெடுத்துக் கொடுக்க கந்தபுராணத்தை அவர் ஆக்கியிருக்கிறார்.

கந்த புராணமானது வடமொழிப் புராணங்களில் ஒன்றான சங்கர சங்கிதை எனப்படும் புராண நூலில் காணப்படும் முதல் ஆறு காண்டங்களான உற்பத்திக் காண்டம் (26 படலங்கள்), அசுரகாண்டம் (43 படலங்கள்), மகேந்திர காண்டம் (21 படலங்கள்), யுத்த காண்டம் (16 படலங்கள்), தேவகாண்டம் (5 படலங்கள்) மற்றும் தட்ச காண்டம் (24 படலங்கள்) என்பனவற்றை உள்ளடக்கியதான தமிழ் மொழி மொழிபெயர்ப்பாக அமைகின்றது. முழுவதுமாக 135 படலங்களையும் 10345 பாடல்களையும் கொண்டு முருகப் பெருமானின் வரலாற்றினை முறைமையாகவும் முழுமையாகவும் கூறுகின்றது.

சிவனுடைய முக்கண்களுக்கு ஒப்பாக கூறப்படும் புராணங்களில் கந்தபுராணமானது நெற்றிக்கண்னை சுட்டி நிற்கின்றது. கந்தபுராணத்தின் வழியாக முருகப் பெருமானுடைய வரலாறு கூறப்பட்டு சிறப்பிக்கப் பட்டாலும் முருகப் பெருமான் சிவனுடைய அம்சமாக விளங்குவதனால் சைவர்களின் முழுமுதற்கடவுளான சிவ பெருமானின் மகிமையினையே மறைமுகமாக சுட்டி நிற்கின்றது காரணம் பரம்பொருள் ஒன்றே என்ற சைவ சித்தாந்த தத்துவம் காணப்படுவதனால் ஆகும். சிவாம்சமான முருகப்பெருமானின் தோற்றம், வளர்ச்சி, சூரபத்ம வதம், வள்ளி திருமணம் போன்ற நிகழ்வுகளினூடாக முருக வழிபாட்டின் உன்னதத்தினை அடியார்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் புராண வடிவில் எழுந்ததே கந்தபுராணமாகும்.

"உபதேச ரத்னாகரம்" என்று போற்றப்படும் கந்தபுராணம் காப்பிய இலக்கணங்கள் மிக்கதாக, சித்தாந்தக் கருத்துக்களின் செறிவுடையதாக, தத்துவார்த்த உண்மைகள் பொருந்தப் பெற்றதாக அமைந்திருக்கிறது. தமிழ்க் கந்தபுராணத்தின் தமிழ் நடையும் வியந்து நயந்து உண்ண வேண்டியது. இத்தகைய சிறப்பினை கொண்ட கந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணம் மனித வாழ்வுக்கு இன்றியமை யாதனவாக கருதப்படும் தத்துவ கருத்துக் கள் பலவற்றை கொண்டதான ஓர் தத்துவ நூலாக அமைகின்றமையை காணலாம். தவத்தின் வலிமையால் வாழ்வில் சகல யோக போகங்களையும் பெறலாம், இறை கருணை இருந்தால் சகல பாவங்களில் நின்றும் தோசங்களில் நின்றும் விமோசனம் கிட்டும், சத்தியத்தை மீறுபவர்களுக்கு தண்டனை கிட்டும், எந்நிலை வரினும் பக்க சார்பாக எப்போதும் பேசக்கூடாது எவராக இருப்பினும் உண்மையை உரைக்க வேண்டும் இல்லா விடின் துன்பம் கிட்டும், அகந்தை கொள்ளு தல் கூடாது, அனைவர் மீதும் அன்புசெலுத் துதல் வேண்டும், செய்நன்றி மறத்தல் கூடாது.

கந்த புராணத்தினூடாக நன்றி மற வாமை வலியுறுத்தப்படுகின்றது. தாரகன் தமையனான சூரபன்மனுக்கு விசுவாசியாக அவன் செய் கருமம் தவறு என அறிந்தும் செய்நன்றி மறவாமல் அவனுக்காக போர்க் களம் சென்றான். அதேபோல் செய்நன்றி மறத் தல் தீங்கினை விளைவிக்கும் நன்பதற்கு எடுத்துக்காட்டாக சிவன் சூரனுக்கு அள வற்ற வரங்களை தந்து வீரத்தில் சிறந்த வானான். அதனால் கர்வம் கொண்டு முருகன் போர் செய்ய வந்த போது முருகனை பாலன் என்று இகழ்ந்தான் சூரன். முருகன் வேறு, சிவன் வேறு அல்ல என்ற உண்மை தெரி யாமல், வரம் தந்த சிவனோடு போரிட்டு, நன்றி கொன்று கெட்டான் சூரன். சூரன், தேவர்களை ஆட்டிப் படைக்கிறான். தேவர்கள் சிவனிடம் சென்று முறையிடுகிறார்கள். அப்படியே ஒரு வேண்டுகோளும் வைக்கிறார்கள். இதனை ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி வேதமும் கடந்து நின்ற விமல ஓர் குமரன் தன்னை நீ தரல் வேண்டும் நின் பால் நின்னையே நிகர்க்க என்றார். சிவன் வேறு, முருகன் வேறு அல்ல. என்ற ஒற்றுமை தெரியாமல் மாண்டான் சூரன். தங்கள் குறை தீர்க்க ஒரு குமாரனைத் தரவேண்டும் என்று வேண்டும் பொழுது சிவனின் தன்மை பற்றி கூறுகிறார் கச்சியப்பர்.

சூரபன்மனுக்குத் தந்தை காசிப முனிவர், தாய் மாயை தருமம் என்றொரு பொருளுளது எனத் தன் மகனுக்கு உபதேசஞ் செய்த காசிபர் "தருமத்தால் அன்பும் அன் பினால் அருளும் உண்டாகும். அருளால் தவம் கைகூடும். தவத்தினால் அறிவு தெளி யும். அறிவு தெளியச் சீவன் சிவனை அடை யும்" என்றார். "தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும் அருளெனுங் குழவியும் அணை யும் ஆங்கவை வருவழித் தவமெனும் மாட்சி எய்தும் மேல் தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்","முனிவரே வீடுபேற்றை அடைய விரும்புபவர்களுக்கே உபதேசந்தகும். எமது பிள்ளைகளுக்கு வீடுபேறு வேண்டாம். அவர்கள் வீரம், செல்வம், புகழ், அழியா ஆயுள் முதலியவற்றைப் பெற்று வாழ வேண்டும்" என்று கூறினாள். தாயின் சொல் கேட்ட சூர பன்மன் தவஞ் செய்யச் செய்து இறைவனி டம் தவஞ்செய்து இறைவனிடம் ஆயிரத் தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆட்சிபுரிய வரம்பெற்றான். ஆவனாட்சியில் அமரர் தாம் செய்த பாவங்களுக்கமைவாக பலனை அனுபவித்தனர்.

தக்கயாகத்தின் வாயிலாக உணர்த் தப்படும் வாழ்வியல் தத்துவம் என்றவகை யில் நோக்கும் போது தக்கன் சிவனுக்கு முதன்மை கொடுக்காமல், திருமாலை வேள் வித் தலைவராகக் கொண்டு யாகஞ் செய் தான் தேவர்களும் தமது செல்வச் செருக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கினாற் சிவனை மறந்து, சிவ நிந்தையாகிய தக்க யாகத்திற்பங்கு பற்றினார்கள் அதன் விளைவாக வீரபத்திரக் கடவுள் யாக சங் காரஞ் செய்தார். பிரமதேவர் வீரபத்திர உருத்திரரை வணங்கி, அனுக்கிரகிக்கும் படி வேண்டினார். வீரபத்திரரின் அனுக்கிர கத்தால் இறந்தவர் எழுந்தனர். தனது தலையை இழந்த தக்கன் தலையின்றியே எழுந்தான். தக்கனின் மனைவி வீரபத்திரக் கடவுளிடம் மாங்கலியப் பிச்சை கேட்டாள். வீரபத்திரர் அறுபட்டுக் கிடந்த ஆட்டுத் தலை யொன்றைத் தக்கனின் உடலிற் பொருத்தி அருள் புரிந்தார். பிரமதேவர் தக்கனுக்கு உபதேசஞ் செய்தார். இதிலிருந்து இறை வனை அழைக்காது செய்யும் எந்தவொரு காரியமும் சிறப்பாக நிறைவேறாது என்பது நம்பிக்கை.

காசியப்ப முனி தனது பிள்ளைகளான சூரன், சிங்கன், தாரகன் ஆகியோர்க்கு முப் பொருள் பற்றிய சிந்தனைகளையும் அறம் பற்றிய கருத்துக்களையும் போதிக்க விளைந் தமை ஊடாக தத்துவ கருத்துக்கள் ஒரு மனி தனுக்கு வாழ்வை செம்மைப்படுத்த இன்றி யமையாதனவாக அமைவதனை காண லாம். சுக்கிலாச்சாரியாரிடம் சூரபன்மனும் அவன் சகோதரர்களும் சிறுவயதிலிருந்து உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை பயின்று வளர்கின்றார்கள். அந்தவகையிலே புண்ணியம் செய்தலும் பாவம் செய்ய தகாத தும் என ஒன்றும் இல்லை. மும்பொருள்கள் இல்லை பிரம்மம் ஒன்றே உள்ள பொருள். அதுவே மாயையின் உடம்புகளை உண் டாக்கி அவற்றுள் புகுந்து விளையாடல் செய்யும் எனவும் பின் பிரம்மம் உடல் அழிந்த காலத்தில் தனித்து நிற்கும் என்றவாறாக சுக்கிலாச்சாரியாரின்(சுக்கிரன்) உபதேசங் கள் அமைகின்றன. அதேபோன்று தேவர் களின் குலகுரு வியாழபகவான் இந்திரன் பயத்தின் காரணமாக இந்திராணி மற்றும் சகல செல்வங்களையும் வெறுத்து துறவு நிலை அடைகின்றான். அச்சமயத்திலே வியாழபகவான் தன் போதனை வாயிலாக துறவறத்தை துறக்கச் செய்கிறார். பயத்தின் காரணமாக மற்றும் பற்றுக்களை துறத்தல் தர்மம் அன்று பற்றுக்களை அடக்கப் பழக வழி செய்து வைப்பதே தர்மமாகும். என கூறி யமையை காணலாம். வேண்டும்.

சூரபன்மன் தன் பற்றுக்களின் வழி நின்றமையால் போர் மூண்டது. அச்சமயம் சூரன் தோற்கும் தருவாயில் மாயை ஓடிவந்து சுப்பிரமணிய சுவாமியை எதிர்ப்பது தர்மம் அன்று என போதிக்கின்றாள் அவனால் தர் மத்தை ஏற்க முடியவில்லை. இறுதியில் எவ் வாறாயினும் சுப்பிரமணிய சுவாமியின் பிரசந்த மாகி அருட் கிரணத்தில் ஒரு துளி அவன் மீது சிந்தியமையால்அறியாமைத்திரை விலகியது. "கோலமா மஞ்ஞைதன்னிற் குலவிய குமரன் றன்னை.." என்கிறான் சூரபன்மன். அப்பொழுது தான் ஆதிபகவன் முதற்றே உலகு என்ற தொடரின் பொருள் அவனுக்கு விளங்கியது.

முருகப்பெருமானின் திருவரலாறாகிய கந்தபுராணத்தைக் காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர், நினைப்போர் யாவரும் இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து இறுதி யில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர் என்று நூற்பயனை விதந்து உரைக்கிறது இப்பாடல் "இந்திராகிப் பார் மேல் இன்பமுற்றினிது மேவிச் சிந்தையில் நினைந்த முத்தி சிவகதி அதனில் சேர்வர் அந்தமில் அவுணர் தங்கள் அடல் கெட முனிந்த செவ்வேள் கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே" வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் இளமையின் வடிவமாக விளங்குபவன். ஆற்றலின் நிலையம் என்றும் இளையான் என்றும், எவர்க்கும் மிகப் பெரியான் என்றும் அழகியான் என்றும் சநாதன தர்மம் போலவே விளங்குபவன் ஸ்கந்தன் என்ற முருகன் அடியார் குறை தீர்க தானே வந்து குறை தீர்ப்பான். அவனது மனைவியராகப் புராணம் இரு தேவியரைக் காட்டும். அவளுடைய வலது பக்கம் விளங்குபவள் வள்ளி. அவள் இச்சா சக்தியாக திகழ்கின்றாள். மண்ணுலகில் பிறந்து வளர்ந்தவள் தமிழ்மகள், வேடுவனான நம்பிராஜன் புதல்வி அத்தேவி இகலோக சுகத்தைத் தருவாள். அத்தேவியை முருகன் காந்தர்வ விவாகம் செய்து கொண்டான். முருகனின் இடது பக்கம் எழுந்தருளுபவள் தேவசேனா. விண்ணுலகில் பிறந்தவள். தேவராஜனின் புதல்வி. கிரியாசக்தி. அவளை இறைவன் கற்பு முறையில் பிரம்ம விவாகம் செய்தான். முருகனை வழிபடுவோருக்கு அத்தாய் பரலோக வாழ்வில் இடம்தருவாள். முருகனின் மூன்றாவது சக்தி வேல். முருகனின் கரத்தில் விளங்குகிறது. வெற்றியைத் தருவது. ஞானமே வடிவெடுத்த ஞானசக்தி. "வெல்" என்ற வினையடியில் தோன்றியது "வேல்". அது ஞானமே உருவானது. ஆழுந்து அகன்று கூர்மையாகி அறிவின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. செவ்வேட் பெருமானான திருக்கரத்தில் விளங்கும் சேவற்கொடி அஞ்ஞான இருளகற்றி ஞான ஒளிவரக் கூவுகிறது. (கொக்கு- மாமரம், அற- அறுத்த, கோ- நம் அரசே) வாகனமான மயில் ஆசை என்ற பாம்பை அடக்கி பிரம்ம சக்தியாக ஓம் கார ரூபமாக விளங்குகிறது. தேவர்களின் வாக்காக வேலாயுதத்தைக் கந்தவேளாகவே கண்டு போற்றியதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது.

பற்றுக்கள் நிங்குகையிலே முக்தி கிடைக்கும் என சைவசித்தாந்தம் குறிப்பிடுகின்றது. அழிவின் பின்னர் சூரபத்மன் நாதவுருவாகச் சேவலாக மாறி இறைவனின் கொடியாகவும் விந்துருவுருவாக மயிலாக மாறி முருகனின் வாகனமாயும் மாறியது இதை வெளிப்படுத்துகின்றது என்பர். அவனையே அடைந்து அவனருளாலே அவன் தாள் வணங்குதலே முக்தி இன்பம் பெற்றான் சூரன். இச்சம்பவத்தை சூரன் பெற்ற பேறு என்று கொண்டாடுவார்கள். இதனையே "தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்" என்ற கந்தபுராண அறைகூவல் எங்கள் ஒவ்வொருவரையும் தட்டி எழுப்பி "ஓ... அஞ்ஞானிகளே, கடந்த காலம் போயது. உங்கள் அறியாமை மூட்டைகளை நீக்க நல்ல ஒரு வழி கிடைத்திருக்கிறது. உடனடியாகக் கந்தப்பெருமானின் கழலடிகளைப் போய்ச் சேருங்கள். நீங்கள் ஞானியராவீர்கள்..." என்று நமக்கெல்லாம் அரிய பெரிய நற்செய்தி சொல்கிறது.

ஆன்மாக்கள் நல்லறிவை நாடித் தவிக்கும் போது இறைவனே குருவாக வந்து அருள்வான் என்பதை சிவனார் சனகாதி முனிவர்கள் நால்வருக்கு உபதேசித்தமை சுட்டுகிறது. சிவனார் காமனை எரித்ததும் காலனைக் காலால் உதைத்ததும் அவர் காமத்தையும் மரணத்தையும் வென்றவர் என்பதையும், அவர் அடியார்களுக்கும் இவற்றால் துன்பமில்லை என்பதையும் உணர்த்தி நிற்கிறது. இறைவனை இகழ்ந்து அவனை அவமதிப்பவர்கள் மிகுந்த அல்லல்களை அனுபவிப்பர் என்பதை தக்கன் யாகத்தை இறைவன் அழித்தமை காட்டுகின்றது.

கந்தபுராணத்தில் தாரகன், சிங்கன், சூரபத்மன் என்ற மூன்று அசுரச் சகோதரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கதை கூறப்படுகின்றது. தாரகன் உலகமே உண்மை என்று வாழ்ந்தவன். சைவ சித்தாந்தம் அவனை "கன்ம மலத்திற்கு" உவமிப்பர். சூரபத்மன் "ஆணவ மலம்". இறு மாப்பே அவன் இயல்பு. இம்மூவரையும் முறையே அழித்தமை ஞானம் எனும் வேல் கொண்ட வேந்தனால் மட்டுமே இயல்பாகச் செய்ய வல்ல பெருஞ்சிறப்பு. வள்ளுவர் "நீ உன்னை விரும்பி, உனக்கு நன்மையை விரும்பி, தீவினை ஏதும் செய்யாமல் இருப் பாயாக" என்று அறிவுறுத்துகிறார். சூரனோ எல்லா விதத் திறனும் அறிவும் உடைய வனாய் இருந்தும், இறையருள் பெற்றவனாக இருந்தும், தீவினை செய்து தன்னைத் தானே அழித்து கொண்டமை வள்ளுவர் வாக்கிற் குத் தக்கச் சான்றாகும்.

கந்தபுராணம் கூறும் சமூக தத்துவ கருத்துக்களில் ஒன்றாக சுட்டப்படுவது போர் தர்மமாகும். போருக்கு முன் இருமுறை தூத னுப்பியமை, மறைந்து நின்று போராடாமை, ஆயுதம் ஏந்தாதவனுடன் போராடாமை, தனக்குச் சமானமற்ற வீரனுடன் போராடாமை, புறங் கொடுப்பவனைக் கொல்லாமை ஆகிய செயற்பாடுகள் கந்தபுராணத்திலுள்ள போரில் அசுரர்களால் கூட அநேகமாகக் கடை பிடிக் கப்படுவதைப் பார்க்கிறோம். செஞ்சோற் றுக் கடனுக்குச் சிங்கனும், பிதிர்க்கடனுக்கு இரணியனும், மானத்திற்குச் சூரனும், கற் பிற்கு சூரன் மனைவியும் கந்தபுராணத்தில் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றனர்.

முருகக்கடவுளின் இரு பெண் திருமணம் சமூக சமத்துவத்தைக் காட்டி நிற்கிறது. தேவலோக அரசனின் மகளைத் திருமணம் செய்த அதே இறைவன், தானே வலிய வந்து மனிதர்களில், அதிலும் சாதி முதலிய வேறு பாடுகள் பாராமல் வேடுவர் குல மகளைத் திருமணம் செய்திருக்கிறான். இதை நம் புராணங்கள் மிகவும் தெளிவாகக் காட்டி வந்துள்ளன. இவை தவிர பூவுலகைச் சேர்ந்த வள்ளியம்மைக்குக் கொடுக்கப்படும் உயர்ந்த அந்தஸ்து தனிச்சிறப்பு மிக்கதாகும் எவருமே "முருகனுக்கு வள்ளி" என்றே கூறக் கேட் கிறோம்.

கந்தபுராணத்தில் சைவ - வைணவ ஒற்றுமை காணப்படுகின்றது. அந்தவகை யில் கந்தபுராணக் கதையுடன் இராமாயணக் கதையை ஒப்பு நோக்கும் போது சைவ- வைணவ ஒற்றுமையை உணரலாம். சைவ சமயிகளின் பரம்பொருளான சிவபெருமானின் புதல்வன் முருகன் வைணவர்களின் பரம் பொருளான விஷ்ணுவின் புதல்விகளாகவும் கொண்டாடப்பெறும் வள்ளி, தேவசேனா தேவியரைக் கல்யாணம் செய்தமை சமய ஒற்றுமை. தவிர முருகன் சிவகுமாரனே ஆகி லும் விஷ்ணு அம்சம் நிரம்பப் பெற்றவன்.

இந்திரன் மகன் புலம்புறு படலத்தி னூடாக எந்தவொரு வினைக்குமான வினைப் பயன் என்பது நிச்சயம் உண்டு எனவும் நல் வினையாக இருப்பினும் தீவிணையாக இருப் பினும் கட்டாயம் பலனை அனுபவித்தே ஆக வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறாக பல்வேறு சிறப்புக்களை உடைய முருகனுடைய ஆறுதிருமுகங்களும் அன்பு, அறிவு, ஆற்றல், அழகு, அமைதி, ஆளுமை ஆகிய பண்புகளை உணர்த்தும். நாற்றிசையும் மேலும் கீழும் ஆக, ஆறு பக் கங்களும் பார்த்து நிற்கும் இத்திருமுகங் களை நம்புவோருக்கு துன்பம் எத்திசை யாலும் வாராமல் தடுக்கின்றது. அவனது கரங்கள் பன்னிரண்டும் கொடுப்பதற் கென்றே பிறந்தன. இந்த குணங்குறிகளூடாக சமூ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திலே சிறப்பாக வாழ்வதற்கு தேவையான பண்புகள் எடுத்துக்காட்டப்படுகின்றன.

கந்தபுராணத்தில் தேவர்கள் மற்றும் அசுரர்கள் தம்மிடையே ஒற்றுமை உணர்வு கொண்டவர்களாக விளங்கினர். சூரபன்மன் போர்க்கு அழைப்பு விடுத்த சமயம் அண்டங்கள் அதிரும் வண்ணம் ஏழேழுலோகங்களும் நிறைந்து அசுரர்கள் படைவந்து சேர்ந்தது. அதுமாத்திரமல்லாது தேவர்களும் முருகப் பெருமான் பக்கமாக திரண்டனர். இதனூடாக சமூக ஒற்றுமை வெளிப்படுத்தப்படுகின்றது.

கந்தபுராணம் எழுந்த காலப்பகுதியிலே பல்வேறுபட்ட கருத்துக்கள் சைவர்கள் மத்தியிலே நிலவி வந்ததாகவும் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்து பொதுவான ஓர் கருத்தின் கீழ் எல்லோர் கவனத்தையும் ஈர்ப்பதாகவும் பக்தியின் வழி சமூகத்தை நெறிப்படுத்தும் நோக்காகவும் கந்த புராணம் அமைந்தது.

நன்றி

## உசாத்துணை நூல்கள்


- ஸ்ரீ காசிவாசி செந்திநாதர், சி., கந்த புராண நவநீதம், யாழ்ப்பாண கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக்கழகம், 411/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- மட்டுவில், ஆ., நடராசா, கந்தபுராணச் சிந்தனைகள் (1996), லக்ஷ்மி அச்சகம், ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு.
- பண்டிதமணி, சி., கணபதிப்பிள்ளை, கந்தபுராண போதனை(1960), அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபை
- புலோலி, சு., சிவபாத சுந்தரம், (1928), கொக்குவில் சோதிடப்பிரகாசயந்திரசாலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்த மெய்யியலில் ஆன்மா - ஒருநோக்கு

**அளவையூர் சைவப்புலவர்**
**பண்டிதர் வைத்தியலிங்கம் பாலகிருஷ்ணன்**
BA (Hons) (Jaffna)
M.A.(Paradeniya)

இந்திய மெய்யியலில் முதன்மைக் குரியதாக ஆன்மா பற்றிய ஆராய்ச்சி அமை கின்றது. ஆன்மா என்பது உயிர். அகம், அணு, ஜீவான்மா, ஆத்மா, பசு எனப்பல சொல்லாட் சிகளுக்குட்பட்டதாக, வைதிக, அவைதிக மதங்கள் இரண்டினதும் ஆய்வுப் பொருளாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆன் மாவின் இருப்பு அல்லது இருப்பின்மை, அதன் இயல்பு, இலக்கணங்கள், வரையறைகள் என்பவை பற்றியெல்லாம் இந்திய மெய்யிய லாளர்கள் பன்னெடுங்காலமாக ஆராய்ந்து வந்துள்ளனர். இதன் வளர்ச்சிநிலையை நாம் சைவசித்தாந்தத்தில் தெளிவாக அவ தானிக்க முடிகின்றது. சைவசித்தாந்தம் மிகவும் பிற்பட்ட காலத்தில் முறைமைப்படுத் தப்பட்டதன் காரணமாக அது தனக்கு முற் பட்ட மெய்யியற் கொள்கைகள் ஆன்மா பற்றி ஆராய்ந்த விடயங்களையும் அவற்றின் பொருத்தமற்ற தன்மைகளையும் சுட்டிக் காட்டுவதற்கான வாய்ப்பைப் பெற்றிருந்தது. ஆன்மாவின் இருப்பினையும், அதன் இயல்பு களையும், அதன் விடுதலைக்கான வழி முறையையும் சிவஞானபோதம், அதன் வழி நூலாகிய சிவஞானசித்தியார், சிவப்பிர காசம், முதலிய நூல்கள் பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என வகுத்து விரிவாக விளக்கியுள்ளன.

சைவசித்தாந்த மெய்யியற் கொள் கையை முறையியற்படுத்தித் தருகின்ற முதன் நூலாகிய சிவஞானபோதம் ஆன்மாவின் இருப்பு, பற்றியும் அதன் இயல்பு பற்றியும் தெளிவுறுத்தியுள்ளது. அந்நூலின் மூன்றாம் சூத்திரம் உயிர் உண்மைபற்றிச் சாதித்துள் ளது. பிற சமயங்களின், ஆன்மா பற்றிய பொருத்தமற்ற ஏழு கொள்கைகளை எடுத் துக்காட்டி ஆன்மாவின் இருப்பியலை அளவை முறைக்குட்படுத்தி ஏது, மேற்கோள், எடுத் துக்காட்டு என்றவகையில் தர்க்கரீதியாக நிறுவுகின்றார் மெய்கண்டார். ஆன்மா இருப் பின்மை பற்றிய ஆராய்வுகளே இருத்தலுக் கான அடிப்படை என்ற வகையில் முதலில் இருப்பின்மை பற்றிய கருத்துக்களையும் பின்னர் இருத்தலுக்கான அடிப்படைகளை யும் மெய்கண்டார் விளக்குகின்றார். ஆன்மா இருத்தலுக்கு ஆகமப்பிரமாணம் ஆதாரமாக அமைகின்றதாயினும் மந்தபுத்தி உடைய வர்களுக்காக காட்சிப்பிரமாணத்தால் அறிய முடியாத ஆன்மாவை அனுமான அளவை கொண்டு நிறுவுகின்றார்.

**“உள(து) இல(து) என்றலின் எனதுடல் என்றலின்**
**ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்**
**உண்டி வினையின்மையின் உணர்த்த உணர்தலின்**
**மாயாஇயந்திரத்தனுவினுள் ஆன்மா”**

என்ற சூத்திரத்தை அமைத்துள்ளார். இச் சூத்திரப் பொருளை விரித்துக் கூறும் பாங் கில் அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தியார் சுபக்கத்தில் "உயிர் எனப்படுவது" என்பது முதல் நான்கு திருவிருத்தங்களை அமைத்துள்ளார். (187-190) சிவஞான முனிவர் தமது மாபாடியத்தில், இவ்விடயங்களை விரிவாக ஆராய்ந்துள்ளார். பருவுடம்பு அதன் கண்ணுள்ள கண்முதலிய பொருட்கள், மனம் முதலிய உட்கருவிகள் என்பன ஆன்மா வாகத் தெரியவில்லை. அதனால் ஆன்மாவை சூனியம் என்ற மாத்துமிகரின் கருத்தை மறுத்து "இலது என்றலில் உளது" என மெய் கண்டார் மொழிந்தார். இலது என்று சொல்லு கின்ற ஒன்று உளதன்றோ? அதுவே ஆன்மா என சாதித்ததாக சிவஞான முனிவர் கருதி னார். எனினும் ஞானப்பிரகாசர் சித்தியார் உரை யில் ஆன்மா இலது என்பது உலகாயதர் கூறும் கருத்து என்றும் அதனை மெய்கண் டார் மறுப்பதாகவும் உரை எழுதியுள்ளார். "ஆன்மாவை இல்லை என்று கூறுகின்ற ஒருவன் உளனாதல் வேண்டும். இவ்வாக்கியத்தின் கருத்தா அறவே இல்லை எனல் ஒவ்வாது, இல்லை என்ற மறுப்பே உண்டு என்பதைச் சாதிக்கும். இவ்வாறு சித்தாந்திகள் கருத் தமைய, உலகாயதர் "முயற்கோடில்லை" என்று அவர்கள் கூறும் இன்மைவாசகத்தை எடுத்துக்காட்டி, ஆன்மா இல்லை எனக் கூறு வதில் பிழை இல்லையெனக் கூறுவர். ஆன்மா இல்லையெனக் கூறுதல் முயற்கோடு முதலிய வற்றை இல்லையெனக் கூறுபவன் தன்னில் வேறாகிய பொருள்களை இல்லையெனக் கூறு பவன் தன்னையே தான்- இல்லையெனக் கூறுகின்றான். தானே இல்லாத போது தன்னை இல்லையென அவன் எவ்வாறு வாதிட முடி யும். பேராசிரியர் வ.ஆ.தேவசேனாபதி, டேகாட் என்பவரின் கருத்தினை எடுத்துக் காட்டி, மெய்கண்டாரின் கருத்தினை நிலை நாட்டினார். டேகாட், "நான் சிந்திக்கின்றேன் எனவே நான் இருக்கின்றேன்" என்றார். "நினைக் கின்றேன், ஐயப்படுகின்றேன் என்று கூறிக் கொள்பவன் ஒருவன் கட்டாயம் உளனாதல் வேண்டும். அவ்வாறே ஆன்மா இல்லை என்று சொல்லுபவன் ஒருவன் உளனாதல் வேண் டும் என்று உலகாயதரை மறுத்து உயிர் உண் மையினைச் சித்தாந்திகள் சாதித்துள்ளனர்.

ஒவ்வொன்றையும் எடுத்துக் கொண்டு இது ஆன்மா அன்று, இது ஆன்மாவன்று எனக் கழித்துக் கொண்டு சென்றதும் முடிவில் ஆன்மா சூனியம் என அறுதியிட்டது எது? ஒரு அறிவே அன்றோ? அந்த அறிவு உளதாகலின், அதுவே ஆன்மாவாதற்குத் தடை யென்ன? இந்த அறிவையும் சூனியமெனக் கூறினால் அது என்னை ஈன்றாள் மலடி" எனக் கூறுவோன் கூற்றுப்போல மறுகோள் உரையாய் முடியும்" எனச்சித்தாந்திகள் விளக்குகின்றனர்.

உலகாயதர் அறியும் பொருள் உண்டு என்றால் பொருந்தும், அது நிலம் முதலிய நான்கு பூதங்களின் கலப்பாகிய உடம்பிற்கு வேறானது அன்று. ஏனெனில் நல்லறிவு உடம் பிற்கு வேறாய்க்காணப்படுவதில்லை. நான்கு பூதங்களும் சடமாயினும் அவை ஒன்றாய் கலந்தபொழுது அக்கலப்பில் ஓர் அறிவு தோன் றும். அது பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு மூன்றும் கலந்தகாலப் பகுதியில் முன் இல் லாத சிவப்பு நிறம் தோன்றுதல் போல்வது. மேலும் "யான் பருத்தென்யான் சிறுத்தேன்" என்றாற் போல உடம்பினையே யாவரும் நான் எனக் கூறுகின்றனர். ஆதலின் ஆன்மா வாவது உடம்பே என்பது தேகாத்மவாதி களாகிய உலகாயதர். "யான் பருத்தேன்", "யான்பார்ப்பான்", "யான்கரியன்" என இவ்வாறு கூறுதல் உடம்பின் தன்மையை உயிர்மேல் ஏற்றிக்கூறும் உபசாரவழக்கே. அதனை யான் உடம்பு, யான்கை, யான்கால், என இவ் வாறு ஓரிடத்தம் வழங்க காண்மையாலும் எனது உடம்பு, எனது கை என்கின்றபோது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பிற்கு வேறாகச் சொல்லுகின்ற ஒன் றுள்ளது. அது உயிர் என்பதை "எனதுடல் என் றலின் ஆன்மா உள்ளது" என்றார் மெய் கண்டார்.

மெய், வாய், முதலிய ஐம்பொறிகளும் ஊறு, சுவை முதலிய ஐம்புலன்களையும் அறிவனவாதலாலும் ஐம்பொறிகளே உயிர் என்பர். இந்திய ஆத்மவாதிகள். ஐந்து இந் திரியங்கள் என்கின்றபோது ஐந்து ஆத் மாக்கள் என்கின்ற நிலை வரும். இந்திரியங் கள் ஒவ்வொன்றைத்தான் அறியும். மற்றைய புலன்களை அறிவதில்லை. ஐம்பொறிகள் பிற பொருளை அறியுமேயன்றி தம்மையே தாம் அறியமாட்டா. நான் கேட்டேன், நான் சுவைத்தேன், நான் பார்த்தேன் என நான் என்று கூறுகின்ற, ஐம்புலன்களையும் ஒரு சேர அறிவது எதுவோ அதுவே ஆன்மா என் கின்றார். இக்கருத்தினைச் சிவஞான சித்தி யார். (செய்யுள் - 189)

**"அறிவதைப் பொறியே யென்னின் உறக்கத்தினறி யாவாகும்**
**அறிவதும் ஒன்றென் றாக ஒன்றொன்றாய் அறிய மென்னின்**
**அறிவுக ளொன்றையொன்றங்கறிந்திடா ஐந்தையுங் கொண்(டு)**
**அறிவதொன் றுண்ட தான்மா ஐம்பொறி அறிந்திடாவே"**

எனக் குறிப்பிடுகின்றது. சூக்குமதேகம் (ஐந்து தன்மாத்திரைகள் மனம், புத்தி, அகங் காரம்) அல்லது புரியட்டகாயம் என்பது நுண் ணுடம்பு, இவ்வுடம்பு ஐம்புலன்களாலும் அந் தக்கரணங்களாலும் அமைவது, புறவுடம் பிற்கு வேறாக அகத்தே நுண்ணுடல் உண்டு என்பது கனவுநிகழ்ச்சியால் உணரப்படும். உறங்கும் பொழுது பருவுடல் அடிப்படியே கிடக்கின்றது. அப்பொழுது கனவு என்னும் அனுபவ நிகழ்ச்சிகளுக்கு காரணமாக அமை வது நுண்ணுடம்பு, அந்த நுண்ணுடம்பே ஆன்மா என்பர் ஒருசார் உலகாயதர் சூக்கும தேகான் மவாதிகள் எனப்பட்டனர். எனின் விழிப்புற்ற தம் கனவு கலைந்துவிடும், கனவிலே அறி கின்ற சூக்குமதேகம் கனவிலே கண்டவற்றை விழித்ததும் சொல்லமுடிவதில்லை. உறங்கும் போது ஆன்மா தூல தேகத்தில் இருந்து சூக்கும தேகத்திற்கு மாறுவதனால் முன்னர் கனவில் கண்டதை மறந்து விடுகின்றோம்.

**"கண்டவற்றை நாளும் கனவில் கலங்கியிடும்"**
**திணதிறலுக் கென்னோ செயல்" (திருவருட்பயன், 34)**

என்பர் உமாபதியார், ஆன்மா தூலதேகமும் அல்ல சூக்கும தேகமுமல்ல. நனவின் கண் கனவுகண்டம், கண்டிலம் என்று நின்றும் நிற்பது உளதாகலின் அதுவே அவ்வான்மாவாம். மேலும் ஆன்மா அந்தக் கரணங்களாய் இருப் பது என்ற கருத்தினை மறுத்து அவை ஆன் மாவிற்கு விடயங்களை அறிய உதவுபவை என்ற கருத்தைச் சித்தாந்தம் விளக்குகின் றது. "புந்தியை மனம் தென்றும் மனமது புந்தி என்றும் சிந்தையைச் சீவன் என்றும் சீவனைச் சிந்தையென்றும் (சீவனைச் சிந்தை என்றும்) முந்தனை ஆன்மா என்றும் ஆன்மாவை முந்தன் என்றும் வந்திடும். "(சித்தியார், 218) இந்த நான்கு அந்தக்கரணம் பற்றி சிவஞான போதமும், சித்தியாரும் விரித்துரைக்கின் றன. "அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று, அவை சந்திதத்து ஆன்மா" "ஆன்மா அந் தக் கரணங்களாயுள்ள மனோ புத்தி சித்த அகங்காரங்களில் ஒன்றன்று" என்பது மெய் கண்டார் காட்டிய மேற்கோள். இந்த நான்கு அந்தக்கரணங்களின் செயற்பாட்டை விளக் கும் வெண்பா.

**"சிந்தித்தாய் சித்தம் தெளியாதாய் ஆங்காரம்**
**புத்தியாய் ஆயந்தது மனம் ஆகி – பந்தித்து**
**வேவ்வேறு தானே துணிந்து உள்ளம் இவ்வேறாம்**
**அவ்வேறாம் போது போல் ஆங்கு" (போதம் 4.1)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனம், ஐந்து இந்திரியங்கள் மூலம் காட்சியைப்பெறும், சித்தம் மானதக்காட்சி மூலம் பெற்றது அதுவோ எனச் சிந்திக்கும். இதன் மூலம் மனம் கண்ட பொருள் இன்னது தான் என்பது பற்றிக்காணும். அகங்காரம் இது எது எனத் தெளிவு பெற முயலும். புத்தியே இது இன்னது தான் என்று தெளிவடைந்து தீர்மானிக்கும். இவ்வாறு நான்கு காரணங்களின் நுட்பமான செயற்பாட்டின் மூலம் ஆன்மா விடயங்களை அறிகிறது. அறிதல் என்ற செயற்பாட்டின் இத்தனை நுண்ணிய படிமுறைக்கிரமம் அமைந்துள்ளனர் சைவசித்தாந்திகள்.

உலகாயதருள் பிறிதொரு சாரார் மூச்சுக்காற்றாகிய பிராணவாயுவினை ஆன்மா எனக் கொண்டனர். இறந்த உடம்பில் மூச்சில்லை எனவே பிராணவாயுவே ஆன்மா என்பர். பிராணவாயு உயிராகமுடியாது என்பர் மெய்கண்டார். பிராணவாயு சடம், அசித்து ஆதலின் அறிதல், செய்தல், விரும்புதல் என்பவற்றை அதனால் செய்ய இயலாது. உயிர் தான் உடம்பின் தலைவன். விழிப்பு நிலையிலும், உறக்க நிலையிலும் செயற்படுவது பிராணன். விழிப்பு நிலையில் கருவிகள் செயலாற்றும். உறக்கநிலையில் பிராணன் இயங்குகின்ற போதும் கருவிகள் செயற்படுவதில்லை. உறக்கத்தில் உயிர் ஒடுங்கியதால் கருவிகள் ஒடுங்கி நிற்கின்றன. புருவநடு (இலாடத்தானம்) தான் உயிர் விழிப்பு நிலையில் இயங்குகின்ற இடம். மூலாதாரத்தில் ஒடுங்குகின்ற போது பிராணன் தான் அதனுடைய காவலனாக இருக்கின்றது. எனவே உறங்கும்பொழுது இன்பதுன்ப நுகர்ச்சி முதலிய செயல்கள் இன்மையினால் ஆன்மா உள்ளது என்கின்றார். "கண்படில் உண்டி (நுகர்ச்சி) வினை (செயல்) யின்மையின் ஆன்மா உளது".

ஏகான்மவாதக் கருத்துப்படி உயிர் என்ற தனிப்பொருள் கிடையாது. பிரமம் அவித்தை காரணமாக ஆன்மாவாகத் தோன்றுகின்றது. அவித்தை நீங்கியபின் ஆன்மா பிரமத்துடன் இணைகின்றது. பிரமப் பொருள் சித்தாகையால் அதுவே ஆன்மாவாம். அதனின் வேறாய் ஆன்மா உண்டு எனில் அதுவும் சித்துப்பொருளாய் இரண்டு சித்துப் பொருளாய் முடியும். இரண்டு சித்துப்பொருள் கொள்ளுதற்கு காரணம் இன்மையால் மிகை என்னும் குற்றமாம் என்பர். அவர் கூற்றை மறுத்து உணர்த்த உணர்தலில் ஆன்மா உளது என்கின்றார் மெய்கண்டார்.

கருவிகளோடு கூடிய பின்பும் ஆன்மாவிடயங்களை அறிதல் அன்றி, இறைவனது இயல்பை அறிதல் இல்லை. கலை முதலிய கருவிகள் ஒவ்வொன்றாக வந்து பொருந்தி அறிவிக்க அறிந்து வருவதால் அத்தகைய ஆன்மா எக்காலத்தும் அறியாமையுட்படாது. அறிவாகியே நிற்கின்ற பிரமமாதல் இயலாது. ஆகையால் ஆன்மா பிரமத்திற்கு வேறாய் உள்ளது. பிரமத்தின் அறிவுவேறு ஆன்மாவின் அறிவு வேறு. ஒன்றை அறிந்தும், அதன்பின் மற்றொன்றை அறியமுயன்றும், முன் அறிந்ததை அறியாமையால் மறந்தும் - இவ்வாறு ஒவ்வொன்றாகவே ஆன்மா அறிந்து வருகின்றது. ஒரு காலத்தில் அறிகின்ற அந்தப்பொருளையும் இடைவிடாது அறிதலின்றி விட்டுவிட்டே அறிந்து, அதனால் அஞ்சவத்தைப்பட்டு அவற்றுள் அடங்கிநின்று, இவ்வாறு அறிந்து வருவது எந்தப்பொருள் அதுசடம் அன்று என்பது உணரப்படும். ஆகவே அதனை பேரறிவுப் பொருள் எனலாமோ எனின், எல்லாவற்றையும் ஒருங்கு உணர்வதே பேரறிவாகையால் அத்தகைய பேரறிவுப் பொருளும் அன்றாம். ஆகவே உண்மை மெய்ந்நெறியாகிய சித்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்த நெறியை அத்தகையதாக உணர்ந் தவன் மேற்கூறிய பொருளை, வேறு எது வாதல் கூடும் என மனம் ஒருங்கிச் சிந்திப் பானாயின் அந்தந்தப் பொருளிலும் தான் அறிவேயாய் அழுந்திச், சார்ந்ததன் வண்ண மாய் நிற்கும் இயல்பினையுடைய தனிப் பொருளாகிய ஆன்மாவாம். என ஆன்மபிர மத்திற்கு வேறான உள்பொருள் என்பர் சித் தாந்திகள்.

சமுகான்மவாதிகள் "கருவிகள் பல வற்றுள் ஒவ்வொன்றையே ஆன்மா என்றால் பொருந்தாது. அனைத்துக் கருவிகளும் கூடிய தொகுதியே ஆன்மாவாகும். ஏனெனில் அவற் றுள் ஒன்று குறையினும் அறிவு நிகழாமையின் மாயா காரியங்களின் தொகுதியாய் அமைந்த செயற்கைப் பொருட்களின் தொகுதியாய்த் தோன்றி, அழிகின்ற உடம்பு தோற்றக்கேடு கள் இன்றி என்றும் உளதாகிய ஆன்மாவா தல் இயலாது. மாயா இயந்திர தனுவினுள் இருப்பது ஆன்மா என்கின்றார் மெய்கண்டார்.

உடம்பில் உள்ள கருவிகளை சித்த மும், சித்தப்பகுதியுமாகிய அகச்சமுதாயம் ஐந்தின் தொகுதி என்பது சௌத்திராந் திகர், வைபாடிகரது கொள்கை அதனால் அவர்கள் உடம்மை மாயாகாரியங்களால் ஆக்கப்பட்டது என்பது எமக்கு உடன்பாடன்று, ஆகவே எமக்கு உடன்படாத கொள்கை யைச்சொல்லி எம் கொள்கைக்கு கூறும் மறுப்பு எமக்கு உடன்பாடன்று என்பர். உடம்பின் பகுதிகளை யார் எப்பெயரால் கூறினும் சித் தாந்தம் அவைகளை கலைமுதலாக பிருது வியீறாக உள்ள தத்துவங்களாகவே கூறும். அவை அனைத்தும் மாயாகாரியங்கள். அது எவ்வாறு ஆயினும், அவை தோன்றி அழியும் அநித்தப் பொருட்களே என்பதில் உனக்கும் கருத்து வேற்றுமை இல்லை. ஆதலின் அவற்றை நித்தப்பொருளாகிய ஆன்மா எனப் பொருந்தாது எனச் சைவசித்தாந்தி கள் மறுத்துரைப்பர். சிவஞான சித்தியார் (187) இக்கருத்தினை

**"உயிரெனப்படுவ திந்த உடலின்வே றுளதாய் உற்றுச் செயிகுறும் இச்சாஞானச் செய்திகளுடைய தாகிப் பயில்வுறும் இன்பதுன்பப் பலன்களும் நுகரும் பார்க்கில் துயிலொடும் அஞ்சவத்தைப்படும். உண்மை துரியாதீதம்"**

எனக் குறிப்பிடுகின்றது. ஆன்மாவின் இருத்தல் பற்றிய விடயங்களை மிக விரி வாக ஆராய்ந்து அது உள்பொருள்தான், அது மாயா இயந்திரதானுவினுள் உள்ளது என்பதை நிறுவிய சைவசித்தாந்திகள் அதன் இயல்பு பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ள னர். பரிணாமவாதி-பிரமமே உயிர், சாங்கி யர்- அறிவு மாத்திரமாயிருப்பது உயிர், பௌ ராணிகர்- உயிர் உருவப் பொருள், கௌலர்- உயிர் அருவுருவம், பதஞ்சலர்- உயிர் அருவம், பாஞ்சராத்திரி- உயிர் அண, சமணர்- உயிர் உடலளவினது, பாட்டாசாரியா - உயிர் உட லெங்கும் வியாப்பியம், ஐக்கிய வாதி- உயிர் இயல்பில் தாய்மையானது, வைசேடிகர் உயிர் சடம் என்ற கருத்தியலை மறுத்து ஆன்மா என்பதற்கு வியாபகம் என்பதே பொருளாகும். ஆன்மா எல்லையற்ற வியாகப் பொருளே. ஆயினும் அது இறைவனது வியாபகத்துள் அடங்கிநிற்பதாகும். ஆன்மா பாசத்தை நோக்க வியாபகமாயும் பதியை நோக்க வியாப்பியமாயும் நிற்பது. ஆன்மா இங்ஙனம் எங்குமாய்நிற்கும் வியாகப் பொருளேயாயி னும் அவ்வியாபகத்தைத் தோன்றவொட் டாது மறைத்து நிற்கின்றது பாசம். அதனால் உயிர் அணுபோலத் தோன்றுகின்றது. இவ் வாறு ஆன்மா சொரூபம், தடத்தம் என்னும் இரு இயல்பிற்கு உட்பட்டதாய் அமைகின் றது. ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தன்மை யொன்று உண்டு. அத்தன்மையே அதற்கு இலக்கணம் எனப்படும். இத்தன்மையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

தனித்த நிலையில் சிறப்புத் தன்மையென் றும், வேறு பொருளின் சார்பால் உளதாகும் தன்மை பொதுத்தன்மை என்றும் பெயர் பெறும். அதனையே வடமொழி நூலார் சொருபம், தடத்தம் எனக் குறிப்பிடுவர். ஆன்மா அருவப்பொருள்: வியாபகமுள்ளது: சேதன மானது: நித்தியமாயிருக்கும். ஆயினும் அதன் சித்துத் தன்மை தூலவியல்பிற்று. இதுவே ஆன்மாவின் சொந்தத்தன்மை இதனையே சிறப்பியல்பென்பர். மேலும் அறிவிக்க அறியும் இயல்பு, சத்தையும் அசத்தையும் அறியும் இயல்பு, சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் இயல்பு ஆகிய இவை மூன்றும் ஆன்மாவின் சொரூப இலக்கணம் அல்லது சிறப்பிலக்கணம் எனவும். ஆணவ மலத்தால் மறப்புண்டு மாயைகன்மங்களைப் பொருந்திப் போக்குவரவுறுதலாகிய கேவல சகல நிலை ஆன்மாவுக்குத் தடத்த இலக்கணம் அல்லது பொதுவிலக்கணம் எனவும் சுட்டப்படும். இதனைச் சிவாக்கிரயோகிகள்

"பசுக்களுக்கும் பொது என்றும், தன்னியல்பது என்றும் பகரும் ஈர் இலக்கணம் உண்டு அதில் பொதுவைப்பகரில், நசித்திடா ஞர்னத்தை ஆணவத்தால் தடுக்க (நாசமற்றதாகிய விருத்தி ஞானத்தை சிவசக்தி ஆணவமலத்தால் தடுக்க), நலம் தீங்கை உணராதே நானாகாரத்தையாம், நலம் தீங்கை உணராதே நானாகாரத்தையாம், புசிப்பு இன்றி, நித்தமாய் எண்ணிலதாய் விபுவாய், பொருந்தியது தானாகிப் புந்தி முதல் இன்றாய், வசிப்பதுமாய் மாயையிலே கலை முதல்களாகி வந்தது ஆணவத்தின் மறைப் பொதுக்கச் சிறிதே." (சிவநெறிப்பிரகாசம்) எனக்குறிப்பிடுகின்றார். ஆன்மா சிவன் அறிவிக்க அறியும் இயல்புடையது என்பது பின் வருமாறு விளக்கப்படுகின்றது.

- ஆன்மா தானாக எவற்றையும் அறியும் தன்மையுடையது எனின் இந்திரியங்கள் வேண்டியதில்லை.
- ஆன்மா அறியும் தன்மை இல்லாத தெனில் அத்தன்மையுடைய ஆன்மாவுக்கு இந்திரியங்கள் எதன்பொருட்டு?
- அவ்விந்திரியங்கள் ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்குமெனில் அவை சடமாதலால் அறிவைக் கொடுக்கமாட்டா.
- எல்லாவற்றையும் அறிகின்ற பரமசிவன் ஆன்மாவுக்கு அறியும் தன்மையைக் கொடுப்பாரெனின் ஆன்மா இயற்கையில் அறிவில்லாத சடப்பொருளாகவேண்டும்.
- பரமசிவன் அறிவில்லாத சடப்பொருளுக்கு அறிவைக் கொடுக்கமாட்டார். ஆதலால் ஆன்மா இயற்கையில் அறிவுடைய பொருளாயும், அறிவித்தால் அறியும் பொருளாயும் அமையும். இக் கருத்தினைச் சிவப்பிரகாசம் விளக்கும் போது

**"உரு உணர்வு இலாமையானும் ஓரொரு புலன்களாக**
**மருவிநின்று அறிதலானும் மனாதிகள் தம்மின் மன்னித்**
**தருபயன் நுகர்தலானும் உயிர்சடமாதலானும்**
**அருவினை உடலுள் ஆவி அறிவினால் அறியும் அன்றே"**

எனக்குறிப்பிடுகின்றது. உயிர் அறிவுப் பொருளாயினும் ஆனவமலச் சேர்க்கையின் காரணமாக எதனையும் தானாக அறியாது. ஐம் பொறிகள் முதலியவற்றின் மூலமே அறிவைப்பெறும். இந்திரியம் மாயாகாரியமான சடப்பொருள்கள் ஆகையினால் அவை யாவும் தாமாக அறியவோ அறிவிக்கவோ வல்லன வல்ல. இறைவனே யாவற்றையும் அறிந்து அறிவித்து நிற்பான். சாதாரண வாழ்விலும் நாம் அறிவை நூலால், அல்லது மற்று மொருவரால் அன்றி அறியமுடியாதிருக்கும் நிலை உண்டு. "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பது இக்கருத்தியல் பற்றியதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முதலாகிய பொறிகள் தாம் தாம் விடயங்களை அறிவதற்கு உதவியாக தம் பின்னணியில் இருந்து தம்மையியக்கும் ஆன்மாவை யறிவதில்லை, அதுபோல ஆன்மாவுந் தான் விடயங்களைப் பெறுவதற்கு உதவியாக தன்பின்னணியில் இருந்து தன்னையியக்குஞ் சிவனை அறிவதில்லை. இறைவனும் ஆன்மாக்களின் கன்ம அநுபவங்களுக் கேற்ப விடயங்களை அறிவித்து நிற்பான். இவ்வாறு இறைவன் தான் அறிந்தறிவித்து நிற்றலிற் படைத்தல் முதலிய ஐந்தொழில்கள் அதிசூக்குமமாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இக்கருத்தினைச் சிவஞான சித்தியார் (231)

**"பொறி புலன்கரணம் எல்லாம் புருடனால் அறிந்து ஆன்மாவை**
**அறிதரா அவையே போல ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்**
**செறிதருஞ் சிவன் த(ன்)னாலே அறிந்திடுஞ் சிவனைக் காணா**
**அறிதரும் சிவனே யெல்லாம் அறிந்தறிவித்து நிற்பான்."**

எனக் குறிப்பிடுகின்றது. அறிவே வடிவாகிய பதிப்பொருள் சித்து அறிவே இல்லாத சடப்பொருளாகிய பாசங்கள் அசித்து என்று கூறப்படும். அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாக ஆன்மா சதசித்து என்று மொழியப்படும். சித்தாய பதி ஒருபெற்றியதாய் இருத்தல் பற்றி சத்து என்றும் அசித்தாகிய பாசங்கள் நிலைமாற்றம் அடைதல் பற்றி அசத்து என்றும் சொல்லப்படும் இடைப்பட்ட பொருளாகிய பசு சதசத்து என்று சொல்லப்படும். அசத்தாகிய பாசம் சிவத்தையும், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தையும் அறியும் இயல்புடையவன வல்ல. அவை இரண்டினையும் அறியும் உரிமையுடையது சத்தும் அசத்துமல்லாத சதசத்தாகிய ஆன்மாவே யாம் என்பது பரிசேட் வளவையால் பெறப்படுகின்றது.

**"அறியாமை சாரின் அதுவாய் அறிவாம்**
**நெறியான போததுவாய் நிற்கும் – குறியால்**
**சதசத் தருள் உணர்த்தத் தான் உணராநின்ற**
**விதமுற் றறிவெனும்பேர் மெய்."**

என்ற திருப்பாடல் இக்கருத்திற்கு அரணாக அமைந்து விளங்குவதைக் கண்டு தெளியலாம். திருவருட்பயனில் உமாபதியார் இக்கருத்தினைச்

**"சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கண் இவை**
**உய்த்தல்சத சத்தாம் உயிர்"**

எனக் குறிப்பிடுகின்றார். ஆன்மாவின் சித்துத்தன்மை நுண்மையாதலின்றித் துர்லமாயிருக்கிறபடியால் அது எப்பொருளோடு சார்ந்ததோ அப்பொருளின் தன்மையைத் தன் தன்மையாகக் கொள்ளும் ஒரு நிலை அதற்கு உளதாயிற்று. அதனால், ஆணவ மலத்தின் இருளைத் தன்குணமெனக் கொண்டு பந்தமுற நேர்ந்தது. இந்நிலைக்கு இருளோடு கூடிய கண், ஆகாயங்களை உவமையாகச் சொல்லலாம். கண்ணும் ஆகாயமும் இருளோடு கூடி இருளூற்று நிற்பது போன்றிருக்கும். ஆன்மா நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடு மிரண்டன்பாலும் எனக்குறிப்பிடுகின்றது சிவஞான சித்தியார். ஆன்மா தன்னளவில் சத்து மன்று அசத்துமன்று. ஆனால் சத்தை அறியும் வகையாற் சத்தாயும், அசத்தை அறியும் வகையில் அசத்தாயும் நிற்பது. அதனால் சதசத்து எனப்படும். அங்ஙனம் நிற்கையிலும் அசத்தைப் போல தானொரு தனிப்பொருளாகவோ சிவத்தைப்போல தானொரு தனிப்பொருளாகவோ விளங்கி நில்லாது. பெத்தநிலையில் மலத்தையும், முத்திநிலையில் சிவத்தையும் சார்ந்து நிற்றலால் ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது எனப்பட்டது. மலர்மணம், மலர் போலத் தானொரு தனிப் பருப்பொருளாய்த் தோன்றாது. மலரின் சார்பில் அறியப்படுவதாய் நிற்பது போல் எனலாம். ஈசுவர அவிவகார வாதிகள், சிவசமவாத சைவர் முதலியோர் ஆன்மா எல்லாவற்றையும் அறியும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு கருத்தா அறிவிக்கவேண்டியதில்லை சிவசங்கிராந்தவாதிகள் இந்திரியங்கள் ஆன்மாவுக்கு அறிவைக் கொடுக்குமென்பர். தானே என்பர் ஆன்மாவின் இயல்புணர்ந் தவர்கள் ஆன்மா தேகத்தில் ஓரிடத்தி லிருந்து அறியுமென்றும், தேகம்முழுவதும் நிறைந்து நின்று அறியுமென்றும், எவ்விடத் தும் வியாப்பியாய் நின்றறியுமென்றும், அறி விக்க அறிதலின்றித் தானே அறியுமென்றும், மனம்முதலிய கருவிகள் அறிவைக் கொடுக்க அறியுமென்றும் பலவாறான கொள்கைகளை மறந்து, ஆன்மா அறியும்தன்மை எப்படியெனின் தன்னை அடுத்த பொருள்களின் நிறங் களையே தன்னிறமாகக் கொண்டு காட்டி டும் படிகம்போல் சார்ந்தவண்ணமாய் நின்ற றியும் என சைவ சித்தாந்திகள் நிறுவுவர்.

ஆன்மா தூலசித்தாம் முறைமை பற்றி இயல்பாகவே பாசத்தில் கட்டுண்டு கிடத்தல் உயிர்களுக்குப் பொதுவியல்பு எனப்படும். பொதுவியல்பு எனவே, இந்நிலை ஒரு காலத்தில் வருவதேயாகும். பாசத்திற் கட்டுண்டு நிற்கும்நிலை கேவலம், சகலம் என இருவகைப்படும். அவற்றுள் கேவலமாவது உடல்பொறி கரணமின்றி ஆன்மா ஆணவ மலச் சேர்க்கையால் அறிவும் செயலும் விழை வும் மழுங்கிக் கிடத்தலால், அவற்றை விளக் குதற் பொருட்டு இறைவனால் மாயா காரிய மான கருவி கரணங்கள் கூட்டப்படுகின்றன. இவற்றோடு கூடியவழி, ஆன்மாவின் அறிவு விழைவு செயல் என்பன விளங்குகின்றன. ஆன்மா கருவிகரணங்களோடு கூடலும், கூடாது நீக்குதலும் ஆகிய இருவகையாக இயங்குகின்றது. அவ்வியக்கநிலை அவத்தை எனப்படும். ஆன்மாவானது கன்மத்துக்கீடா கப் பொருந்தின தூலசரீரத்திலே இலாடத் தானத் திலே பொருந்தி நின்று, கன்மத்துக் கீடாக வரும் சத்தாதி விடயபோகங்களை இந்திரியங்கள் வழியாக அறிந்து பற்றி அவ் விடய போகங்களை அழுந்தி அனுபவிக் கும் அங்ஙனம் அனுபவிக்கும் தன்னையும், அநுபவிக்குமாறு செலுத்திநிற்கும் திருவரு ளையும் அறியமாட்டாது. பொருந்தி அனு பவிக்கும் அவ்வாறு அறியும் தன்மையில் வரு கின்ற ஐந்தவத்தை ஆன்மாவிற்கு உரிய இயல்பாகின்றது. இவ்வுடல் தூலம், சூக்கு மம், குணம், கஞ்சுகம், காரணம் என ஐவகைப் படும். தூலம் முதல் காரண மீறாகக் கூறிய உடம்பைந்தும் ஒன்றினும் ஒன்று சூக்கும மாய் இருக்கும். இந்நிலையில் ஆன்மா ஒவ் வொரு உடம்போடு இணைந்தது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐவகை அவத்தைகளுக்கு உட்பட்ட தாய் அமையும். இவ் அவத்தையியல்பு ஆன் மாவுக்கு பொதுவியல்பாதல் ஆன்மாவின் தடத்த இலக்கணம் எனப்படும். இவ் வியல்பை "எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அழுந்தி இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை அண்ணல் அருளால் நண்ணி அதனால் அலகு இல் நகழ் போகங்கள் அருந் தும் ஆற்றால் புண்ணியம் பாவம் புரிந்து போக்கு வரவு உடைத்தாய்" எனச் சிவப்பிர காசம் குறிப்பிடுகின்றது. தொகுத்து நோக்கு கின்றபோது சைவசித்தாந்தம் ஆன்மாவின் இருப்புப்பற்றியும் அதன் இயல்பு பற்றியம் ஆராய்ந்த விடயங்கள் ஆழமானவையும் நுட்பமானவையுமாம். சைவ அறிவாராய்ச்சி யியலின் உயர்வை எடுத்துக்காட்டுவதாக, தர்க்கத்திற்கு அதிக முதன்மை வழங்கும் மெய்யியலாளர்கள் திருப்திப்படத்தக்கதாக அமைகின்றது. மெய்கண்டார் ஆன்மாவின் உண்மை (இருத்தல்) பற்றி நிறுவும் போது அனுமானப் பிரமானத்திற்கு முதன்மை வழங்கு கின்றார். மாயா இயந்திர தானு வினுள் இருக் கின்ற பொருள் ஆன்மாதான் என்பதும், அது அருவமானது, வியாபகமானது, என்பதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்தவாக்கியத்தினாலே நிறுவத்தக்கன. மெய்கண்டார் பயன்படுத்தும் ஆன்மா என்ற சொல்லாட்சி சைவசித்தாந்த நோக்கில் முத்திநிலைக்குரிய ஆன்மாவையே குறிக் கத்தக்கது. எனவே அவ்விடத்தில் பசு என்ற சொல்லாட்சியே பொருத்தமுடையது போல் தோன்றுகின்றது. மேலும் இவ்வாறு நுட்ப மாக ஆராயப்பட்ட விடயங்களை மேலத் தேய. நவீன உளவியல் சார் சிந்தனையாளர் களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கு வது மிகச்சிறப்பாக அமையும். நவீன உள வியலா மனத்தின் இருப்புப்பற்றியும் கேள்வி எழுப்பி உயிரினங்களின் நடத்தை சார் உள வியலுக்கே அதிக முன்னுரிமை வழங்குகின் றனர். சிந்தித்தல் முதலிய செயற்பாடுகள் முளையில் நிகழும் இரசாயன மாற்றம் என் பர். ஆயினும் கடந்த பதினைந்து வருட உள வியல் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற் றங்கள் ஏற்பட்டுவருகின்றது. தம்முடைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பக்தி இலக்கியங்களில் சைவசித்தாந்தம்

**சிவஸ்ரீ.கந்த ஜெயராமக் குருக்கள்**
**"தமிழமுதக் குருமணி" "மகுடாகம வாருதி"**
**(வளவாய் சித்திவிநாயகர் தேவஸ்தானம்)**

சைவசித்தாந்தம் என்பது தமிழ்ப் பக்தி இலக்கியத்தின் அடிப்படையில் உருவான இந்து மதத்தின் உச்சமான தத்துவமாகும். இது சித்தாந்தம் எனப்படும் இறுதியான உண்மையான விடயத்தை மையமாகக் கொண்டது. சைவசித்தாந்தம் என்பது சைவத் தமிழ் தத்துவத்துறையில் மிக முக்கியமான ஒளியாக விளங்கும் ஓர் ஆன்மீகத் தத்துவமாகும். இதன்முக்கிய கோட்பாடுகள் தமிழ் இலக்கியங்களில் பக்தி இலக்கியங்களில் பரவி காணப்படுகிறது. சைவசித்தாந்தமானது பதி பசு பாசம் எனும் முப்பொருட்களை பிரதானமாகக் கொண்டு பரவலாக தத்துவ விளக்கங்களை அளிக்கிறது. சைவசித்தாந்த கோட்பாடுகள் தமிழில் நூறுக்கு மேற்பட்ட இலக்கியங்களிலும் பிற்கால சித்தாந்த நூல்களிலும் செழுமையாக வெளிப்பட்.டுள்ளன. பதியான இறைவன் பரமசிவன் அனைத்துக்கும் காரணமான உயர்ந்த தத்துவமாகவும் பசுவாகிய ஆன்மா சிவனை அடைய விரையும் ஆனால் பாசத்தால் அதாவது ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களால் கட்டுண்டு உழல்கிறது. இம்முன்றின் சமநிலையாக உயிர் மோட்சத்துக்கு செல்லும் பாதை சைவ சித்தாந்தத்தின் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது. சைவ சித்தாந்தத்தின் தொடக்கப் போக்கை அமைந்த பெருந்தகைகளாக திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் திருமூலர் மாணிக்கவாசகர் போன்ற அருளார்கள் தத்தமது இறையருட்பாக்களை சைவசித்தாந்த கருத்துக்களை செறிவாகப் படைத்துள்ளார்கள். கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த தேவார முதலிகள் எனப் போற்றப்படும் திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் போன்றோர் தேவாரப் பாடல்களில் பஞ்சாட்சர மந்திரம் பதியில் அருள் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமான தொடர்பு பாசத்தின் கட்டுப்பாடுகள் முத்திக்குரிய வழிகள் போன்ற சைவ சித்தாந்த கோட்பாடுகளை கூறியிருக்கிறார்கள். மூவரது தேவாரங்களில் இறைவனை பூசிக்கும் முறை பதியின் இயல்பு பாசத்தால் கட்டுண்ட ஆன்மாவின் நிலை ஆன்ம ஈடேற்றத்துக்கான வழி போன்றவை சிறப்பாக எடுத்தியம்பப்படுகின்றன. திருநாவுக்கரசரது பாடல்கள் பாசத்தால் கட்டுண்ட ஆன்மா எப்படி வீடுபேறு அடையலாம் என்பதையும் சுந்ததரின் பாடல்கள் பதியில் அழகு வர்ணிப்பு ஆன்மீகத்தவிப்பு மற்றும் பதியுடனான நெருங்கிய உறவு தொடர்பாகவும் சிறப்பிக்கிறது. திருவாசகமானது சைவசித்தாந்த கருத்க்களைக் கூறும் ஓர் உன்னதமான படைப்பாகும். மாணிக்கவாசகர் சிவனுடன் ஆன்மீக இறுக்கமடைந்து பரவச நிலையில் பாடியுள்ள கருத்துக்கள் தாள் + தலை தாடலை போல் வேறுபாடு இன்றி பசுபதியை அடையலாம். என்ற கருத்தில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த படியாக சைவசித்தாந்தத்தையும் யோகத்தையும் இணைத்து சொல்லும் நூல் திருமந்திரம் என்றால் மிகையாகாது. இதன் மூலம் சிவனின் தத்துவம் ஆன்மாவின் மாயையிலிருந்து விடுபடும் நிலை முக்தி நிலை போன்றவை தெளிவாக விழிக்கப்படுகின்றது. மேலும் யோகம் தத்துவம் ஆன்மீகம் ஆன்ம இறையுணர்வு நல்வாழ்க்கை வழிகாட்டிகள் பற்றி விரிவாகப் பேசப்படுகிறது. சிவனே உலகத்தின் காரணமாக இருப்பவர். சிவனுடன் ஆன்மா ஒன்றாக இணையவேண்டும். உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக்கி மனதை அடக்கி ஆன்மீக வழியில் சென்று முக்திப் பேற்றை அடைய வேண்டும் எனும் இலக்கில் கருத்துக்கள் பகிரப்பட்டுள்ளது. சைவசித் தாந்த கருத்துக்களை தெளிவாக கூறுவதற்காக படைக்கப்பட்டவையயே சிவஞான போதம் முதலாய சித்தாந்த நூல்கள். சைவசித் தாந்தத்தின் மையக்கருத்துக்களை விளக்கும் முக்கிய நூலாக காணப்படுவது மெய்கண்ட தேவர் எழுதிய சிவஞான போதம் ஆகும். பன்னிரு சூத்திரங்களை அடக்கிய இந் நூல் கோட்பாடுகளை எளிமையாகவும் தெளிவாகவும் வகுத்துக் காட்டுகிறது. பதியானது ஆனந்தமானது பரிபூரணமானது ஞான முதல் என்றும் பசுவானது சிற்றறிவு உடையது. இறைவனின் அருளால் பதியை அடைந்து இறைநிலை அடைய முடியும் என்றும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது. சிவப்பிரகாசம் சிவஞானசித்தியார் போன்றன ஆன்மாவின் இயல்புகள் பாசங்களின் செயற்பாடுகள் மற்றும் இறைவனின் கருணை பற்றி விபரிக்கிறது. "பதியோன் அருள் செய்தி பசுவினுக்கு பாசமெதிர் கழல்பவே" என்கிறது சிவஞானபோதம். பின்னாலே வந்த நவீன பக்தி இலக்கியங்களும் சைவசித்தாந்த கோட்பாட்டைட சிறப்பாக தெளிவு படுத்துகின்ற அந்த வகையில் இராமலிங்க வள்ளலார் தமது சைவசித்தாந்த கருத்துக்களை கருணை சார்ந்த சிந்தனைகளை வள்ளலார் தம் அருட்பா தனிப்பாசுரங்களில் கூறுகிறார். சைவசித்தாந்த கருத்துக்கள் உளவியல் மற்றும் ஆன்மீகரிதியில் சிறப்பாக எடுத்துரைகிறார்கள். பதி ஒன்றே முழுமையான ஞானமும் பேரானந்தமும் உள்ள உண்மைப் பொருளாகும். ஆன்மாவானது சார்ந்ததன் வண்ணமானது அதாவது பதியை சார்ந்திருந்தால் பதியின் இயல்புகளையும் பாசத்தை சார்ந்திருந்தால் பாசத்தின் இயல்புகளையும் பாசமானது ஆன்மாவைக் கட்டி வைத்து பசு மேன்மையடைய தடையாக இருக்கும் இறை வழிபாடு செய்கின்ற சைவர்கள் ஆகிய நாம் இறை இயல்பையும் ஆன்மாவாகிய எங்களது இயல்புகளையும் ஐயம் திரிபுற அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். அது போலவே இறைவனை அடைய விடாமல் நம் அறிவைத் தடுக்கின்ற பாசம் குறித்து தெளிவாக அறிய வேண்டியதும் அவசியமாகிறது. இறைவனால் உலகம் படைக்கப்பட்டு நமக்கு இவ் வாழ்க்கை வழங்கப்பட்டிருப்பது இறைவனை அடைகின்ற முத்திப்பேற்றை பெற்றுக் கொள்வதற்கே இதனையே தமது கருத்துக்களை ஆன்ம ஈடேற்றத்துக்காக தம் அருட்பாக்களிலும் தோத்திரப்பாடல்களிலும் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள் நாயன்மார்கள்.

முடிந்த முடியும் எனும் பொருள்படும் சித்தாந்த கருத்துக்கள் உலகப் பொது மறையான திருக்குறள். திருவாசகம், சாஸ்திர நூல்கள்போன்றவற்றில் பரவிக்காணப் படுகிறது. தமிழ்மொழியில் சித்தாந்தம் எனும் சொல்லை முதன்முதலில் திருமுலரே கையாண்டார். பதி, பசு, பாசம் எனும் முப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களும் அநாதியானது. பதி என்பது பசுவுக்கும் பாசத்துக்கும் தலைவன் என பொருள்படுகிறது. பசுவானது சத்தும் ஆகாமல் அசத்தும் ஆகாமல் சார்ந்ததன் வண்ணமாய் இருத்தலினால் சதசத்து எனப்படுகிறது ஆன்மாவானது கட்டுண்ட மலங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் விஞ்ஞானகலா, பிரளையாகலர், சகலர் என வகைப்படுத்தப் படுகின்றன. மும்மலத்தால் கட்டுண்டவர்கள் சகலர் எனவும் இருமலத்தால் அதாவது ஆனவம், கன்மம் எனும் இரண்டிலும் கட்டுண்டவர்கள் பிரளையாகலர் எனவும் ஆணவ மலத்தால் மலங்களால் மட்டும் பீடிக்கப் பட்டவர்கள் விஞ்ஞானகலர் எனவும் அழைக்கப்படுகின்றன. மலங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மா குருவின் வழியாக இறை அருளைப் பெற்று கட்டுக்களிலிருந்து விலகி ஆன்ம ஈடேற்றத்தை பெறவேண்டும் எனும் கருத்தை மக்களுக்கு இலகு தமிழில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களினூடாக எம் முன்னோர்கள் கற்பித் திருக்கின்றார் கள்.

பக்தி இலக்கியங்களின் கருத்துக் களுடாக தமது அற்புதங்களினுடாக வாழ்க்கை நெறிமுறைகளுடாக வாழ்ந்து காட்டிய நம்முன்னோர்கள் குருவழிபாடு, இலிங்கவழிபாடு சங்கம வழிபாடு எனும் மூவகை வழிபாடுகளையும் கூறிச் சென் றிருக்கின்றனர். இதுவே முத்திக் வழியாகும். குருவை தெய்வமாக போற்றி அவர் மூலம் இறைவனை நெறிமுறைகளை பின்பற்றி அடைதல் மூலம் குருவின் வழிகாட்டுதலில் இறைவனை வழிபடுதலும், இறைவன் விரும்பி உறைகின்ற இடமாகிய அடியார் உள்ளத்தின் இருப்பிடமான அடியார்களை வழிபடுவதன் மூலம்முத்தி ஏற்படும். குரு வானவர் பரிபக்குவம் அடைந்தவராக காணப்படுவார். சிவமே உருவானவர். தீட்சை வழங்குதல் மூலம் பாசத்தைக் கொடுத்து ஞானத்தை கொடுப்பவர். தீட்சையானது நயனதீட்சை பார்த்தல் மூலம் குருநாதர் தீட்சை அளிப்பது மீனானது தனது குஞ்சு களை கண்ணினால் பார்த்துக் காப்பது போல சட்சுதீட்சை கண்பார்வை மூலம் ஸ்பரிச தீட்சை வழங்கி ஆன்மாக்களுக்கு முத்திக்குரிய வழிகளை காட்டி நிற்பார் குரு வானவர். அதாவது கோழி தன் முட்டைகளை அடைகாப்பது போல் பரிபக்குவம் அடைந்த குருநாதர் ஆன்மாக்களுக்கு அருள் வழங்கு வது ஸ்பரிச தீட்சை ஆகும். மானச தீட்சை என்பது மற்றொன்றாகும். அதாவது நினைப் பது மூலம் மந்திர ஊச்சாடனங்கள் மூலம் வழங்கப்படுகின்ற தீட்சையாகும். எப்படி யென்றால் மண்ணிலே புதைபட்ட தனது முட்டைகளை ஆமை எப்படி நினைத்து காப்பது போல குரு ஆன்மாவை கட்டியுள்ள பாசங்கள் அகன்று நன்நெறியைக் காட்டி அருளுவார். இது போன்ற கருத்துக்களை யெல்லாம் பதியின் இயல்பை சம்பந்தர் "மண்ணும் புலனுயிரும் வரு காற்றும் சுடர் மூன்றும் விண்ணும் முழுதானான்" **எனவும் "விறகில் தீயினன் பாலில்படுநெய்போல் மறைய நின்றுளன் மாமணிச்சோதியான்"** என திருநாவுக்கரசரும் தமது தேவாரங் களில் கூறியுள்ளார்கள் இதேபோல "பெரு மைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் போற் றின் அருமைக்கும் ஒப்பின்மையாள்" என திருவரு பயனும் "இன்னவரு இன்னிற மென்றறிவதே வரிது" என ஞான சம்மந்தரும் இறை இயல்பை கூறுகின்றனர். மாணிக்க வாசகர் தமது திருவாசகத்தில் "ஓம் நாமம் ஓர் உருவம் இல்லார்க்கும் ஆயிரம் திரு நாமம் பாடி தெள்ளெணம் கோட்டாமோ" என்று பாடுகிறார் பதியின் இயல்புகளான இயற்கை உணர்வின்னாதல் முற்றுமுணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், இயல்பாகவே வரம்பில்லா பாசங்களி னின்று நீங்குதல், பேரருளுடைமை முடிவில்லா ஆற்றலுடமை, இன்பமுடமை ஆகிய எண் குணங்களை தமது அருட்பாக்களில் கூறி ஆன்மாக்களாகிய எங்களுக்கு பதியின் பேரரும் சக்தியை காட்டி நிற்கின்றார். "**எட்டுக் கெல்லாம் அவர் ஈறில் பெருங் குணத் தான்**" என அப்பர் சுவாமிகளும் ஐந்தொழில் தத்துவத்தை மாணிக்க வாசகர் திருவெம்பாவையில் "**போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**" என்று கூறுகிறார் சைவசித்தாந்தம் ஆன்மீக விடுதலைக்குரிய வழியாக சாரியை. கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பதங்களையும் கூறுகிறது. இவற்றை தமது நெறிமுறையாக கைக் கொண்டு முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்தி அடைந்த நாயன்மார்கள் வாழ்ந்து காட்டி சென்றுள்ளார்கள். அதன் அடிப்படையில் நாமும் இறையருளை பெற்று இவ்வுலகில் நல்ல பல செயற்கரிய தர்மங்களை புரிந்து நல்வாழ்வு வாழ்ந்து ஆன்ம ஈடேற்றத்தை பெறுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டில் காவடி ஆடலின் வகைபாகம்

**கலாநிதி திருமதி.அருட்செல்வி கிருபைராஜா**
**முதுநிலை விரிவுரையாளர் நடனத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

சைவத்தமிழ் வழிபாட்டு அம்சங்களில் ஒரு பகுதியாக திருக்கோவில்களில் ஆடல்களும் நிகழ்த்தப்படுகின்றது. அவை பல வடிவங்களில் காணப்படினும் காவடி வழிபாடு என்பது சங்க காலத்தில் வேலன் விளையாட்டு என்ற நிகழ்வில் இருந்து பிறந்து எழுந்தது. அவை பின்னர் காவடி ஆட்டமாக நிகழ்த்தப்படுகின்றது .

அவ்வாறான காவடி ஆட்டத்தின் தெய்வீகத் தன்மையினையும் அதன் வழிபாட்டு முறையினையும் கண்டறிவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கம் ஆகும் .

காவடி ஆட்டம் என்பது முருக வழிபாட்டுடன் தொடர்புடைய ஒரு ஆட்டம் ஆகும். இந்த ஆட்டத்தில் ஆடுபவர் காவடி எனப்படும் பொருளை தோளில் வைத்துக் கொண்டு ஆடுவர். தமிழர் பண்பாட்டில் தமிழர் வாழும் நாடுகளிலும் உள்ள முருகன் கோயில்களில் வழிபாட்டின் ஒரு கூறாக காவடியாட்டம் இடம் பெறுகின்றது .

முருகன் கோவிலுக்கு சென்று காவடி எடுப்பதாக பக்தர்கள் நேர்த்தி வைப்பது உண்டு. கோயில்களில் காவடி எடுப்பதில் இள வயதில் இருந்து பெரியவர்கள் வரையிலான பலரும் பங்கேற்பது இவ்வழிபாட்டின் கூறாக தோன்றிய காவடியாட்டம் பிற்காலத்தில் தொழில் முறை ஆட்டமாகவும் பின்னர் அரங்க ஆற்றுகை கலையாகவும் வளர்ச்சி பெற்றது. எனினும் முருக வழிபாடு தொடர்பான காவடியாட்டம் அல்லது காவடி எடுத்தல் இன்னும் ஆலயங்களிலும் பரவலாக பழக்கத்தில் இருந்து வருகின்றது.

## காவடி ஆட்டத்தின் சொற்பிறப்பு

காவடி ஆட்டம் என்பது கா+அடி என்னும் இரு சொற்களின் சேர்க்கையால் உருவானது. காவடி என்பது ஆட்டத்திற்கான கருவி என்பதால் இவ் ஆட்டத்தின் பெயர் அதற்கான கருவியின் அடியாக எழுந்தது எனலாம். காவடி என்னும் சொல் காவுத்தடி என்பது மருவி உருவானதாக கருதப்படுகின்றது. சுமை காப்பவர்கள் இலகுவாக சுமப்பதற்காக ஒரு நீண்ட தடியின் இரு முனைகளிலும் சுமைகளை தொங்கவிட்டு அடித்தடியின் நடுப்பகுதி தோளில் இருக்குமாறு வைத்து சுமந்து செல்வர். காவுவதற்கான தடி என்னும் பொருள்பட இத்தடியை காவு தடி என அழைப்பர்.

## காவடியின் தோற்றம் குறித்த நம்பிக்கைகள்

காவடியின் உண்மையான தோற்றம் குறித்த தகவல்கள் எதுவும் இல்லை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

எனினும் பல்வேறு சமயத்தில் உள்ள விடயங்களின் தோற்றங்கள் தொடர்பில் கதைகள் இருப்பது போலவே காவடியின் தோற்றம் குறித்தும் கதை ஒன்று உள்ளது. அதன்படி அகத்திய முனிவரின் வேண்டு கோளுக்கு அமைய சூரபத்மனின் நண்பனும் முருக பக்தனுமான இடும்பன் சிவகிரி ,சக்தி கிரி என்னும் இரண்டு மலைகளை காவு தடியில் சுமந்து கொண்டு பொதிகை மலை நோக்கி சென்றானாம் பழனியில் சுமையை இறக்கி வைத்து விட்டு இளைப்பாறிய பின் மீண்டும் தூக்க முயற்சித்த போது தூக்க முடியவில்லை.

அப்போது சிறுவனாக உருக்கொண்டு வந்த முருகப்பெருமான் மலை மேல் இருந்து இடும்பனை கேலி செய்யவே சிறுவனை நோக்கி பாய்ந்த இடும்பன் தவறி மலையில் இருந்து உருண்டு இறந்தான். பின்னர் அவனை உயிர்ப்பித்த முருகன் இடும்பனின் கோரிக் கைக்கு இணங்கி இடும்பன் அங்கே காவல் தெய்வமாக இருக்கவும் கோயிலுக்கு காவடி எடுத்து வரும் பக்தர்களின் குறைகள் தீர்த்து விடவும் வரம் அளித்தாராம். அதி லிருந்து முருக வழிபாட்டில் காவடி எடுத்தல் ஓர் அம்சமாக ஆகியது எனவும் அக் காவடியை கோயிலில் இடும்பன் சன்னதியில் வைத்த பின்னரே எடுப்பது என்னும் வழக்கம் உருவானது என்றும் கூறப்படுகின்றது.

இக்கதையிலிருந்து காவடிக்கும் காவுதடிக்கும் உள்ள தொடர்பு புலப்படு வதை கவனிக்கலாம்.

## காவடி எடுப்பதற்கான நோக்கம்

முருகனை நினைத்து வேண்டுவோர் தம் காரியம் கைகூடும் பொருட்டு முருகனுக்கு காவடி எடுப்பதாக மனதில் வேண்டிக் கொள் வர். சிலர் தாங்கள் செய்த பாவங்களால் கோபமடைந்துள்ள தெய்வங்களை சாந்தப் படுத்துவதற்காகவும் எதிர்கால வாழ்க்கை இன்பமாக இருப்பதற்காகவும் குழந்தை இல் லாத பெண்ணுக்கு குழந்தை பேறு ஏற்படுத் துவதாகவும் மரணத்தை எதிர்கொள்ளும் உறவினர் பிழைத்து எழுவதற்காகவும் கருதி நேர்த்தி கடனை செலுத்தும் வகை யில் காவடி எடுப்பர்.

காவடி எடுப்போர் முறைப்படி விரதம் இருந்து காவி உடை அணிந்து காவடி எடுப்பர் .ஆண்களைப் போலவே பெண்களும் காவடி எடுப்பதும் உண்டு.

சிறுவர்கள் கூட காவடி எடுத்துச் செல்லும் வழக்கமும் காணப்படுகின்றது. காவடி எடுத்துச் செல்வோர் எப்பொழுதும் தம் ஊரில் இருந்து முருகன் கோயில் வரை யில் காவடியை தோளில் வைத்துக் கொண்டு கால்நடையாகவே முருகன் மீது பாடல் பாடிய வண்ணம் கோயிலுக்குச் சென்று தம் நேர்த் திக்கடனை செலுத்திய பின்னரும் ஊருக்கு திரும்பிச் செல்லும் போதும் கால்நடையாகச் செல்லும் வழக்கம் உண்டு. இது நடைமுறை வழக்கமாகவும் இருந்து வருகின்றது .காவடி ஆட்ட நேர்த்தி உணவில் நிறைவடையும். காவடி நேர்த்தி முடிவடையும் போது காவடி இறக்கம் என்ற சடங்கு இடம்பெறும். தாளம் தீர்த்தல் என்ற ஒலிக்கோவையுடன் காவடி இரக்கம் நிகழும். காவடி இறக்கும் பொழுது மீண்டும் காவடி எடுப்பதற்கான கட்டளையும் தொடர்ச்சியும் மேற்கொள்ளப்படும். காவடி வழிபாடு என்பது வாழ்க்கை முழுவதும்.

தொடர்ந்து செல்லும் பாங்கினை இந்த சடங்கு உணர்த்தும். அதனைத் தொடர்ந்து உணவு பரிமாறல் நிகழும் இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் பூர்விகமான பண்பாட்டுக் கோலங்களின் நீதியை புலப்படுத்தி நிற்கின்றன.

காவடி எடுத்தல் வழிபாடு தொடர்பாக குறிப்பாக நேர்த்தி வைத்து காவடி எடுத்தலில் தங்களை வருத்திக் கொள்ளும் நடைமுறையையும் காணமுடியும். சிலர் ஏறத்தாழ ஆறு அங்குல நீளம் கொண்ட வெள்ளி வேல்களை ஒரு கன்னத்தில் இருந்து மறு கன்னத்தின் ஊடாக வரும்படி குத்திக் கொண்டும் இன்னொரு சிறிய வேலை நாக்கின் ஊடாக குத்திய படியும் காவடி எடுப்பர். இது அலகு குத்துதல் எனப்படும்.

இதனைத் தவிர தூண்டில் போல் வளைந்த வெள்ளி ஊசிகள் பலவற்றை முதுகில் வரிசையாக குத்தி அந்த ஊசியுடன் இணைக்கப்பட்ட கயிறுகளை இன்னொருவர் பிடித்து இழுத்தபடி இழுக்க காவடி ஆடுவர். இது செடில் குத்துதல் எனப்படும். இது தவிர உடலின் பல்வேறு பகுதிகளில் வளைந்த வெள்ளி ஊசிகளை குத்தி அவற்றுடன் இணைக்கப்பட்ட கயிறுகளின் மூலம் காவடி எடுப்பவரை சில்லுகள் பொருத்தப்பட்ட வண்டிகளில் கட்டப்பட்ட உயர்ந்த அமைப்பிலிருந்து தொங்க விட்டபடி ஊர்வலமாக.காவடி எடுப்பவர் முகம் கீழ் இருக்கும்படி படுக்க நிலையில் தூங்கினால் அது பறவைக் காவடி எனப்படும்.

காவடி ஆட்டத்திற்கான காவடி சிந்து இசை காவடி ஆகும். ஆட்டத்திற்கான பின்னணி இசைக்கருவிகளாக நாதஸ்வரமும் தவிலும் விளங்குகின்றன. நாதஸ்வரத்தில் காவடிச்சிந்து இசையை வாசிக்க காவடியாட்டம் ஆடுவது மரபு.

தற்காலத்திலும் ஆடுவதற்கு ஏற்றதாக அமையக்கூடிய பாடல்களையும் நாதஸ்வரத்தில் வாசிப்பதை காணமுடிகின்றது. முருகன் பற்றிஇன்று ஆடப்படும் நாட்டுப்புற நடனம் காவடிச்சிந்தாகும். சிந்து என்பது இசைப்பாட்டு இதன் பாடல் வகை இசையுடன் கலந்து பாடுவதற்கு தக்க முறையில் அமைந்தது. பல்லவி அனுவல்லவி மூன்று கன்னிகைகள் அடங்கிய சரணம் ஆக ஐந்து உறுப்புகளை கொண்டு சிந்து பாடல்களாக அமைந்திருக்கும் .காவடிச்சிந்துவை முதன்முதலில் பாடியவர் அண்ணாமலை செட்டியார். இவரது காலம் 1861 தொடக்கம் 1891 வரை ஆகும்.

நீண்ட தூரத்தில் உள்ள முருகன் கோவிலுக்கு காவடி எடுத்துச் செல்பவர்கள் சலிப்புத்தட்டாமல் இருக்க முருகன் பெருமை கூறும் இசை பாடல்களை பாடிக்கொண்டு போவர். சிலர் உடல் வலிமை உள்ளவர்கள் காவடியை தோளில் வைத்து போகும் போது பாடிக்கொண்டே ஆட ஆரம்பிப்பார். ஆடல் என்றால் அதற்குத் தாளமும் இன்றியமையாதது. எனவே இராகமும் தாளமும் காவடி எடுபவர்களுக்கு இன்றியமையாதன.

இத்தகைய காவடியாட்டம் பின்னர் தொழில் ரீதியாக ஆடப்பட்டு வந்தது. அதில் காவடி எடுப்பவர் தன்னுடைய சாவகாசங்களை அதாவது காவடியை தோளிலிருந்து தலைக்கு மேலும் அதன் பின்னர் கழுத்திலும் இரு கைகளிலுமாகவும் மற்றும் முள்ளம் தண்டு கூடாக இடுப்பு வரைக்கும் எடுத்துச் சென்று தனது திறமையை வெளிக்காட்டுவர். அதனைத் தொடர்ந்து இக்காவடியாட்டமானது அரங்குகளில் ஆடல் நிகழ்வாக பாடல்களுக்கான பக்கவாத்திய இசைக் கருவிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட ஆடற்கோலங்களைக் கொண்டு அரங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வாகவும் இடம்பெற்று வருவதை காணக் கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

காவடியாட்டம் என்ற வழிபாட்டு முறை முதலில் பக்தி அடிப்படையில் தோன்றி பின்னர் காவடியாட்டம் என சமய அடிப்படையில் மாறி நாளடைவில் சமயப் பிடியிலிருந்து விடுபட்டு காவடி நடனம் என தனியாகவே வளர்ந்து வருகின்றது. அத்தோடு முருகன் மேல் பக்தி யுடன் ஆடப்பட்ட காவடி வழிபாடு என்ற காவடி யாட்டம் என்று மாற்றம் பெற்ற தோடு நாட்டுப் புறக்கலையாக மாறிவிட்டதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இத்தகைய பெருமை மிக்க காவடி வழிபாடு சைவத்தமிழ் வழி பாட்டு நெறிமுறைகளில் இன்றியமையாத ஒரு வழிபாட்டு அம்சமாக இன்றும் எம் சைவத் தமிழர் வாழும் கோவில்களில் எல்லாம் நிகழ்ந்து கொண்டிருப்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் நம்சைவச் சொத்தாவார்

**பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
B.A (Hons) Dip. in (Edu) Dip. In (Soci)
Dip.in (Cumpu) M.Phil (Edu) SLEAS
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர் மெல்பேண். அவுஸ்திரேலியா.

தமிழை வளர்ப்பதற்கு வாழையடி வாழையாகப் பலர் தோன்றி தொண்டாற்றி இருக்கிறார்கள். தொல்காப்பியர், வள்ளுவர், திருமூலர், இளங்கோவடிகள், நக்கீரர் என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் ஞானசம்பந்தப் பெருமான் இவர்கள் யாவரை யும்விட தலை சிறந்த ஒருவராகவே திகழ் கிறார் எனலாம். சம்பந்தப் பெருமானுக்கு முன்பு வந்தவர்கள் - மக்கட் சமுதாயத்தி லிருந்து - சற்று ஒதுங்கி நின்று , சிந்தனை என்னும் வானில் பறந்தவர்களாய், இருந்தே தமது ஆக்கங்களை ஆக்கினார்கள் என் பதை மறந்துவிடக் கூடாது. ஆனால் ஞானசம்பந்தப் பெருமானோ மக்களுடன் தாமும் கலந்து ஊர் ஊராகச் சென்று அது வும் நடந்தே சென்று மக்கள் பலர் சூழ தமிழ் பரப்பி நிற்கின்றார். அதுவும் இன்னிசையால் எந் தமிழினைப் பரப்பி நிற்கின்றார். சம்பந் தப் பெருமானுக்கு முன்னர் இப்படித் தமிழைப் பரப்பியவர்கள் இருந்தார்களா என்றால் இல்லை என்றுதான் எண்ணிட முடிகிறது. சம்பந்தப் பெருமானின் இந்த முயற்சி தமிழ் பரப்பும் முயற்சியில் ஒரு திருப்பம் என்றும், பெரு இயக்கம் என்றும், பெரும் புரட்சி என்றும் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா !

பல்வேறு கொள்கைகள் , சூழ்நிலை களால் சிதறுண்டு கிடக்கும் மக்களை அவர் கள் பேசும் தாய் மொழியின் வழியிலேதான் ஒற்றுமைப்படுத்தி உணர்வினை ஊட்டி கிளர்ந்தெழச் செய்து முன்னேற்றத்தை ஏற் படுத்தலாம் என்னும் சிந்தனை சம்பந்தப் பெருமானின் உள்ளத்தில் உதித்தமையால் அதற்காக அக் காலச் சூழலில் அவர் இன்னிசை யால் தமிழ் பரப்பிய பாங்கினை மெச்சாமல் இருக்கவே முடியாது. "தமிழ் ஞான சம்பந்தன்" என்று அந்தணராய் பிறந்த ஒருவர் துணிந்து கூறினார் என்றால் அதுதான் சிறந்த "சிந் தனைப் புரட்சி" என்று சொல்லலாம் அல்லவா.

வேதநெறியினைக் காத்திட முனைந் தாரா? சைவநெறியினைக் காத்திட முனைந் தாரா? அல்லது தமிழ் மொழியினைக் காத் திட முனைந்தாரா? சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வர் திருஞானசம்பந்த பெருமான்! இது ஆராயப்பட வேண்டிய பெரிய தோர் விடயம் ஆகும். சம்பந்தப் பெருமான் புனிதவாய் மலர்ந்து அழுத காரணத்தால் வேதநெறி தளைத்தோங்கியது. மிகு சைவத் துறை விளக்க முற்று நின்றது என்று சேக் கிழார் செப்பி நிற்பது நோக்கத்தக்கதாகும். அதேவேளை - நற்றமிழுக்கு இன்துணை ஞானசம்பந்தன், தலைமகனாகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன், தன்னொளி மிக்குயர்ந்த தமிழ் ஞானசம்பந்தன், காழி நற்றமிழ் ஞான சபந்தன் என்றெல்லாம் சம்பந்தப் பெருமானே தன்னை தமிழுடன் இணைத்து நிற்பதும் நோக்கத்தக்கதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பருவத்திலேயே இறை ஞானம் சம்பந்தருக்கு கிடைத்து விட்டது. இறைவனே காட்சி கொடுத்து அருள் கொடுக்கும் வகையில் சம்பந்தர் திருவருட் செல்வராகிவிடுகிறார். இதனால் குழந்தை ஞானியாயும் ஆகிவிடுகிறார். பக்தி இயக்கத்திலும். தமிபழ்பரப்பும் இயக்கத்திலும் சீர்காழி தந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வரின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் மிக்கதெனலாம். வேறு எந்தவோர் மொழியிலும் பக்திப் பாடல்கள் என்று சொல்லும் வகையில் எதுவுமே இல்லை எனலாம். தமிழ் மொழிக்கே மட்டும் உரித்தான ஒன்றாகவே பக்திப் பாடல்கள் விளங்குகின்றன. பக்திப் பாடல்களில் ஞான சம்பந்தப் பெருமானின் பாடல்களும் அவைதரும் பொருள்களும் சமூகத்துக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும், உத்வேகத்தையும், ஊட்டுவதோடு தமிழில் பல்வேறு வகையான உத்திகளையும் கவிதையில் தருவதோடு -நல்லதோர் தெளிவையும் நல்குவதாக இருக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய விடயமாகும்.

இயற்கையின் அழகினை தமிழில் காட்டியது சங்கப் பாடல்களாகும். அதற்கு அடுத்தபடி இயற்கையின் அழகினைக் காட்டும் பாடல்களை சம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடல்களில் காணமுடிகிறது என்பதும் குறிப்பிடப் படவேண்டியதே. இயற்கையைக் காட்ட முயன்றாலும் அதனூடாக இறைவன் உறையும் தலத்தையும், இறைவனின் அருள் திறத்தையும் காட்டிடுவதிலும் பெருங்கவனமாகவும் இருக்கிறார் என்பதும் மனங்கொள்ளத் தக்கதாகும். ஞானசம்பந்தப் பெருமான் 16000 பதிகங்கள் பாடியிருக்கிறார் என்று நம்பியாண்டார் நம்பி குறிப்பிட்டாலும் தற்போது கிடைக்கும் மொத்தப் பாடல்கள் 4181 மட்டுமேயாகும். 23 பண்களில் ஏறத்தாள 110 சந்தங்களில் பாடல்களைத் தந்துள்ளார். சம்பந்தப் பெருமானை "சந்தத்தின் தந்தை" என்றே அழைக்கலாம். யமகம், மடக்கினைக் கையாண்டதோடு சித்திரக் கவி என்பதனையும் முதலில் தொடக்கிய பெருமைக்கும் சம்பந்தப் பெருமான் உரித்துடையவராகிறார். சம்பந்தப் பெருமானின் சந்தம் விளையாடும் தமிழ்ப் பாடலகள் பின்னர் வந்த அருணிகிரியாரின் சிந்தனைக்கும் உரமாய் அமைந்திருக்கலாம் என்றும் எண்ணத் தோன்றுகிறது அல்லவா !

சம்பந்தம் பெருமான் வாழ்ந்த சூழல், சைவத்தை - சமணமும் பௌத்தமும் நசுக்கி இல்லாமலே செய்யும் நெருக்கடி நிலை நிலவிய காலமெனலாம். சமணமும் பௌத்தமும் துறவையும் அறத்தையுமே வலியுறுத்தி இல்லறத்தை ஒதுக்கி பெண்மையை புறந்தள்ளியாவுமே மாயை என்று காட்டிநின்றன. கலைகளை இகழ்ந்தன. இசையை வெறுத்தன. ஆடல் பாடல்கள் ஒதுக்கப்பட்டன. இந்த நிலையில் குழந்தையிலே அம்மையின் ஞானப் பாலினை அருந்தி ஞானம் கைவரப் பெற்றவரான திருஞானசம்பந்தர் வருகை பெருந்திருப்புமுனையாக அமைகிறது எனலாம்.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறையிலை**
**கண்ணில் நல்லஃதொறும் கழுமல வளநகர்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**

எந்தப்பெண்ணை சமணமும் பௌத்தமும் ஒதுக்கியதோ, மண்ணிலே நல்ல வாழ்வைப் பற்றியே காட்ட முயலா சமணமும் பௌத்தமும் இருந்ததோ அந்த நிலையைத் தகர்த்தெறிந்து மண்ணிலே நல்ல வண்ணம் வாழலாம். பெண்மையால் உயர்வு பெறலாம் என்று இறைவனுடன் இறைவியை இணைத்துக்காட்டி விடிவெள்ளியாய் நம்பிக்கையை ஊட்டியவர்தான் சீர்காழி தந்த திருவருட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் திருஞான சம்பந்தர். தாய்மையின் தெய்வீகத் தன்மையினை சம்பந்தப் பெருமான் தனது பாடல்களில் காட்டுவதை தலையாய நோக்கமாகக் கொண்டிருந்தார் என்று தமிழறிஞர் தெ.பொ.மீ அவர்கள் சுட்டிக் காட்டுவதும் மனமிருத்த வேண்டிய கருத்தெனலாம். இந்த உலகத்தில் நல்லபடி வாழ முடியும் என்னும் நம்பிக்கையை ஊட்டி, நல்ல கதி அடைவதற்கு எவ்வகையான குறையும் இல்லை என்னும் துணிவை ஊட்டுகிறார் சம்பந்தப் பெருமான். அவரின் பாடல்கள் சோர்வையோ, கலக்கத்தையோ, துன்பத்தையோ தரும்வகையில் அமைந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதே எனலாம்.

பெரியபுராணமே திருவருட் செல்வர்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லி நிற்கிறது எனலாம். திருவருள் பெற்றவர்களைக் கண்டறிந்து தெய்வப் புலவர் சேக்கிழார் பெரியபுராணம் வாயிலாக பலவற்றை எடுத்துக் காட்டியிருக்கிறார் என்பதை மறந்து விட முடியாது. ஆனாலும் திருவருட் செல்வர்களின் வரலாறு கூறவந்த சேக்கிழார் அவர்கள் பெரியபுராணத்தில் பெரும்பகுதியை சீர்காழிதந்த திருவருட் செல்வருக்கே கொடுத்து விடுவதைக் காண்கிறோம். இதனாலன்றோ "பிள்ளைபாதி புராணம்பாதி" என்று புகலும் நிலையே உருவானது எனலாம். சம்பந்தப் பெருமானை ஏன் இப்படி காட்ட வேண்டிய தேவை சேக்கிழாருக்கு ஏற்பட்டது என்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.

சம்பந்தப் பெருமானைக் காட்டும் பொழுதே சேக்கிழார் "வேத நெறி தளைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க பூதபரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத" என்று தான் காட்டுகிறார். இங்கு சொல்லப்பட்ட சொற்கள் மிகவும் முக்கியமானவை. வேதநெறி தளைத்தோங்க என்றால், இதற்கு முன் வேதங்கள் இருக்கவில்லையா? சம்பந்தர் வந்து தான் வேதநெறியினை தளைத்தோங்கச் செய்யப் போகிறாரா என்னும் ஐயம் எழுகிறதல்லவா? சம்பந்தப் பெருமானே வேத நெறியில் வந்துதித்த பிராமணப்பிள்ளை. ஏற்கனவே வேதங்களும் அவற்றின் வழி வந்தவர்களும் அந்த நெறியும் இருக்க சம்பந்தர் எவ்வாறு "வேதநெறி தளைத்தோங்க" வந்தவராக முடியும்?

வேதநெறி இருந்ததுதான். ஆனால் சம்பந்தர் காட்டும் வேத நெறி, சம்பந்தர் தளைத்தோங்க வைக்கும் வேதநெறி வேறுபட்டதாகும். அது சிவம் சம்பந்தப்பட்டது. சைவம் சம்பந்தப்பட்டது. இதனால் இந்தப் புது நெறியினை தளைக்கச் செய்யவும் அதன் வழி சிவம்சம்பந்தமான சைவம் என்னும் நெறியினை தளைக்கச் செய்யவுமான பெரும்பணியினை ஆற்றுவதற்கே சம்பந்தக் குழந்தை அழுதது. அம்மை அப்பனைக் கண்டது. அமுதமாம் ஞானப் பாலினை அருந்தியது. சிவஞானக் கொழுந்தாகி ஒளிவிட்டு பிரகாசித்தது என்பதையெல்லாம் சேக்கிழார் காட்டும் இப்பாங்கு தான் திருவருளின் சிறப்பும் திருவருட் செல்வரின் சிறப்பும் எனலாம்.

**"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"**

என்று - ஞானப்பால் உண்ட நிலையினை காட்டுகிறார் சேக்கிழார் பெருமான். ஞானப்பால் உண்டதனால் "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" வந்து விட்டது என்கிறார். வேதநெறியிலே வந்த சம்பந்தப் பெருமான் - சிவநெறியான வேத நெறியினை தளைத் தோங்க வந்தார் என்று சொல்லுவதும், சைவ நெறி தளைத் தோங்க வைக்க வந்தார் என்பதும் வேத நெறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறிக்கும் பாலமாகவும் அதே வேளை - நான்கு வேதங்கள் காட்டி நிற்கும் வேத நெறியைவிட்டு சிவனை முழு முதலாகக் கொண்ட வேத நெறியினை சைவ நெறியுடன் இணைத்து ஓங்கச் செய் யவே திருவருட் செல்வராக திருஞான சம்பந்தப் பெருமான் அவதரித்தார் என்பது தான் சேக்கிழாரின் நோக்காகும்.

வைதிக மரபில் தோன்றிய சீர்காழி திருவருட் செல்வர் அந்த வைதிக மரபை மாற்றி சிவனுக்கு வேள்வியையும் சிவ வணக் கத்தையும் ஏற்படுத்தி வடமொழியை விட்டு தமிழ் மொழியில் வழிபாடு ஆற்றும் புது வழியை புரட்சியை உருவாக்கி ஞானக் கொழுந்தாய் நிமிர்ந்து நிற்கிறார். செந் தமிழை வழிபாட்டு மொழியாக்கிய வேதியரின் பிள்ளையான ஞானசம்பந்தப் பெருமான் செயலை எண்ணி எண்ணி வியக்க வேண்டி இருக்கிறதல்லவா? இன்று தமிழில் வழி பாடா வட மொழியில் வழிபாடா என்றெல்லாம் வாதப் பிரதி வாதங்கள் எழும் நிலையில் இவை யாவற்றுக்கும் பிராமணப் பிள்ளை யும், கோவில் குருக்களின் தவப்புதல்வனும் ஞானவானு மாகிய சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வரே பல நூற்றாண்டு களுக்கு முன்னர் தக்க பதிலை பொருத்த மான முறையில் தந்திருக்கிறார் என்பதை யாவரும் மனமிருத்து வதும் சிந்திப்பதும் மிக மிக முக்கியமாகும். ஞானப்பால் உண்ட தும் அவரின் நாவினால் வெளிப்பட்டதே

**"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி"**

என்னும் செந்தமிழ் வார்த்தைகளே என்பது மனங் கொள்ளத் தக்கதாகும். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தனாக இருப்பதையே அவர் விரும்பினார். வேதமரபில் வந்தவரே

**"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே "**

வேதத்திலும் உயர்ந்தது சிவனைக் குறிக்கும் "நமச்சிவாயவே" என்றும் அந்த நாமத்தை உச்சரித்தால் "நன்னெறிக்கே" இட்டுச் செல்லும் என்று துணிந்து கூறி தமிழின் ஆற்றலை வெளிப்படுத்தி அதனை சிவ வழிபாட்டுடன் இணைத்து நிற்பதும் யாவரும் மனமி ருத்த வேண்டியதேயாகும்.

வைதிக மரபில் வந்தவர், வேதங் களை அறிந்தவர், கோவில் பூசகரின் மகனாக இருந்தவர் - ஆனாலும் செந்தமிழையே நேசித்தார். செந்தமிழினால் எல்லாம் சிறப் புறும் என்றும் நம்பினார். செந்தமிழினால் பல அற்புதங்களையும் நிகழ்த்திக் காட்டினார். இது சைவ நெறிக்கும் சைவ பக்தி இயக்கத் துக்கும் பெரும் வலிமையையும் உத்வேகத் தையும் கொடுத்தது என்றே சொல்லலாம்.

பாம்பு தீண்டி இறந்த வணிகனை "சடையாய் யெனுமால் சரண் நீ யெனுமால்" என்று பாடியெழுப்பியதும் திருமறைக் காட் டில் கதவை மூடிட பாடியதும், பாண்டியன் வெப்புநோய் தீர்ந்திட "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" என்று பாடியதும், ஆண் பனைகளைப் பெண் பனையாக்கிட "பூந் தேர்ந் தாயன கொண்டுநின் பொன்ன டிக்கே" என்று பாடியதும், மயிலாப்பூரில் இறந்து சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை "மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலை" என்று பாடி உயிர்பெறச் செய் ததும், செந்தமிழ் பாட்டுக்களே என்பது மிக வும் முக்கியமான விடயமாகும். தமிழுக்கு எந்தளவு ஆற்றல் இருந்தது என்பதை சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வர் நிரூபித்துக் காட்டியிருக்கிறார் என்பது சைவத்தின் பெருமையும் தமிழின் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் தமிழுக்கு இறைவனே வசமாகி அருள் கொடுத்தான் என்பதும் நினைத்துப் பார்க்கவே மிகவும் பெருமையாக இருக்கிறது அல்லவா !

தமிழை வழிபாட்டுக்கு உரியதாக்கியதோடு மூடநம்பிக்கைகளையும் களைந்திடவும் முனைந்தார். சாதி வேறுபாட்டை அவர் விரும்பினார் இல்லை. "வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்" பதிகத்தில் கோள்களினால் இடையூறு வருமென்று நம்ப வேண்டாம். விஷத்தையே உண்ட சிவபெருமானே உள்ளத்தில் இருக்கையில் கோள்களால் எதுவுமே ஆகிவிடாது. "ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல - அடியார் அவர்க்கு மிகவே" என்று நம்பிக்கை நவில்வது சம்பந்தப் பெருமானின் இறைபக்தியையும், இறை பக்திக்கு முன்னால் நாளென்ன செய்யும் ? கோளென்ன செய்யும் ? என்னும் பக்தியின் வைராக்கியத்தையும், மூடத்தனமாக எண்ண வேண்டாம் என்னும் சிந்தனையையும் வெளிப்படுத்தி நிற்கிறது அல்லவா ?

தீண்டத்தகாத குலத்தவராக இருந்த திருநீலகண்டர் என்னும் யாழ் வாசிப்பவரை தான் செல்லும் எல்லா இடங்களுக்கும் கூட்டியே சென்றார். அதுமட்டுமன்றி பிராமணர்கள் வாழும் தெருக்களுக்கும் வீடுகளுக்குமே அழைத்தும் சென்றார். திருநீலகண்டர் உள்ளே நுழைந்தால் - பிராமணர்கள் வளர்க்கும் வேள்வித்தீ அவிந்து குற்றம் ஏற்பட்டுவிடும் என்னும் எண்ணத்தை உடைத்தெறிந்து - அவரை வேள்வித்தீ இடம்பெறும் இடத்துக்கே அழைத்துச் சென்று முன்னரிலும் வேள்வித்தீ சுடர்விட்டு பிரகாசிக்கும் நிலையினைக் காட்டி, தீண்டாமை என்னும் வழக்கினை சிதறடிக்கச் செய்துநின்றார்.

சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வர் திருஞானசம்பந்தப் பெருமானின் பெருமையால் அவரை முருகனின் அவதாரம் என்றும் அழைத்தனர் என்பதும் நோக்கத்தக்கதாகும். முத்தமிழ்க் கடவுளாய் முருகப் பெருமானைத் தமிழர்கள் கொண்டாடிப் பெருமைப்படுவதையும் மனமிருத்தல் வேண்டும். ஆதிசங்கரரே "திராவிடச் சிசு" என்று விதந்தார் என்றும் அறிய முடிகிறது. இறைவனின் அருள் பெற்றதிருவருட் செல்வர்கள் என்னும் வகையில் பலர் சைவத்தில் இருந்தாலும் சீர்காழிதந்த திருவருட் செந்தமிழ்ச் செல்வரான திருஞானசம்பந்தப் பெருமான் மிகவும் சிறப்பும் பெருமையும் உடையவராக விளங்குகிறார் என்பதை மனமிருத்தல் வேண்டும்.

சைவச் சான்றோர்கள் பலர் இருந்தாலும் சம்பந்தப் பெருமான் அவர்களுக்குள் தலையானவராகவே விளங்குகிறார் என்பதை மறுத்துரைத்துவிட முடியாது. சம்பந்தப் பெருமானின் பின்னே வந்தவர்கள் எல்லோருமே அவரைப் போற்றிப் புகழ்ந்திருப்பதைக் காண முடிகிறது. சம்பந்தப் பெருமானின் உள்ளத்தில் இருந்து வெளிவந்த பாடல்கள் அனைத்துமே தெய்வத் தீந்தமிழ் பொக்கிஷங்களே ஆகும். வேத நெறி தளைத் தோங்க - மிகு சைவத்துறை விளங்க மட்டும் சம்பந்தப் பெருமான் இம் மண்ணுக்கு வரவில்லை - செந்தமிழினை இன்னிசையால் பரப்பிடவும் வந்தார் என்பதை மனமிருத்துதல் அவசியமேயாகும். எனவே அவர் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமானாய் நம்சைவத்தின் சொத்தாகவே விளங்குகிறார் என்பதே மிக மிகப் பொருத்தமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நால்வர் காட்டிய அன்பு நெறி

**சிவத்திரு.பத்மராசா பத்மநிருபன்**
**திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்தரத்தினம்.**

இவ்வுலகில் தோன்றிய மனிதர் அனைவரும் தம் வாழ்வு வளம் பெறவும், மக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று மக்கள் தன்மையை அடையவும் வழிகாட்டு வது தான் சமயம். அதாவது மனிதனைப் பண்புடையவனாக்குவது சமயமே.

இவ்வுலகையும் அதில் உள்ளவற் றையும் காணும் மனிதன் அவற்றில் மயங் காமல் இவற்றிடையே ஓர் உண்மையை உணர்ந்து அனைத்திற்கும் எட்டாத அப் பாற்பட்ட பொருள் உண்டு. அப்பொருளே இவ் வுலகையும் அதிற் காணப்படும் பொருட்கள் யாவற்றையும் (உயிர்கள் உட்பட) இயக்கு வதையும் உணர்கிறான். உயிர்கள் உய்யும் வழி அறிந்து அப்பொருளையடைந்து இன் புற்றிருக்க வேண்டும். அந்நிலையை அடை வதற்கு மனித மனத்தின் மாசை அகற்றி, பண்புடையவனாய், ஒழுக்க சீலனாய், பிறர்க் குப் பயன்படுபவனாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும்.

மக்கள் தமது அறிவால் அறிதற் கரியவனான அந்த இறைவனை, முழுமுதற் பொருளை, சச்சிதானந்தப் பொருளை உய்த் துணர்ந்து பிறப்பில்லாத நிலையை அடைய வேண்டும். அந் நிலையை அடைவதற்கு வழிசமைப்பதே அன்புநெறி.

**"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவமாவதாகும் அறிகிலார்**
**அன்பே சிவமாவதாகும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

என்றார் திருமூலர்.

**"யாம் இரப்பவை**
**பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருள் இணர்க் கடம்பின் ஒலி தாராயே"**

எனப் பரிபாடல் வரிகள் கூறுகின்றன.

இக் கூற்றிற்கிணங்க அருளும் அன்பும் அறனும் பெற்று மனிதன் உய்வடையும் நெறி களை தாம் வாழ்ந்து காட்டினர் எமது சமய குரவர் நால்வரும். இவர்கள் காட்டிய நெறியே அன்பு நெறியாகிய எமது சமயநெறி, இந் நெறியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பார்.

சரியை நெறியில் நின்று எண்பத் தொரு வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து காட்டி, சாதாரண மனிதனும் தன்னலமற்ற தொண்டினால் உய்வடைய முடியும் என்பதை எமக்கு உணர்த்தினார் அப்பர் சுவாமிகள். அப்பர் சுவாமிகள் இறைவனாலே சூலை நோய் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். தாம் சென்ற திருத்தலங்கள் தோறும் உழவாரத் தொண்டாற்றி "தொண்டுக்கு அப்பர்" என்ற சிறப்பையும் எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நம்கடம்பனை பெற் றவள் பங்கினன்**
**தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன் கடன் அடியேனையும் தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடைப்பதே"**

இவ்வுலகில் சமணர்கள் ஆற்றிய கொடுமைகளையெல்லாம் இறையருளால் வென்று, தம் பழுத்த அனுபவத்தினாலே இறைவனையடைந்தவர் அப்பர். அவருடைய பாடல்களில் அனுபவத்தின் முதிர்ச்சியை நாம் காணலாம். இவர் வாழ்ந்து காட்டிய நெறியை அடிமை நெறியென்றும் தாச மார்க்க மென்றும் கூறுவர்.

**"முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி யவனிவருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத் தைத்**
**தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே"**

தன்னை பல்லவ மன்னனிடம் அழைத்துச் செல்வதற்கு வந்த அமைச்சரிடம் தான் இறைவனுக்கன்றி வேறு எவருக்கும் ஆட்பட மாட்டேன் என உறுதியாகக் கூறுகின்றார். இதனை "**நாமார்க்கும் குடியல்லோம். நமனை யஞ்சோம்**" என்ற அவரின் பதிகத்தின் மூல மறியலாம்.

இறைவனின் கையிலைக் காட்சியைக் காண, மேலே தொடர்ந்து செல்ல முடியாத நிலையில் கையிலைக் காட்சியைக் கண்டன்றி மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என இறையருளினால் திருவையாற்றில் கையிலைக் காட்சியைக் கண்டுகளிக்கின்றார்.

அப்போது "**மாதர் பிறைக்கண்ணியானை..**" என்ற பதிகம் பாடுகிறார். இவ்வாறு வாழ்ந்து இறைவனிருக்கும் உலகத்தையடைதலாகிய "**சாலோகம்**" எனப்படும் முத்தி நிலையை அடைகின்றார்.

கிரியை நெறியில் நின்று காட்டியவர் சம்பந்தப் பெருமான். கிரியை என்பது செயல் என்றும் விதிப்படி செய்யப்படும் பூசை என்றும் கூறப்படும். மூன்றாவது வயதில் உமையம்மையிடம் ஞானப்பால் உண்டு இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர் சம்பந்தர். பாடல்களில் இயற்கையின் இயற்கையில் இறைவனைக் கண்டிலர். அவருடைய வர்ணனைகளைக் காணலாம்.

**"சடைமு யங் கு புனலன்னை நன்நெறி**
**வீசிச் சதிர் வெய்த**
**உடைமு யங்குமர வோடுழி தந்தென**
**துள்ளங் கவர் கள்வன்**
**கடைமு யங்குகழி சூழ்குளிர் காலம்**
**பொன்னஞ் சிற கன்னம்**
**பெடைமு யங்கு பிர மாபுரமேவிய**
**பெம்மா னிவ னன்றே"**

சம்மந்தர் ஆலயங்கள் தோறும் சென்று இசையுடன் இறைவனைப் பாடிப் பரவினார். இறையருளாலே பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை பெற்று தலங்கள் தோறும் யாத்திரையை மேற்கொண்டவர். இறையருளால் மக்களுடைய துன்பங்களைப் போக்கியவர். இவ்வுலகில் பதினாறு வருடங்களாக வாழ்ந்து, தம் திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையும் நல்லூர் பெருமான் எனும் ஆலயத்தில் சிவசோதியிற் கலந்து முத்தியடையச் செய்தவர். அப்போது அவர் "**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ...**" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். இவர் வாழ்ந்து காட்டிய இந்நெறியை மகன்மை நெறியென்றும், சற்புத்திர மார்க்கம் என்றும் கூறுவர். இந்நெறி நிற்போர் இறைவனுக்கருகிலிருப்பதாகிய "**சாமீப**" முத்தியைப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவதாக யோக நெறியில் நின்று வாழ்ந்தவர் சுந்தரர். யோகம் என்பது சேர்தல் என்னும் பொருள்படும். ஆன்மா இறைவனுடன் சேரும் வழியைக் காட்டுவதாகும். இவரின் திருமணத்தன்று இறைவனால் ஓலை கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவர். எமது சமய குரவர்களில் இல்லாத நிலையில் நின்று, இல்லறத்தார்க்குரிய கடமைகளையும், செய்து இறை பணியாற்றியவர். இறைவனைத் தோழனாக கொண்டவர். தாம் விரும்பியவற்றையெல்லாம் இறைவனிடம் உரிமையுடன் கேட்டுப் பெற்றவர்.

**"நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்**
**வாளனக் கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே**
**கோளிலியெம் பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்**
**ஆளிலையெம் பெருமானவை யட்டித் தரப்பணியே"**

இப்பதிகத்தின் மூலம் இறைவனுக்கும் இவருக்குமிடையேயுள்ள நெருங்கிய அன்பைக் காணலாம்.

"**பத்தூர் புக்கிரந்துண்டு..**" என்ற திருநாகைக் காரோணத்தில் பாடிய பதிகத்தின் மூலமும் இவர் இறைவனுடன் நெருங்கியுள்ள தன்மையை நாம் உணரலாம். சத்தியம் தவறியமையால் திருவொற்றியூர் எல்லையை விட்டு நீங்கியவுடன் தன்னிரு கண்களின் பார்வையையும் இழந்து பின் இறைவனை வேண்டிப் பரவிப் பாடி, திருவெண் பாக்கத்தில் ஊன்று கோலினையும், திருக்கச்சியெகம்பத்தில் "**ஆலந்தானுகந்து அமுது செய்தானை**" என்று பாடி இடக்கண் பார்வையையும் திருவாரூரில் வலக்கண் பார்வையையும் பெற்றவர்.

**"மீளா யடிமை உமக்கே யாளாய் பிறரை வேண்டாதே**
**மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி**
**ஆளாயிருக்கு மடியார் தம் அல்லல் சொன்னக் கால்**
**வாளா திருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே..."**

இவரின் வாழ்க்கை நெறி நாம் இவ்வுலகில் சத்தியந் தவறாது வாழ வேண்டுமென்ற பேருண்மையை உணர்த்துகிறது. இவர் இறைவனனுப்பிய வெள்ளையானை மேலேறித் திருக்கைலையை அடைந்தவர். இந்நெறியைத் தோழமை நெறியென்றும் சக மார்க்கம் என்றும் கூறுவர். இந்நெறி நிற்போர் இறைவன் போன்ற வடிவத்தை பெறுதலாகிய "**சாரூபம்**" என்ற முத்தியைப் பெறுவர்.

இறுதியாக மிக மேன்மையான ஞானநெறியில் நின்று வாழ்ந்து காட்டியவர் மணிவாசகப் பெருமான். பாண்டிய மன்னனின் அமைச்சராக இருந்த இவர் தன் கடமை நிமித்தம் குதிரை வாங்கச் சென்றபோது, திருப்பெருந்துறையில் குருந்த மரநிழலில் இறைவனே மானிடவடிவந் தாங்கி குருவாக வந்து ஆட்கொள்ளப்பட்டவர்.

இவர் பாடிய பாடல்கள் திருவாசகம் என்று கூறப்படும். "**திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்**" என்ற வாக்கின் மூலமும், "**வான் கலந்த மாணிக் க வாசகர் நின் வாசகத்தை...**" என்ற இராமலிங்க அடிகளாரின் பாடல் மூலமும் நாம் திருவாசகத்தின் பெருமையை உணரலாம்.

திருவாசகப் பாடல்கள் மெய்யுருகிப் பாடப் பாட மனதினை உருக்கி இறைவன்பால் ஈர்த்துச் செல்வன.

**"நாயிற் கிடையாய்க் கிடந்த அடியேற் குத்**
**தாயிற் சிறந்த தயாவான தத் தத்துவனே"**

என்று சிவபுராணத்திலும்,

**"கல்லா மனத்துன் கடைப்பட்ட நாயேனை"**

என்று திருவண்ணாமலையிலும்,

**"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ.."**

என்றும்

இறைவனின் பெருங்கருணையை வியந்துருகிப் பாடுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த் துன் விரையார் கழற்கென
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி சய சய போற்றி யென்றும்
கைதான் நெகிழலிடேனுடையாயென்னைக் கண்டு கொள்ளே"
(திருச்சாதகம்)


"ஆடு கின்றிலை கூத்துடை யான் கழற் கன்பிலை என் புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாத மலர்
சூடு கின்றிலை சூட்டுகின்றது மிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வ தொன் றறியேனே"

இவருடைய பாடல்களில் பழம்போல் நவின்ற அவரின் உள்ளத்தின் ஞான முதிர்ச்சியைக் காணலாம்.

தில்லை மூவாயிரவர் "நீர் பாடிய பாடல்களுக்கு பொருள் யாது?" எனக் கேட்க, அப்பாடல்களுக்கு பொருள் "அவனே" என்று கூறி நடராஜப் பெருமான் சந்நிதிக்குள் சென்று மறைந்தருளினார். இவர் முப்பத்திரண்டு வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்தவர். இவருக்கும் இறைவனுக்குமுள்ள தொடர்பு குருசீட தொடர்பாகும். இதனை சன்மார்க்கம் என்றும் கூறுவர். இந் நெறியில் நிற்போர் அடையும் முத்தியானது இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகிய "சிவசாயுச்சியம்" எனப்படும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் முறையே அரும்பு, மலர், காய், கனி போன்றதாகும். எனவே நாமும் இந் நால்வர் காட்டியருளிய அன்பு நெறியில் நின்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து உய்வடைவோமாக!

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகப்பிரபஞ்சமும் புறப்பிரபஞ்சமும் பதி பசு பாசமும்

மருத்துவர் சி.யமுனாந்தா

தூலநிலையில் காணப்படும் புறப் பிரபஞ்சப்பொருள்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஐந்தும் தத்தம் சூட்சுகுமமான பூதாதி ஆங்காரத்தின் கண் ஒடுங்கி நிற்கும். ஆன்மாவிற்குரிய அகப்பிரபஞ்சம் உடம்பின் வழி புறப்பிரபஞ்சத்தினை காண்பதற்கு முப்பத்து ஐந்து கருவிகளை துணைக் கொண்டுள்ளது. பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள் உண்மையில் முப்பத்தாறு தத்து வங்களில் விந்து தத்துவமும் நாததத்துவ மும் சிவதத்துவத்தினை ஓசை ஒளியாக விளக்குகின்றது.

பதிக்கும் ஆன்மாவின் மாயைக்கும் இடையில் நிற்ப தொரு நுண்பொருள் உள தென்பதும் அதுவே மின் என்றும் விந்து என்றும் வழங்கப்படுவது ஆயிற்று. இதனை இன்றைய இயற்பியல் அறிஞர்கள் Unified Field Theory மூலம் உருவகப்படுத்த முனை கின்றனர்.

விந்து தன்னில் கீழ் நின்ற எல்லாப் பொருள்களையும் இயக்கவல்லது. விந்து அறிவில்லாச் சடப்பொருள் நனி நுண்ணிய தத்துவம்.

விந்து தத்துவம் மாயையை காரியப் படுத்துகின்றுழியும் காரியப்படுத்திய உலகங் களையும் பிறவற்றையும் இயக்குகின்றுழி யும் பாம்பு மண்டலித்தால் போலச்சுழன்று சுழன்று இயங்கும். விந்து தத்துவம் தான் சுழன்று இயங்கி ஏனைய உலகங்களையும் சுழற்றி இயங்காது நிற்கின்றதும். இதனை இன்றை இயற்பியலின் spring theory உருவகப்படுத்துகின்றது.

விந்து தத்துவம் வட்டவடிவினது. விந்து தத்துவம் புள்ளி வடிவினது. இப்புள்ளி யின் அசைவில் ஓசை உண்டாகுகின்றதால் அவ் ஓசையே நாததத்துவம் ஆகும்.

நாதமே படைத்தல், காத்தல், அழித் தல் ஆகிய முத்தொழில். படைத்தல் என் பது சிருட்டி என உரைக்கப்படும். இது சாத் வீக குணாதிக்கத்தாற் கர்த்திருசங்கற்பத் தால் முதல் காரணத்தின் காரியப் பொருள்.

காத்தல்என்பது கால நியதி. அஃதாவது திதி. அதாவது இராட்சத குணாதிக்கத்தால் தோன்றிய அநந்தப்பொருள் அநந்தத் தொழி லில் அமைந்து முதற்காரணம் பற்றாது நிற்றல்.

அழித்தல்என்பது சங்காரம். அஃதாவது தாமதகுணாதிக்கத்தால் தனது தொழில் களைவிட்டு முதற்காரணத்தின் முழுகி மறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் என்பது தூல உருவாய் திரண்ட அணுக்களைப் பிரித்து நெகிழ விடுதல் ஆகும். இவற்றினுள் காலத்தாலும் இடத்தாலும் வரையறைப்படாதன எல்லாம் சருவவியாபகம் உடையன. இதனுள் இறைவன் சுத்த சித்துப் பொருள். ஆன்மா சூக்கும சித்துப் பொருள். ஆணவ மலம் சடப்பொருளாயினும் சூக்கும நிலை உடைத்து சங்காரத்தில் இவை ஒன்றித்து.

அ∴தே இல்ல தொரு சூனியத்தில் நின்றும் உள்ளதொன்று அதனை தோற்றுவித்தாலும், உள்ளது ஒன்றதனை இல்லது ஒரு சூனியமாகத்திரித்தலும் முடிவில் ஆற்றல் எனல் அ∴து எம்மால் அறியமுடியா அறிவிலி நிலையே ஆகும். இ∴தே முக்காலத்திலும் இல்லாத ஒரு சூன்யத்தில் இருந்து ஒன்று அதனைத் தோற்றுவித்தல் மிகச் சூக்குமாய்க்கிடந்த அணுக்களை இயைந்து தூல உருவாக்கல் அங்கனம் அ∴தே சிருட்டி தனை திதி என்மனார்.

வானில் தோன்றும் ஒலியானது நாத தத்துவத்தின் படைப்பொப்பது. அ∴தே பாம்பின் உடல் வடிவு உருவகம் ஆயிற்று நாத வடிவும், பாம்பின் படம் உருவகம் ஆயிற்று விந்து வடிவம். இ∴தே நாக வழிபாட்டின் சால்பு. மேல் தீப வழிபாடே சிவம் ஆகும்.

இ∴தே ஆன்மா ஆணவமலம் எனும் அறியாமை வயப்பட்டு அநாதிதொட்டே நிற்கும். இ∴தே கால தத்துவம் ஆகும்.

ஆணவத்தை அழித்தற்பொருட்டே மாயா தேகமும் மாயா உலகமும் வாய்த்தன. இதனை ஆன்மாவில் மறைவாக உள்ள ஆணவ மல குணங்களை அகற்றவே பிரகிருதி மாயையில் சூக்கும குணதத்துவங்கள் தோற்றுவிக்கப்படும்.

மாயை உலகிற்கு முதல் காரணம் இறை அருள் என்கின்ற சிற்சத்தியே மாயையில் நின்று உலகங்கள் தோற்றுவிப்பதற்கான உந்துதல். இ∴தே பதிக்கும் மாயைக்கும் நடுநின்று உதவும் நொய்தே விந்து ஆகும்.

விந்து நாதவடிவே ஓங்காரம் ஆகும்.

எல்லா ஒலிகளுக்கும் முதலான பிரணவ ஓசை இவ்விந்து நாதங்களின் சேர்க்கையாகும். அதனை வரிவடிவில் எழுதும் போது ஓகாரத்தில் தொடங்கும் சுழியே விந்துவாகவும் அதனைத் தொடரும் வளைந்த வரியே நாதம் என்பதும் உணரற்பாற்று அதாவது அகரமும் உகரமும் ஆகிய தனி எழுத்துக்கள் இரண்டும் விந்து நாத வடிவுடையன. அ∴தே தமிழ்மொழிப்பிர வாகம் வன்னி உடைத்து இ∴தே விழிநிலையில் இருபரிமாண வரையியல் (2D Topology of consciousness)

**அகார உகாரம் அகங்காரம் புத்தி**
**மகாரம் மனம் சித்தம் விந்துப்பகாது இவற்றை**
**நாதம் உள வடிவாம், நாடில் பிரணவமாம்**
**போதம் கடல் திரையே போன்று.**

(சிவஞானபோதம்) தெளிவுரை
திருவாவடுதுறை ஆதீனம் (1994)

அ∴தே அற்று திருக்குறளில்

அகர முதல எழுத்தெல்லாம் -ஆதி பகவன் முதற்றே உலகு" என்றதன் மெய்ப்பதம் ஓம் என்ற பிரணவ மந்திரமேயாகும். இங்கு பகவன் என்பது ஆதி பகலவன் எனவும் ஆதி ஜோதியையும் குறிக்கும்.

அல்லாதும் எல் என்பதன்திரிபாகும். அ∴தே உருவவழிபாட்டை அற்றாக்கிய போதும் மாக் காட்டில் அதாவது மக்காவில் அமைந்த பாரிய கற்கலால் அமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்க உருவை தனிமுதற்கடவுள் ஆயி வழிபட்டு வருகின்றனர்.

கிரேக்கரும் சூரிய வழிபாட்டில் சியல் எனும் சொல் தமிழில் சிவம் என்பதற்கு ஒப்பும் உரோமமும் தேவபிதிர் என ஒளியினை யுப்பிட்டர் என வழிபட்டனர். ஆதியர்மேனியரும் ஓடன் என்ற பெயரில் ஒளியாக இறைவனை இறைஞ்சினர்.

கிறிஸ்தவமறையிலும் முழுமுதற் கடவுளுக்கு எலோகிம் என்ற பெயர் வழங்கிற்று. இது எல்சடையான் என சிவ உருவம் ஆகும். அவ்வாறே தென்அமெரிக்காவில் பெரு நாகரிகத்திலும் யப்பானிலும் சீனாவிலும் சூரியனைத் தெய்வமாக வழிபட்டமையை நாம் காணலாம்.

தீப்பிழும்பின் கண் இறைவனை ஒளி வடிவமாக உலக நாகரிகத்தில் மக்கள் வழிபட்டு வந்தனர். இதனை தீப்பிழம்பொடு ஒத்து நின்ற கல்வடிவாக திருவண்ணாமலை போல் சிவலிங்கமாக வழிபட்டனர். வேள்விக் குண்டலத்தில் கிளர்ந்து எழும் தீயும் விந்து மூலமாகும். இந்த விந்து நாதங்கள் ஒலி வடிவில் ஓ என்றும் ஓசையாகவும் வரி வடிவில் ஓ என்ற எழுத்தாகவும் பிள்ளையார் சுழியாகவும் அமைகின்றன.

இவ்வாறாக விந்து நாதக் குறிகளில் விந்து மின்னொளியோடு ஒருபுடை ஒத்தது. அஃது தீயே ஆகும். "பொங்கழல் உருவன் பூத நாயகன்" எனவும் "எரிஅழலால் உருவமில்லை" எனவும் சைவசமய தோத்திரங்களில் கூறப்படுகின்றது. திருவாசகத்தில் "மாசற்றசோதி" எனவும் திருமந்தரத்தில் "வன்னி எழுந்தது மாபலம் உள்ளது" எனவும் காட்டப்பட்டுள்ளது.

பண்டைக்காலம் முதல் இவ்வுலகில் மக்கள் சூரியனை அதாவது அக்கினியினை தெய்வமாக வழிபட்டதன்மை எஃகுபதி ஆகிய எகிப்திலும் மத்தியகிழக்கில் பபிலோனியர், சாலடியர் தேசங்களிலும் காணப்பட்டது. சலாடியர் வழிபட்ட கடவுளர் களில் ஒருவர் முரு என்பது முருகப் பெருமானைக் குறிக்கும். பினீசியரும் தீக்கடவுளை தீயின் வடிவிலும் குவிந்தகற்களினால் மலைமுகடுகளிலும் வழிபட்டனர். இதுவே சிவலிங்க வழிபாடு அல்லது தாணு வடிவ வழிபாடாகும். பினீசியர் நாட்டுக்கருகில் அரேபியதேசத்தில் ஒளியினை எல்லே இலக்கம் என வழிபட்டனர் அல்லா என்பதும் சங்காரகாலத்தில் இவ்வுலகும் பிரபஞ்சமும் பிரளயமாகி கன்மம், மாயை அற்று அருளப் படும். மீண்டும் ஆன்மாவின் ஆணவம் அற்று உரு சிருட்டிப்பு நிகழும். இங்ஙன் காலதத்துவம் நியதி தத்துவம் உணரற்பாலது சிவ நடம் வாயிலாகவும் விந்துநாத தத்துவம் நாக வழிபாடாகவும் அதாவது நாகத்தின் படம் நாதமாகவும் ஏனையவை விந்தாகவும் ஆதி தொட்டு இறைவனை இயற்கையில் வழிபட்டனர் மாந்தர். இதுவே இயற்கையின் நியதி தத்துவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகம் சுட்டும் வாழ்வியல் நெறி

ஸ்ரீ.நதிபரன்
யோகா போதனாசிரியர், நல்லூர்.

இந்து சமயப் புலத்தில் யோகம் என்பது ஒரு தத்துவ முறையாக விருத்தியுற்றிருப்பினும், அது ஒரு கலையாக மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்துவிட்டமை சிறப்பான அம்சமாகும். தற்காலத்தில் எழுச்சி பெற்றுள்ள அறிவியற் சிந்தனைகளின் ஊற்றுக்கண்கள் பலவும் இந்துசமய தத்துவங்களில் விதைக்கப்பட்டிருக்கின்றன. தற்காலத்தில் அறிவியலின் அதியுன்னத வளர்ச்சியும், தொழினுட்ப சாதனங்களின் அதிகரித்த பாவனைகளும் மனித இனத்தை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன எனக் கூறப்பட்டாலும் அவை வாழ்வின் இருப்புக்கும் மேம்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அல்லது சவால்களாகவேயுள்ளன. தொழிநுட்ப வளர்ச்சி என்ற தோரணையில் பல கைங்கரியங்கள் பொதுநல நோக்கில் அல்லது சிலரின் சுயநல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மனித மாண்பற்ற ஒழுக்க விழுமியங்களற்ற, உடலுள ரீதியாக பாதிப்பினை தருகின்ற செயற்பாங்குகளான முரண்பாடுகள், போட்டி, பொறாமைகள் வக்கிர சிந்தனைகள் சமூக விரோத நடவடிக்கைகள மன அழுத்தங்கள், உளைச்சல்கள், பழி வாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின்மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் ஒட்டுமொத்தத்தில் இயற்கையை விரோதிக்கும் செயல்களே வாழ்வாகிவிட்ட சமூகத்தில் அவை எத்துணை பொருத்தப்பாடுடையதாக அமையும்? என்பதனை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியது அவசியம். ஒரு சமூகத்தின் ஒழுக்கமில்லாத கல்வியும் சரி வளர்ச்சியும் சரி அச்சமூகத்தினை வளர்ச்சியடைந்த நாகரிகமடைந்த சமூகமாக நோக்க முடியாது.

யோகா தன்னை உணரவைக்கும் ஒப்பற்ற கலை வடிவம். ஒரு மனிதனை எல்லா நோய்களிலிருந்தும் முழுவதுமாக குணமடையச் செய்து நல்லாரோக்கியமும் முழுமைத்துவமும் உடையவனாக ஆன்ம ஈடேற்றத்திற்கான அற்புத சாதனமே யோகம் என்ற நிலையில் யோகாவைப் பற்றி முன்னெப்போதும் இல்லாத வகையில் தற் போது உலக மக்களிடையே விழிப்புணர்வு மக்களிடையே பரவிவருகிறது. அதன் முக்கியத்துவம் இந்து சமய, தத்துவ நிலைகள் கடந்து உலகம் தழுவிய நிலையில் உணரப்படுகின்றது. இந்த உணர்திறனை மென்மேலும் அழுத்தம் பெறச் செய்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் வகிபங்கு இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தலையாய பணியாக அமைந்திருக்கின்றது. இந்துசமய இலக்கியங்களில் யோகம் பற்றிய சிந்தனைகள் பரவலாக இடம்பெற்றிருந்தாலும் பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம் முதன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக கொள்ளப்படுகின்றது. மனம், உடல், மூச்சு ஆகிய அப்பியாசங்களினாலும் தியான முறைமைகளினாலும் கிடைத்தற்கரிய பல் வேறு ஆற்றல்களைப் பெற்றிருந்தாலும் இறுதியில் அடையப்பெறுகின்ற மெய்யுணர் தல் என்பது பற்றியதான சிந்தனையே யோக சூத்திரத்தின் அடிப்படைப் பொருள் மரபாக உள்ளது. இங்கு யோகம் என்பது "ஸித்த விருத்தி நிரோதக" என்று எடுத்தாளப்பட்டி ருக்கின்றது. அதாவது பல்வேறு உருவ நிலை களை எடுக்கும் சித்தத்தினைக் கட்டுப் படுத்தி தடுத்து நிறுத்துதலே யோகம் எனவும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண விருத்தி, தூய்மை முதலியவற்றை மேம்படுத்து வதற்குரிய வழிகள் யோக தத்துவத்தி னூடாக விளக்கப்பட்டுள்ளன என்பதனை யும் அறிந்து கொள்ள முடிகிறது.

பழங்கால இந்திய முனிவர்களால் உரு வாக்கப்பட்ட ஆன்மிக அறிவியலே யோகா வாகும். யோகா என்பது ஒரு முழுமையான வாழ்க்கை முறையாகும். இதன் வேர்கள் இந்தியப்பண்பாட்டிலும், பாரம்பரியத்திலும் ஆழமாக வேரூன்றி இருக்கின்றன. ரிஷிகள், முனிவர்களால் ஆயிரக் கணக்கான ஆண்டு களுக்கு முன்பு இது வளர்த்தெடுக்கப் பட்டது. நம்முடைய பழமையான வேதங்கள் அனைத்திலும் யோகா பற்றிய பதிவுகள் காணக்கிடைக்கின்றன. இடைக்கால, நவீன கால, தற்கால இலக்கியங்களிலும் கூட யோகக்கலை பற்றிக் காணப்படுகிறது. பதஞ் சலியின் யோக சூத்திரங்கள் (கி.மு.400) ஒழுங்குமுறைசார்ந்த மூல வாக்கியங்கள் என்று நம்பப்படுகின்றன. இவை பற்றி பல் வேறு உரைகளை உரையாசிரியர்கள் எழுதி உள்ளனர். அஷ்டாங்க யோகா என்று பிரபல மாக அறியப்படும் யோகாவின் எட்டு பாதை களை பதஞ்சலி தந்துள்ளார். இந்த அஷ் டாங்க யோகா ஒரு தனி மனிதனின் அனைத் துக் கூறுகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. யோகா மருந்தில்லாத ஒரு சிகிச்சை முறை. உடல் நலம் பேணும் ஒரு முறை, ஆரோக்கியமாக வாழ உதவும் முறை. உடல், மனம், ஒழுக்கம், உணர்ச்சி நிலைகள், ஆன்மிகக்கூறுகள் ஆகியவற்றை கொண் டுள்ளது. மிகவும் எளிமையாகப் பின்பற்றக் கூடிய பல எளிய ஆரோக்கிய வாழ்வியல் நடைமுறைகளை யோகா பரிந்துரைக்கிறது. இவை நல்ல உடல் நலத்திற்கும், நோய் களைத் தவிர்ப்பதற்கும் உதவக்கூடியவை. அன்றாட நடைமுறையில் வழக்கமான ஒன் றாக ஒருங்கிணைத்து மற்ற சிகிச்சை முறை களுடன் சேர்த்தும், அதற்குத்துணையாக வும் யோகாவை நடைமுறைப்படுத்த இயலும். உடலும் மனமும் சார்ந்த குறைபாடுகள் ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கான திட்டமாக குருமார்கள் பலரும், மருத்துவத் தொழில் முறையாளர்களும் யோகா வாழ்க்கை முறையை ஊக்குவித்துவருகின்றனர். யோகாப்பயிற்சிகள் நலவாழ்வு மேம்படவும், நோய்களைத்தவிர்க்கவும், உடல் மனம் சார்ந்த குறைபாடுகளை சிறப்பாக மேலாண்மை செய்வதற்கும், உயர்நிலை பிரக்ஞையை சிறப்புற புரிந்துகொள்வதற் கும் இட்டுச் செல்கின்றன. யோகாவின் பிரபலமான பயிற்சி முறைகளில் கிரியா (தூய்மைப்படுத்தும் நடைமுறைகள்), சூரிய நமஸ்காரம், ஆசனங்கள், பிரணாயாமம் (மூச்சுப்பயிற்சிகள்), இறுக்கத்தளர்வு நுட் பங்கள், பந்தங்கள், முத்ராக்கள், தியானம் போன்றவை இடம்பெற்றுள்ளன. இதன் குறிக் கோள் அதனை அப்பியாசம் செய்பவர்களை விழிப்புணர்வு உடையவராக்குவதேயாகும். உள்ளத்தால் ஏற்படும் இவ்வுணர்வு உடலை யும் மாற்றத்திற்கு உட்படுத்துகிறது. உட லும் மனமும் மாற்றத்திற்கு உள்ளாகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பூரண மனிதனாக அவனும் மாற்ற மடைகிறான். இம்மாற்றம் அறியாமையைக் களைவதனால் மட்டுமே ஏற்படுகிறது. விவே கத்துடன் இடைவிடாது பயில்வதே அறியா மையை ஒழிப்பதற்கான வழியாகும் என்பது பதஞ்சலி முனிவரின் சிந்தனை. இந்த விவேக மானது யோக அப்பியாசத்தினால் பெற்றுக் கொள்ளக் கூடியது. அறியாமை அகன்று, மனமாசு நீங்கி, உள்ளம் தூய்மையடைந்த நிலையில் புதிய பண்பாட்டுருவாக்கத்திற்கு யோக அப்பியாசங்கள் வழிசமைக்கும்.

உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆரோக்கியமாக வாழ யோகா அளிக்கும் பலன்கள் ஏராளம். நாளமில்லா சுரப்பிகளை தூண்டி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும், நேர்மறையான எண்ணங் களை வளர்க்கவும் யோகா நமக்கு உதவு கிறது. யோகா என்பது தன்னை உணர வைக்கும் கலை வடிவமாகும். ஒரு மனிதன் தாழ்வு மனப்பான்மையில் இருந்து மீண்டு ஆளுமை மிக்க ஒருவராக மாற துணையாக உள்ளது. இளைய சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மன அழுத்தங்கள், மன உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின் மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் போன்ற சமூகப் பிறழ்வுகளில் இருந்து விலகி ஆரோக்கியமான உடல மைப் பையும், உளநலத்தையும் மேம்படுத்து வதற்கு யோகா பெரும்துணையாக உள் ளது. முதியவர்கள் நாளாந்தம் தங்களால் செய்யக்கூடிய பயிற்சிகளை தவறாமல் செய்து வந்தால் உடல், உள ஆரோக்கியத் தில் முன்னேற்றம் ஏற்படும். முதுமையில் தோன்றும் ஏக்கம், மனக்கவலை, மன உளைச் சல், உடற்சோர்வு போன்றவை நீங்கி மகிழ் வுடன் வாழ யோகா உதவியாக இருக்கும். தொடர்ச்சியான பயிற்சிகளால் மனோதிடம் அதிகரித்து வாழ்வில் ஏற்படும் சிக்கலான சவால்களை எதிர்கொள்ளும் பக்குவ நிலை உருவாகும். உடற்பயிற்சி, உடல் தசைகளை மட்டுமே வலுப்படுத்தும். உடலின் உள்ளு றுப்புகளை வலுப்படுத்தவோ உறுப்புகளின் செயல் திறனைக் கூட்டவோ உடற்பயிற்சி யால் முடியாது. உடற்பயிற்சியால் முடி யாததை யோகாசனம் செய்யும். மேலும், ஒரு சமூகத்தின் ஒழுக்கமில்லாத கல்வியும் சரி வளர்ச்சியும் சரி அச்சமூகத்தினை வளர்ச் சியடைந்த நாகரிகமடைந்த சமூகமாக நோக்க முடியாது. தொழிநுட்ப வளர்ச்சி என்ற தோரணையில் பல கைங்கரியங்கள் பொதுநல நோக்கில் அல்லது சிலரின் சுய நல அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டாலும் சமுதாயத்தினரிடையே காணப்படுகின்ற மனித மாண்பற்ற ஒழுக்க விழுமியங்களற்ற, உடலுள ரீதியாக பாதிப்பினை தருகின்ற செயற்பாங்குகளான முரண்பாடுகள், போட்டி, பொறாமைகள் வக்கிர சிந்தனைகள் சமூக விரோத நடவடிக்கைகள் மன அழுத்தங்கள், உளைச்சல்கள், பழிவாங்கும் எண்ணங்கள், விட்டுக்கொடுப்பற்ற தன்மைகள், புரிதலின் மைகள், வன்முறைகள், முறையற்ற பாலியல் நடத்தைகள் என ஒட்டுமொத்தத்தில் இயற் கையை விரோதிக்கும் செயல்களே வாழ் வாகிவிட்ட நிலைமையில் சமூகத்தின் உன் னத நிலைக்கு யோகத்தின் பங்கு காத்திர மானதாகும்.

உலகத்திலே அமைதியையும் சமா தானத்தையும் நிலைநாட்டுவதற்கு ஒரு வழி காட்டியாக இருப்பது யோகம் ஆகும். ஏனெ னில், உலக சமாதானமானது ஒவ்வொரு தனிமனிதனுள்ளும் நிலவும் சமாதானத் திலேயே தங்கியுள்ளது. அதாவது, ஒவ்வொரு வரும் தத்தமது உள்ளத்தில் சூழ்ந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கும் இருளாகிய கோபம், வெறுப்பு, அவா, நிலையற்ற பொருட்களின் மீதான பேராசை, மற்றும் அறியாமை என்பவற்றை அகற்றினாலன்றி குடும்பத்திலேயும் சரி நாட்டிலும் சரி ஏன் உலகத்திலேயும் சரி சமாதானத்தையும் அமைதியையும் நிலை நாட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதுவுமே வெற்றியளிக்க மாட்டா. இவ்வகவிருளை யோக அப்பியாசம் செய்வதன் மூலமே நீக்கலாம் என்பர் பெரியோர். எனவே இப்பூவுலகில் தோன்றிய சித்தர்கள், முனிவர்கள், மகான்கள், ஞானிகள், யோகிகள் ஆகியோர் மனிதகுலத்திற்காகப் பல பொக்கிஷங்களை விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் இலக்கியம், வேதம், தத்துவம், தற்காப்புக்கலை, மருத்துவம் எனப் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்று அதனை மனிதர்கள் பயன்படுத்தும் வகையில் வரையறை செய்துள்ளனர். அத்தகைய துறைகளுள் சித்த மருத்துவமும் யோகக்கலைகளும் தற்போதைய காலச் சூழலுக்கு மிகவும் இன்றியமையாததாக விளங்குகின்றன. மனித உடலும் உள்ளமும் வெகுகாலத்திற்கு நிலைபெறச் செய்ய உதவும் இவ்விரு துறைகளும் தற்போது பல்வேறு சமூகத்தினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றன. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் பழமொழிக்கொப்ப உடலுக்கு எந்தவொரு நோவும் ஏற்படாமல் பாதுகாத்து நிறைவான வாழ்க்கையை வாழ சித்தர்கள் தந்த வரமாக யோகக்கலை பெரும்பங்காற்றுகின்றது. நோயுற்று அவதியுறுவதைக் காட்டிலும் நோய் ஏற்பட முன்னே நம்மை மேம்படுத்திக் கொள்வதே தற்போதைய காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அறிவுக் கூர்மையான செயலாகும். அவ்வகையில் நோய்கள் பீடிக்காத வண்ணம் உடலையும் மனதையும் செம்மைப்படுத்தக்கூடிய வல்லமையைக் கொண்ட யோகக்கலையானது மற்ற கலைகளைவிட மேலானது எனில் மிகையாகாது. இக்கலை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றினாலும், இயந்திர உலகத்தில் தற்போது மனிதர்கள் படும் பல்வேறு அவஸ்தைகளுக்கு இந்தக் கலை பெரிய மருந்தாக பயன்படும் அரிய பொக்கிஷமாக விளங்கும் இந்த சிறப்பு வாய்ந்த கலையை நாமும் நமது சந்ததிக்கு இப்போதே கற்றுக் கொடுத்தால், வருங்காலத்தில் அவர்கள் மனநிலையும், உடல் நிலையும் மிகுந்த ஆரோக்கியமாகவும், திடமாகவும் இருக்கும் என்பது நிதர்சனமான உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சொல்லும் செயல் திறனும்"

**கலாபூசணம் திரு.இ.சரவணபவன்**
**அராலி மத்தி, வட்டுக்கோட்டை.**

நாம் எமது வாழ்க்கையில் பலவற்றைச் சிந்திக்கின்றோம் பலவற்றைப் பார்க்கின்றோம் இன்னும் பலவற்றை கேட்கின்றோம் அவற்றில் சிலவற்றை உடனடியாக மறந்து போய் விடுகின்றோம் மற்றும் பல விடயங்கள் காலம் செல்லச் செல்ல தாமாகவே மனதை விட்டு மறைந்து போய் விடுகின்றன அல்லது நாமே அவற்றை மறந்து போகின்றோம்.

ஆனால் சில விசயங்கள் நம் மனதின் ஆழத்தில் நிலையாக படிந்து போகின்றன. அத்தகைய விடயங்கள் எமது வாழ்க்கையில் பல மாற்றங்களையும் ஏற்படுத்திவிடுகின்றன. அவ்வாறு எமது வாழ்க்கையில் உன்னதமான மாற்றங்களை ஏற்படுத்திய சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருப்பது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாக கருதுகின்றேன்.

எனது ஆரம்ப கல்வியை தொடங்கி மூன்றாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த போது தமிழ் மொழி பாடத்தில் சொற்களை சேர்த்தும் பிரித்தும் எழுதும் முறையை ஆசிரியர் கற்பித்தார் கட + உள் என்பது கடவுள் என ஆசிரியர் கற்பித்தார். அதாவது உன்னை கடந்து உள்ளே சென்று உணர்ந்து கொள்ளப்படுவது கடவுள் என விளக்கினார் பின்னர் பல இடங்களிலும் பல சந்தர்பங்களிலும் கடவுள் இங்கே உள்ளார், அங்கே உள்ளார் என ஆசிரியர் கற்பித்தார் அப்பொழுது ஆசிரியரிடம் நீங்கள் கற்பித்த விசயத்திற்கும் நாம் செய்கின்ற விசயத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லையே என்று கேட்ட போது கேள்வி கேட்காதே நீ அதிக பிரசங்கியாக இருக்கிறாய் என்று கூறி அடக்கி விட்டார் ஐந்தாம் தரத்தில் கற்பிக்கப்படும் போது ஆசிரியர் கரும்பலகையில் "கற்க கசடற கற்பவை கற்ற பின் நிற்க அதற்கு தக" என்னும் திருக்குறளை எழுதினார் நாம் கற்க வேண்டிய விடயங்களை சந்தேகமின்றி கற்க வேண்டும் பின்னர் நாம் கற்றுக்கொண்ட நெறி முறைகளின் வழியே வாழ வேண்டும் என்பதே அதன் பொருள் என்று கூறினார் முன்னர் மூன்றாம் வகுப்பில் படித்த கடவுள் பற்றிய விசயம் நினைவுக்கு வந்தது கடந்து உள்ளே சென்று கடவுளை உணர வேண்டும் என்று தானே படித்தேன் அதனைத் தானே எனது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்று கூறிய போதும் கேள்வி கேட்காதே என்று கூறி அடக்கி விட்டார்கள்.

நாம் வாழ்விலே என்ன செய்தாலும் காலம் எதையும் பொருட்படுத்துவதில்லை அது தன்பாட்டில் ஓடிக்கொண்டிருக்கும் ஆரம்பக்கல்வியை முடித்து அடுத்த படி நிலைக்கு நான் சென்றபோது அங்கு விசயங்கள் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டன அப்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய பாட ஆசிரியர் ஒன்றைக்கற் பித்தார் பின்னர் அதற்கான விளக்கத்தைக் கூற ஆரம்பித்தார் அந்த விளக்கத்தை வெறுமனே படிப்பதற்காக படித்தேனேயன்றி அது வாழ்க்கையிலே மகான்களுக்குக்கும் ஞானிகளுக்கும் கொடுத்த ஒரு எச்சரிக்கை மணிதான் என்பதனை அப்பொழுது நான் உணர்ந்து கொள்ளவில்லை.

ஆசிரியர் கற்பித்த பாடலின் உட் பொருள் இதுதான் "ஒரு ஆமையை கொல்ல விரும்புகின்றவர்கள் அதனை நீர் நிரப்பப் பட்ட ஒரு பெரிய பாத்திரத்தினுள்ளே போட்டு அந்தப் பாத்திரத்தின் அடியில் நெருப்பைப் பற்ற வைப்பார்கள் குளிரான நீரில் இருப்பதை பெரிதாக விரும்பாத ஆமை நீரின் சூடு ஏற ஏற அது ஆனந்தமாக அந்த இதமான வெப்ப நீரில் நீந்தித்திரிய ஆரம்பிக்கும். என்ன நடக்கப் போகிறது என்பதை உணர முடியாத ஆமை வெப்பம் அதிகரிக்கத்தொடங்கும் போது மிகுந்த சிரமப்பட்டு துன்பப்பட்டும் வேதனையில் துடிக்க ஆரம்பிக்கும். நீரின் கொதிநிலை உச்சமாகும் போது துன்பம் தாளாமல் அது மெதுவாக இறந்து போகும் இது போன்றுதான் எமது வாழ்க்கையும் என ஆசிரியர் கூறிமுடித்தார்.

சிறுபராயத்தில் அந்த உண்மையை உணந்து கொள்ளும் பக்குவம் இருக்கவில்லை அதற்கான தேவையும் இருக்கவில்லை அந்த நாள்களில் எமது கவனம் முழுவதும் விளை யாட்டில் இருந்தது பின்னர் வாலிப வயது வந்த போது எல்லாமே மிகவும் நன்றாக இத மாக இருந்தன மரணம் நோய் முதலான விச யங்களும் அடுத்தவர்களுக்கு மட்டும் நடப் பன போலத்தெரிந்தன. பின்னர் மெதுவாக மெதுவாக வாழ்க்கையில் சூடுஏறத் தொடங்கு கின்றன அல்லது நாமாகவே முன்வந்து சுமைகளை ஏற்றுக்கொள்கின்றோம் பின்னர் அந்த சுமைகளின் காரணமாகத் துன்பத் தில் அழுந்தத் தொடங்குகின்றோம். அப் பொழுதுதான் எல்லாமே சுகமாக இருந்த காலத்தை எண்ணிப்பார்ப்போம் இப் பொழுது மூட்டுவலி, முதுகுவலி, கால்வலி என எல்லா விதமான வலிகளும் சேர்ந்து மனிதனைத் துன்பத்தினுள்ளே ஆழ்த்தி விடுகின்றன. உடலில் துன்பம் ஏதும் இல்லாதிருந்தால் அதுவே போதும் என்பது போல வாழ்க்கை ஆகிவிடுகிறது" அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என ஔவையார் சொல்லிப் போன வாசகங்கள் அர்த்தம் இல்லாதவை போலத்தோன்ற ஆரம்பிக்கின்றன.

இருப்பினும் நாம் இளையவரோ, முதியவரோ, படித்தவர்களோ, படிக்காதவர் களோ யாராக இருந்தாலும் நம் எல்லோருக் குமே அந்த துன்பங்களிலிருந்து விடுபட்டு உள்ளத்திலே உள்ள ஆனந்தத்தை அனு பவிக்க கூடிய சாத்தியம் எப்பொழுதும் உள் ளது உள்ளே உள்ள பரமானந்தத்தை அனு பவிக்க வேண்டும் என்ற தாகம் இருப்பின் அந் தத்தாகம் தான் நமது தேடுதலுக்கு வித் தாக அமைகிறது.

ஒரு வேடன் காட்டுக்கு சென்று பறவைகளைப் பிடிப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான் அதனை கண்ட பறவைகளின் தலைவன் வேடன் சென்ற பின்னர் உடனடியாக எல்லாப் பறவை களையும் ஒன்று திரட்டி வேடன் வந்து இடங்களைப் பார்த்துச் சென்றதைப் பற்றிய தகவல்களைக் கூறியது.

எல்லா பறவைகளும் ஒத்த குரலில் வேடன் வருவான் வலையை விரிப்பான் தானி யங்களை போடுவான் ஆனால் நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் உள்ளே சென்று சிக்கிக்கொள்ள மாட்டோம் என்று கூறிக்கொண்டன அதனை எல்லாப் பறவைகளும் மனப்பாடம் செய்து கொண்டன மறுநாள் வேடன் வந்து வலை களை விரித்தான் எல்லாப் பறவைகளும் வேடன் வருவான் வலையை விரிப்பான் ஆனால் நாங்கள் அதனுள் சிக்க மாட்டோம் என்று செல்லிக் கொண்டே அந்த வலையில் சென்று சிக்கிக் கொண்டன எமது கதையும் இவ்வாறு ஆகிவிடக்கூடாது.

தேடித் தேடித் தேடொணாத் தேவ னைத் தேடிக்கண்டு கோண்டேன் என மாணிக்க வாசகர் கூறினார் அத்துடன் சொல்லிய பாட் டின் பொருளையுணர்ந்து சொல்லுவார் எனவும் கூறினார். அறிந்து அல்ல உணர்ந்து சொல்லு வார் என்று திருவாசகத்தில் கூறுகிறார். இவ் வாறு ஞானிகளும் மகான்களும் உங்களின் உள்ளே உள்ள கடவுளை உணருங்கள் என்று கூறிச் சென்றுள்ளார்கள் நாம் அவற்றைப் படிக்கின்றோம். மனப்பாடம் செய்கின்றோம். ஆனால் செயல் முறையில் செய்கின்றோமோ என்பது கேள்வியாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Soul Melting Nasigabhushani

**S.Gajahvathanan**

Music is a language which is beyond the man-made stuffs like caste, creed, religion, Nationality, etc. This review trying to brief the only and rare performance among the Nallur Festival seasonal concerts, which spells the richness of the Royal Art without any acculturated stuffs of popular culture, that is "**Ms.Parameshwari Ganeshan's pure Carnatic classical concert**" held at Durga Manimandapam under the banner of Illam Kalaigner Manram associated with Thellippalai Dhurga Devi Devasthanam. The concert held on 18th day of the Nallur Festival 26.08.2024 on the occasion of Karthigai Festival. The performer Ms.Parameshwari Ganesan known as Parama,who has been stealing the stage of this Karthigai Thiruvizha, more than 25 years. Ms.Parama carries an authentic Musicians heritage known as "Karai Ganesan Nadaswarm". So her Prowess in Carnatic Music is inherent and nowadays pure Carnatic Classical Music is existing only with very few families of Nadaswaram instrumentalists in Jaffna because most of the classical musicians of Sri Lanka acculturated with popular culture due to their IGA (Income Generating Activities). Apart from Nadaswaram industry, few Musicians are still trying to carry out the richness and the authenticity of this Carnatic Music. Popular culture ruins the Rasikas' sense of Caratic Music and most of the local Rasicas perceive the classical Music through popular culture. Result of that almost all the performances of Diasporas or Artist from India seems to managing only with Thukkadas in Sri Lanka. This completely takes the people away from the exposure from the mainline Carnatic Classical industry of Sri Lanka, which was established with the hard efforts of many senior artists from Sri Lanka. On the other hand, Nallur temple also trying to introducing various art forms including folk Music during the festival to keep all the devotees under the roof of Nallur Kandaswamiyar. As a musician I should appreciate the Lord's administration which is impartial. Apart from Lord's basket a small hope still sparks in this Classical industry of Jaffna because of profound Musician/ Custodian like Ms.Parama who bravely attempting the traditional methodology with such enthusiasm in this concert.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I as a Classical Musician from Northern Sri Lanka, for my skill enhancement, I used to attend Markalzhi Season Chennai, as listener and performer as well, and lived there more than eight years, went through all the Sabhas in Chennai and also in Sri Lanka. Nallur Festival Season concerts given the same kind of environment to me when I was small but last couple of years I found that, the focal point of concerts suddenly swiped out with the crowd of unprofessional Musicians and the Rasikas who don't have the sense of Carnatic Music but under the hegemony of pop mafias. Song selections of the artist based on the trends in Tamil Cinema, costume are based on the attires of famous Musicians like Aruna Sairam and Sudha Ragunathan who **known for their "attires and looks"** but these actress come Musicians or vice versa, having the rich knowledge and versatility on their performing skills, whether they managing the crowd with thukkadas or elaborations. Here our new Diasporas Carnatic trends in this Nallur festival season are imitating their attires and concentrating only in their pre and post photo shoots nothing with the musicality. The classical music substance is not even zero but minus in digits but boomer ups are unpredictable. In this background I'm reviewing the grenadier Classical perfor mance of Ms.Parameshwari Ganeshan here.

The concert started sharp 7.15pm immediate after the junior slot. The concert accompanied by Mr.E.Nirojan on



Violin, Mr.M.Sulaxsan on Mrudhangam and Mr.N.Mohanadarshan on Mursing. The accompaniments are fresher to the industry but well managed the concert with their limited skills but on the whole the key performer Ms.Parama organized her performance by her ably to understand the accompaniments eminence. Normally in Chennai Sabhas' culture, the trinity's role is dominant but in Illamkalaigner Manram's concerts based on Tamil compositions and other languages is completely curbed but it doesn't mean that Tamil Trinity's compositions get propagated. Muthu Thandavar(1560-1640), Arunachala Kavi(1712-1779), Marimutha Pillai (1717-1787) are known as Tamil issai Trinity which was started five decades before the Thiruvarur Trinity or Trinity of Carnatic Music. So this Ilam Kalaigner Manram's present trend seems to be hypocritical.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

Ms.Parama started her concert with the song "Aadiyarcu Annpa"in Rag Nattai set to "Thisra Nadai". Gana ragas having the capacity of make the audience focused towards the performer. She used that trick to turn the attention of the



audience towards her because outside of the concert venue was full of various entertainments in different degrees to divert the mindset of the audience. This task is not such easy like Madras Sabhas because there the audience visits to the concert hall mostly to listen their beloved Musicians and most of them will definitely come to the purpose of grasping the music but in this Music series in Nallur, the audience mainly come for the worship and aside they visit to the concert hall for various purposes like meeting friends, neighbors, prestige, if they are student of the Artist then for scoring in internals, etc. Among them few will also come with the sake of listen the Music. So the musicianship in such scenario is very much challenging.

Next to the beginning she does a crispy elaboration on Rag Shivaranjini followed by a song describes the relationship of language Tamil and Lord Kandaswamy set to tal Misra sapu. After this song the main piece of the concert which was in **Rag Nasigabhushani, the 70th Melakrtha Raga. This raga is not meant for the beginner in Music.** Attending such Raga for main elaboration during this kind of concert is really very risky. Sometimes it works brilliantly, sometimes it fails miserably. You can't have one without other.

"Sri Rama Saraswathi Devi" of Muthuswamy Deekshithar is most famous song from the trinity on this Rag Nasigabhushani. Vidwan Maharajapuram Santhanam made this song very famous but still it's seems to be untouchable krithi to many, but "Mara Vairi Ramani" is easy and most popular song in the same raga, even thou it's very often being the choice of Musicians from Indian Carnatic Classical Industry during the concert because of the toughness of the Raga. It is always a thrill for a true Rasika to be identified and appreciate the ragas being rendered in any concert but here I don't know how many Rasikas appreciated Ms.Parama's outstanding rendition on Nasikabhushani but someone like her,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

